# 30 கோவில் நூல்கள்

(யாழ், வன்னி)



பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 கோவில் நூல்கள்

## (யாழ், வன்னி)

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

வெளியீடு :

வெள்ளி அச்சுப் பதிப்பகம்

கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : 30 கோவில் நூல்கள் (யாழ், வன்னி)
மொழி : தமிழ்
நூலாசிரியர் : பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்
முதற்பதிப்பு : வைகாசி - 2023
பதிப்புரிமை : ஆசிரியருக்கே

வெளியீடு,
அச்சுப்பதிப்பு,
வடிவமைப்பு,
அட்டைப்படம்.
வெள்ளி அச்சுப் பதிப்பகம்
மிசிசாகா, ஒன்ராறியோ, கனடா.
(437) 423 - 5460 (அலைபேசி)

பக்கங்கள் : 200 (xiii + 187)
நூலின் அளவு : 5.5" x 7.5"
கிடைக்கும் இடங்கள் : 1. நூலாசிரியர் தொலைபேசி இல. 647 300 4518
2. ஸ்ரீலங்கா புத்தகசாலை யாழ்ப்பாணம் & கொழும்பு

இந்த நூலின் பெறுமதி :
Price of this book : 1000.00/=

Title : 30 Kovil Noolkal (Yarl, Vanni)
Author : S. V. Panchadcharam
Language : Tamil
First Edition : May - 2023

Type Setting,
Printing,
Publishing
Cover Designing
**_Silver Print House & Publication_**
4775 Yarmarok Crt, Mississauga
Ontario L5R 0A6, Canada.
(437) 423 - 5460 (Mobil)
silverprinthouse@gmail.com

Copy Right : Reserved
Pages : 200 (xiii + 187)
Size of Book : 5.5" x 7.5"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

நான் இதுவரை என் வெள்ளி அச்சுப் பதிப்பகத்தின் மூலம் வெளியிட்ட இறை வணக்க நூல்கள் வரிசையில் இடம்பெறும் ஐயப்பன் வரலாறு, பிள்ளையார் பெருங்கதை வசனம், ஆகிய நூல்களை என் கோரிக்கைக்கிணங்க எழுதி வழங்கிய என் ஆசான் பண்டிதர் **ச. வே. பஞ்சாட்சரம்** அவர்கள் தாம் எழுதிய 30 கடவுள் நூல்கள் அடங்கிய "30 கோவில் நூல்கள் (யாழ், வன்னி)" எனும் தொகுப்பையும், என் வேண்டுகோளை ஏற்று, அச்சிட்டு வெள்ளி அச்சுப் பதிப்பகம் ஊடாக வெளியிடும் பெரும் வாய்ப்பை எனக்கு வழங்கியுள்ளார்.

பல்துறை நூல்களை நான் இதுவரை பதித்து வெளியிட்டிருந் தாலும், எனக்கு அதிக மனநிறைவை அளிப்பது இது போன்ற ஆன்மிக நூல்களை வெளியிட்டுப் பரப்பும் பணியேயாகும்.

எனவே மனித மனங்களையும், அதனூடு மனித வாழ்வையும் மேம்படுத்தும் ஞானக் கருவூலங்களின் களஞ்சியமான இந்த நூல்களின் தொகுப்பைப் பயபக்தியோடும், 'கடவுள் வழிபாடு செய்கிறேன்', என்ற தீவிர அக்கறையோடும் அச்சேற்றி மக்கள் மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

என் பொழுதையும், இந்நூலை ஓதியுணர்வோர், இதன்படி ஒழுகுவோர் பொழுதுகளையும் தவப் பொழுதுகளாக்கும் கடவுளருக்கும் இப்பணியில் நான் ஈடுபட்டு நன்மையடையும் படி இந்நூல் வெளியிடும் வாய்ப்பை எனக்குத் தந்த என் ஆசான், என் ஊரவர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் சமர்ப்பிக்கிறேன்!!

வணக்கம்!

அன்புடன்

***முகுந்தன் சிவதாசன்,***
வெள்ளி அச்சுப் பதிப்பகம்,
மிஸிஸாகா, கனடா.
15. 02. 2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 30 கோவில் நூல்கள் (யாழ், வன்னி)

(2ஆம் பதிப்பு)

**தொகுதிக்கான தேவை பற்றி...**
**(நூலாசிரியர்)**

எம் இனத்தின் எதிர்காலம் ஈழத்தில் இடையூறு மயமாகவும், நிச்சயமற்றும் காணப்படும் நிலையிலும், நிகழ்காலத்தில் வாழும் மூத்த தலமுறைப்பலர் அதுபற்றிக் கவலையே இல்லாமல், சுயவிளம்பர, தற்புகழ்ச்சிப் பல்லக்குகளில் ஏறிப் பவனிவருவதிலேயே முனைப்பாக அலைவதன் மூலம், தம்பிற் சந்ததிகளின் எதிர்காலத்தைப் பாலைவனமாக்குவதோடு, அவர்கள் மனங்களுக்கு அந்நியர்கள் ஆகியும் விடுகின்றார்கள்.

அப்படியில்லாமல், இத்தலைமுறையினர் பலர், எதிர்காலச் சந்ததிகளின் செல்விகமே தமது குறிக்கோளாகக் கொண்டு, சொத்துக் குவிக்கவே ஆலாய்ப் பறக்கின்றார்கள். அதன்போது நேர்மையான வழிகளில் மட்டுமன்றிப் பாவவழிகளிலும் சம்பாதித்து, செல்வம் என்னும் பெயரில் பிற்சந்ததிகளின் வாழ்வுகளைப் பாழாக்கும் நஞ்சையும் வழங்கி விடுகின்றார்கள். தமது பாவ வழிப் பொருள் தேட்ட முன்மாதிரியைப் பின்பற்றி அவர்களும் பொருள் தேடும் முயற்சியில் பாவங்கள் செய்ய வைத்துவிடுகின்றார்கள். சில இளந்தலைமுறையினர் சோம்பேறிகளாகிக் குந்தியிருந்து உண்டு குன்றிப்போகவும் காரணமாகிவிடுகின்றார்கள்.

அப்படி இல்லாமல், வாழுந்தலைமுறையினர் பெருந் தொகையினர் தம்வாரிசுத் தலைமுறையினரைப் படிக்கவைப் பதிலேயே முதன்மை அக்கறை காட்டுகின்றார்கள். பிள்ளைகள் என்னதான் முயன்றாலும் அவரவர் இலக்குவைத்துப் பாடுபட்ட கல்வி உயர்ச்சிகளையோ, பதவி உயர்ச்சிகளையோ எல்லாராலும் எட்டிவிட முடியாத துயரநிலை வாழ்வியலில் நீடிக்கிறது. எட்டிவிட்ட அந்தக் குறைந்த அளவினருள்ளும் பலர் சாதகமான தொழிலிடம், வாழ்க்கைத்துணை, சுற்றம் சூழல்கிடைக்காமை, நோய்கள், மனத்தோல்விகள் காரணமாக நிம்மதியாக வாழ முடிவதில்லை. நிம்மதியற்ற வாழ்வை அன்றாட மரணமாகவே அவர்களும் அனுபவிக்க நேர்கிறது.

அப்படியுமில்லாமல், வாழும் தலைமுறைகளில் சிறு தொகையினர் கடவுளுக்கே முதன்மை கொடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமர்கள் - புத்திமான்களாக வாழ்கின்றார்கள். அப்படியான கடவுள் நம்பிக்கையுடனான குடும்பத்தில் பிறந்து, அவர் களோடு வளர்ந்ததாலோ, அத்தகைய ஆன்மிகம் மிளிரும் பெரியோர்களின் நெருக்கமான உறவையே இளையோர் சிலர் பின்பற்றல் மூலமோ அறநெறியில் நின்றபடி கடவுளைக் கும்பிடவும், அதில் சுவை ஏற்பட்டு நெருக்குவாரமாகக் கடவுளை வழிபட்டுவரவும் நேர்கிறது. அதன்போது வந்து வந்து தம்மை வருத்தும் பிணிகளாலோ, பகைவர்களாலோ, அவமதிப்புக்கள், தோல்விகளாலோ தாம் தாக்கப்படும் நேரங்களில், அவை தம்முற்பிறவிப் பழிகளின் அறுவடையே என்பதும், அவற்றிலிருந்து தம்மைக் காக்க எல்லாம் வல்ல இறைவனாலே மட்டுமே முடியும் என்பதும் அவர்களுக்கு மெல்ல, மெல்லப் புலப்பட்டு இறைவனிடம் தங்களை அடைக்கலமாக்குகின்றார்கள். அது போலத் தம்மிடமுள்ள, பேராசைகள், மூர்க்கத்தனம், அகந்தை, இச்சைகள் என்னும் உயிரழுக்குகளே தம்மைப் பழிச் செயல்களில் ஈடுபடுத்தி இப்பொழுதும் தண்டனைக் குரியவராக்குகின்றன என்பதைப் பட்டறிவு கொண்டும், இறையுணர்த்தப் பெற்றும் விளங்கிக்கொண்டு அந்த உயிரழுக்குகளுக்கெதிராகத் தனித்துப் போராடியும் போதிய வெற்றி கிட்ட இயலா மையைத் தெளிந்து, கடவுள் அருளால்தான் அது முடியும் என்றுணர்ந்து, தம்மை முழு இறைசரணாகதிக்குள்ளாக்கிப் பெரும்பாலும் துறவிகள் போல் - யோகிகள் போல் "என்பணி இறைமயமாகுதலே! எனக்கு எவை தேவை என்றறிந்து இறைவனே அருளுவான்" என்று கடமைகளை மனச்சாந்தியோடு பற்றின்றிச் செய்து வருவதன்மூலம் நிம்மதியான மன நிலையில் ஆனந்தமாக வாழ்கிறார்கள்.

இவ்வாறே அறந்தவறா நேர்மையும், இளகிய மனங்களும் கொண்டதும், கடவுள் வழிபாடுகள், விரதங்கள் மயமானது மான ஒரு கடின உழைப்பாளி, ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்து, அந்தப்பெற்றோரையே வழிகாட்டி முன்மாதிரிகளாகக் கொண்டு வளர்ந்த நான் அவர்களோடு கோவில்களுக்கு அடிக்கடி சென்று சென்று வழிபட்டுவரும் நாளில் பல பிறவி களில் பஞ்சமா பாதகங்களும் புரிந்தவனும், உயிரழுக்குகளில் ஊறியவனுமான ஓர் ஆன்மாவே நான் என இறையருளால் உணர்த்தப்பட்டேன்.

அவற்றின் தண்டனைகளிருந்து இறைவன் நிச்சயம் என்னைக் காப்பார் என்ற திடநம்பிக்கையோடு உக்கிர வழிபாட்டில் இறங்கினேன். ஒருநாள் தவறாமல் ஏழு ஆண்டுகள் 63 கோவில்களின் வெளிவீதிகளில் உடம்பால் உருண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருண்டு அழுது வேண்டி வழிபட்டுவந்தேன். சுடு மணல், கொதிதார்க் கோவில் வீதிகளிலும், மழைநடுவும் நாய்கள் சுற்றிநின்று குரைக்கவும், பாம்புகள் குறுக்கிடவும், கடியெறும்பு மொய்த்துக் கடிக்கவும், மாடுகள் வெருண்டோடவும், என்மீது காய்ச்சல் உள்ளோர் ஏள்ளம் பேசவும், நகைக்கவும், என்தோள்கள், முழங்கை, முழங்கால் இரத்தம் கசியவும், அன்னையர் பலர் "இனி விடடா" என்று கண்ணீரோடு பதறவும் கேளாமல் கோவில்களை உருண்டேன்.

வலிய விதியின் பயன்கள் தப்பாமல் வந்து, வந்து சூழ்ந்து கொண்டுதான் இருந்தன, இருக்கின்றன. ஆயினும் தலைக்கு வரும் அவைகள் தலைப்பாகையுடன் போய்விடுவதால் நானும், குடும்பமும் இன்றுவரை காப்பாற்றப்பட்டே வருகின்றோம். இதற்கு என் பிள்ளைகளனைவரும் இறையருளால் என்னைப்போல் உருவாக்கப்பட்டமையும் காரணம். இதை நான் இங்கு குறிப்பிடுவது என் நிலைமையில் உள்ள யாவரும் என்வழியில் முயன்று வழிபட்டுத் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள இந்தச் செய்தி தூண்டக்கூடும் என்ற நைப்பாசையால் மட்டுமே!

மேலும் எனதிந்தச் சரணாகதி வழிபாடு உயர்ந்தகலை, இலக்கிய, இரசனைகளையும், கலை இலக்கிய ஆற்றல்களையும் என்னுள் கிளர்ந்தெழவைத்து வந்ததையும் என்னால் உணர முடிந்தது. அதனால் என் வழிபாடு மேலும் உக்கிரமடைந்த நிலையில் நான் கவிதைகள் பாடித்தள்ளும் படைப்பாளியாகிப் பிரபலம் அடைந்திருந்த எனது 39ஆவது வயதில், இணுவைக் கந்தப்பெருமானால் ஆணையிடபட்டுப் பாடி வெளிவந்த நூலே "இணுவை முருகன் பிள்ளைத்தமிழ்" அதைத் தொடர்ந்து ஏனைய துறை நூல்களோடு பல இறைவணக்க நூல்களும் நான்பாடி வெளிவந்து கொண்டிருக்கின்றன.

நான் குடும்பத்தோடு 1995 ஐப்பசி 30இல் ஊரிலிருந்து செம்மணியூடு இடம்பெயர்ந்து தங்க நேர்ந்த ஊர்களில் கோவில்களைச் சென்று, சென்று வழிபட்டதோடு, தம்மைப் பாடும்படி ஆணையிட்ட அக்கோவில் தெய்வங்களின்மேல் நூல்கள் பாடி அச்சிட்டு, அக்கோவில்களின் அடியவர்களை அழைத்து வெளியீட்டு விழா வைத்து அந்நூற்பிரதிகள் விற்றுக்கிடைத்த பணத்தையும், மிஞ்சிய பிரதிகளையும் அவ்வக் கோவில்களின்திருப்பணி, பராமரிப்புக்களுக்காக வழங்கி வந்தேன். அக்கோவில்கள் பராமரிப்பு மேம்பட்டு விளக்கம் பெற்றன. அடியவர்கள் கோரிப் பாடுவித்து வெளியிட்ட நூல்களும் உள்ளன.

இந்நூல்களைப் படிப்பதன் மூலம், போர்ப் பயங்கரத்தால் குழம்பிக் கலங்கியிருந்த வன்னிமக்கள் மத்தியில் மனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தியும், நம்பிக்கையும் வலுப்பெற்று வருவதாக இவ் வெளியீட்டு விழா போன்ற விழாக்களில் பேசிய பெரியார்கள் குறிப்பிட்டனர். பல நூல்களிலும் இது குறிப்பிடப்பட்டிருந்தது. கோவில்களின் சமய அறிவுப் போட்டிகளிலும் இந்நூல்கள் பற்றிய வினாக்கள் இடம் பெற்றன. வன்னிக் கோவில்கள் பத்திற்கும் மேற்பட்டவை என் ஊஞ்சற் பாடல்கள் பெற்றுக் குறை நீங்கின.

இவ்வூஞ்சற்பா நூல்கள் உள்ளிட்ட எனது வன்னி வணக்க நூல்கள் அனைத்தும் முள்ளிவாய்க்கால் வரையான படையெடுப்பின் போது அழிக்கப்பட்டுவிட்டன என்ற செய்திகள் அண்மைக்காலமாக அங்கிருந்து வந்துகொண்டு இருக்கின்றன. 1995 - 2002 வரைநான் பாடி வெளிவந்து அவ்வாறு இழக்கப்பட்ட 30 வரையான வன்னி, யாழ் கோவில்களின் நூல்கள் என்வசமிருந்த பிரதிகளையும், தொலைந்தவற்றைத் தேடுவித்துப் பெற்றவற்றையும் ஒரு முழுத்தொகுதியாக அச்சிட்டு மீண்டும் அம்மக்கள் மத்தியில் உலாவரவைக்க முடிகிறதென்றால் வேறு எதுவுமல்ல, இறைவன் திருவருளே மூலகாரணமாகும். கனடா வெள்ளி அச்சுப்பதிப்பக உரிமை யாளர் திரு. முகுந்தன் சிவதாசன் இந்நூலைத் தமது பதிப்பக வெளியீடாக வெளியிட முன்வந்து பொறுப்பேற்றுள்ளார். நான் கேட்கும் தொகைப் பிரதிகளை எனக்கு விலைக்குத்தர ஒப்புக் கொண்டுள்ளார்.

வன்னிக் கோவில்கள் பற்றி நூல்கள் வெளியிட்ட என்போன்ற ஏனையவர்களும், இது போலத் தமது நூல் களைத் திரும்பவும் தேடி வெளியிடுவதன் மூலம் அவற்றுக்கு நீண்ட ஆயுளை வழங்கி, வன்னித் தமிழர்கள் மத்தியில் கடவுள் சிந்தனையும், பக்தியும் மீண்டெழவைக்க முன்வரவேண்டும். யார் கைளில் அத்தகைய பிரதிகள் கிடைத்தாலும் அவற்றை அச்சிட்டு ஆவணமாக்க வேண்டும். அதற்கான செலவை நம் வசதிபடைத்தவர்கள் ஏற்க வேண்டும்.

30 கடவுள்நூல்களின் திரட்டான இந்த **'30 கோவில் நூல்கள் (யாழ், வன்னி)'** என்னும் நூற்பிரதிகள் இப்பாடல்களில் ஏத்தப்பெறும் வன்னி, யாழ், மன்னார் கோவில்களின் அடியவர்களுக்கும், பிறவூர்களின் ஆன்மிக நாட்டமுள்ள அன்பர்களுக்கும் கிடைக்க வழிசெய்யப்படுகிறது.

இக்கோவில்களை அணுக இயலாத அன்பர்கள் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா புத்தகசாலை, கொழும்பு ஸ்ரீலங்கா புத்தகசாலை என்பவற்றில் வாங்க வகைசெய்யப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பயன்

www.noolaham.org என்ற இணைய நூலகத்தில் எனது கடவுள் நூல்கள் பல பதிவேறியுள்ளன. இத்தொகுதி நூல்கள் 30உம் விரைவில் பதிவேற்றம் செய்யப்படும். எல்லா நூல்களையும் அங்கு விரும்புவோர் படிக்கலாம்.

இந்நூல்களானவை தம்மைப் படிப்பவர்கள் நம் இடர்களுக்கும் அழிவுகளுக்கும் நம் பாவங்களும், உயிரழுக்குகளுமே மூல காரணம் என்பதை உணரவைக்கவேண்டும்.. இறையருளால் அவற்றை அழிப்பதன் மூலமே எமது இடர்கள் அழிவுகளைத் தடுக்க முடியும் எனத் திடமாக நம்பி உக்கிர வழிபாட்டில் இறங்க வைக்கவேண்டும். அம்முயற்சியில் நம் முழு இனமுமே முனைந்து ஈடுபட்டு வெற்றிபெற்று நிமிர்ந்தெழ வைக்கவேண்டும் என்பதே இந்த வணக்க நூல்களின் வெளியீட்டின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பாகும். இந் நூற்பிரதி ஒவ்வொன்றும் எம்மக்களால் தலைமுறை, தலைமுறையாகப் பேணிவைத்துப் படிக்கப்பட வேண்டும்.

**“என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்,**
**தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே”**

- திருமூலர்.

அன்புடன்,
ச. வே பஞ்சாட்சரம்.
இணுவில் மேற்கு, இலங்கை
(கனடா)
19. 08. 2022.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தீப்புள்ளும் மீண்ட தெய்வீக நூல்கள்

இலங்கையின் வடக்கு, கிழக்கில் இறுதியுத்தம் முடியும் வரையும் தொடர்ந்து அழிக்கப்பட்ட இந்துக்கோவில்களும், அவற்றின் உடைமைகளும் தமிழர்களால் மீளக் கட்டி உருவாக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் அக்கோவில்களின் அருள் வரலாற்றுக் கருவூலங் களான தலப்புராணங்கள், திருவூஞ்சல்கள் போன்ற பக்தி நூல்களும் அழிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை மீட்டோ, புதிதாக ஆக்கியோ பேணிக் காத்து, இந்தத்தீவில் ஆன்மிக நெறி தோய்ந்த வாழ்வின் மூலம் தமிழர்களின் பாதுகாப்பான, நிலைபேறான, இருப்புக் கொண்ட எதிர்காலத்தை உறுதிப் படுத்திக் கொள்வதோ சவால் நிறைந்த பணியாகும்.

இன்றும் உயிரோடிருக்கும் என் போன்றவர்கள் தங்கள் வசமுள்ள அவ்வகைப் பக்தி நூற்பிரதிகளைத் திரும்பவும் பதிப்பித்துப் பேணி வைக்க முடியும். இன்றுயிருடன் இல்லாத இந்நூலாசிரியர்களின் நூற்பிரதிகளை அரிதில் வைத்திருக்கும் சான்றோர்களும் அச்சிட்டு அவற்றைப் பேணி வைப்பதில் அக்கறை கொள்ள வேண்டும்.

எனது இந்த நூற்தொகுதியில் எனது இவ்வகையான 30 நூல்கள் தேடித் திரட்டப்பட்டு ஆவணமாக்கப்பட்டுப் பேணிவைக்கப்படுகின்றன. ஏற்கனவே எனது 21 திருவூஞ்சல் நூல்களும், தலபுராணங்கள் முதலான சில நூல்களும் அவ்வக்கோவில்களில் பாதுகாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. போரின் மூலம் காணாமல் போன இன்னும் சில எனது ஆன்மிக நூல்கள் தேடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கிடைத்தால் அச்சிட்டுப் பேணப்படும்.

எனது இந்தத் தேடல், பதித்துப் பேணல் முயற்சியில் சமூக ஆர்வலர் பலர் பங்கெடுக்கின்றனர். அவர்களுள் சாவகச்சேரி ஆசிரியர் திரு. சொ. நந்தகுமார், வன்னி பற்றிய நூல்கள் பாதுகாக்கப்பட வேண்டும் எனும் பெருவேட்கை கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கிளிநொச்சி மாணவர்கள் ஜோர்ஜ் யேசு, சீலன்வேலு, மற்றும் இராசலிங்கம் கஜமுகன், தயாசுந்தர் ஆசிரியர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

இவர்களுக்கும், இவர்கள் போன்ற அன்பர்களுக்கும் இப்பணியில் பல வழிகளிலும் பங்கெடுக்கும் அனைவருக்கும், **'30 கோவில் நூல்கள் (யாழ், வன்னி)'** எனும் இந்நூல்கள் அடங்கிய தொகுதியை அச்சுப் பிழை களின்றியும், நேர்த்தியாகவும் அச்சிட்டு வெளியிடும் வெள்ளி அச்சுப் பதிப்பகத்தாருக்கும், இந்நூற் பிரதிகளைப் பேணிவைத்துக்காக்கும் நூலகங் களுக்கும் பேணிப்பயன்படுத்துங் கோவில்களுக்கும், தனிப்பட்ட அன்பர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக இப்பாடல்கள் இயற்றும் மனப்பக்குவத்தை, சோதனைகள், வேதனைகள், விடுவிப்புகள் மூலம் தந்து வந்தும், இந்நூல்களை அச்சிட்டுப் பேணும் வலுவை என்னில் ஏற்றியும், திருவிளையாட்டயரும் ஏகப்பரம் பொருளுக்கும் எனது பணிவான நன்றிகள் என்றும் உரியன.

வணக்கம்.

52, Tedford Drive
Scarborough, ON M1R 1M3
Canada.
647 300 4518

**ச. வே. பஞ்சாட்சரம்**
இணுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# காணிக்கை



சிறு வயதிலிருந்தே ஏழு பிள்ளைகளான எங்களைக் கோவில்களுக்குக் கூட்டிச் சென்று வழிபடவைத்து, கடவுளை மனமார நம்பவைத்துக் "கடவுளே எல்லாம்" என்ற முடிவுக்கு வரவைத்த என் தந்தை **அமரர் ச. வேலுப்பிள்ளை,** என் அன்னை **அமரர் பொன். சின்னப்பிள்ளை** ஆகியோரின் திருமுன்னிலைக்கு இந்நூல் காணிக்கை.

கனடா - மகன் ச. வே. பஞ்சாட்சரம்.
19. 08. 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

01. நூல் 01 — 01 - 16
(நுணாவிற் குளம் கண்ணகியம்மன் நான்மணி மாலை)

02. நூல் 02 — 17 - 19
(முல்லை - மல்லாவி யோகபுரநாதர் திருப்பள்ளியெழுச்சி)

03. நூல் 03 — 20 - 22
(தெல்லியம்பதித் துர்க்கை அம்மன் திருவிரட்டை மணிமாலை)

04. நூல் 04 — 23 - 31
(கிளிநொச்சி ஸ்கந்தபுரம் முருகன் மும்மணிக் கோவை)

05. நூல் 05 — 32 - 34
(மருதனார் மடம் இணுவில் பல்லப்ப ஞான வைரவர் திருப்பள்ளியெழுச்சி)

06. நூல் 06 — 35 - 37
(கிளிநொச்சி வன்னேரிக்குளம் ஐயனார் அருள்மங்கலம்)

07. நூல் 07 — 38 - 40
(கிளிநொச்சி ஸ்கந்தபுரம் காட்டம்மன் சிந்து)

08. நூல் 08 — 41 - 42
(இணுவில் பரராச சேகர விநாயகர் வெண்பா))

09. நூல் 09 — 43 - 45
(முல்லை - மல்லாவி யோகபுரநாதர் சேவடிச் சிந்து))

10. நூல் 10 — 46 - 50
(மேலை இணுவில் விளாத்தியடி ஞானவைரவர் திருவிரட்டை மணி மாலை)

11. நூல் 11 — 51 - 53
(கிளிநொச்சி ஸ்கந்தபுரம் முருகன் திருப்பள்ளியெழுச்சி))

12. நூல் 12 — 54 - 56
(கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கண்ணனுக்குக் கிள்ளை விடு தூது)

13. நூல் 13 — 59 - 67
(கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் நான்மணி மாலை)

14. நூல் 14 — 68 - 71
(கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதர் திருவிரட்டை மணிமாலை)

15. நூல் 15 — 72 - 114
(சுன்னை ஐயனார் அம்புலித் தூது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. நூல் 16 115 - 118
(கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டம் சித்தி விநாயகர் திருவூஞ்சல்)

17. நூல் 17 119 - 122
(கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கண்ணைபுரம் நாகதம்பிரான் சுவாமி திருவூஞ்சல்)

18. நூல் 18 123 - 127
(கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கண்ணைபிரான் திருவூஞ்சல்)

19. நூல் 19 128 - 131
(கிளி - ஸ்கந்தபுரம் (காட்டம்மன்) முத்துமாரி அம்மன் திருவூஞ்சல்)

20. நூல் 20 132 - 136
(பூநகரி முழங்காவில் - விநாயகபுரம் ஸ்ரீமுருகன் திருவூஞ்சல்)

21. நூல் 21 137 - 140
(கிளிநொச்சி - ஸகந்தபுரம் இத்தியடி நடன முத்துமாரி அம்மன் திருவூஞ்சல்)

22. நூல் 22 141 - 144
(கிளிநொச்சி - வன்னேரிக்குளம் ஐயனார் திருவூஞ்சல்)

23. நூல் 23 145 - 148
(கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இரண்டாம் பாடசாலை மகிழ் துர்க்கை அம்மன் திருவூஞ்சல்)

24. நூல் 24 149 - 151
(ஸ்ரீ இராஜராஜேஸ்வரி - மனோன்மணி அம்பாள் திருவூஞ்சல்)

25. நூல் 25 152 - 158
(கண்ணைன் கவசம்)

26. நூல் 26 159 - 161
(கிளிநொச்சி ஆனந்தபுரம் ஜெயதுர்க்கை அம்மன் அருட்சிந்து)

27. நூல் 27 161 - 166
(கிளிநொச்சி அக்கராயன் ஆரோக்கியபுரம் (எட்டாம் கட்டை) சித்தி விநாயகர் திருவடிபுகற்பா)

28. நூல் 28 167 - 174
(கிளிநொச்சி - ஸகந்தபுரம் கொன்றையடி ஞானவைரவர் பதிகம்)

29. நூல் 29 170 - 175
(கைதடி நுணாவில் சிவபூதராயர் போற்றிப் பதிகம்)

30. நூல் 30 176 - 184
(மன்னார், பாலம்பிட்டி முத்துமாரி மும்மணிக்கோவை)

31. சிறப்பு நூல் இணைப்பு 185 - 187
(கவிஸ் பேரன் ஞானலிங்கேச்சரர் திருப்பள்ளியெழுச்சி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

நுணாவிற் குளம் கண்ணகியம்மன் நான்மணிமாலை

# முகவுரை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் என் உடன் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த கைதடி ஆசிரியர் திரு. அ. கமலநாதன் BA அவர்கள் மூலம், கைதடி நுணாவிற்குளம் கண்ணகி அம்மன் எனக்கு இட்ட கட்டளைக்கு இணங்கவும், "என்னைப் பாடு!" எனும் அவளின் கனவுத் தூண்டுதலின் பெயரிலும் நாம் 1995இல் இடம்பெயர்ந்து நெல்லியடியில் தங்கிய நாட்களில் இந்த அன்னை சேத்திரத்தை அகம் உருகத் தரிசித்து யான் பாடியது நுணாவிற்குளம் கண்ணகி அம்மன் நான்மணிமாலை.

இந்நூலைப் பாடி முடித்து அம்மன் சந்நிதியில் ஒப்படைக்க விருந்த நாள் வைகறைக் கனவில், பராசக்தி வெளிப்பட்டு, "நீ தானே எனக்குக் கவிதை தந்தாய்?" என்கிறாள்.

"அன்னையே! கருத்துக்கள் அனைத்தும் உன்னவை! சொற்கள் மட்டும்தாமே என்னவை?" என்று பணிகிறேன். அன்னை அருகிற் பளிச்சிட்ட சந்திர சேகரர் "ஆம்! அது தான் உண்மை!" - என்று தீர்ப்புக் கூறுகிறார்.

இவ்வாறு மன அந்தரங்கத்தில் கனவில் மட்டுமன்றி, தனது அருட் சந்நிதியாக விளங்கும் தெல்லிப்பழைத் துர்க்கையம்மன் ஆதீனகர்த்தா அருளன்னை தங்கம்மா அவர்களின் ஆசியுரை மூலம் பகிரங்கமாகவும் என் பாடல்களை அம்மை அங்கீகரித்து விட்டாள்.

அத்தோடு நில்லாமல், ஊர்விட்டு ஊர் அகதியாக ஓடிக் கொண்டிருந்த எனக்கு, கவிதைகளை நூலுருவில் அச்சிட்டுக் கிளி ஸ்கந்தபுரம் முருகன் சந்நிதானத்தில் வெளியிடும் பலத்தையும் அம்மாள் அருளியதையும் நினைந்துருகி அன்னை தாள்கள் பணிகிறேன்.

~ ச. வே. பஞ்சாட்சரம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணாவிற் குளம் கண்ணகியம்மன் நான்மணிமாலை நூலுக்கு

தெல்லிநகர் – துர்க்கையம்மன் தேவஸ்தான ஆதீன கர்த்தா அருளன்னை

**தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்கள் வழங்கிய

# அருளாசியுரை

திருக்கோவில்களினாலும், திருக்குளங்களினாலும் பொலிவு பெற்ற இடம் தென்மராட்சிப் பதியாகும். இங்கு வாழ் சைவ மக்கள் ஆசார சீலர்களாகவும், சிவபக்தி, அடியார் பக்தியில் சிறந்தவர்களாகவும் விளங்குவது கண்கூடு. கால் நூற்றாண்டு காலத்திற்கு முன்பு இப்பகுதியில் அமைந்த சிறந்த பல ஆலயங்களுக்கு வருகை தந்து உரை ஆற்றிய பெருமை எனக்குண்டு. இவற்றில் ஒன்றாக என்னுள்ளத்தில் இடம்பெறுவது நுணாவிற் குளம் கண்ணகை அம்மன் ஆலயமாகும்.

இவ்வாலயத்தில் எழுந்தருளி இருக்கும் கண்ணகை அம்பாளின் மேல் நான்மணிமாலை பாடி உள்ளத்தை உருக்குகின்றார் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள். இப்பெரியாரின் உள்ளத்து உணர்வை வெளிப்படுத்திக் காட்டுகிறது அருட்பாவால் இயைந்த இந்நூலாகும்.

நூலாசிரியர் அவர்கள் தனது சொந்த ஊராகிய இணுவில் பதியிலும் தான் வணங்கி அருள் பெறும் அபிமான சேத்திரங்களிலும் எழுந்தருளியுள்ள அருள் மூர்த்திகளுக்குப் பாமாலை பாடிப்பாடி மகிழ்கின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டவர்.

"இணுவில் தந்த அருட் கவிஞர்" என்று இவரைக் கூறுவது மிகப்பொருத்தமாகும். துயரங்களும், தொல்லைகளும் இவர் வாழ்வில் சூழ்ந்து புடமிட்டுக்கொண்டே இருக்கின்றன. எதற்கும் சலியாது இறை அனுபவத்தால் தன்னைக் கழுவிக் கொள்பவர் இவர். இந்நூலின் காப்புச் செய்யுளை இணுவில் செகராச விநாயகருக்குப் பாடி மகிழ்கிறார். சொந்த ஊரை விட்டு விரட்டியமைக்கு நாகரிகமாகவும், நயமாகவும் பிள்ளையாரைச் சாடுகிறார். நான்மணிமாலையில் நூலின் முதலிலே வெண்பாவையும், கட்டளைக் கலித்துறையையும் அடுத்த விருத்தப்பா சொல்லினாலும் சுவையினாலும் எம்முள்ளத்தைத் தொடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்ன இன்னது மறக்க இன்னது
வாழ்த்த இன்னது வைய இன்னது
தின்ன இன்னது தீங்கிற் கின்னது
தேற்ற இன்னது செகுக்க இன்னது
என்றுன் பக்தருள் இயம்பி நிற்க நீ,
எவ்விநாடியும் ஏற்றம் எய்தியே
அன்னை உன்னடி வாழ்த்தி இங்குமே
அமிர்த முண்கிறார் மண்ணில் விண்ணவர்.

அரசியற் கவிஞராகவும், ஆன்மிகக் கவிஞராகவும், புரட்சிக் கவிஞராகவும் விளங்குபவர் இந்நூலாசிரியர் ஆவர். சமூகத்தின் உள்ளக் குமுறல்களை தன்மேல் ஏற்றி உணர்ச்சி வரப் பாடுகின்றவர் இவர். இதனை நுணாவில் குளம் கண்ணகை அம்மன் நான்மணி மாலையில் நன்கு அவதானிக்க முடிகிறது. சந்திரன் சுவர்க்கியை நன்றியோடு நினைவு கொள்ளும் புகழேந்திப் புலவர் போலவும், சடையப்ப வள்ளலை நன்றி பாராட்டிப் பாடும் கம்பநாட்டாழ்வாரைப் போலவும் இடம் பெயர்ந்த தன்னை ஆதரித்த இடத்திற்கும், கருணைக் கரம் நீட்டி வாழ்வு கொடுத்த கண்ணகை அம்பாளுக்கும் நன்றி சொல்லிப் பாடும் திறன் உன்னிப்பாய் நோக்குதற்குரியது.

**"ஆதரிப்பதில் அன்பு செய்வதில் ஆரும் விஞ்சிடாத் தென்மராட்சியார்"** என்றும் **"வேதனைக் கடலில் வீழா வண்ணம் சாதனை வீரம் சார்ந்தவராக்கி உன்னடியார்களை உய்விக்கும் இறைவி"** என்றும் பாடித் தென்மராட்சி அடியார்களையும், அம்மையையும் நினைவில் இருத்திப் பூசிக்கின்றார்.

மேலும் ஆத்மிகப் பாடல்களாயினும் விடுதலை உணர்வு வீறிட்டெழக் கூடியதாகவும், எல்லாம் அநித்தியம் என்ற உணர்வு அனைவரது உள்ளத்திலும் இடம்பெறக் கூடியதாகவும் பாமாலை புனைந்துள்ளார் பாவலர் அவர்கள். எங்கும் சிவமயம்! எங்கும் திருக்கோயில்! எங்கும் அடியார்கள் என்ற நிலையில் வாழுகின்ற எமக்கு இப்பாமாலை சிறந்த ஓர் அருளமுதமாகத் தித்திக்கும் என்பதில் மிகையொன்றுமில்லை.

**"நம்பினார் கெடுவதில்லை. நான்குமறை தீர்ப்பு".**

– *தங்கம்மா அப்பாக்குட்டி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# நுணாவிற்குளம்
# கண்ணகி அம்மன் நான்மணி மாலை

## செகராச விநாயகர் காப்பு

### வெண்பா

உன்வெளி வீதி உருளென் தினத்தொல்லை
உன்னியென்னை ஊரால் விரட்டியவா - பொன்னிணுவைப்
பண்ணவனே அன்னை நுணாவிற் பசுங்குளத்துக்
கண்ணகிமேற் பாதந்து கா!

## நூல்

### வெண்பா

மனச்சாட்சி யாய்நினைப்பு வாக்குச் செயலில்
எனைத் தூய்மை எய்துவிக்கும் இன்பே - பனிக்கும்
நுணாவிற் குளத்தோய் நுவன்றாய்சீர் பாட!
ஒணாதுன் துணையின்றி ஓர்!

### கட்டளைக் கலித்துறை

ஓர்பவர், உன்னை உணர்பவர் பாரில் உயிருக்கெல்லாம்
யார்மெய்ம்மை அன்னை, எவள்சேயை ஆன்றோன்
நிலைக்குயர்த்திச்
சீர்பல நல்கிச் செழுமகிழ் வீவள், தவநெறிக்கண்
சேர்ப்பள் என் றோர்வார்! திரிகர ணச்சுத்தி மன்னுவரே!

### விருத்தம்

மன்ன இன்னது மறக்க இன்னது
வாழ்த்த இன்னது வைய இன்னது
தின்ன இன்னது தீங்கிற் கின்னது
தேற்ற இன்னது செருக்க இன்னது
என்றுன் பக்தருள் இயம்பி நிற்க நீ,
எவ்விநாடியும் ஏற்றம் எய்தியே
அன்னை உன்னடி வாழ்த்தி இங்குமே
அமிர்த முண்கிறார் மண்ணில் விண்ணவர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவல்

விண்ணவர், மண்ணவர், வேதம், முனிவரர்
கண்ணாய்க் கண்ணின் மணியாய் ஏத்தும்
அந்தரி அம்பிகை நுணாவிற் குளத்துச்
சுந்தரி உன்னருள் சொல்ல மெய் சிலிர்க்கும்!
செல்லுயிர் மீட்டு வல்லுயிர் ஆக்கியும்
குங்குமம் அணியென்று மங்கலங் கூட்டியும்
அடங்கென்று பாவக் கிடங்குறல் தடுத்தும்
புரங்கொல்லி யாய்வந்து வரமைந்து கேட்பித்தும்
வீறிடப் போர்வெற்றி ஆறிரு தடந்தோள்
வாழ்கெனப் பாடென்றும். தனிவழி மைந்தர்க்காய்
பயந்த தனிவழி க்குத்துணை வடிவேலுஞ்
செங்கோடன் மயூரமு மேயென்று செப்பென்றும்
அடிக்கடி வெளிப்பட்டே அருள்வழி எனையும்
நடத்திடும் நவக்கிர கங்களின் நாயகி!
அழுக்கா றரவம் தீண்டிட நெஞ்சை
புழுக்கும் பாவச் சிந்தனை சொல் செயல்!
கொழுப்பாம் அகந்தைக் குளவி கொட்டிடில்
இழுக்குச் சொல்செயல் சிந்தனை எய்திடும்!
இத்தரு ணங்களில் எச்சரிக் கைசெயச்
சத்தமி டும்மனச் சாட்சியாய் நிற்கின்றாய்!
பழித் தேட் டங்கள் அழித்திடப் படுங்கால்,
முற்பகற் பழிக்காய்ப் பிற்பகல் படுங்கால்
பேதலி நெஞ்சினர் பிதற்றுபுன் மொழிகளைக்
காதில் வாங்கலும், கண்மூடி ஏற்றலும்
தடுத்து மெய்ந் நீதியைச் சாற்றுரம் தருகிறாய்!
இடித்தெழும் இச்சைகள் அடக்கென அருள்கிறாய்
பாசத் தாயுன் அருளால்
ஆசை மகுடிக் காடோம் பாம்பென! 04.

பாம்பைக் கயிறாகப் பற்றி மலை ஏறுநராய்ச்
சாம்பவி தாம்தருக்குஞ் சொத்தெல்லாம் - தாம் விட்டுச்
செம்மணி வீதியிலே செத்தபிண மாய் நகர்ந்தார்
அம்மணியே! வாழ்விதுதா னா? 05.

வாழ்விது தானா? வழிபல நன்றோ, கொடியனவோ
நாள்பல தேடி நயந்திங்கு சேமித்த செல்வத்துள்ளே
பாழ்வழி வந்த பகுதிகள் மட்டும் அழிந்தவன்றி
மீள்குவ நல்ல விதிமுறை நேர்வழித் தேட்டங்களே! 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேட்டம் தாம் பல தலைமு றைகளும்
சேர்த்து வைத்தவும், நன் கொடைகளால்
ஊட்டி ஏத்திய ஊரில் கோவில்கள்
உயர்ந்த பள்ளிகள், ஊரு ணிகளும்,
ஈட்டு பண்டங்கள், கன்று காலியும்,
எந்த மட்டிலோ பாவத் தேட்டினால்
தீட்ட டைந்தன! துளிவி டத்தினால்
தீய தானபாற் சிறுமை யுற்றன! 07.

உற்றிட இருக்கும் உறுகண் அடியார்க்குப்
பற்றுடன் முன்னுறப் பரிந்தறி வித்தும்,
உன்னடி தழுவிச் சுடர்ந்தழ ஊக்கியும்,
இன்னலைத் தடுக்கும் இன்னருட் கடலே!
வாசல் மருதின்கீழ் வாரண மைந்தனைப்
பாசமாய்க் கண்டு பரவுநர்க் கருள்செய்
நம்புநர்க் காக்கும் அம்பிகைத் தாயே!
தர்மத்தின் நெறியில் தவறா தொழுகல்
நிர்மல னைத்தொழும் நெறிகளில் மேலது!
தந்திரம் நம்பிச் சதிபுரிந் தொழுகல்
அந்தர நெருப்பில் அழுத்திடும் ஈற்றில்!
தந்திர ஈட்டம் தந்தது வாட்டம்!
பசித்தவர் உண்டியாய்ப் புசிபடா பழிச்சொத்து!
உடையரைப் பழிச்செயற் படுப்பது பழிப்பணம்!
ஏய்த்துக் குவித்ததும் இவ்வகைப் பழிப்பணம்!
வாய்த்தநல் நெறியில் வந்தவை மிஞ்ச
ஏய்ப்பில் வந்தது ஏய்த்தெமை அழியும்!
திட்டிமற் றவரை, சேர்விக்கும் பாவமும்!
பட்டறி வில்இதைப் பகர்ந்தனை அன்னையே!
இப்பழிப்பணத்தில் எப்பங் கேனும்
இறையை மகிழ்விக்க வறியர் உண்டியில்
பிணியர் மருந்தினில் பேதை கல்வியில்
இணைந்திடு மென்றால் எஞ்சிய நிலைக்கலாம்
புகழ்க்கிவை யுஞ்செயின் மிகுதியும் தொலையும்!
இஞ்ஞா னம்இங்கு ஏதிலிக் கூட்டமாய்,
அஞ்ஞான இருளில் ஆழ்ந்திடும் நெஞ்சராய்,
பூர்விகம் விட்டே ஊர்பல புக்கு
மடங்கள்,உன் கோவில் மண்டபம், மரநிழல்,
குடிசைகள்,பள்ளிகள், குலைந்தமர்ந் தேங்கும்
ஏழைக ளுக்கு வாழி நீ அருள,
மனச்சான் றுருவில் நினைத்தெழு தாயே
பங்குனி உத்தர மங்கல விழாவில்
இங்குபல் லூரை இழுத்தருள் பொழிவோய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பழி உணர்ந்தவர் அம்பிகை உன்னைக்
கதறி வேண்டிட இதநிலை தந்து
சுதந்திரம் நல்கிக் கதியருள் உன்மேல்
நம்பிக்கை வலுவாய் நாட்டி
எம்சேய்க் கீவம் அச்சீ தனமே! 08.

சீதனமாய்த் தேடியவை தீயவர் கையிற்கொல்
சாதனமாய் வந்துதனைச் சாக்காட்ட - வேதனைகொள்
ஈழத்தான் செல்வ இழிவை உணர்ந்துபத்தி
ஆழஅருட் செல்வம் அருள்! 09.

அருளின் பெருக்கே அனைத்துயிர் கட்கும் பெருந்தாயே
மருதங் குளிர்ப்பொழில் வாசலில் பண்டு மகிழ்ந்தவளே!
இருள்கள் விலக்கி இதயத் தினிமை தரவல்ல
அருளின் சுவையெமக் கார்வித் தருள்வாய் ஓ இறையே! 10.

இறைவி யுன்னருள் எய்துஞ் சேயெலாம்
என்றும் எய்துதல் இன்பம் மட்டுமே!
வறுமை போக்கிடும் வாழ்வு நல்கிடும்
மனதில் சாந்தியே வளர்க்கும் உன்னருள்!
புறவுபோல் விட்டுப் போகும், நிற்கிலும்
புரியும் இன்னலஅப் பொருள்கள் சொத்தெலாம்!
வெறிகள் இச்சைகள் மீற கந்தையால்
வீழ்த்தும் சேய்களை வேதனைக்கடல்! 11.

வேதனைக் கடலில் வீழா வண்ணம்
சாதனை வீரம் சார்ந்தவ ராக்கி
உன்னடி யார்களை உய்விக்கும் இறைவீ!
அன்னம் வழங்கிரு அருள்மடம் பொலிந்தோய்!
பொருட்செல் வர்க்குள் ஒருவர்க் கத்தார்
புதுப்புது உண்டி புதுப்புது அணிமணி
புதுப்புது ஆடை புதுப்புதுச் சுகங்கள்
மனம்போம் போக்கில் மாந்திக் கெடுவர்!
வனம்புகுந் தொளிக்கும் மடமையில் முடிவர்!
இன்னொரு வர்க்கப் பொன்னிதிச் செல்வர்,
நாலா றாக்கிட மேலும்நூ றாக்கிட
ஆலாய்ப் பறந்தும், அல்வழிப் புகுந்தும்
வாய்வயி றேய்த்தும், தாய்பெயர் விற்றும்
ஈவிரக் கம்இலாப் பாவிக ளாகி
உண்ணாச் சொத்தவை மண்ணாய்ப் போக
நாதி யிழந்து வீதியில் கிடப்பர்!
பொருட்கு முதன்மை புந்தியில் வழங்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டில் கலங்கும் இவர்விடு தலைபெற,
அருட்கு முதன்மை அளிப்பவ ராகிட
விருப்புறு வீடூர் மீண்டும்நிம் மதிபெற
உன்னைத் தொழுதுய்ய உதவமெய்ஞ் ஞானம்
அன்னையே! கண்ணகி ஆர்ந்தெழும் நெஞ்செலாம்!
சொல்,செயல், சிந்தை தம்மில்
வில்லிடத் தூய்மை விளக்கு நல்லனவே! 12.

நல்லகுரு தாய்நீ நமையின்று வாட்டுவது
கொல்லவல்ல கொள்குற்றம் கண்டறிந்தே - ஒல்லெனவே
குற்றம் களைந்து குலவுவிக்கக் கோவில் மனம்!
கொற்றவைகா ஆசையெலாம் கொன்று! 13.

கொன்றை,ஆல், கிஞ்ஞாக் குளிர்வனஞ் சூழ்ந்தொளிர்
கண்ணகியே!
அன்றென் தவத்தால் நீ ஆர்வித்த ஆனந்தம்
தம்மையெண்ணி,
நன்றிசொல் லாத நரிப்பயல் நாசப் பழவினையால்
துன்றிடத் துன்பங்கள், தூசிக்கில் உன்னருள், பாதகமே! 14.

பாதகம் உன்னைத் திட்டல் மட்டுமா?
பாதகம் பிறர் யாரைத் திட்டலும்!
தீதும் நன்மையும் எங்கள் தேட்டமே!
செப்புஞ் சங்கநூல் நினைவிற் கொள்ளுவோம்!
ஆத ரிப்பதில் அன்பு செய்வதில்
ஆரும் விஞ்சிடாத் தென்ம ராட்சியார்
காதல் அன்னையே! கண்ணகீ! குணக்
கற்பு நெஞ்சராய்த் தேற்றி நீக்கிருள்! 15.

இருள் நிழல் வனங்கள் எழில்மலி தொல்லூர்
குரல்சுவை குழையும் குயில்,கிளி கலந்திட,
கண்ணகி உன்னருள் கண்பனித் திசைக்கும்
பண்ணிசை, மந்திரப் பல்லொலிப் பரவசம்
தம்மில் மகிழ்ந்தருள் எம்முயிர்க்குயிரே!
கையில் கிடைத்ததைக் கட்டிச் சுமந்தும்,
தொய்யும் வயிறுஞ் சோரும் நெஞ்சுமாய்
வெய்யிலில் வெந்தும், பெய்யலில் விறைத்தும்,
குழந்தை குஞ்சுகள் தளர்ந்தழத் தழுவியும்,
வீட்டை, ஊரினை, விளக்கேற்றுங் கோவிலை,
மாட்டை, ஆட்டை, வளர்நன்றி நாயை
சடுதியில் பிரிந்தும் அடைவிடம் தேராது
இயங்கிய போதும் "இதுஎன் வினைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்" எனத் தெளிந்து பார்வதி உன்னையே
நெஞ்சால் தொழுது நேர்மைய ரானவர்
தஞ்சமாய்க் காத்துத் தங்கிடம் உண்டி
தந்தான்ம சுத்திசெய் சிந்தனை ஊக்கினை!
மாட்டைப் பெரிய வடத்தால் கட்டல்போல்
மாட்டினோர் தெய்விகம் மாபெருந் தளிகளுள்,
திராவிடப் பகைவர், அராவிட இடைக்குலம்,
அன்பினை ஆயுத வன்பினால் பரப்பவும்,
சண்டையால் சமாதா னத்தினை நாட்டவும்
குண்டேந்தி வந்த கொலைவெறி நாட்டவர்,
இனவிடு தலைக்கெனத் தனதுயிர் பலிதரும்
அரும்பைத் தம்சேய்க்கு விருந்திடத் துடித்திடும்
எட்டப்ப ஞமலிகள் - இராட்சதச் சாறுகள்
கொட்டம் கொன்றறம் குளிர்விப் பாயென
நம்பியுன் கால்தொழும் ஞானம் எமக்குற
அம்பிகை கண்ணகி அமர்களம் நெஞ்செலாம்!
உன்கோவில் ஆகிடில் உள்ளம்,
பொன்னொளி அன்றே பொருந்திடும் எனக்கே! 16.

எனக்காக வேனும் பிறர்க்காக வேனும்
உனைப்பாடும் ஓர்புண்ணி யத்தால் - வினைப்பயன்கள்
வெந்தற்று மீள்கிறேன்! மேல்வருவ காண்கிறேன்
கந்தனயல் காண்போய்! கதிர்! 17.

கதிர்கள் அசையும் கழனி வரம்பில் வரிசைகளாய்
மதர்களைக் கற்றை சுமந்து செல் மாதர் மகிழ்ந்திசைக்கும்
அதியருட் தாயுன் அகங்கையில் ஆவெம் பிடிகயிறு!
எதுஎது தேவை அருள்வைநீ! ஏத்துதல் எங்கடனே! 18.

எங்க டன்உன தினிய கால்களில்
எம்மை முழுமையாய் ஒப்ப டைத்தலும்,
பொங்கு தாமரைப் பொய்கை அன்னையே
போக்கெந் தீக்குணம், வினைகள், இச்சைகள்,
இங்கும் எங்குமே இரவும் நாளுமே
எம்முள்ளே ஒளி வீசி நில்லெனப்
பங்கமுற்றிடக் கர்வ மேத்தலும்
பாய ஆனந்த வெள்ளம் வாழ்விலே! 19.

வாழ்வே கண்ணகி மலரடிச் சேவையாய்த்
தாழ்மையோ டுன்தளித் தங்கருட் பூசகர்
திருக்குடும் பத்தின் அருட்பெருந் தஞ்சமே!
நெல்வயல் மாரியில்,புல்வெளி கோடையில்
எனவிரி பரவெளி எழில்நட மாடியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் நுணாவிலில் தெங்கிள நீர்க்குலைக்
கட்டிளங் கன்னியாய்ப் பட்டருள் கண்ணகீ!
உன்திருக் கோவிலுள் பொன்னணி மணிகள்
கையாட வந்தவன் கண்ணொளி மறைத்து
ஐயோவென் றலறி அகப்பட வைத்துத்
தடுத்தாட் கொண்ட கடிப்பூங் கண்ணீ!
கற்பகச் சோலைகொள் அற்புதக் கனியே
சாத்திரஞ் சொல்வார், தோத்திரஞ் செய்வார்
தவவனங் கள்தளிப் புவனேஸ்வரியே!
இன்பமும் துன்பமும் இதயத்து நிகழ்வே
என்பதே உண்மை! இதயந் தன்னில்
கணந்தோறும் உன்றன் காட்சி கிடைத்தால்
அணைந்திடு மோபிழை? அண்டுமோ கவலை?
சொற்திறம்பாத அற்புதக் கற்பின்
களஞ்சியத் தாயே! தந்தோம் களிப்புடன்
உளங்கனிந் தெம்மை ஒப்புக் கொண்டிடு!
சிந்தனை யில்எமைச் சரிநெறிச் செலுத்தியும்,
பந்தித்து நாவைப் பண்பின உரைப்பித்தும்,
உய்வன மட்டும் மெய்செயப் புணர்த்தியும்
இம்மை இனிக்க மறுமை இனிக்க
அம்மா நுணாவில் அம்பிகை அருள்வாய்!
கனவிலும் காற்சிலம் பொலிக்க
கனிமலர்க் கொடியே கண்ணுக்குள் விளங்கே! 20.

விளங்கும் பிழைப்பயனாய் மேவும் துயரால்
களங்கம் கரையும்! அதுபோல் - விளங்குமொரு
தர்மச் செயலெதிர்க்கும் சண்டித் தனமெதிர்த்தால்
கர்மம்முற் றாயழிவ காண்! 21.

காண்தளி வீதிச் சுவர்களும் கண்ணகி உன்புகழ்ப்பா
பூண்பன வாகிப் பொலிவ நுணாவிற்றண் பூங்குளத்தோய்!
ஆண்டநம் மண்ணில் அயலவன் நிட்டூரம் மிஞ்சியதால்
வேண்டினம் வாழ விடும்படி! வேண்டல் தவறிலையே! 22.

தவறு கள் தமைச் சாற்றும் போதிலே
சற்றுமே செவி சாய்க்க எண்ணிலார்!
எவையுந் திமிரவர் எமதே என்றனர்
எங்கள் ஊர்களை விழுங்க லாயினர்!
அவம தித்தனர்! ஆயு தங்களால்
அடித்துச் சாத் விகப் போர் நசுக்கினர்!
சிவைஎங் கண்ணகி செத்தும் நீதியைச்
செழிக்க வைக்கவே எதிர்ப்பை ஏந்தினோம்! 23.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏந்திநின் னருள்மழை, எழும்பத்தி அலையெனத்
தாந்திமி திமியெனுஞ் சந்தமி குங்கவி
கந்தையர் தந்தனர்! மைந்தரும் தந்தனர்!
தாமத மேன்என்மேல் பாமழை பெயவென
கனவில்வந் துசுப்பிய கண்ணகி அன்னையே!
கனியவைத் தென்னுள்ளம் கவியிது சூடுவாய்!
பிள்ளைத் தமிழ்கேட்கப் பிள்ளையார் தானுமாய்,
என்னீ ராடெனப் பன்னிடு வடுகனாய்,
செய்யென்மேல் பாட்டெனும் ஐயனார்ச்சாத்தனாய்!
ஓம்நமச் சிவாய ஓம்பெனச் சிவனுமாய்,
அச்சிடென் பாபெரும் அச்சிலென் பவளுமாய்
முன்பெலாங் காட்சிதந் தென்பெலாம் உருக்கியோய்!
பெருங்கடல் கோள்களால் பிரிந்தும்நம் தமிழகம்
பரம்பரை யாகநாம் வாழ்ந்த இம் மண்ணினை
அந்நியன் கவர்ந்திட அண்டல் அநீதியே!
எந்நிலம் காக்கநாம் எண்ணுதல் நீதியே!
நீதியே வெல்கின்ற நீள்வர லாறதன்
மீதில்நல் நம்பிக்கை மிகுமினம், ஏழரை
ஆயிரம் அருந்தவப் புதல்வரை இழந்துமே,
தீய ஆயுதங்களால் திரள்கும்ப லாக
ஐம்பதி னாயிரம் எம்மவர் அழிந்துமே,
அங்கங்க ளிழந்துபல் லாயிரம் பேர்நொந்தும்
பங்கமுறாத்தமிழ்ப் பரம்பரை மறத்துடன்
வேதனை கள்நடுச் சாதனை கள்பல
ஆற்றி வளர்ந்தோம் போற்றி உன் துணையால்!
ஆயினும் நம்பலர் அடிப்படை நாட்டம்
தீயது! நாட்டினை ஓம்பும் சிந்தனை
மூத்தவர்க் கில்லை! முழுதாய் வீட்டுக்குச்
சேர்த்திடப் பணமே செய்கிறோம் பழிபல!
வெற்றியின் விளிம்பினில், மீளுகை நிறைவைக்
கொற்றவை கண்ணகி கொடுக்கநீ நினைக்கையில்,
தம்மினம் வாழ்ந்திடத் தவஉயிர் வழங்கிய
செம்மன மாவீரர் தெய்விகக் கனவினை
நனவாக்கிடநின் நல்லருள் விழைகையில்,
நல்கிடுஞ் சுதந்திரம் நயந்தென்றும் பேணிடப்
பல்கரம் - பக்குவக் கரமிங்கே உள்ளவோ
என்றெண்ணித் தயங்கினை !இன்றெண்ப துணர்ந்தனை!
வீட்டினுக் கொருபத்துச் சதலாபம் மேவுமேல்
ஈட்டிய சுதந்திரம் இச்சனம் விற்றிடும்!
எண்ணிலாத் தியாகங்கள் மண்ணாகிப் போய்விடும்!
என்றறிந் தேதான் எம்மினம் சுடர்வரை
வென்றியை, விடிவைத் தாமதஞ் செய்கின்றாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லநம் குருவாய்த் தொல்லை அலைச்சல்கள்
துன்பங்கள் கலக்கம் துயர்களைச் சுமத்தி,
வன்மனம் பிசைந்து, மென்மனம் அமைத்து
தீயவைக் கஞ்சாத் தீரமும் தந்து
தூயவ ராக்கியே சுதந்திர வாழ்வைச்
சொந்தஊர் களிலே தந்திடத் துணிந்தனை!
எழுஎழு தாயே எம்முள்
தொழுதழு தடையநாம் சுடர்நிலை தன்னையே! 24.

தன்னைக் குடும்பத்தைச் சாதி சமயத்தை
முன்வைத்துப் பேசுதர்ம மும்முரங்கள் - பன்னூறு!
மெய்த்தர்மம் ஒன்றை விளங்குசித்தக் கண்ணகியே
உய்த்துணரத் தந்தாய் ஒளி! 25.

ஒளிதரும், ஆன்மஉரந் தரும்,நெஞ்சில் உறுதிதரும்
களங்கமில் தூய்மையாம் கற்பெனக்காட்டிய கண்ணகியே!
தளையிடும் தன்னல, ஊர்,குல, சாதி,சமயப் பற்றால்
வளைசிந்தை சொல்தர்மம் மாசுறல் சாத்திய
மேஅன்னையே!
26.

அன்னை செய்கையும் தந்தை செய்கையும்
அண்ணன் செய்கையும் தம்பி செய்கையும்
அந்நியன் அயல் பகைவன் செய்கையும்
அரசன் செய்கையும் அடிமை செய்கையும்
என்ன செய்கையும் எவரின் செய்கையும்
இன்ன தேசரி என்று திட்டமாய்
அன்னை நீநிற்கும் அகங்கள் ஏற்குமேல்
அவைகள் மட்டுமே தர்மம் நல்லறம்! 27.

நல்லற மெல்லாம் புல்லுநு ணாவிலில்
பாலக ணேசனை, நந்தகோ பாலனை
பால முருகனைப் பரிவார மூர்த்தங்கள்
எனக் கொண் டடியவர் வினைப்பளு தீர்த்தருள்
ஒண்ணுதற் சிந்துரக் கண்ணகை அம்மையே!
வடலிக் கங்கமர் விடலைச் சிட்டுகள்
ஏத்திப் பாடிடப் பூத்தருள் நாரணீ!
தன்னலம் பேணிட அன்னையை ஏய்த்தலும்,
குழுநலம் பேணக் குழுபிற ஏய்த்தலும்,
மதநலம் கருதி மதம்பிற வீழ்த்தலும்
எனப்பல செயலின்று நினைபடும் தர்மமாய்!
இனக் கொலை இன்றிங்கு இரணியர் கொள்தர்மம்!
தம் பெண்டிர் பிள்ளைகள் தடிப்பதற் காகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை யே,ஈழ அனைவரும் பிறந்ததாய்
எண்ணிடு சுயநல ஈழத்து மூத்தவர்
புண்ணியப் பரம்பரைப் பூத்தவன் புதுமகன்
அவனிடம் அருமையாய்க் கண்டறி குறைகட்கு
எவர்பொறுப் பாளிகள்? என உண ராமலே
நொட்டைகள் நுவல்பவர் குட்டுக தம்தலை!
எங்களை வதைப்பவை எங்கள்முற் பழிகளே!
நாம்சுத்த ராகியே நம்வினை, மலம்கெட
பூம்புகார் தந்தஉன் பொன்னடி வீழ்வதே
மீட்சிக்கு வழிதரும் மெய்த்தர்மம் எனச்சொல்லிக்
காட்சிதந் தருளம்மா கயவர்நம் நெஞ்செல்லாம்!
மண்ணென எளியவர் நாமும்
கண்ணகி யுன்னருட் கால்படின் பொன்னே! 28.

பொன்பொருள் போகம் புகழ்குவிக்கும் தன்னலம்
தன்னான்ம சுத்தி தழைப்பிக்கும் - தன்னலம்
என்றிரண்டு தன்னலங்கள் இங்குள்ள வென்கிறாய்
அன்றண்ட மெல்லாம்பூத் தாய்! 29.

தாய்மைநல் காதேல், சகித்திரங் காதேலிப் பூமியெல்லாம்
பேய்நட மாடும் பெருஞ்சுடு காடு! பழிமயமாய்ச்
சாய்குலம் எம்மைத் தலையளித் தாட்கொண்டருளுமம்மா
மேய்பசுக் கூட்டம் வெயிற்கொதுங் கின்ப மருதவளே! 30.

மருதுநீ ழலில் வாய் குளத்தினில்
மன்னி நீந்திடும் மங்கை மார்முகம்
கரிய நாகமாய்க் கூந்தல் கவ்விடும்
காட்சி கண்டயர் கந்த மைந்தனின்
அரிய அன்னையே ! அவனித் தன்னலம்
அளிக்கும் பிந்தியே ஆன்ம சுத்தியை!
கருதும் ஆன்மிகத் தன்ன லம்எனில்
கடிதில் நல்கிடும் முத்தி யின்பமே! 31.

இன்பமே அறியா இளந்தமிழ்ப் பிஞ்சுகள்
துன்பமே வடிவாய்ச் சோர்ந்தலை காட்சிகள்
உன்திரு வீதியில் ஒடுங்கிய குடில்களில்
இன்றுநீ காண்கிறாய்! எம்மின விதையிவை!
விதைமுளை முற்றுற வதைபடு மேலிங்கு
கதைமுடிந் ததுதமிழ்ச் சிவகணம் தொலைந்திடும்!
பூத்திவர் மனங்களில் காத்தருள் விதைமுதல்!
பொன்பொருள் போகப் போதைகொண் டோர்க்குத்
துன்பம், இகழ்ச்சி, துயர்,பிணி,வறுமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவச் சேர்க்கை, பகை, இறை மறப்பு
மேவுவதன்றி வீடயல் சுற்றமும்
மாசுறும்! பிறவி மாணும்நோக் கழியும்!
தேசுறும் உயிர்நலம் தேடுதன் னலமெனில்
சீரிய னாக்கிச் சூரிய னாக்கிப்
பேரழ கின்பம் பெருகுள மகிழ்ச்சி
உடலுள நலங்கள், ஊருல கேத்தல்
மிடியகல் செழிப்பு மிகுவித்த லன்றி
குடியயல் குலமூர் கொள்விக்கும் வெளிச்சம்!
முடியுமிப் பிறப்புடன் முக்தியில் சேர்க்கும்!
எனும்பல ஞானம் எமக்குள்நின் றருளி,
வினைவலி யாற்படு வேதனை தீர்த்து,
எமையெம தூர்மனை இன்புற அனுப்பத்
தமிழ்நில விடுதலை தந்தருள் தாயே!
கண்ணோய், கூவைக் கட்டு, சிரங்கு,
புண்மலி அம்மை, புன்சின்ன முத்து
சுரநோய் தீர வரமருள் புரிவோய்!
மேளத் தொலிகள் தாளத் தொலிகள்
சூழப் பொலியும் சுந்தர வல்லீ!
வெண்ணரம் பாக விரிகிளை மருதின்
தண்ணிழற் சிதறல் சதிரிடும் புனலில்
கொங்கலர்ப் பங்கயம் கூத்திடுங் குளத்தோய்!
தொங்கும் விழுது நாகங்கள் துப்பிடும்
செங்கனி ரத்தினம் சிதறிக் கிடக்கும்
ஆலடி மேவிய மாலினி! சூலினி!
வருத்தமே முழுவாழ் வானால்
திருத்தமே சேர்ந்திட உயிர்க்கேது ஓய்வே! 32.

ஓய்வொழிச்ச லில்லாமல் ஓடிப் பறந்துமே
மாய்தமிழா! வந்தன் னியவூரில் - வேய்குடில்கள்
குந்தி வெளியுலகைக் கூர்ந்தின்னும் நோக்காமல்
உந்தியெட்டிப் பார்மனமாம் உள்! 33.

உள்ளே உனையுற்றுப் பாரென் றுரைத்த ஒளிவிளக்கே!
துள்ளாட்டக் காவடி சூழ்ந்தே பொலியுந் தலத்தவளே!
கொள்ளையாம் இச்சைகள், கோபம், அகந்தை, கொதி, கவலை
முள்ளாய் முனைகளை நீட்டிட நொந்து முனகும் நெஞ்சே!
34.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சு எரித்தனை நீசத் தன்மையோ?
நிம்மதிக் கிவை நெருப்பு வைப்பவோ?
பஞ்சம் நோய்பிணி பாவம் தீக்குணம்
பரிந்த கற்று வோய் ! பங்குனித் திங்கள்
எஞ்சிடாக் களி எழில் விழாக் கொளும்
ஏந்து சூலினி சிங்க வாகனீ!
நஞ்சு நம்முள்தான்! நாரணீ யிவை
நாசம் பட்டிட நம்முள் நண்ணடீ! 35.

அடியே! கருணை ஆழீ போற்றி!
கொடியர் எம்முள் குவிந்துள குறைகள்
ஒன்றோ இரண்டோ? துன்றுபல் லாயிரம்!
கொன்றே கொண்டும், கொன்றே, கொன்றே
தின்றே கொண்டும், தீங் கெதும் புரியா
ஆட்டைக் கோழியை மாட்டை மரையை
சுறாவைத் திருக்கையை புறாவை உடும்பை
மீனை அணிலை மானை முயலை
வாய்ருசிக்காக வாய்விடாச் சாதியை
அரக்கத் தனமாய் வருத்திக் கொன்று
வல்லவர் நாமென்று அல்லவை கொன்றுபின்
வல்லஆள் வோர்எமை வதைத்தல் பிழையென
வாதிடில் உன்னருள் வாய்க்குமோ? காக்குமோ?
நீதியாய் இப்பழி நீங்கநாம் அருளடீ!
கொடுத்தது நினைப்பில்! கொண்டது மறப்பில்!
அடுத்தவர் செயிற்பிழை! அதுசரி நான்செயில்!
தன்சேய் அழுதிடில் அதுதுயர்! அயலவன்
தன்சேய் அழுகுரல் கேட்டிடில் அதுசுவை!
வேலிதன் தங்கைக்கு! காலிஊர்ப் பெண்கட்கு!
கூனுக்குச் சண்டியன்! கோனுக்கோ எடுபிடி!
அடித்தது தன்மகன் அதுசரி! அடிபட்டுத்
துடித்தவன் பிறர்மகன்! துடித்தது பெரும்பிழை!
காசுக்கு முதலிடம்! கடவுட்கு முடிவிடம்!
இப்படி எத்தனை இழிகுணம் எம்முளே!
ஒப்படைத் தோமெமை! உடனேற் றுள்ளூற்றுச்
சுத்திசெய் தெங்களை முக்தியில் உய்த்தருள்!
அன்னைநீ யிருக்கையில் பின்செல்லல் அற்பரை
அழிவழி அன்றோ அன்னாய்!
பழுதுபட் டழியவோ இனும்புவி வாழ்வே! 36.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவி வாழ்வு போதுமம்மா போக்கிப் பிறப்பு
சிவசக்தி சேர்விப்பாய் முக்தி - தவறாமல்
என்றேத்தி நிற்பதிலோ, இல்லாமற் செய்பிறவித்
துன்புதொகுத் தீந்தாய் சுமை? 37.

சுமையோ பெரிதுநம் தோளோ சிறிய, இரண்டவையும்!
உமையே நுணாவில் உறுகை தடிமட் டுவிலூரார்
அமைசாவ கச்சேரி ஆம்பல ஊரவர்க் காருயிரே!
தமிழீ ழவர்நாம் தளர்சுமை கோடி தகர்த்தருளே! 38.

தகர்த்தெ றிந்தது சண்டை சாந்தியை!
தட்டுப் பாடின்று சகல ஊணங்களும்!
சுகங்கொ லும்பிணி மருந்தும் பஞ்சமே!
துலங்கிடா மர்ம நோய்கள் மிக்கன!
மிகும் இருட்டில்நாம்! விஷக டிபல!
விளைய உண்டியும் வேண்டு ரம்இல்லை!
குகையில் வேடராய்க் குன்றிப் போகின்றோம்!
குந்தவீ நீதிக் கிடுக குங்குமம்! 39.

குங்குமத் தாயே குளிர்ந்தருள் அம்மா!
மங்கலத் தாயே மகிழ்ந்தருள் அம்மா!
கண்ணகித் தாயே காத்தருள் அம்மா!
காமாட்சி யம்மா காத்தரு ளம்மா!
விசாலாட்சி யம்மா வினைதீர்த் தருள்வாய்!
மீனாட்சி யம்மா வினைதீர்த் தருள்வாய்!
சிவநாச்சி யம்மா சிறைமீட் டருள்வாய்!
பத்திர காளி பாப விமோசனி!
பாப விமோசனி! சாபவி மோசனி!
சிங்க வாகினி திரிசூ லினியே!
சத்துரு சங்கார சண்டிகா சரணம்!
சத்துரு சங்கார சாமுண்டி சரணம்!
சங்கரி சண்டாளர் கும்பல்!
பொங்கிடப் புனிதம், பூத்திடெம் மனமே! 40.

- முதற்பதிப்பு "அன்னை அருளமுதம்"
ப. செங்கோடன், ப. உமாவஞ்சி
1997.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முல்லை – மல்லாவி
# யோகபுரநாதர் திருப்பள்ளியெழுச்சி

1. ஆக்கியிவ் வண்டங்கள் அகிலங்கள் யாவும்
 ஆள்பவ! அருள்பவ! சிவபெருமானே!
தீக்கனல் சிவந்தது கீழ்த்திசை வானில்!
 செறியிருள் கரைவது! தெரிவன பொருள்கள்!
மாக்குலம், வதிவனம் வயல்களும் சூழ்ந்த
 மல்லாவி மாண்புறு யோகபு ரத்தில்
காக்கவென் றெமை, அமர் கருணையங் கடலே!
 காந்திருந் தோம், பள்ளி எழுந்தருள்வாயே!

2. பொய்கையில் தாமரை பூட்டுவாய் திறப்ப
 போற்றியுன் நாமங்கள் புளகிக்க என்றே!
மெய்குளிர் ஓடைநீர் வீழ்ந்தாடி மீண்டோம்
 விழிமலர் திறந்த நின் விளங்கெழில் பருக!
செய்வன புன்னகை தேன்பொழில் மலர்கள்
 செல்லுவோம், சேருவோம் சிவன்கழல் என்றே!
தெய்வமும் தாய்,தந்தை,செல்வங்கள் யாவும்
 தேவன் நீ யேஎமக்கு எழுந்தருள் வாயே!

3. "சிவசிவ" என்றொலி சிறகுகள் அசைத்தே,
 தேயிருள் கண்டெழும் கொக்குகள், நாரை,
இவண்உன்றன் திருவீதி சூழ்வன ஏத்தி!
 இசைத்து, உன்றன் திருவடி எய்தித்தேன் உண்ண
கவின்சிறை அளிகளின் அணியிங்கு வருவ!
 கழல்களின் கனவொடே கண்விழித் தடைந்தோம்!
அவலங்கள் தடுத்தெமை ஆண்டருள் புரியும்
 ஆதிசிவன் பள்ளி யெழுந்தருள் வாயே!

4. பாட்டுக்குப் பாட்டெனப் பகல்விடி சேதி
 பல்குரற் சேவல்கள் பாடுதல் கேட்பாய்!
கூட்டுக்குள் குருவிகள், கொப்பினிற் குயில்கள்
 குரல்களும், குமுதங்கள் கூம்பிடும் நிலையும்
காட்டுவ விடியலின் கதிக்கும்புத் துணர்வை!
 கைகளில் பூக்களும், மெய்யில்வெண் நீறும்,
ஆட்டிடும் ஆனந்த மாகவும் வந்தோம்
 அருள்வடி வேபள்ளி எழுந்தருள் வாயே!

நூல் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பிள்ளைப் பராயத்தும் பெற்றிலோம் நிறைவு!
பின், சிறா ராய்க்கூட பெற்றிலம் நிறைவு!
உள்ளுந்தல் மலிவாலி பத்திலும் குறையே!
ஓ!இந்த மூப்பிலும் உலகம்பொய் யென்ற
தெள்ளிய முடிவினைச் சேர்ந்துன்றன் காலே
சேர் புகல் நித்தியம் எனவிங்கு புக்கோம்!
ஒள்ளிய பிறை,கங்கை உவந்தணி வேந்தே!
யோகபு ராபள்ளி எழுந்தரு ளாயே!

6. "ஆருமிலேன்" என்றே ஆழ்ந்துணர் மட்டும்
அருகினில், அகத்தினில் வரமறுக் கும்நீ
ஊருற வகன்றொண்டித் தனியனா கிடின்நாம்
ஓடிவந் துயிர்க்குயிர் எனநின்று தென்பும்
பேருவ கையும்தந்துன் பிள்ளையாய்த் தழுவிப்
பித்தராய், முத்தராய்ப் பீடுறச் செய்வாய்!
ஆரமு தாகியெம் அகம்,புறம் நிறையும்
அருள்மல்லா விக்கீசா எழுந்தரு ளாயே!

7. பித்தனு மாவை,பிச் சாடனன், மாலும்
பிரமனும், வயிரவன், ஐங்கரன் வீர
பத்திர னும்,அபி ராமியு மாவாய்
பலவுமாம் ஒன்றுமாம் சிவபெருமானே!
சொத்துகள் இழந்துமே உறவினர்ப் பிரிந்தும்
சோர்ந்திலம் எம்மனம் உன்நினைப் பாலே!
முத்தனே! மல்லாவி யோகபு ரம்வாழ்
முக்கண்ண னேபள்ளி எழுந்தருளாயே!

8. அரியொரு பாகமாய் அமைந்தவா போற்றி!
அன்னையோர் பாகமாய் அமைபவ போற்றி!
திருநடத் தாலிந்தப் பிரபஞ்சம் செறிந்து
தீவண்ணம் திகழ்ந்தொளிர் சிவபெருமானே!
"பருகிடத் தமிழில்பா தா!" என்று நயந்தாய்
பரம்பொரு ளே!இங்கெம் பண்ணிசை கேட்டே
திருவிழி திறந்துசேய்ச் சிந்தைகள் புகுவாய்!
சிவபெரு மான்பள்ளி எழுந்தருள் வாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. உன்னையே தாய்தந்தை உலகென்று நம்பும்
உன்னத மெய்ஞ்ஞானம் பிள்ளைகட் கருளப்
பன்னிநாம் தொழுதழும் பரிதாபங் கண்டே
பரிந்தரு ளப்பள்ளி எழுந்தருள் வாயே!
கன்னியர், காளையர், கைக்குழந் தைகளும்
கழல் தொழும் மல்லாவி யோகபு ரத்தாய்!
துன்னிடும் மணி,சங்கு தோத்திர முழக்குள்
துண்ணென வேபள்ளி எழுந்தருளாயே!

10. எங்களின் தோட்சுமை இறக்கினை உன்தாள்!
எங்களின் மனங்களில் விடுதலை தந்தாய்!
"இங்கினி உம்வேலை ஏத்தல்முத் திக்கே!"
என்றனை! சேய்கட்கும் இந்நிலை நல்கப்
பொங்கழல் மெய்யோக புரச்சிவன் உன்றன்
பொன்னடி வேண்டவே புகுந்தனம் இங்கே!
சங்கரா! நம்பா ஏ கம்பா,பு ராரி!
தண்ணரு ளேபள்ளி எழுந்தருள்வாயே!

- முதற்பதிப்பு :
கஜஸ்ரீ - பரமநாதன். யாழ் / இளவாலை 1999.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## தெல்லியம்பதித் துர்க்கை அம்மன்

# திருவிரட்டை மணிமாலை

### காப்பு

தெல்லிநகர்த் துர்க்கை சிவனி செழுங்கருணை
சொல்லினிக்கப் பாடித் துதிக்கின்ற - வல்லமையைத்
தந்தருளி மேற்கிணுவைத் தாயாம் செகராசத்
தொந்திஐயன் நிற்பான் துணை!

### நூல்

### வெண்பா

காசி சொப்ப னேசுவரி காணிவளென் றேத்தப்பார்
வாச இலுப்பையடி வந்தமர்ந்து - பூசைபெற்றும்
ஓங்கி வளர்ந்தே ஒளிநகராய் மீதுர்க்கை
பூங்கழல்போல் உண்டோ புகல்? 01.

### கட்டளைக் கலித்துறை

புகுந்தால் உனதாள், புவியிற் பிறந்துழல் காரணமாம்
அகந்தை வெறிகெடும்! ஆக்கோம் புதுப்பழி! முன்பிறவிப்
புகுந்த பழிகளும் போற்றவுன் தாளிணை பொன்றிவரும்
பகைத்தோன் தருதுயர் பாறிடும்! சாந்தி மிகுந்திடுமே! 02.

மிக்கின்பம் மிக்கடியர் மிக்குவரு வாய், சிற்பத்
தக்கதேர், சால்ராச கோபுரமாய், - பக்கஞான
நற்சுரபி மண்டபமாய், நல்கன்ன மண்டபமாய்
அற்புதமாய் மீந்தாய் அருள்! 03.

அருட்புட் கரணி, அடியர் விடுதி, அருமறையோர்
திருஇல், செயலகம், நந்த வனம், பெண் களின்விடுதி
திருமண மண்டபம், நூலகம், தெய்விகக் கோக்களில்லம்
மருவலங் கார வளைவுன தாம்பல ஒப்பனையே! 04.

பனையோங் கிலுப்பம் பசுங்காட் டிடைவாழ்
வனைபூங் கழற்றுர்க்கை மாதா - நினைவாய்
விரதங்க ளேற்றுலக மெய்யன்பர் நாளும்
தருநிதிஎம் தாய்மையின் சால்பு! 05.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சால அநாதைகள், தள்ளா டகதிகள் ஓம்பிடவும்
கோல மருத்துவங் கொள்ள வலிமை நிதிதரவும்
சீலச் சமயசந் தான குரவர்பேர் சீர்த்திடவும்
மூலவள் துர்க்கைசெய் மொய்ம்பருள் வெல்லும்
அருளுளதே!
06.

உள்ளதே இன்னும் உலைத்தழிக்கும் போர்க்கொடுமை!
முள்ளெலும் புக்கி முனகும்நாம் - கொள்வோமேல்
அப்பழுக் கில்லா அறவாழ் வுனதருளால்
எப்படையும் வாட்டா தெமை! 07.

எமதினம் ஏற்றிறை தானெமைக் காக்கும் எனமுழுதாய்
உமையுனை ஏத்தில் ஒருமன மாய், எமைக் கொல்லவரும்
இமயமும் தூளாய் இடிபடும் துர்க்கை நிரந்தரியே!
தமிழொடு சைவம் தழைக்கும் இலங்கைநல் மண்மிசையே!
08.

மண்மீதில் தேவிநின் வார்ப்படமாய்த் தங்கம்மாப்
புண்ணியச் செல்வி புரந்தரியாள் - நண்ணியதால்
அன்னாள் மிசை நின்றெம் அந்தரியே, சுந்தரியே
இன்னிழல்கள் ஈந்தாய் எமக்கு! 09.

எமக்கெய் திடர்கள் இரிய மருந்திடும் துர்க்கையம்மன்
எமக்கினி இன்னலே எய்தா திருப்பித்தல் எண்ணவைக்க
சுமைப்பழி யாளர்நாம் துர்க்கையே தான் முழுக்
காப்பெனவே
கமழ்த்துவ மேல்எமை, காதகர் தொல்லை களைபடுமே 10.

படுதுயர்கள் தீர்த்திழுத்துப் பன்னூறாம் தொண்டர்
அடியவரை ஆக்கிவருந் துர்க்கை - முடிவில்நம்
ஈழத்தார் எல்லாரும் தன்சரணம் ஆகிவிட
வாழத்தான் வைப்பாள் மகிழ்ந்து! 11.

மகிழ்வாள் அருள்மய மானநால் வேளைகள் பூசைதினம்!
மகிழ்வாள் மகோற்சவப் பன்னிரு நாள்வழி பாடுகளால்!
மகிழ்வாள் கர்ப்பூரச் சட்டிகள் வாசங்கள் பண்ணிசையால்!
மகிழ்வாள் அடியழிப் புப்பிர தட்டை வலிவுகண்டே! 12.

கண்டறிந்து தெய்வக் கவிஞர் அருளாற்றல்
கொண்டுவந்து கொண்டாடித் துர்க்கைமணி - மண்டபத்தில்
பொன்னாடை போர்த்திப் புகழாரஞ் சூட்டிடுவாள்
இன்னுமருள் நூல்கள் எழ! 13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சிபெற் றான்மிகம், ஈழத் தரச பணிமனைகள்
ஒளிப்பணி யாற்றி உவந்திடும் உத்தமச் செல்வமுளார்
மழைக்கொடை விஞ்சும் வளக்கர வள்ளல்கள்,
வங்கிகொளும்
களப்பணி மையம் கனகதுர்க் காவுன் கழலிணையே! 14.

இணைமின்!நம் மன்னைதேர் ஈரும்எனும் பெண்கள்
அணித்தொண்டர், ஆலயச் செம்மைப் - பணிபுரியும்
நல்லிந்து வாலிபரின் நாளாந்த ஊக்கத்தால்
தெல்லியம்மன் சேர்கின்றாள் தேசு! 15.

தேசுறு தைப்பொங்கல் சீர்ப்பூசம் மாசி மகம் முதலாய்
மாசங்கள் தோறும்எய் துற்சவம் யாவுமே, மங்கலமாய்
வாச மலர், ஒளித் தீபதூ பங்கள், அரோகராவாம்
ஓசைகள் மத்தியில் ஓங்காரி சந்நிதிப் பம்பிடுமே! 16.

பம்பிடமே எம்,சங்கம், பக்தர் படைநடுவில்
அம்பிகைநீ மாடமலி அவ்வீதி - நம்மடியார்
தோளேறிக் கம்பீரச் சுற்றுலாக் கொள்காட்சி
இம்பருளே உச்சம்இங் கே! 17.

இங்கே மனிதர் அருட்சுவை எய்திட ஊக்கு பணி,
பொங்கிப் பெருகிடர் போக்கும் புகலாகக் காக்குமருள்,
தங்கம்மா வன்னையின் தண்ணறஞ் சால்கொடை, மக்கள்
தொண்டே,
சிங்கம் மிசையவள் சிந்தை மகிழுந்தொண் டென்றிடுமே! 18.

என்றிடுவாள் பிச்சை எமதீழத் திற்சாந்தி?
என்றீவாள் எங்கள் விடுதலையை? - என்றேங்கி
அல்லும் பகலும் அருளூற் றுனைத்தொழுதால்
எல்லோரும், துன்பில்லை யே! 19.

இல்லை உன்னைவிட ஈழத் தினிலெமை மீட்கவல்லார்!
தொல்லை வினைப்பயன் சுட்டெரி! பாவம் எதுவுமினிப்
புல்லா திருப்போம்! புனிதம் திரிகர ணம்புரப்போம்!
எல்லாம் இயல்வாய் இமவான் புதல்வியாம் காசியளே!

- முதற் பதிப்பு :
தெல்லி துர்க்கை "அருள்ஒளி" 2006.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கிளிநொச்சி ஸ்கந்தபுரம்

# முருகன் மும்மணிக் கோவை

## வாழ்த்துரை

கடவுள் நினைவு நிலவும் மனத்தில் கவலைகள் இருக்க முடியாது. அதிலும் அதர்மங்கள் தலைவிரித்தாடுவதும், கவலைகள் கலக்கங்கள் மயமானதுமான கலியுகத்தில் அறம் நிலைநிறுத்தும் அருள் மூர்த்தியான கலியுக வரதனை நினையும் - துதிக்கும் - தரிசிக்கும் வேளைகள் கவலைகள் - கவலைகளின் வேர்கள் அறுந்து கொண்டிருக்கும்.

காலத்துக்கும், சூழ்நிலைக்கும் மிகப் பொருந்துவதான முருக வழிபாட்டினைத் தமதும் சமூகத்தினதும் விடிவு கருதி ஊக்கும் பணியில் முன்னிற்பவர் உரும்பிராய் கிழக்கில் வசிக்கும் செல்வன் ச. பிரபு அவர்கள். அந்தவகையில் சென்ற ஆண்டு மகோற்சவத்தின்போது "கந்தர் சஷ்டி கவசம்" நூலை இலவசமாக அச்சிட்டு வழங்கி ஆலயத் திருப்பணி நிதிக்கு வளங்கூட்டியவர் அவ்வடியார்.

இவ்வாண்டும், வன்னிப் பிரதேசத்தில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்களை வணங்கி வணங்கி, இறையருள் மழையில் நனைந்து நனைந்து, அத்தெய்வங்களை ஏத்திப் பாடி வரும் பண்டிதர் ச. வே. பஞ்சட்சரம் அவர்களைக் கொண்டு "ஸ்கந்தபுரம் முருகன் மும்மணிக் கோவை" எனும் இவ்வருள் வரலாற்று நூலைப் பாடுவித்து இலவசமாக அச்சிட்டு வழங்கியுள்ளார் அவர்.

அவர் தம் பணி மக்களின் ஆன்மிக, செல்வியக வளர்ச் சிக்குப் பேருதவி புரிவது போல அவரதும், குடும்பத்தினதும் உடல், உள, ஆன்ம, ஆரோக்கியத்திற்கும் குகனருளை ஈட்டிக் கொடுக்க வேண்டுமென ஆலய அறங்காவல் சபை பிரார்த்தித்து நிற்கிறது.

**ஸ்கந்தபுரம் முருகன் ஆலயம்,**
கிளிநொச்சி

தலைவர்,
பரிபாலன சபை - 1998.

நூலகம் 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கிளிநொச்சி ஸ்கந்தபுரம்

# முருகன் மும்மணிக் கோவை

## காப்பு

செம்மணி வீதியில் செத்தூர்ந்தோன் பாடுகிறேன்
மும்மணிக் கோவை முருகனுக்கும் - மும்முரமாய்!
புண்ணியம், புண்களுடன் போக்கியவா ஊர்விட்டு!
பண்ணவா! நீயேதா பா!

## நூல்

### ஆசிரியப்பா

**01. ஊர்ப்பெயரில் ஊற்றெழும் முருகன்**

வன்னிக் குடியேற்றம் துன்னி எழுங்கால்
கிளிநொச்சி மாவட்ட ஒளிகிளர் மேற்கில்
இருபதாம் நூற்றாண் டறுபத்து இரண்டில்
ஒருகுடி யேற்றம் அரச அதிபர்
சிறிஸ்கந்த ராசா நிறுவி எழுந்தது!
நிறுவுநர் புகழுறப் பெறுகஇப் பெயரென்று
"ஸ்கந்த புரம்" என அந்தக் குடிமக்கள்
தந்திடு பெயர்க்குள் கந்தனே நின்றான்!
கந்தனூ ராயின்று கனிந்ததே அந்நகர்!

ஸ்கந்த புரமென இயம்ப இயம்ப
ஸ்கந்தக் கடவுள் இக்குடி மக்கள்
இதயந் தன்னில் எழுந்ததன் பயனாய்
உதயம் ஆகிஓர் பாலை மரநிழல்
முருகன் தளியொன்று திருவிளக் கேற்றது
சாலை மருங்கெழும் ஓலைக் கொட்டிலில்! 01.

### வெண்பா

கொட்டிலிட்டார்! கும்பிட்டார், கூடிமடை பொங்கலிட்டார்
மட்டிலருள் வெள்ளம் மகிழ்ந்தாட்டி! - கட்டிக்
கரும்புவனக் கஜன், நாக தம்பிரான் சூழ்ந்து
தரும்வாழ்த்தில் ஆர்ந்தான்கந் தன்! 02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

தன்னிச்சை யாய்ப்பல்கிச் சஞ்சரிக்கும் பாம்பு வகைபலவும்,
இன்னல்செய் தேள், விட செந்துக்கள் என்பவும் சாலபகுதி,
துன்னி உயிர்குடி தொற்றிடும் நோய்களின் மத்தியிலே
இன்னுயிர் காக்கும் இறையருள் ஏத்தல் இயல்பதுவே! 03.

### 02. ஒருமயிலாய் வந்து கருவறை காட்டினான்

இயல்பித னாலே எழில்பெறக் குடிகள்,
திருவெம் பாவை சேரொன்ப தாம்பூசை
மருவிய வைகறை மயிலொன்று வந்து
சிந்திக் கிடந்த பந்தலிற் சுண்டல்கள்
பொறுக்கித் திரிந்தது! போனவோ ரிளைஞனை
விறுக்கென நிமிர்ந்து வெருட்சியாய்ப் பார்த்தது!
வரிச்சி னூடாக வெளிப்பாய்ந்து வந்தது!
தெருக்கான் ஈரமண் சிற்றடி சுவட்டி
இன்றுள்ள கோவிற் கருவறைத் திடல்நோக்கிச்
சென்றது! சிலிர்த்துப் பின்தொடர் இளைஞன்
அம்மயிற் காலடி அழுத்திய சுவடுகள்
அம்மா! ஓர் குழந்தையின் அழகிய காலடி
யாய் மின்னக் கண்டு பாய்மனத் தவிப்புற்றான்!
அவன்உடன் அழைத்தஓர் தவமுதி யவரும்
ஓடினார் பின்னால்! ஓ! அது பெரும்புற்றுக்
கூடிய இடத்தைக் குதித்தோடிச் சுற்றிச்
சடுதியில் மறைந்தது! இடமது இன்றைக்
கருவறை! கந்தன் மருவருள் முன்னிற்று! 04.

முன்னை வனம்! தாழா முயற்சியினால் நெல்வயல்கள்,
தென்னைவன மாகத் திகழ்விக்கும் - இந்நகரார்,
நஞ்சுண்ட கட்டக்க ராயன் குடிமக்கள்
எஞ்சாத பக்தியுளார் ஈண்டு! 05.

ஈண்டிய கங்குல் இருட்டிலும் செல்லத் தகுந்தவழி,
வேண்டிய பண்டம் விரும்பிய வாறளி நல்லகடை,
தூண்டிமெய்ஞ் ஞானம் சுடர்கல்வி நல்கிடும் பள்ளிபல
ஈண்டில்லை! வன்னியில் எல்லாமே வேல்தான்
எனும்நிலையே!
06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. வேல்கொள் வீடு கால்கொள் விழா!

நிலைகொண் டழகன் குலவும் பகுதியாய்
இருபுறம் ஒழுங்கை மருவிட முன்புறம்
நீள்தெரு, பின்புறம் சூழ்பற்றைக் காடு!
வரம்புகொள் ஐந்தேக்கர்ப் பெருமர வனத்தை
அற்றைக் குடியேற்றப் பெற்றிசால் அதிகாரி
கலாபன் அடியார் புலோலி தருமகன்
மார்க்கண்டு ஒதுக்கினார்! கூர்த்ததால் குகனருள்,
சேனைச் செய்கைச் செந்நெல் விளைவை உண்
யானைத் தொல்லை, அழிவு செய் பன்றிகள்,
கொடுவிலங் கரவுக ளிடைதமைக் காக்கும்
வேலவன் கால்புகும் மேலவர் ஆகி,
அக்க ராயன் இக்குடி யேற்ற
வாசிகள் கூடியிவ் வீசனின் வளவினைக்
காடு வெட்டிக் கவின்வெளி யாக்கினர்!
கூடுங் கோவில் பரவெளிச் சங்கமம்!
அடிக்கல் நாட்டுதல் அறுபத் தாறினில்
நடந்தது நாடெல்லாம் நல்வாழ்த்துச் செப்ப! 07.

செப்பள்ளிக் கொண்டு திருநடனம் ஆடுமொரு
அப்பையன் போல்பொலிந்த அந்தென்னை - கொப்பொசிய
முற்றத்தில் காய்குலுங்கும் முற்றாத மா, பலவு
உற்றபணிக் கூக்கமூட் டும்! 08.

ஊட்டும் குளநீர் ஒளிர்மூன்றாம் ஏக்கரில் நெற்பயிரை!
மேட்டு நிலமோ மிளகாய், உழுந்துவெங் காயம்தந்து,
வாட்டும் வறுமை மறைந்து வளப்பம் குலவிட நாம்
கூட்டினை வாழ்வென்று கும்பிட்டுக் காட்டை அழித்தனரே!
09.

## 04. கீர்த்திக்கேற்ப மூர்த்தி பெருத்திட!

அழித்தனர் காட்டை! செழிப்பாய் அங்கோர்
கற்றளி வடிவில் கட்டக் கோவிலை
அற்றைநாள் நாட்டிய அடிக்கல், இவ்வூர்,
அயல்அக்க ராயன், நஞ்சுண்ட கட்டு
வயல்கள், தென்னை வனங்களில் விளைச்சலை,
பட்டிப் பசுக்கள், பட்டி மறிகளின்
பால், தயிர், நெய்யை சால்முக் கனிகளை
அள்ளிச் சொரிந்திட உள்ளங் களித்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிப் பணம், பொன் விதவித நிதிகள்
ஆலயங் கட்டச் சாலவுங் குவித்தனர்!
தென்ம ராட்சிச் சிவகுரு முதியவர்
தின்ன வேலி நமநாதன், வண்ணைத்
திருஞான சம்பந்தன், திகழ்குடி யேற்ற
இருஅதி காரிகள் இன்னும்நிர் வாகிகள்
கிளி. அபி விருத்தி விளங்குத்தி யோகத்தர்
சுப்பிர மணியன், இப்பரன் பூசகர்
முதலியோர் அணுகிட உதவியது உவந்தூர்!
பெருகின பெருநிதி பெருத்திட மூர்த்தியே! 10.

மூர்த்தி சிறிதெனினும் மூள்கீர்த்தி யோ பெரிதக்
கீர்த்திக்குத் தக்கபடி மூர்த்திதளி - சீர்த்தோமோ
என்றேங்கும் ஊர்மக்கள் இன்புறும் மாளிகையாய்
ஒன்றெழும்! கந் தப்புரம்குன் றோ? 11.

குன்றக் குமரன் குறிஞ்சி மலைக்கோன் என்றன்றோ
அன்றைக் கிருந்தெம் அறிஞர் அறைவர் அருள்வேலா!
இன்றைக் கெமதூர் எழில்வன் னியிலும் இருந்தெம்மைக்
குன்றாச் செழுமை குலவத் திகழ்த்தும்நின் கூர்வேலே! 12.

## ०५. இம்மை மறுமை எழில்தர வருதலம்!

கூர்வே லாகச் சார்சாலை யில்ஆதி
நெடுமரப் பாலைகீழ் இடங்கொண் டமர்ந்த
முருகோன் சந்தடி, மொய்வா கனங்கள்
பெருகிடர் நீங்க, மணிமண் டப த்துடன்
இருக்கும் இடத்தில் பொருத்தமார் மனையில்
நிறுவப் பட்டனன்! நித்திய பூசையை
யாழ்கச் சேரியடி வாழ்கந் தையா
புரிந்து வந்தனர்! புதிய கட்டடம்
கருவறை, அர்த்த, மகாமண் டபங்கள்
நிருத்த மண்டபம் திருப்பொலிந் தோங்கின!
உறுங்காணி அதிகாரி உயர்பஞ்ச லிங்கம்
நிறுவியே அடிக்கல், நிறைந்ததிம் மங்களம்!
நெடுந்தீவு தரவரு குடியினர் பக்தி
யால், ஒன்றி நிறுவினர் சால்பரி வார
மூர்த்தமாம் கணபதி ஏத்த இவ்வுலகுமே! 13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலக வாழ்க்கை நாம் இங்குகுடி யேறியதால்
செவ்வையுற்ற தென்றாலும் தீர்ந்துசேர் -அவ்வுலகம்
மோட்சமாய் வாய்க்க முறையாய்த் தவம்செய்யும்
மாட்சிமிக்க தாக்குவம்இம் மை! 14.

இம்மை இனிமைகள் ஈந்த குகனருள் ஏத்திசைத்தே
அம்மை இனிமை அருளும்படிநாம் வழுத்துதற்கே
செம்மை திகழடிச் சேந்தன் குடிகொள் தளிசெய்ய
எம்முடல், ஆவி, பொருளும் இணங்கி வழங்குவமே! 15.

06. குடமுழுக்கார்ந்தது வடிவேல் சந்நிதி!

வழங்கப் பலருஞ் செழும்பல் உதவி
தீர்த்தக் கிணற்றுத் திருப்பணி கிளிநொச்சி
நீர்ப்பா சனத்திணைக் களஅக்க ராயன்
பிரிவுத் தொழிலர் அருமுழைப் பினிலே
ஆழமாய் அழகாய்த் தோண்டி அமைந்தது!
வாழ வயிரவர், மனையுறுஞ் சிறிதாய்!
மடைப்பள்ளி, கண்டா மணி, சுற்று முன்மதில்
என்பன எழுந்தன! இன்கவிப் புலவர்
சோமசுந் தரமெனும் சுடர்ப்பள்ளி அதிபர்
சேமமாய் ஊஞ்சல், திருத்தல புராணம்
ஆக்கினார்! கும்பாபி டேகத்தில் ஆர்த்தன!
ஊக்கமாய், இங்கயல் ஊராரும் உழைத்தனர்!
சிற்பா சாரி அராலிச் சிவராசா
அற்புத மாய்ப்படை அருள்தளி யிதனைக்
குடமுழுக் காட்டினர் நெடுந்தீ வுக்குரு
கணேசா னந்தர் பணாமுடி யருளால்!
குடமுழுக் கன்று, முருகருள் மயமாய்
இடம்பெற்ற தாயிரம் தொளாயிரம் எய்தும்
எண்பத்து நான்கில் இணைஆ வணியில்
நண்ணும் முப்பத் தோராம் நாளில்!
மங்கலம் பெருகும்! பொங்கும் கண்ணீரே! 16.

நீர்ப்பா சனங் குலைந்து, நிம்மதிகள் குன்றிநிற்கும்
போர்ப்பிணிப் பொல்லாங்கின் ஊடாயும் - தீர்க்கமுடன்
ஓங்கியது வேலன் ஒளிக்கோவில்! பல்கிடரால்
ஏங்காமல் வேலீந்த தேம்! 17.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமவேல் பாரங்கே இன்னொளி ஏந்தி மொழிகிறது
"நாமிருக் குங்கால் நலிபய மேன்?" எனும் நல்லபயம்!
சாமமும் நற்பகல்! சங்கட மும்சுகம் தாய்முருகாம்
சாமிஇங் குள்ளதால்! தாள்தொழு தால்வரும் தண்மகிழ்வே!
18.

## 07. திருவிழாக்கள் - பெருவிழாக்கள்!

மகிழ்வுடன் மக்கள் புகுதகு கோவில்
ஆவணிப் பூரணை அடைந்திடத் தீர்த்தம்
மேவும் மகோற்சவ விழாக்கள் பத்து நாள்!
மாதக் கார்த்திகை விழாக்கள், மார்கழி
வாதவூர்ப் புராணம் படிதிரு வெம்பாவை,
கந்தபு புராணம் படித்துக் கதைவிரி
கந்தசட்டி யுடன்திருக் கல்யாணத் திருவிழா
கவுரி அபிடேகச் சிவைமகிழ் திங்கள்கள்
சிறப்புநட் சத்திரத் திகழ்பூசை என்பன
திறம்பட நிகழ்ந்திங்கு தெய்விகம் பொலிந்திடும்!
கார்த்தி கேயன் காண்ஆண்டுத் தீர்த்தம்
போர்த்தடி யார்கடல், ஆர்ப்பவே பல்லியம்,
நாக தம்பிரான் நறுந்தளி மஞ்சனம்
ஓகையாய் ஆடிட ஏகுதல், ஆடுதல்
கற்பனைக் கும்எட்டா அற்புதக் காட்சி!
விண்வாழ் வேயந்நாள் எண்ணின்நம் மண்வாழ்வு! 19.

மண்வாழ்வு நீடாது! மாடு, மனை, சுற்றம் உன்
கண்ணில்மண் தூவிக் கழன்றுவிடும் - உண்மையிலே
என்றென்றும் உன்துணைவன் நானே! தெளியென்று
தன்திருவாக் கீவான்கந் தன்! 20.

கந்த புரத்தமர் கந்தன் அருளெனில் காண்க,தனி!
எந்த இடுக்கணும் எய்தின் தடுத்தருள் என்றுதொழின்
விந்தை எனும்படி மீட்குவன் எங்களை! இஃதுமுனம்
வந்தபல் லேதிலி வாய்களும் கூடவே வாழ்த்தினவே! 21.

## 08. உருவும் திருவும் வளரும் மகிமை

வாழ்த்திடும் வண்ணம் காழ்ப்பிலொற் றுமையர்
நிர்வகி தளியில் சர்வமங் களங்களும்
பெருகுதல் கண்டோம்! கரைச்சிப் பிரதேச
இந்து இளைஞர் பேரவை அந்தியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திடு வர்பிர சங்கங்கள் வெள்ளிகள்!
முருகன் கோவிலின் முன்கடை வரிசைகள்
தருவா டகைதனில் நவகோள் தம்தளி,
சிறுமை நீங்க உறுகோவில் வடுகற்கு,
உள்வீதிக் கூரைகள், ஒண்மணி மண்டபம்
மயிலடி முருகன் பயிலடி யாய்க்கண்டோர்
ஊக்கி உழைப்பதுஇங் காக்கும்பல் பணிதான்! 22.

தானெனுவோர், இங்கே தருக்கிடுவோர் யாருமில்லை!
ஊனுடலம் வீழ்கால் உறாதுகும்பி - வானுலகம்
புக்குய்ய வேண்டுமெனும் போதமுடை தொண்டர்களே
மிக்கன்பே விஞ்சுவிக்கும் வேல்! 23.

வேல்தரும் யாவும் விரும்பிய வாறென நம்பிடுவோம்
கால்பணி தல்தான் கடமை எமக்கெனக் கண்டிடுவோம்!
மேல்நிகழ் யாவுமே வெற்றிக ளாகுதல் கண்டிடலாம்!
கோல்கரங் கொண்ட கொழுப்பினர் குன்றல் நடந்திடுமே! 24.

## 09. கதிதந்து காத்தது கதிர்வேல்!

நடந்திடும் கலியுக இடும்பைகள் தீர்ப்பவன்
தன்னைந் தேக்கரில் சனித்தெழுங் குடிசைகள்
துன்னிய வற்றுள், சொந்தவூர் விட்டு,
சொத்தெல்லாம் இழந்து, யுத்தம் துரத்திட
வந்தடை மக்கட்கு வாழ்வளித் தருளிய
சுந்தர முருகன் சுடரடி துதித்தே
நீறிய மனம்பல ஆறியே நிமிர்ந்தன!
சூழ இருந்தே கும்பிடக் கும்பிட
வாழத் தனித்தனி வழிதந் தனுப்பிய
கருணைப் புரமாய்க் கந்த(ன்)புரத்தை
ஒருலட்சம் மனங்களில் உயர்த்தினன் முருகன்!
முருகக் கடவுளின் திருவுளம் அறிந்து
நிருவகிப் போர்இவ் வறங்காவல் நெறியர்!
இரணை மடுக்கன காம்பிகை அம்மன்
கருணை நுணாவில் கண்ணகி அம்மன்
அருள்புகழ் "அன்னை அருளமு தம்", இம்
முருகன் மேல்திருப் பள்ளி எழுச்சிநூல்
வெளியீடு செய்தும் வழிபா டாழ்ந்தனர்! 25.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்தபற்றுச் சொத்தில், அடிதொழலும் சொத்துக்காய்
வாழ்ந்தழியும் பல்லோர் மனம் விரிய - தாழ்வுறுத்தி
இங்கழைக்கப் போகின்றேன் ஏற்றஇடம் செய்யென்றே
தங்கவேல் வீழ்த்துங்கு டா! 26.

குடாவெனும் சின்னதோர் குண்டுச்சட் டிக்குள் குதிரைவிட்டே
படாதன பட்டும், படுவித்தும் பாழ்க்கும் தமிழர் வந்தே
அடா! தமிழ் மண்ணித் துணைப்பெரி தாவென் றதிசயித்து
விடோமெங்கள் மண்ணெனும் வீறவர் கொள்விக்க
வேண்டுமென்றோ!
27.

## 10. வினை தீர்க்கும் சிறை மீட்கும் வேல்

என்றெம் ஈழத்துக் கீவனோ நிம்மதி
அன்றவன் திருவுளம் ஆட்கொண் டெங்களை,
சிற்பக் கோபுரம் பொற்புள்ளி மஞ்ஞை,
ஆட்டுக் கடாமுதல் அழகுவா கனங்கள்,
மஞ்சம், சித்திர வண்ணச் சப்பறம்
எஞ்சா தெல்லாம் இனிது தருவிப்பான்!
செந்தமிழ் மந்திரப் பூசையும் திளைப்பான்!
வந்திடும் இந்நிலை மடங்க வல் லசுரர்! 28.

வல்லசுரர் சேனைகொன்று வாழ்ந்தமரர் மீளவைத்த
நல்லருள்வேல் நாளை நமைமீட்க - வெல்மகிழ்வில்
சிற்பத்தேர் அன்னமடம், சீர்ப்பள்ளி, காப்பகங்கள்
அற்புதங்கள் நாம்செய் அறம்! 29.

அறத்தினைக் காக்க அமர்புரி வோருங் குகனடியர்!
வெறுத்தெதை யும்அவன் மெய்யடி வீழ்வோரும் அன்னவரே!
குறக்கொடி வள்ளி குலவிடும் வேலன் மனமிரங்கி
உறுத்துவன் வெற்றியை ஒண்டமிழ் அன்னைக்கே
வன்னியரே!
30.

- முதற்பதிப்பு ச. பிரபு, உருபிராய் - 1998.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## மருதனார் மடம் – இணுவில்
# பல்லப்ப ஞான வைரவர் திருப்பள்ளியெழுச்சி

அல்லிருள் அகல்வது! அரைகுறை யாக,
அங்கங்கு தெரிவன பொருள்களின் சாயல்!
இல்லங்கள், கடைகளின் இடுக்குகள் தோறும்
எட்டியே பார்ப்பன விளக்கொளி! படிப்பு
வில்லங்கம் என்றும் விடலைகள் கூட
மிகுந்தெழப் புத்தூக்கம், வித்தையில் முனைந்தார்!
பல்லப்ப நாதனே! பரமனின் சுடரே!
பரவசம் தரப்பள்ளி எழுந்தருளாயே! 01.

மொட்டுக்கள் மலர்ந்தன! மூக்குறும் சுகந்தம்!
மூசியே வண்டுகள் தேனுண்ணப் பறப்ப!
சிட்டுகள் சிறகொலி "சிவ்"வெனக் கிளம்பும்!
செம்மறிப் பட்டிகள் புல்வெளி நோக்கிக்
கட்டின நடையினை, புழுதியைக் கிளப்பி!
கடப்பன சந்தியை காலொளி யூர்தி!
கெட்டிட ஆணவம் அயன்தலை கிள்ளீ!
கீழ்வான் சிவந்தது கிளர்ந்தெழுவாயே! 02.

மங்கையர் கல்லூரிப் பண்ணிசை கேட்கும்!
வாழ்த்தும் நுண் கலைப்பீட யாழ், வீணை கேட்கும்!
சங்கொலி மாருதி முன்கோவிற் கேட்கும்!
சந்தையுள் வாணிபச் சந்தடி கிளம்பும்!
அங்கையில் மலருடன் அன்னையர் வந்தார்!
அடியர் நெய் விளக்குகள் அணிசுடர்த் திட்டார்!
குங்குலி யம், அகிற் புகையில்மார் கழியின்
குளிர்போனதே! பள்ளி எழுந்தருளாயே! 03.

கற்றிடக் கல்லூரி, நுண்கலைக் கழகம்,
கற்பிக்க இவற்றினில் கல்விநுண் கலைகள்,
விற்றிடச் சந்தையில் தம்விளை பொருட்கள்,
வேண்டிய காய்கறி, கொள்முதல் செய்யப்
பற்பல ஊர்நின்று வந்துமே பணியும்
பக்தர்கள் அங்கங்கு வாழ்ந்திடும் இன்றும்
தற்பர! மனக்கண்ணால் தரிசித்தே உன்னைத்
தாழ்கின்ற னர்! பள்ளி எழுந்தருளாயே! 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பாத்தி நெடியும்நீ சகித்தது முண்டு!
    சாப்பிண ஊல்வலங் காண்பது முண்டு!
சப்பாத்துச் சன்னதர்ப் பொறுத்தது முண்டு!
    சாகசம் இவற்றுள்ளும் சுவைத்தது முண்டு!
தப்பாமல் தடுத்திங்கு தடித்தன மெல்லாம்
    தாயென எங்களைக் காத்தருள் வோனே!
முப்போதும் மடைபொங்கல், வடை பூசை ஏற்கும்
    முச்சூல னேபள்ளி எழுந்தரு ளாயே! 05.

ஊர்க்குளன் றுடுவிலில் உதித்தனை! கிளம்பி
    உலகினை ஆளஇச் சந்தியில் வந்தாய்!
கூர்த்தருள் மருதனார் வைத்தநல் மடமும்
    கூவமும் அணிசெயக் கோவில்கொண் டருளீ!
மூர்த்திநீ சந்தியின் மூலைச்சிற் றிடத்தில்
    முகிழ்சிறு தளிதனில் முனைந்தமர் போதும்,
கீர்த்தியோ பெரிதையா! பேரருள் மயம்நீ!
    கெஞ்சிநின் றோம்பள்ளி எழுந்தரு ளாயே! 06.

உமைசிவ னின்கோவில் பெண்கள்பள் ளிக்குள்
    உள்ளதுன் வடக்கினில்! இப்புறம் மேற்கில்
அமைந்தது மாருதி ஆலயம் புதிதாய்!
    அடுத்துளார் சிறீரங்க நாதர்! யோ கர்போல்
எமதுபல் சித்தர்கள் ஆதிநாள் தொட்டே
    எய்திச்சேர்ந் தான்மிகம் வளர்ப்பர்சந் நிதியில்!
தமிழொடு சைவமும் பேண்சங்கத் தலைமை
    சால்வடு கா!பள்ளி எழுந்தரு ளாயே! 07.

கோவில்கள் பலவற்றின் திருவிழாக் காலம்
    கூடிநின் சந்நிதி மண்டபம் நின்றே
காவடி ஊர்வலம் கால்கொண்டு தொடரும்!
    காவடித் திருவிழா பலசெய்வோம் உனக்கும்!
தூவிடும் மழையுள்ளும் வீதிகள் தோறும்
    தோத்திரம் செய்துன்னை, தொண்டர்வந் தடைந்தார்!
பாவினுள் கீர்த்திநூல் பலதந்தோம் ஐயா!
    பரணித ராபள்ளி எழுந்தரு ளாயே! 08.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிகள் பேதமே சற்றும் இல் லாத
சமரசச் சந்நிதிப் பல்லப்ப நாதா!
போதிய பொங்கல்கள், படையல்கள் மூலம்
பொலிபவ னே! நன்றி ஞமலிவா கனத்தோய்!
ஆதரித் தேழைகள், முதியர், நோ யோரை
அன்றாடம் ஊட்டுவாய் பயிர்கள்சூழ் பரனே!
நாதப்பறைச்சிவன் சூலமு மானோய்!
நல்லப்பனே! பள்ளி எழுந்தரு ளாயே! 09.

வல்வையின் நெல்லண்டை யும்வதி வோனே!
வாழ்விக்க நீதியைத் தன்னையர்ப் பணிக்கும்
வில்வம் எனும்புகழ்ப் பெருந்தகை தந்தோய்!
வித்தகனே பள்ளி எழுந்தரு ளாயே!
வல்வினை, இழிமல வலைப்பட்டே உழலும்
வாழ்வுக்கோர் முடிவினை வழங்கிடக் கோரி,
பல்லப்ப நாதனுன் பாதங்கள் சேர்ந்தோம்!
பரிசுத்தம் தரப்பள்ளி எழுந்தரு ளாயே! 10.

முதற்பதிப்பு :
சண். வெண்ணிலா,
ப. செங்கோடன்
2018.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## கிளிநொச்சி வன்னேரிக்குளம்

# ஐயனார் அருள்மங்கலம்

ஐயனார்! ஐயனார்! அருள்மிகுந்த ஐயனார்!
மெய்யனார்! மெய்யனார்! நம்பினர்க்கு மெய்யனார்!
வையமே வியந்திட வன்னேரிக் குளத்திலே
தெய்விகம் ஓங்கியே தேசம்மொய் ஐயனார்! 01.

மன்னார்செல் வீதியில் வன்னேரிக் குளவனம்
துன்னும் பல் குடிசைகள், தொழிலகம், வயல்வெளி,
வன்னப்பூங் குட்டைகள், வாய்க்கால்கள் சோலைகள்
மின்னிட ஐயனார் பூத்தருள் விஞ்சினார்! 02

ஆதியில் வன்னேரி அடவியில் அடியவர்
அடிதொழ அருளுடன் அமர்ந்தநம் ஐயனார்!
வேதனைத் தீயினில் வீழ்ந்தவர் மீண்டிட
வீதியின் மருங்கினில் வெளிப்படும் ஐயனார்! 03.

அரன் - சிவன் தந்தையின் அருமகன் ஐயனார்!
அரி-திரு மால் அன்னை அருள்மகன் ஐயனார்!
கருநிற மேனியன் கருணைநெஞ் சையனார்!
கைதொழக் கடுவினை கரைப்பவர் ஐயனார்! 04.

கயிலையில் உதித்தநூல் கயிலைஞா னவுலா
கற்றிடப் பண்டிங்கு களித்தருள் ஐயனார்!
வயிரவர், பிள்ளையார், மாகாளர், சங்கரன்
மாலவ னாம்பரி வாரங்கொள் ஐயனார்! 05.

வேட்டை செல் காட்டிடை ,காஞ்சியில் பிஞ்ஞகன்
வெங்கொலை பூதத்தால் மேவாமற் காத்தவன்!
கேட்டுஅவன் கெஞ்சியே கொடுத்திடப் புதல்வியை,
கிளிநிகர் பூரணை தனைமணை ஐயனார்! 06.

நெஞ்சினை அள்ளிடும் நிறைந்ததன் அழகினால்
நேபாளக் கோபல்ஞன் நேசங்கொண் டீந்திட
வஞ்சிபுட் கலையினை மணந்தருள் ஐயனார்!
மான், மயில் மந்திசூழ் வன்னேரி ஐயனார்! 07.

நூலகம் 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்தொளி இந்திரன் பத்தினிக் கிடர்தரப்
பாவியவ் வசமுகி செல, அவள் தொழத்தன்னை,
புயந்திகழ் தளபதி மாகாளர் தன்னையே
போக்கியிந்தி ராணியைக் காத்தருள் ஐயனார்! 08.

குதிரைமேல் ஏறியெம் பகைகொல்லும் ஐயனார்!
கோழியின் கொடி,செண்டு கொண்டநம் ஐயனார்!
மதகரி மிசைவந்து வானுல கின்பமும்
வழங்கிடும் கரிதிரி வன்னேரி ஐயனார்! 09.

பூரணை, புட்கலை பொருந்துதன் னடிதொழப்
போட்டிகள், போர்களில் வெற்றிநல் கையனார்!
தாருகா வனரிஷி தம்மகந் தைவிடச்
சால்அரி அரன்புரி லீலைபே றையனார்! 10.

அசமுகி - இந்திரன் புதல்வியாம் கிருத்திகை
அக்கிர மங்கண்டு அரன்புரி கட்டளைக்
கிசையவே கடலினில் எறிந்துகொல் லையனார்!
இங்கைய னார்புரம் எழுந்தருள் ஐயனார்! 11.

மகிஷியை வதைத்தழும் வானவர், மண்ணவர்
மலிதுயர் தீர்த்தருள் வன்னேரி ஐயனார்!
மிகுபல தமிழக, ஈழநாட் டூர்களில்
வீற்றிருந் தடியர்க்கு விடிவருள் ஐயனார்! 12.

சூழ்மலர்ப் பொழில், பள்ளி திருக்குளம், மடம் பசுத்
தொழுவம், மேய்ச் சல்நிலம் சோர்முதி யவரில்லம்
நாள்சில வற்றிலே நாட்டிய ஐயனார்!
நயந்துவன் னேரியில் நண்ணிடும் ஐயனார்! 13.

உலகெலாம் ஆள்பவன்! ஊடுரு விமனம்!
உத்தமப் பொருட்பெயர்ச் சாத்தனாம் ஐயனார்!
குலவுபூ ரணையுடன் புட்கலை அருகுறும்
கோலமாய் வன்னேரி கோவில்கொள் ஐயனார்! 14.

பந்தள நாட்டினர் பரவுமை யப்பனாய்
பரிந்தவ தரித்தனன்! பதினெட்டுப் படியேறிச்
சுந்தரச் சபரியாம் மலையினில் அடியவர்
சுடரும்நெய் விளக்கிடும் ஐயப்ப ஐயனார்! 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வெள்ளியில் முருகனை,திங்களில் அம்மனை
வியாழனில் வேழனை, ஞாயிறில் மாலனை
உள்ளநாள் யாவிலும் சிவனைநாம் ஏத்தல்போல்
உறுசனி களில்தொழின் உவந்தருள் ஐயனார்! 16.

பழையவர், புதியவர், பாதைசெல் பயணிகள்,
தொழுதெங்கோ பரிபவர், தொண்டர்கள் யாவரின்
உளங்களில் சந்தத உருக்கொள்ளும் ஐயனார்!
உருக்கொண்டே திருப்பணி முடித்தமர் ஐயனார்! 17.

ஐங்கரன், வேலவன், அம்மன்,நல் வைரவன்
ஆலயங்கள் மிகும் வன்னேரிப் பொன்நகர்
பொங்கருள் மூர்த்தமாய்ப் பூத்த நம் ஐயனார்!
பொய்யிலார்க் கின்னருள் பொழியும்நல் லையனார்! 18.

ஐயனார் தீர்க்கவே அலைக்கும்நம் பழியெலாம்!
ஐயனார் காக்கவே அழிபடும் தமிழினம்!
ஐயனார் மீட்கவே அந்நியன் கைநிலம்!
ஐயனார் கால்களில் அடைக்கலம்! அடைக்கலம்! 20.

- முதற்பதிப்பு : ந. சிவஞானசுந்தரம்பிள்ளை
ஐயனார் கோவில், அராலி - 1999.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

## கிளிநொச்சி ~ ஸ்கந்தபுரம்
# காட்டம்மன் சிந்து

### காப்பு

நெடும்பாலை நீழல், முருகதளிப் பாங்கர்
குடிகொண் டருள்குஞ் சரவா - நடன
விநாயகா, காட்டம்மன் மெய்சிலிர்க்கும் பாக்கள்
அநாயசமாய்ப் பாட அருள்!

### நூல்

கந்தபுரக் காடுவந்தாய் முத்துமாரி -அந்தக்
காடமர்ந்து நாடுதந்தாய் முத்துமாரி!
எந்தவரம் கேட்பவர்க்கும் முத்துமாரி - அதனை
ஈந்துவாஞ்ஞை யோடணைக்கும் முத்துமாரி! 01.

வெள்ளி, செவ்வாய் மாலைகளில் முத்துமாரி - அடியர்
வெள்ளத்திலே மிதக்குங்கோவில் முத்துமாரி!
பள்ளம்,மேடு, வெள்ளம் பாரார் முத்துமாரி! - தாயர்
படைகளுன்னை வந்துமொய்க்கும் முத்துமாரி! 02.

அகதிகளாய் வந்தவரும் முத்துமாரி - இங்கு
அடியடியாய் வாழ்பவரும் முத்துமாரி,
தகுதிமிக்க கவியரங்கம், பட்டிமன்றம் - செய்ய,
சபை முழக்கில் அதிரும் முன்றில் முத்துமாரி! 03.

நாட்டம்ம னாய்க்குடிகள் முத்துமாரி! - நல்கும்
நாத, கீத பூசைகளும் மேவும் போதும்
காட்டம்மன் பெயரே கொண்டாய் முத்துமாரி! - உன்னைக்
காட்டும் அம்மன் என்பதாலே முத்துமாரி! 04.

ஆல், அரளி சோலையிட முத்துமாரி - அந்த
அருள்நிழல்முன் கோவில்கொண்டாய் முத்துமாரி!
பால் பொழியும் ஆவினங்கள் முத்துமாரி! - இரவில்
படுத்துறங்க நடுவமரும் முத்துமாரி! 05.

நூல் 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையை வேண்டி விழாவெடுத்தால் முத்துமாரி! - நோய்தீர்
மழைவழங்கும் தெய்வம் எங்கள் முத்துமாரி!
தழைசந்தான லக்குமியே முத்துமாரி!-சகல
சம்பத்துக்கும் ஊற்றுநீயே முத்துமாரி! 06.

பாலைமரஞ் சூழ்பதியாய் முத்துமாரி! - மாரிப்
பாயும்ஓடை பக்கங்கொண்டாய் முத்துமாரி!
தாலிவரம் கேட்பவரை முத்துமாரி! - வந்து
தம்பதியாய் வணங்கவைக்கும் முத்துமாரி! 07.

சுடுவெயிலில் தெருநடப்போர் முத்துமாரி!- உன்றன்
சோலைநிழல் ஆறிச்செல்வர் முத்துமாரி!
தடைமுகாமில் சிக்கியோரும் முத்துமாரி! - உன்றன்
தாளை ஏத்தித் தடைகடந்தார் முத்துமாரி! 08.

நாச்சியம்மா! வேப்பிலையில் முத்துமாரி! - கரக
நாயகியே! நாரணியே! முத்துமாரி!
பேச்சு, மூச்சி முந்தசேயும் முத்துமாரி! - உன்றன்
பேரருளால் சிரித்துப் பேசும் முத்துமாரி! 09.

பங்குனியில் திங்கள்தோறும் முத்துமாரி! - பக்திப்
பரவசத்தில் ஊர்மிதக்கும் முத்துமாரி!
சங்குவளை நான்கு கேட்டால் முத்துமாரி! - நீயோ
தங்கவளை நாற்பதீவாய் முத்துமாரி! 10.

பூப்பறித்து வீடுதோறும் முத்துமாரி! - கோத்துப்
பொழியும் மாலை குளிப்பவளே முத்துமாரி!
காப்புக்கட்டி உன்தளியில் முத்துமாரி! - காக்கும்
கெளரி நோன்பில் மகிழ்பவளே முத்துமாரி! 11.

அகில,அண்ட கோடிப்பிர மாண்டமாதா - நீலி
ஆதிபரா சக்தி, காளி முத்துமாரி!
மகமாயி, கருமாரி, துர்க்கை, சண்டி - உமா
வாணி,கண்ண கை, சிவனி முத்துமாரி! 12.

சிவகாம சுந்தரியே முத்துமாரி! - எம்மைச்
சிறைமீட்டுக் காப்பவளே முத்துமாரி!
நவராக்கள் நாயகியே முத்துமாரி! - அந்த
நவக்கிரக நாயகியே முத்துமாரி! 13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கும் உன்றன் கால்களென்றே முத்துமாரி! - எங்கள்
கண்மணிகள் கவலைவிட்டோம் முத்துமாரி!
தூக்கம், தண்ணீர், சோறு விட்டும் முத்துமாரி! - உன்னைத்
தொழினும் உன்றன் அருளுக் கீடோ முத்துமாரி! 13.

சர்வலோக நாயகியே முத்துமாரி! - உலகின்
சகலஉயிர் அன்னைக் கன்னாய் முத்துமாரி!
மர்மமான வாழ்விதம்மா முத்துமாரி! - தக்க
வழியிலெம்மை நடத்திடம்மா முத்துமாரி! 14.

மங்கலமார் திருவிளக்குப் பூசை செய்வோம் - உன்றன்
வரலட்சுமி விரதநாளில் முத்துமாரி!
எங்கள்துயர் கோடியம்மா முத்துமாரி! - உன்றன்
இன்னருளே தீர்க்க வேண்டும் முத்துமாரி! 15.

மீனாட்சி, காமாட்சி, விசாலாஅட்சி - மகிட
வெவ்வசுரன் தனையழித்தாய் முத்துமாரி!
கோனாட்சிக் கொடுமை எல்லாம் முத்துமாரி! - இன்றே
கொன்றொழித்தெம் மீட்சியைத்தா முத்துமாரி! 16.

ஓடி, ஓடிக் களைத்துவிட்டோம் முத்துமாரி! - நூறு
ஊர்கள் தோறும் ஒதுங்கிவிட்டோம் முத்துமாரி!
ஓடும்தென்பு இனியுமில்லை முத்துமாரி! - இரங்கி
உடனருள்வாய் விடுதலையை முத்துமாரி! 17.

அழிப்பவன்தான் உன்மகனோ முத்துமாரி! - ஓடி
அழிபவன் உன் சேயில்லையோ முத்துமாரி!
பழிக்கணக்கில் இமயமோநாம் முத்துமாரி! - எங்கள்
பழியையெல்லாம் பாற்றிடம்மா முத்துமாரி! 18.

குங்குமமே! மங்கலமே! முத்துமாரி! - சிதறும்
குடிகள் ஒன்று கூட்டிவைப்பாய் முத்துமாரி!
சிங்கமேறிக் கிளம்பிடுவாய் முத்துமாரி! - எங்கள்
தேச சாந்தி மீட்டருள்வாய் முத்துமாரி! 20.

- முதற்பதிப்பு : இணுவில் பொன்னெழுத்துப் பதிப்பகம் - 1998.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# இணுவில் பரராச சேகர விநாயகர் வெண்பா

## காப்பு

பரராச சேகரப் பிள்ளையார் முத்தி
அருளீசன்! நல்லிணுவை ஆனைமுகன் - வரலாற்று
உன்னதன் மேல்வெண்பா ஓர்ந்துரைக்கும் ஆற்றல் தா
மன்னுகலை வாணியம் மா!

## நூல்

பொதுநூல கம்பள்ளி, பொன்தேர்கள் பல்லூர்
வதுவைமலி மண்டபங்கள், மஞ்சம் - புதுப்புதிய
வாகனங்கள், கோபுரங்கள் வண்ணம் அமைசூழல்
வாகுபர ராசன் வளம்! 01.

கண்ணன், வயிரவன், கார்மயிலோன், செந்திரு முக்
கண்ணன் களிபர ராசா!தா - வண்ணவண்ணத்
தூண்களிற் சிற்பம், சுவரில்பல் லோவியங்கள்
காண்பதற்கோ ராயிரங் கண்! 02.

உன்தளியை, உன்னயலை ஒண்மாட கூடமயப்
பொன்னகர மாக்கிப் பொலிபவனே - மன்னன்
பரராச சேகரனால் பண்டுதொழப் பெற்ற
வரலாறெம் மூருக்கோர் மாண்பு! 03.

எங்கெங் குனகுடிகள் ஏகி உறைந்தாலும்
அங்கங் கிருந்தேத்த அல்லல்கள் - பங்கம்
அகற்றிப் பெருவாழ் வருள்பர ராசப்
புகலே! துணையார் உன் போல்? 04.

நூல் 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மையிறைக் காக்கி, முறையாய்த் தொழுதால்
எதுவும் எமக்காகும் என்னும் - விதியாய்
விளங்கும் பரராச வேழ முகத்தான்
செழுங்கருணை வாழ்த்து நெஞ் சே! 05.

வந்தசெல்வம் நீதந்து வந்ததெனக் கண்டகந்தைக்
குந்தகம் விட்டுக் குனிந்துதலை - பிந்தா
தறப்பணிகள் ஆற்றடி யாரையே காக்கும்
திறன்பர ராசனருட் சீர்! 06.

தனைவேண்டிப் பெற்றவற்றால் சால்பணியே செய்வோர்
புனிதப் புகழ், இன்பம் பூண்பி - கனிவார்
பரராச சேகரப் பண்ணவன் ஊர்க்குள்
பெருகவைக்க வேஇந்தப் பீடு! 07.

"இறைவன் அருள்பெற்றோம்" என்னும் களிவெல்
பிறிதோர் நிறைவின்மை பேணி - அறிவாளர்
தம்மினிய வெல்லாம் சமர்ப்பித் துனதடிக்கே
இம்மையம்மை சேர்வார்இன் பே! 08.

வேண்டுவார் வேண்டுவன வேண்டியவா றீபவன் நீ!
வேண்டவைத் தெம்மூர் மிகுந்தணிவு - பூண்டொருமை
ஒக்கலித்து வாழும் உயர்ந்தவரம் ஈந்திடுமோ
தக்கபர ராசாநின் தாள்? 09.

பலர்பாடப் பெற்ற பரராசத் தேவா!
புலஞ்சீர்த்தும் புண்ணியா! போற்றி! - நிலைப்பித்திங்
கின்பத் தமிழ்,சைவம் எம்மிணுவைத் தொல்புகழும்
என்றும் வளர்ப்பாய் இருந்து! 10.

- முதற்பதிப்பு : இணுவில் பரராச சேகர விநாயகர்
குடமுழுக்கு மலர் - 2022.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## முல்லை – மல்லாவி யோகபுரநாதர்
# சேவடிச் சிந்து

மல்லாவிப் பெருங்கோவில் வாழும் நாதனே - சொன்னாய்
கல்லால நீழல், வாழ்வின் ஞான சாரமே!
அல்லோலகல் லோலப்பட்டூர் பல அலைந்திடும் - அகதி
சொல்லும் துதியில் நெஞ்சஞ் சாந்தி கொஞ்சம் அடைந்திடும்
01.

பூநகரி யான் குளத்தில் பூத்த நாதனே - யோக
புரத்தமர்ந்து புவனம் முற்றும் ஆளும் போதனே
வானவரும் வந்துதொழும் உன்னருள் வளம் - தன்னை
வாழ்த்திப் பாடி யாடிடும்மல் லாவியின் குளம்! 02.

குடமுழுக்கில் அருட்குளிர்ச்சி கொஞ்சுங்கோயிலோய்
- தமிழர்
குலம் முழுக்க உனைவணங்க அருள்க கூடலோய்!
முடிந்திற நம் பாவம், நமக்கு முந்தும் மீட்சியே - பாவம்
முடியவைக்க முடிதல் கூட உன்றன் கீர்த்தியே! 03.

துள்ளும் மீனின் ஓடை சூழும், புள்ளினம், தூபம் - தீபம்,
தூவும்மல ராற்பொலியும் தூய கோயிலோய்!
எள்ளு, சாமை, நெல்வயல்,காய் கறிகள் இன்கமம் - ஓங்கி
எழுந்த மாட கூடங்கள்நீ ஈந்தருள் தனம்! 04.

சங்கரனே! சம்பு மகா தேவா! தில்லையா - முதிரைத்
தலவிருட்ச னே! பிறைபேண் நீல கண்டனே!
கங்கையணி வைத்தியா! நற் காசிநாதனே! - வன்னிக்
கைலையாம் மல் லாவி நகர் களிக்கும் வேதனே! 05.

சுற்றிவளர் வனங்களுக்குள் தொட்டம் தொட்டமாய் வயல்கள்
சூழவுள்ள குடிசை, ஊர்கள், தொழும் மல் லாவிவாழ்
நெற்றி விழி நின்மல! நம் நெஞ்சில் பூக்குவாய் - வந்து
நித்த நித்தம் நீடுமின்ப மாரி தூர்க்குவாய்! 06.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பலாக, வம்பு பேசிக் குந்திச் சிரிக்கிறோம் - நெஞ்சைக்
கொல்லுந்துயர் போக்கும் "சிவா" கூவிக் களித்திடோம்!
கொம்பிறை,பாம் பிறை, திருமால், குமரன், கோள்சனி -
சூழ்வோய்!
குலம்நிமிர்த்தும் குறியெமக்குள் மூட்டுவாய் இனி! 07.

சர்ப்பமுடன் கரி, புலி தோல் கங்கை புனைந்தாய் - காட்டுள்
தருக்கு ரிஷி பத்தினிமார் உய்தி வனைந்தாய்!
அர்த்தநாரீஸ் வரருமாக அழகு சுமந்தாய் - பெண்ணும்
ஆண்மகற்கு நிகரெனவே அறைந்தும் அமைந்தாய்! 08.

"பிச்சையர்க்குள் பிச்சையனாய் நானும் வருவேன்
- யார்க்கும்
பிச்சையிட்டெடன் பேரருளை நண்ணுமின்" என்றே
பிச்சையாண்டிக் கோலங் கொண்ட பிஞ்ஞு காவன்னிப் -
புதிய
பெருநகராம் மல்லாவிகொள் பீடுக் கன்னையே! 09.

"அந்தரிக்கும் ஏதிலிகள், யாரு மற்றவர் - தாங்கும்
அல்லல்தீர்க்க அங்குறுவேன்" என்று காட்டவே
வந்தி தனக் காய், வரம்பு வைகைக் குக்கட்டி - அன்று
வரலாற்றுப் பிரம்படி கொள் வள்ளல் சங்கரா! 10.

"யாவும்நீயே என்றவர்க்குத் தாயும் ஆனவா! - பசியில்
அந்தரிசேய்க்கு ஊட்டும் அன்னைப் பன்றியானவா!
யாவும் காசென் னெமக்குதவ நீவரவில்லை! - கண்டுன்
அடிபுகுந்தோம் மல்லாவியோய்! அகற்றவா தொல்லை! 11.

பாறை - ஓடம், சூளை - சோலை, பானைஎன்பு - பெண்,
- மீட்சி
பாம்புதீண்டி மாண்ட சேய்க்கு! நஞ்சும் அமிர்தமாம்!
வேறுயார்க்கு? வேண்டும்நீயே என்றவர்க்குத்தான்! -
மாறாய்,
வேதனையே சொத்து, செல்வம் வேண்டு வோர்க்கெல்லாம்!
12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமக்கும் என்று சேர்த்தவெல்லாம் சுமைகளானவே - தூக்கிச்
சுமந்த எல்லாம் ஊர்கள் தோறும் தொலைந்து போனவே!
எமக்கு ஞானம் உதிக்கும் நேரம் இன்றுவந்ததே - எம்மை
ஈர்த்தினிக்கும் வீடுநல்க இன்னும் பிந்தலேன்? 13.

ஐந்து வயது கடக்கும்மட்டும் அண்ணன்தம்பிகள் - இன்னும்
ஐந்துவயது கடந்தபின்னோ பங்குச் சண்டைகள்!
பந்தபாசம் மானுடர்க்குள் பச்சை மோசடி - இந்தப்
பாரில்யார்க்கும் படைக்கும் சாந்தி உன்றன் சேவடி! 14.

முன்பிறவிக் கடனறவி டற்குவந்தவர் - அன்றேல்
முன்பிறவிக் கடன்இறுக்க என்று வந்தவர்,
என்றுமக்கள் மனைவியிரு வர்க்கம் மட்டுமே - இந்த
இன்னல்தம்முள் தீர்வுன் றன்கால் பற்றக் கிட்டுமே! 15.

இடம்பெயர்ந்த ஏதிலிகட் கிடம் அளித்தவா! - "கஞ்சி
இல்லை" என்ற சொல்லிங் கில்லை எனத் தெளித்தவா!
அடம்புரியும் அசுரர்குலம் அடிய றுக்கவே - நேரம்
அண்டும் மட்டும் அனல்விழியை அடக்கிநிற்பவா! 16.

இன்று கொலை யுண்டதிவன் அன்றைப் பாவமே - இவனை
இன்று கொலை செய்தது அவன் இன்றைப் பாவமே!
என்றும்எந்தப் பழிச்செயற்கும் கால்ம லங்களே - அவைகள்
எரித்தெமக்குச் சாந்தி தாமல் லாவி எந்தையே! 17.

போகி, மோகி மார்திருந்தப் புனித யோகியாய் - தபசு
புரிந்தமர்ந்தாய்! சுடலைச் சாம்பல் பூசி மேனியில்
ஓகைநட மாடிவாழ்வின் பொய்ம்மையுரைத்தாய் - உன்னை
உன்ன, உன்ன எம்முள்ஞானம் உந்தும்பெருக்காய்! 18.

ஆளும் மன்னர் பற்பலர்தாம் ஆட்டம் போடினும் - இந்த
அகிலம் உன்னி ராச்சியமே! உன் பணிப்பையே
நாளுங்கோளும் நடத்தும் எங்கள் நடத்தை யின்வழி!
- கண்டு
நாதனே! நம் செயல், சொல், சிந்தை தூய்மை நாட்டுவோம்
19.

நீநினைக்கி னன்றியில்லை நமக்கு நிம்மதி - உன்றன்
நினைப்புமய மாகவேண்டும் நித்தம் நம்மதி,
"நானுனக்கே சரண் எனநாம் நல்கிடின்நம்மை - விரைந்து
நண்ணும்நிரந் தரவிடிவு நம்பனே உண்மை! 20.

- முதற்பதிப்பு : பரமநாதன் குடும்பம், முள்ளானை, இளவாலை - 1999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மேலை இணுவில் விளாத்தியடி ஞானவைரவர் திருவிரட்டை மணிமாலை நூலுக்கு நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் வழங்கிய

# அருளாசியுரை

சைவச் செம்மனச் செல்வர்களே!

பண்டிதர், கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள் இணுவை விளாத்தியடி ஞானவைரவர் திருவிரட்டை மணி மாலை என்னுங் கவிதை நூலைத் திறம்பட யாத்துச் சைவ உலகிற்கு உவந்தளித்துள்ளார். வைரவப் பெருமானின் அருட் கடாட்சம் அவருக்கு நிறைய உண்டென்பது இந்நூலினை ஓதுவோர்க்குத் தெள்ளென விளங்கும். பக்தி ரசம், சொல்வண்ணம், சந்த இன்பம்,கற்பனை, அலங்காரம் முதலிய சிறப்புக்கள் வாய்ந்தது இந்நூல்.

தமிழ்ச் சொற்களை அணிபெறக் கோத்து அமைத்திருக்கும் அழகு வியத்தற்குரியது. அவர் இன்னும் பல சைவ நூல்கள் இயற்றிச் சைவ உலகிற்கு உபகரிக்கும் வண்ணம் அவருக்கு ஆரோக்கியப் பூர்த்தியும், ஆயுள் விருத்தியும் அளித்தருளும் வண்ணம் வைரவப் பெருமானின் திருவருளை இறைஞ்சி, எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்!

என்றும் வேண்டும் இன்ப அன்பு!

நல்லை ஆதீனம், **ஸ்ரீல ஸ்ரீ. குருமகாசந்நிதானம்.**
நல்லூர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் முகவுரை

"ஓம் நமசிவாய" மந்திரத்தை ஓய்வெல்லாம் ஓதுவதன் மூலமே வினைப்பயன்களாம் பேரபாயங்களையும் கடந்து கொடிய இயல்புகள், மலங்கள் அவை தூண்டும் வெவ்வினை உந்தல்கள் என்பவற்றை வேரறுத்திடவும் வெம்பிறவி வேரறுக்கும் வழிபாடுகள் தலயாத்திரைகளைக் கெட்டியாகத் தொடரவும் முடியும் என்று எனக்குக் கிடைத்த அருள்வாக்கைத் தலைத்தாங்கி நடப்பதால் உய்ந்து உவக்கும் சிறியேன், இன வெறிப் பூதத்தின் இரைகொள் வெறிக்கு இலக்காகி நிற்கும் தமிழின முழுமைக்குமே இடர்தவிர் மருந்தாகக் கூடியதும் அந்த "நமசிவாய" மந்திரமே என்ற தெளிவு பெற்றேன்.

அதனால் அம்மந்திரத்தின் அருட்பெருக்கை நம்மக்களுக்கு உணர்த்தும் நோக்கோடு இத்திருவிரட்டை மணி மாலை பாடினேன். 1992 வைகாசியில் வெளிவர இருந்த இந்நூல் 2 வருடம் பிந்தி இன்றே 1994இல் வெளிவருகிறது. ஆயினும் இந் நூற்பயன் பிந்தாமல் பிழைக்காமல் ஓதுவோர்க் கெல்லாம் கிடைக்கும் என்பது என் நம்பிக்கை.

வணக்கம்

"நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!"

இணுவில் மேற்கு,
இலங்கை.

அன்புடன்,
**ச. வே. பஞ்சாட்சரம்.**
28. 06. 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# மேலை இணுவில் விளாத்தியடி ஞானவைரவர் திருவிரட்டை மணிமாலை

## விநாயகர் காப்பு

பருத்தியடைப் பைங்கரன் பைங்கழல் என்றன்
கருத்தொளிர்க! ஈக கவி!

## தந்தை துதி

அப்பூ! நடந்தேத்தி ஆர்ந்தவரம் வீதிசுற்றி
இப்பாவி வீழ்ந்துருண்டும் எய்தேனாம் - ஒப்பேறி
உன்சேய்கள் போல்பத்தி, உய்ந்திடஎம் சேய்களுமே
அன்பாசி நல்கி அருள்!

## வெண்பா

இணுவை விளாத்தியடி என்றோ அமர்ந்தோய்!
பணிவோர்க் கருளும் பரனே - கொணர்கங்கைத்
தீர்த்தக் கிணற்றாய்! சிவன்காசி லிங்கம் அன்பர்
சார்த்தஅரு ளால்நீமீந் தாய்! 01.

## கட்டளைக் கலித்துறை

மீந்தோய் சிவனாய்! மிளிர்வோய் விளாத்தித் திருநிழலில்!
மாய்ந்திறும் ஈழத் தமிழர் வருந்தி நெடுஞ்சமரில்
சேர்ந்தோம் உனை! ஓம் நமச்சி வயசிவ சின்னமோதிப்
பூந்தூ வலிடும் எமைநீ புரந்தருள் இப்பொழுதே! 02.

இப்பொழுதெம் மேத்துகையுள் எந்தாய்நீ காட்டினாய்
முப்புரங்கள்! மொய்பே ரினப்பகைவர் - தப்பரிய
உள்ளூர்த் தனிப்பகை நாத்திகர், ஓரயலான்!
தள்ளரியம்! கண்டோம்ஈ சா! 03.

சாக்காட் டியேதான் உமையிங்கு முற்றாக ஒய்வமெனும்
பேய்க்கூட் டமதோர் பெரும்புரம், நாட்டையே குண்டெரியால்
தீய்க்கும்! பழிசூழ் திருந்தாத் தமிழரெம் நாத்திகர் போர்த்
தீக்குண்மைக் காரணர் ஓர்புரம்! தீயயல் ஓர்புரமே! 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புரம் மூன்றை அழித்தெம்மைக் காவென்றே
அப்பனே உன்தண் ணடிதொழுதோம் - முப்புரங்கள்
தீ யிட்டாய் கால்சரணம்! தீராப் பிணிதீர்க்கும்
தூயவனே என்றேத்திட் டோம்! 05.

ஏத்தியேஎன்றும் நமசி வயவே இயம்பிவந்தோம்!
பூத்தாய் புனிதா எமக்குள் பொலிந்தே ஒருதிருநாள்!
"தீய்த்தே எதிரிகள் முப்புரம் எம்மிடர் தீர்த்தருள்வாய்!
காத்திடி லும்நீ களைகிலும் நீ"யென் றழுதனமே!

அழுதோமை "நும்நும் அகத்துள்ளே பாரீர்!
இழிபுரங்கள் மூன்றங் கிருப்ப - அழியினிவை
அல்லால் வெளிமுப் புரங்கள் அழியாவே!
வெல்லவழி இல்லை"என்றாய் வேறு! 07.

வேறாய் இலதாய் உமதுயிர் மேவும் மலபுரமும்,
ஊறாய் மலமவை ஊக்கிட நீர்செய் வினைப்புரமும்,
சாறாய் அமைந்த தனித்தனி இச்சைக் குணபுரமும்
பாறா வரையும் இடரேயென் கின்றாய் பரம்பொருளே! 08.

பரம்பொருளே பாழ்மலங்கள் பாம்பாட்ட எம்மை
வரம்பிகந்து வாழ்ந்தோம் மயங்கி - பெரும்பழிகள்
பல்பிறவி யீட்டிப் படுகின்றோம்! நோன்பழித்துக்
கொல்கிறவே காமமுதற் கூர்! 09.

கூரயில் நொச்சியன் கோவிலின் பாங்கரில் வாழ்பவனே!
காரொளி ஐயனை, காளியை, ஐங்கரன், நாரணனை
ஊரடைந் தேத்திட உன்னயல் தாங்கும் வயிரவனே!
யாரெமைக் காப்பவர் அன்னையன் உன்னருள் கைவிடினே?
10.

கைவிடா தின்றுவரை காப்பவன்ஆர்? ஈர்மூன்றாம்
நைவிக்கும் புரங்கள் நவின்றவனார்? - பொய்ம்மாயை
காண்பித்த இன்புரு யார்? கட்டழிக்க முப்புரமும்
பூண்பிப்பாய் நெஞ்சுநெறிப் போர்! 11.

போர்புரிந் தைந்து புலன்க ளடக்கித் தவம்புரியக்
கூர்பழி நெஞ்சின் குறைகள் துடைத்துக் குணமயமாம்
நீர்மை பெற,நா நமசி வயசொலும் நித்தலுமே!
ஊர், பல் நகரின் அடியர் உயிர்பேண் வயிரவனே! 12.

வயிரவா! தந்தை, மகன்,சோ தரனை
உயர்மாட வீட்டினை, ஊரை - துயரெய்த
யுத்தத் திழந்தோர் உனதடியர் நெஞ்சாறப்
புத்தமுதே முப்பரங்கள் போக்கு! 13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கற் றவரோ புனிதனே உன்றன் அடியவர்நாம்?
தீக்குண் டுகளால் சிதைக்கக் கொடியர் பலகோவில்
நோக்கிப் பதைத்தோம்! நொடித்தோர்க் குதவி புரிவதெனுஞ்
சாக்கில் நரிகள் மதம்மாற் றிடத்தளர் தாழ்ச்சிவேறே! 14.

வேறுபட்ட சூழ்ச்சிகளால் வேகின்றோம் உன்னடியோம்!
நீறுபட்டா லல்லாதெம் நெஞ்சிலெல்லாம் - நூறுதுன்பீன்
முப்புரங்கள், ஈழத்தில் மூள்துயரம் நீங்காது!
அப்பா அருட்சிவனப் பா! 15.

அப்பா! நமச்சி வயவே! அடுவாய் மறுகணமே
முப்பாழ்ப் புரங்கள் அகத்தும் புறத்தும் மூளெரியில்!
தப்பா துனதாள் தருசா விலுமே தழுவிநிற்போம்!
எப்போ திலும்சுடர் ஏந்துந்தூண் டாஎல் லுடையவனே! 16.

உடையாய் ஓர் மந்திரம்நல் ஓம்நமச்சி வாய!
உடல், நெஞ் சுடன்வாய் ஒருங்கி - வடிவாக
ஓதென்று நீயுரைத்த ஒண்கருணை நெஞ்சேத்தக்
காதலுடன் சொல்வமிரங் காய்! 17.

காய்மனம் எல்லாங் கனிகனி யாகக் கரைந்தழுதோம்!
ஓய்வில ராய், உண் ணுகையில், உழைத்தல், உறங்குகையில்
நோய்களிற் கூட நுவன்றிடு வோமுன ஐந்தெழுத்தே!
போய்முடி யாமுன் பொசுங்குமெம் தேசம் புரந்தருளே! 18.

புரந்தருளும் புண்ணியனே! பூண்டுவடை மாலை
நிரந்தரமாய்க் காட்சி தந்து நிற்கும் - வரம்பிலருள்
வள்ளால்! மனங்களினால் காடுமேடு வாடடியோம்
ஒள்ளலர்கொண் டேத்திடுதல் ஓர்! 19.

ஓர்ந்திரங் கீழ நிலமுழு தும்ஓம் நமச்சிவாய
கூர்ந்தொலி செய்தல்! அகதி முகாங்கள், கொடுவிலங்குஞ்
சேர்ந்துறை கான்கள், சிறைக்குளும் பக்தர் தொழலுணர்ந்தே
ஆர்ந்தநெற் றிக்கண் அனல்பரந் துண்க ஈர் முப்புரமே! 20.

முதற்பதிப்பு : இணுவில் பொன்னெழுத்துப் பதிப்பகம் - 1994.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கிளிநொச்சி – ஸ்கந்தபுரம்
# முருகன் திருப்பள்ளியெழுச்சி

## விநாயகர் காப்பு

தக்கராய் உன்னடியர் சால்விக்கும் கருணைமழை
அக்கரா யன்சந்தி அமர்ஐங் கரத்தீசா!
இக்கலிப் பெருகிடர்கள் இம்மென்னு முன்தீர்க்கச்
சொக்குகந்த புரத்தழகன் துயில்நீங்கப் பாடஅருள்!

## நூல்

ஆறிரு விழிகளும் அரும்பெனக் குவிய
ஆறுசெவ் வாய்களும் ஆம்பலின் திகழ
வீறொளி நெற்றிகள் வெண்பிறை விளங்க,
விரிபர வெளிமுன்றிற் கந்தபு ரத்தில்
ஆறிநன் குறங்கிடும் அருந்தமிழ்க் குமரா!
அரும்பலர்க் கையர்கள் அடியவர் வந்தோம்!
ஏறிய திடர்வெள்ளம் எம்நாசி மேலும்!
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே! 01.

குருவி, புள், மயில்,சேவல் குரலொலி கேட்பாய்!
குங்குமம் கீழைவான் குளித்தது நோக்காய்!
மரநிழல் துயில்மந்தை மாற்றுவ சோம்பல்!
வயல்தொறும் எருதினேர் மணியொலி கேட்கும்!
சரவணத் தாமரை தமில்திகழ் சேந்தா!
தாய்பலர் பாலுண்டு தாயுளம் மீந்தோய்!
கிரவுஞ்ச மலையெம்மைக் கிட்டுவ தையா!
கிளர்ந்தெமைக் காத்திட எழுந்தருளாயே! 02.

கண்ணன்பொன் னாலயம் கதித்தொலி சங்கம்,
காட்டம்மன் மணியொலி காதினில் இசைக்கும்!
கண்ணகி புரம்கன்னல் தோட்டமந் திரங்கள்
காற்றினில் மிதப்பன! செக்குகள் ஒலிப்ப!
மண்ணினை மீட்டிட மாளிகை நீங்கி
வந்தயல் குடில்களில் மசிபவர் எழுந்தார்!
புண்சிறை நீங்கநாம், கந்தபு ரம்வாழ்
பூங்கடம் பா!பள்ளி எழுந்தருளாயே! 03.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிடும் ஓடைகள் குளிப்பவர் துதிகள்,
    உறித்தயிர் கடைபவர் மத்தொலி கேட்பாய்!
காலினைக் கையினைக் களங்களில் இழந்தும்
    கலைப்பணி மேவியுன் கால்பணிந் துழைப்பார்
காலையின் பூபாளம் யாழ்,குழல் மீட்டும்!
    கந்தபு ரம் ஆளுங் கலியுக தேவா!
மூலையுள், பூனைமுன் முடங்கெலி நாங்கள்
    முந்திடு! கா! பள்ளி எழுந்தருளாயே! 04.

தாயொரு காட்டினில், சேயொரு காட்டில்
    தவித்திருந் தேங்கவோ தாய்த்திரு நாட்டில்?
தீயவர் நமரெனில் தீய்த்திட நிற்போம்!
    தீயவர் பிறரென்று தீய்ந்திங்கு வந்தோம்!
தாயுனக் கருளிய தைப்பூச வேலால்
    தர்மத்தின் பகைவரைச் சாய்த்திட வாராய்!
வேயிளந் தோள்வள்ளி மின்னுகுஞ் சரியர்
    விழிதிற வாமுன்னம் எழுந்தருளாயே! 05.

திருத்தளம் மினத்தினைத் தீவினைப் பயன்கள்
    தீற்றும்நீ, மிஞ்சூணில் திணற்றிக்கொல் வாயோ?
பொரித்திடப் புகுந்தநீ கருக்கிடு வாயோ?
    புத்தமு தே! பள்ளி எழுந்தருளாயே!
துரத்தியெங் குடிகளைச் சுட்டுயிர் கொல்லும்
    துன்பத்தை மண்விட்டுத் தொலைப்பதும் என்றோ?
கருத்தொடு தொழுபவர் கவலைகள் தீர்க்கும்
    கந்தபு ரத்தையன் எழுந்தரு ளாயே! 06.

பயந்திடுந் தனிவழிப் படரும்மைந் தருக்கும்
    பரம்பொருள் வேல், மயில் துணையெனப் பணிந்தோம்!
மயங்கியும் இவ்விதம் வழிபடத் தவறோம்!
    வன்சிறை ஏன்வந்து வாட்டுவ தின்னும்?
சயந்தந்து சிறைவிடத் தாமத மேனோ?
    தலைத்தமிழ்ச் சங்கத்தின் தலைவ,செந் தூரா!
வயங்கொளி மார்பனே! மயில்மிசை வேலா!
    வாழ்கந்த புரம் பள்ளி எழுந்தரு ளாயே! 07.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைதொறும், மனைதொறும் பொற்சுண்ணப் பாடல்!
வழிதொறும் தளர்நடைப் பிணியர்முக் காடு!
வினைகெட, வினைகெட விடுதலை நெருங்கும்!
வீடுசெல் வோம்எனும் நம்பிக்கை வீணோ?
சுனைதொறும் தாமரைக்கோன்புகழ் பாடி,
சுவைநறைப் பரிசுகொள் சுரும்பெனும் புலவோர்
தனிநகர் கந்தபு ரந்தனில் வேளே!
தகர்ந்திட நம்சிறை எழுந்தரு ளாயே! 08.

யானைகள் உலவிருள் வனங்களுங் கடந்து,
அருச்சனைப் பொருளுடன் வந்தனர் அடியார்!
"ஈனர் நும் மண்விட்டே எலிகளாய் ஓட
ஏத்துங்கள் "ஆறிரு தோள்வாழ்க" என்றாய்!
ஆனந்த மாய், அகங் கனிந்தேத்தும் போதும்
அறம்வெலும் அறிகுறி ஏனின்னும் காணோம்?
வானவர் சிறைமீட்ட வள்ளலே! எம்மை
வதைசிறை நீக்கிட எழுந்தரு ளாயே! 09.

சீராட்டித் தாலாட்டி வளர்த்ததம் சேய்கள்
செருக்களஞ் சிதைந்ததை நினைந்தழும் தாயர்!
ஊராட்டும் நோய்க்குண்ண மருந்தின்றி அழுவோர்!
ஒருபிழைப் பும்அற்றோர் உறுமிடி உழல்வோர்!
நீரேற்ற விழியினர், நிம்மதி மறந்தோர்
நேர்கண்டுன் அருள்முகம் நிலைமாற்ற வந்தார்!
வேரோட்டிக் கலிபுரி வெந்துயர் கோடி
வீழ்த்திட வேபள்ளி எழுந்தருளாயே! 10.

முதற்பதிப்பு : ப. வேழத்தெழிலன், ப. உமாவஞ்சி
இணுவில், 1997.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

## கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கண்ணனுக்கு

# கிள்ளை விடு தூது

கந்தபுரக் கண்ணனிடம் செல்லு கிளியே! - நெஞ்சம்
நொந்து சொல்லும் எங்கள் தூது சொல்லு கிளியே!
தந்தமுகன் தாள்பணிந்து செல்லுகிளியே - தமிழர்
சஞ்சலங்கள் தீர்க்கத் தூது சொல்லுகிளியே! 01.

மனச்சான்றாய் எம்முள்நின்றே, சொல்லுகிளியே - நீயே
வகுத்த வழித் தீசுமந்தோம்! சொல்லுகிளியே!
நினைத்திடாத இடுக்கணுற்றோம்! சொல்லுகிளியே! - இன்றே
நீக்குசிறை நம்பினோமை! சொல்லுகிளியே! 02.

கொன்றறியோம் உன்பசுக்கள் சொல்லுகிளியே - கொன்று
தின்றறியோம் உன்பசுக்கள் சொல்லுகிளியே!
கொன்றவர்போல் வதைபடல்நாம் சொல்லுகிளியே - எங்கள்
கோகுலற்குச் சம்மதமோ? சொல்லு கிளியே! 03.

வெஞ்சிறையில் நீபிறந்தாய்! சொல்லுகிளியே - அந்த
வெஞ்சிறையின் துன்பறிவாய்! சொல்லுகிளியே!
வஞ்சமில்லெம் பிஞ்சுகளுஞ் சொல்லு கிளியே - கூண்டில்
வதைபடுதல் சம்மதமோ? சொல்லு கிளியே! 04.

பட்டிகுலைந் தால் அழிவே என்று,கிளியே - பட்டி
பாதுகாத்து மேய்க்குங் கண்ணா! சொல்லுகிளியே
பட்டிகுலைந் தடியவர்நாம், சொல்லுகிளியே - இங்கு
பட்டழிய விடுகுவையோ? சொல்லுகிளியே! 05.

பரம்பரையாய் வாழ்ந்த மண்ணைச் சொல்லுகிளியே - நாங்கள்
பறிகொடுத்தால் வாழ்வதெங்கே? சொல்லுகிளியே!
இரங்கிலையேல் இந்நொடியே, சொல்லுகிளியே - முற்றாய்
எரிந்தனம் நாம் ஈனர்கையால்! சொல்லுகிளியே! 06.

நூல் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றடியால் உலகளந்து, சொல்லுகிளியே - உலகை
முழுமை யாக நீபிடித்தாய்! சொல்லுகிளியே!
மூன்று கோடி அடிநடந்தும், சொல்லுகிளியே - எம்மால்
முடியவில்லை வீடும்சேர! சொல்லுகிளியே! 07.

தினம்புரி ஆ யிரம்மலர்கள் பூசைகள் ஏற்று - துன்பச்
சிறை பலர்க்கும் நீக்குகின்றாய், சொல்லு கிளியே!
நினைவில் கோடி பூக்கள் பூசை நிதம்புரி
கின்றோம் - எமையும்
நீக்கிச்சிறை துன்பம் தீர்ப்பாய்! சொல்லுகிளியே! 08.

திரௌபதையின் மானங்காக்கச் சேலை வளர்த்தாய் -
அந்தத்
திண்மை உனக் கின்றிலையோ! சொல்லுகிளியே!
துரியோதனப் படைகளின்று, சொல்லு கிளியே - இலட்சம்
துகிலுரிய விடல் அழகோ? சொல்லு கிளியே! 09.

ஐந்துவீடும் தரமறுத்தான் பாண்டவருக்கு - தன்னை
அடியறுத்தாய் நீயல்லவோ? சொல்லு கிளியே!
எந்தை நாட்டை எரித்தழிப்போர் சொல்லு கிளியே -
உன்னை
ஏத்தில் வெற்றி அருளலாமோ? சொல்லுகிளியே! 10.

நல்லமட்டும் எண்ணி, பேசி, செய்வோம் கிளியே - எங்கள்
நாரணன்நீ உவந்துகாப்பாய் என்றே கிளியே!
வல்லரக்கர் வதைக்க இன்று பார்த்தி ருப்பதோ? - வந்து
மனமிரங்கி மீட்டுக் காக்கச் சொல்லு கிளியே! 11.

கந்தபுரக் குற்றிவேலிப் பட்டி,தெருக்கள் - சற்றும்
கவலையின்றிக் கன்றுகாலி களித்துலாவிட
சொந்தபந்தம் விட்டும் நூறு ஊரலைந்தநாம் - உன்னைத்
தொழுத ரற்றி அழுதுசோரல் சொல்லு கிளியே! 12.

யாதவர்க்கும் காவலன்நீ சொல்லுகிளியே - ஏழை
அடிய வர்க்குங் காவலன்நீ சொல்லுகிளியே!
பாத கர்க்குங் காவலனோ? சொல்லுகிளியே! - இன்று
பக்தர் எம்மைக் கைவிடலேன் ? சொல்லுகிளியே! 13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்சன், நர காசுரன் அக் காளிங்கனோடு - கர்வக்
கல்மனத்தன் இரணியனை, சொல்லுகிளியே!
வெம்ப வீழ்த்திச் சிட்டர்க் காத்தாய்! அவரை மிஞ்சிடும் -
துட்டர்
வேர்அறுக்கப் பிந்தலாமோ? சொல்லுகிளியே! 14.

மருத்துவரே திருப்பிவிடும் பிணியருங் கிளியே - உன்றன்
மடத்துறைந்து குணமடைவார் சொல்லு கிளியே!
இருத்தியிழுத் துன்னடியில் பாவம் வினைகள் - போக்கி
இன்ப சாந்தி எமக்கருளச் சொல்லு கிளியே! 15.

பார்த்தனுக்குச் சாரதியாய், சொல்லுகிளியே - அன்று
பாரதப்போர் நடத்திவென்றாய்! சொல்லுகிளியே!
தீர்த்திட நம் வெஞ்சிறைகள் சொல்லுகிளியே - எங்கள்
தேசம் மீள விரைந்தருளச் சொல்லுகிளியே! 16.

காடுமே டெலா முருண்டுன் காலைக் கிளியே - பற்றிக்
கதறினோமே கருட னேந்தீ! சொல்லுகிளியே!
மூடும் துன்பச் சிறையினில் நாம் வதைபடுகின்றோம்! -
எங்கள்
மூச்சடங்க முன்னம் மீட்கச் சொல்லுகிளியே! 17.

மாயவா! வா! கோவிந்தா! சந் தான கோபாலா - விரைந்து
வாவென் றோல மிட்டும் நாங்கள், சொல்லுகிளியே!
தாயினுக்கும் தாயனான சக்கர பாணி - இன்னும்
தயங்கலாமோ எம்மை மீட்க? சொல்லுகிளியே! 18.

திருப்பதிக்குச் சென்றதாலோ? சொல்லுகிளியே - அன்றிச்
சீரங்கம் பள்ளிகொண்டோ? சொல்லுகிளியே
நெருப்பில் பக்தர் நீறவிட்டாய்? சொல்லுகிளியே - பசிய
நீலவண்ணா! கருணையீதா? சொல்லுகிளியே! 19.

புற்றில் பாம்பும் பொங்கப் புல்லாங் குழலி சைத்திடும் -
கண்ணன்
பூங்கழற்கெம் புலம்பு துன்பம் சொல்லுகிளியே!
பற்றி யெரியும் பாலைநெஞ்சு வரண்டு வேகிறோம் - இன்னும்
பார்த்திருத்தல் பாவம்என்று சொல்லுகிளியே! 20.

முதற்பதிப்பு : கிளிநொச்சி ஸ்கந்தபுரம் "கோல்ட் பதிப்பகம்" - 1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் நான்மணி மாலைக்கு மேலதிக அரச அதிபரும், உருத்திர புரீச்சரம் பரிபாலனைத் தலைவருமாகிய திரு. தி. இராசநாயகம் அவர்கள் வழங்கிய

## வாழ்த்துரை

வளம் கொழிக்கும் வன்னி வளநாட்டின் பெற்றிக்குக் காரணமாகவுள்ள கனகராயன் பேராற்றின் புகழ் சொல்லிடக் கூடியதல்ல. இரு பெரும் போகங்களிலும் எமது மண் சிலிர்த்துப் பொலிந்து நிற்கும் காட்சியைப் பார்க்கும், அனுபவிக்கும் வன்னி மக்களுக்கு, இந்தப் பெரும் கொடைக்குக் காரண மான கனகராயன் ஆறும், அதன் அருகில் எழில் சார்ந்த வனப்புடன் குடிகொண்டு அருள்பாலித்து வரும் அருள்மிகு கனகாம்பிகை அம்மனது சிறப்பும் அவர்கள் வாழ்வியலை விட்டகலாப் பண்பாட்டுச் செல்வங்களாகும். குடியேற்றச் செய் முறைக் குட்பட்டுப் பெருமளவு மக்கள் இம்மாவட்டத்தின் குடித் தொகைக்கு உட்பட்ட போதும் வரலாற்றின் தொன்மை மிக்க வன்னி மக்களது வாழ்வியலும், பண்பாட்டு அம்சங்களைப் போற்றி, பாதுகாத்து, வளர்த்து வருகின்ற பெரும் செயற்பாடும் தொடர்ந்து வருகின்றன. அவ்வகையில் தற்காலிக நகர்வோடு இப்பகுதிக்கு வந்த திரு. ச. வே. பஞ்சாட்சரம் அவர்களால் அருள்மிகு கனகாம்பிகை அம்மன் மீது "நான்மணி மாலை" எனும் பாமாலை பாடப்பட்டு நூலுருவில் வெளிவருவது எமது வரலாற்றில் பண்பாட்டு அம்சங்களை ஆவணப்படுத்தும் முயற்சியில் வாழ்த்துக்குரிய ஒரு பெரும் பணியாகும். இதற்காக நாமும் நமது மாவட்ட மக்களும் என்றும் இவருக்குக் கடமைப்பட்டவர்கள். இவரது பணிக்கும் மேலும் பல நூல் களின் வெளியீட்டுக்கும் ஆலயபரிபாலன சபை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என வாழ்த்தி இப்பணிகளுக்கு எல்லாம் வல்ல இரணைமடு கனகாம்பிகை அம்மனது அருளை வேண்டி நிறைவு செய்கிறேன்.

– தி. இராசநாயகம்.
15. 12. 96.

நூல் 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரின் முகவுரை

1996 இல் நான் தரிசிக்கக் கிடைத்த இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் அருள்மலி சூழல் என்னைப் பிரமிப்பிலும், ஆன்மச் சிலிர்ப்பிலும் ஆழ்த்தி ஆட்கொண்ட நிலையில், கனகாம்பிகை அம்மன் ஆலயபரி பாலன சபைத் தலைவர் திரு. நா. சோதிநாதன் அவர்கள் அந்த அம்மன் மீது அருட் பிரபந்தம் ஒன்று, பாடித்தரும்படி விடுத்த கோரிக்கையை அம்மன் ஆணையாகவே ஏற்று நான் பாடியவை "இரணைமடு கனகாம்பிகை அம்மன் நான்மணி மாலை" பாடல்கள்.

அறங்காவல் தலைவர் திரு. நா. சோதிநாதன் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு. தி. இராசநாயகம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

19. 12. 1996 — **ச. வே. பஞ்சாட்சரம்.**

---

**முதுபெருங் கவிஞரைப்பற்றி.....!**

ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்களில் கவிஞர் ச. வே. பஞ்சாட்சரமும் ஒருவராவர். இவர் சிற்பியின் "கலைச்செல்வி" மாத இதழ் இனங்கண்டு வளர்த்த கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். இணுவிலைத் தாயகமாகக் கொண்ட இவர் பலதசாப்தங்களாகக் கவிதையுலகில் பவனி வருகிறார். இவரது உயிர்த்துடிப்புள்ள கவிதைகள் இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் பிரசுரமாகி அநேக வாசக நெஞ்சங்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. யாழ் இந்துசாதனம் பத்திரிகையின் உதவியாசிரியராகப் பணியாற்றியவர், அதோடு யாழ் இளம் எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவராகவும் இருந்தவர். இலக்கண வித்தகரும், தமிழ்ப் பண்டிதரும், தமிழாசிரியருமான இவரது "எழிலி" காவியநூல் இலங்கை சாகித்தியமண்டலப்பரிசு பெற்றது. இதுவரை 18இற்கு மேற்பட்ட இலக்கண, இலக்கிய நூல்களைத் தமிழ் உலகிற்குத் தந்துள்ளார். ஏராளம் இளங்கவிஞர்களை உருவாக்கியுள்ளார்.

சமயப்பற்றுள்ள ஆன்மிகவாதியான இவர் இணுவில் கலை இலக்கியக் கழகத்தின் அமைப்பாளரும், தலைவருமாக உள்ளார்.

மூத்த பத்திரிகையாளர், — **என். இராமச்சந்திரன்.**
தொழிற்சங்கவாதி, திருநெல்வேலி. 01. 09. 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் நான்மணிமாலை

## காப்பு

மேலை இணுவில் விநாயகா! நாளுமென்
காலைநீ சுற்றியது போதும்! போய் - நாலூர்
இறைபா டெனக்கலைத்தாய்! இக்கன காம்பாள்
நிறைசொல்லி என்நெஞ்சுள் நில்!

## நூல்

## வெண்பா

கனகரா யன்நதிநீர் நல்குகஞ்சி நாடு
கனகபுரம் வாழ்கன கத்தாய் - தனதாம்
கருணைமடு வாகுங் கடலாய்ப் பரந்த
இரணைமடு நெஞ்சார ஏத்து! 01.

## கட்டளைக் கலித்துறை

ஏத்தலை நீரிர ணைமடு வால்பனி நெய்தலுமாம்,
ஆர்த்தணைக் கட்டின் அடிவாரம் ஆறுசெல் குறிஞ்சியுமாம்,
ஆத்தொகை மந்தை அடவியுள் மேய்ந்திடும் முல்லையுமாம்
பூத்தசை நெல்மரு தம்தானு மாம்கன காம்பிகையே! 02.

## விருத்தப்பா

அம்பிகையே! ஆதியிலே நிலவித் தூர்ந்தே
அண்மையிலே புதுப்பித்த குளங்கள் மாறாய்,
நம்பின்னைப் பரிதாப நிலைமுன் தேர்ந்து,
நாட்டினைஇப் புதுக்குளத்தை நூற்றாண் டின்முன்!
செம்பொன்னாய் விளைவயல்கள், தென்னந் தோப்பால்
தீந்தமிழ் ழுஞ்செழிக்க அன்றே பூத்தாய்!
அம்புவியில் புதுமைபல அருளற் கென்றே
அக்குளத்தின் முன்னரங்கில் அமர்ந்தாய் வாழி! 03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவல்

வாழிநீ அம்மா வயங்கருள் விளக்கே!
ஈழமண் தமிழன் அரசுகள் எத்தனை?
நல்லையில், வன்னியில், வல்லி புரத்தினில்,
தம்பல காமத்தில், சால்கோண மலையினில்
எம்பழம் அரசுகள் இருந்ததை மறைத்து, வெம்
செய்கையர் தமிழினச் சிதைப்பினில் முனைந்து
வெங்களம் படைத்தெமை விரட்டிடும் வேளையில்
அடைக்கலம் அளித்தெம் புரவலர் அணிக்கும்,
துடித்துவந் தண்டிய சோரமில் தமிழர்க்கும்
விடுதலைத் தவத்துக்குந் திடவலு வேற்றிட
என்றே ஈரைம் பானாண் டின்முன்
அன்றே இரணை மடுவாய் அமைந்தோய்!
முன்னோ டிகளாய் மொய்த்திக் காட்டினைப்
பொன்னாடாகப் பூரிக்கப் படைத்து,
உன்னா ணைப்படி உழைத்திங் குறையும்
வன்னியின் மைந்தர்நல் பரம்பரை வாழ்ந்திடச்
செழிக்கச் செழிக்கப் பருவத் திருமழை
அளித்துக் காத்தனை! அவருன் முதற்குடி! 04.

குடியேற்றம் எண்ணின்றிக் கொண்டெழும்ப வன்னி
அடிகோலும் அக்குளத் திட்டக் - கடமைக்
களஞ்சியக் காப்பாள யோகர் உளத்தில்
கொழித்தாய் முதற்கண் குழைந்து 05.

குழையக் குழையத் தழைதாழும் பாலை மரவரிசை
நிழல்குளிர் வாசல் நிரைமரத் தேக்கு மடம்,குடில்கள்,
சுளைவெடித் தின்தேன் துளிசிந்தும் வண்ணப் பலாமரங்கள்
தழுவுந் தளியுடைத் தாய்உன தாளில்நெஞ் சாழுகவே! 06.

ஆழ்மடுவில் மீன்புரளும்! அதனைக் கொத்த
அந்தரம்நின் றடிமடுவில் தாழும் நாரை!
சூழ்கரைநீர், தூரத்தில் மான்கள் கூட்டம்
துறுதுறுக்க விழி மாந்தும்! கவிழ்ந்த ஓடம்
மூழ்குவதோ எனமுதலை முதுகு தோன்றும்!
முளரிமலர்க் கிடங்கெங்கும் முரலும் வண்டு!
வேள்மருவும் மால்பிருந்தா வனத்தை மிஞ்சி
விளங்கிரணை மடுநகர்த்தாய் அருள்மு மூழஉமை! 07.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமை மாதா! முழுமை அருளே!
பரிபூ ரணிநீ! பரிநெஞ் சவள் நீ!
தப்பியும் பிழைபடாத் தர்மம் உன்னது !
இப்புவி மானிடர் எய்திடர், இன்பங்கள்
தத்தம் வினையின் தப்பா அறுவடை!
எம்மலம் நீக்கி இன்சுத்தி நல்கி
ஆனந்த முத்தியில் அமர்த்திடும் பேரருள்
தானிந்தப் பிரபஞ்சச் சாகசம் எனுமுண்மை
நூற்றுக்கு நூறு விழுக்காடு நம்பியே
ஏற்றுறுந் தண்டனை இன்னல்கள் சுமந்திடும்
உறுதியை, பொறுமையை உவந்தருள் வரமாய்!
அழிந்தலை தமிழர்நாம் எழுந்திட அருள்வாய்!
தீயவை தீண்டாச் சிந்தனை, சொல், செயல்
மேயவ ராகி மிளிருவம் முருகே! 08.

முருகேசம் பிள்ளை ஸ்ரீகாந்தா முன்னாள்
வருமுந் துடன்பறந்து வந்து - கருடாழ்வார்
காட்டஇடம், அன்னை கனகாம் பிகையுன்னை
நாட்டினராம்! பெற்றோம் நலம்! 09.

நலஞ்சேர் பசுமைப் புரட்சியின் நாயகர் கொல்விலங்கின்
பலமெதிர் கொண்டு பலநகர் வன்னியில் தந்தவர்க்குக்
கலைபல நல்குங் கழகமாய் ஓங்கும் கனகநகர்த்
தலைமக ளாயொளிர் தண்ணில வாகப் பொலிபவளே! 10.

பொலிந்துகுகை, புற்று, கிளை, வளை, நீர், கூடு
பொந்துகளில் பொங்குயிர்கள் தமக்கும் உண்டி
மலிந்திடவே விளைக்கும்நீர் வாய்க்காற் கைகள்
மலரேந்தி நீட்டிரணை மடுவாய்ப் பொங்கீ!
கலந்துமனம் கால்வழுத்தும் அடியார்க் கெல்லாம்
கருணைவரம் தனித்தனியே கேட்கும் வாறே
வலிந்தருளிப் பரவசத்தில் சிலிர்க்கச் செய்யும்
வண்கனகத் தாயுனருட் கீடே இல்லை! 11.

"இல்லை" எனுமிடை வில்லிடும் மேகலை
வல்லீ! மானிடப் பிறப்பே எல்லாப்
பிறப்புக ளுள்ளும் சிறப்பு மிக்கது!
இறையுனை உணர, இறையுனை யேத்தக்
கடுந்தவம் புரிந்தும் விடுபடப் பிறவி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லது மானிட வெல்பிறப் பொன்றே!
எனினும் இங்கே மனிதர் குலமோ
சாந்தியிழந்து, காந்தியிழந்து
உலகில் எங்கணும் கலகம் மிக்கது!
உன்பெயர் சொல்லிப் பொன்புகழ் தேடும்
பொய்ம்மைப் பத்தியால் மெய்ம்மை இழந்தோம்!
காரணம் இதற்கு நாரணீ, உணர்ந்தோம்,
ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொன்றில் பித்தனாய்,
பெண்ணிச்சை மயமாய், மண்ணிச்சை மயமாய்,
என்னென்ன வோகொடும் இச்சைவாய்ப் பட்டு,
இச்சை ஆட்டப்பஎப் பழியும் இயற்றி,
நச்சுருவாகி நலிந்து, சமூகம்
முற்றாய்க் குழம்பி, அற்றதே அமைதி!
அடியர் கேட்பன அருள்புரி கனகக்
கொடியே! உன்றன் குடிகள் நம்முளாம்
அப்பல வீனங்கள் அடியோடு நீங்கிட
இப்பொழு தேவரம் ஈந்திடு! இரங்கிடு!
எங்கெங் கிருப்பினும் என்னித யத்தில்
தங்கநி லாவுனால் இனித்திடும் வன்னியே! 12.

வன்னித் தமிழ்மன்னர் மாணாட்சிக் காலத்தில்
துன்னிக் கிடந்த சுடர்த்தளிகள் - அந்நியரால்
வெந்தழிந்த வேர்களிலே மீண்டுமெழுங் கோவில்கள்
முந்துவழித் தாய்! உன்னருள் முற்று! 13.

முற்றுவெண் ணெற்றொலி வாகை முதிரை முனிவர்குலம்
புற்றெழப் புற்றிடை ஓங்கிப் புரிதவக் காட்சிகண்டு
வற்றுவ தில்லை இரணை மடுவுமுன் இன்னருளும்!
சுற்றுபத் தர்தொகை சொல்லும் தினம்வளர் உன்னருளே! 14.

உன்னருளே கூடவந்து மிடிதீர் செல்வம்!
    உன்னருளே அப்பர்சொல் ஞானம் கல்வி!
முன்னுரிமை உன்னருட்கே நெஞ்சில் தந்தோர்
    மூர்க்கர்வலை வீழ்ந்தூர்போய் முற்றாய் வேகார்!
அன்னைகன காம்பிகையே! பொங்கல், நேர்த்தி,
    அல்லாமல் அடியர்வார் கும்ப தீர்த்தம்
என்னுமொரு புதுமைவழி பாடு தானும்
    ஏற்றருள்வோய் எம்பிணிகள் தீர் மருந்தே! 15.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தே எனினும் விருந்தோ டுண்டும்
வன்னித் தமிழன் சென்னிகொள் தாயே!
உடன்பிறந் தேகொலும் உறுநோய் பலரை!
கடிந்தவை காக்கிறாய் கண்கண்ட மெய்யிது!
உடன்பிறந் தேகொலும் உட்பகை நோய்போல்
உடன்வதிந் தேகொலும் உறவுக ளாலிப்
பிறப்பே பாழ்படும் பெருந்துயர் நீங்கிட,
அறுத்தெறிந் திடுஇவை! ஆனந்தம் அருளடி! 16.

அடித்தோட்ட ஐம்பத்தெட் டிற்கொலை ஞர்சேர்
படித்தவாலி பர்திட்டம் பாய்ச்சும் - துடிப்பால்
குடியேற்றத் திட்டங்கள் பல்குவித்தாய் கோவில் 17.
வடிவேற்றாய் நல்க வளம்!

வளநீர்ச் சிறுகுளம் பற்பல மேலும் புதுக்கி உண்டி
வளம்,பால் வளம்,தேன் வளம்காய் கறிவளம், கல்விகலை
வளம் தந்து தீயவர்வஞ்சம் எதிர்த்தடைந் தோர்க்கிரங்கி
தொழும்படி உன்னருள் மாமழை தூர்த்ததோர் கற்பகமே! 18.

கற்பகமே! கனகமலை வைக்கோற் போர்கள்,
காட்டெருமைப் பட்டிபல காணும் வன்னி
அற்புதமே! “அஞ்சல்” எனும் அபயம் தன்னை
அருட்பாத மலர்களினாற் காட்டிக் காக்கும்
பொற்சடையான் புணர்சுகமே! வலக்க ரத்தில்
பூப்பாரி ஜாதத்தை அதன்மேல் வான
விற்கமுத்துப் பஞ்சவர்ணக் கிளியை ஏந்தி
மேவுமுன தைந்தொழிலை அறைதல் கண்டோம்! 19.

கண்டோம் நின்னருள் கமழ்த்தும் ஓர் உண்மை
தண்டையஞ் சிற்றடித் தாயுன் நினைப்பினில்
உள்ளம் பொருந்தித் தள்ளிடுங் கணந்தொறும்
விதிப்பய னாய்வரும் வேதனை, கண்டங்கள்
வதைத்திட லேயில்லை மானிடர் மனத்தை!
ஆதலால் தாயே காதலாய் உன்னடி
நொடியுந்தப் பாது நுகர்ந்திடும் படியெமை
அடிமைகொள் முழுமையாய் ஆள்விழி நீலியே! 20.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலக் கடல்கடந்து யாழ்குடா நீங்கிவந்தோர்
காலடிவை இக்கரையூர் தம்மையெல்லாம் - காலமெலாம்
கூறிவரக் கரைச்சியெனுங் கூர்பெயருங் கொள்பெயராய்த்
தேறியதுன் ஊர்க்கேவஞ் சீ! 21.

வஞ்சியர் நேர்த்தியில் வந்தடை ஆயிரம் தாலிகொண்டோய்
மஞ்சள்நற் பூமரக் கொன்றை மலர்ந்த திருவீதிச்
செஞ்சாந்து தீற்றிய குங்கும வண்ணச் செந்தரையும்
கொஞ்சரு ளன்னையுன் குங்குமம், மஞ்சளைக் காட்டுவவே!
22.

காட்டினையே உன்னெழிலைக் கனவில் எல்லாம்!
காட்டினையுன் அருளை நோய் தீர்த்தல் மூலம்!
நீட்டிடநீ காவியுடை பங்கு னிக்கண்
நிகழிறுதித் திங்களிராக் கனவில் ஏற்றேன்!
பாட்டிலெனை வடியெனவுன் மணியம் மூலம்
பணித்தபடி பாட்டிலுனைப் பரவி நின்றேன்!
கேட்டெனது பாழ்வினைகள் போக்கி, இந்தக்
கீழ்மைமிகு பிறப்பொழித்து முத்தி ஈவாய்! 23.

ஈவாய் எம்மவர்க் கினுமோர் வரம்! வருஞ்
சாவோ டெம்பிணிப் பிறவியுஞ் சாவுற!
அன்றா டம்நாம் அனுபவி துன்பங்கள்
ஒன்றா? இரண்டா? ஓ! அவைக் கேதுவோ
பண்டுநாம் பண்ணிய பாவங்கள்! அதைஅதைத்
தண்டனைத் துணைகொண்டு தனித்தனி அறியவும்,
புரிந்த அப் பழிகட்காய்ப் புழுங்கிநெஞ் சுயரவும்
பரிந்தருள் முக்கால ஞானமும்! இனியேனும்
பழிச்செயல் தவிர்த்தொளி வழிப்படு வலிமையும்,
பெருவர மாகத் தந்தருள் பீடுற!
இரணை மடுவுமுன் இன்னருள் மதுரையே! 24.

மதுரையிலே வாழ்ந்து, மதுரைமீ னாட்சி
மதுர வடிவளழில் மாந்தி - அதனழகை
அப்படியே ஓர்சிற்பி வார்த்தீந்த அம்மன் நீ
தப்பிடுமோ தாய்மைத் தனம்! 25.

தனம்கல்வி வீரம் தரும்பணித் தாய்மை வடிவினளே!
உனதடி யார்கள் உனைத்தொழு தேத்திடும் வன்னித்தமிழ்
இனிமையோ அற்புதம்! யாழ்மண், மலையகம், மன்னார்,மட்டு
வினிலொலி வண்ணங்கள் மீந்தொலி பொங்குகன்
னித்தமிழே!
26.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழே தான் தரணியிலே பக்தி செய்யத்
தலைசிறந்த மொழியென்ற துலகம்! உண்மை!
தமிழாலே அதுவுந்தாய் தன்னை ஏத்தில்
சார்பயனுக் களவுண்டோ? இருந்தும் வீதி
தமில்நாயாய் நாமலைதல் மடமை அன்றோ?
தாயேஇத் தமிழினத்தை இழுத்தாள் இன்றே!
உமையவளே இரணைமடுக் கனகாம் பீகா!
ஓர்ஊர்ஓங் கும்உன்றன் பெயரால் கொண்டோய்! 27.

கொண்டோய் தாய்மை! குண்டோய் தலிலாப்
போரின் நடுவும் புகலெனக் காப்போய்!
மோரிடை மத்துகள் முழுங்கூர்ப் பொன்னே!
தருமம் நம்பிச் சரித்திரம் நினைந்து
நரிகளின் கைபடார் நழுவி அகன்றோர்,
அடக்கு முறையால் அப்பகை சூழ்ச்சி
ஒடுக்கு முறையால் உறுதி தளர்ந்து,
சரித்திரத் தெளிவு தருமநம் பிக்கை
கருச்சிதை வாகிக் கண்ணிழந் தோராய்,
துப்பாக்கி வாயே சுகமென ஒளித்த
அப்பாவிக் குருவி அடைகதி போலப்
படுகுழி விழுந்து பகைவசப் பட்டோர்
படுகையில் துன்பம் பக்கலில் அமர்ந்து,
பித்தம் தெளியச் சித்தம் தெளிய
உத்தம ஞானம் உவந்தருள் வரமாய்!
பல்லா யிரவுயிர் பலிதந்து வளர்த்திடும்
தொல்லை கொள் சுதந்திரப் பயிரறு வடைக்கே
உருக்கென இவரெழப் பெருக்குவே ளாண்மை! 28.

வேளாண்மை நன்னகராய் வீங்கும் இரணைமடு
தோளாண்மை வேண்டும் தொழில்பலவும் - நாளாக
நாளாகப் பற்பலவாய் நண்ணிக் கலகலக்க
ஆளாயேல் இப்பீடெங் காம்? 29.

எங்குமில் நீழல் இனிமை தருமெழில் வன்னியிலே
எங்குமில் லாத பேய்வெள்ள இன்மழை வன்னியிலே
எங்குமில் மென்பனிக் கூதலும் இன்னல்செய் வன்னியிலே
தங்குநர்த் தாங்கிடும் தைரியம் சாரல் நம் அம்மாவாலே 30.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலுயர்த்திப் பாய்ந்தோடை கடந்து மேயும்
மடிபணைத்த பசுக்கூட்டம் பட்டி சேரும்!
பாலப்பம் கிழிந்தெழுந்து வானை மூடிப்
பறக்கின்ற குளச்சூழற் கொக்கின் கூட்டம்!
பீலிவிரித் தாடுமயில்! பிள்ளை காவிப்
பிழைக்காமல் கிளைதாவும் மந்தி! அந்தி
மாலையெழில் காணும்வரை வியர்த்து ழைக்கும்
வன்னியரின் வாழ்வுயிர்நீ! மறந்தால் தீங்கே! 31.

தீங்கேதும் எண்ணாச் சிந்தையர் எமக்கு
ஓங்கிடும் நெஞ்சப் பொறாமை உந்திடத்
துயர்தந்து மகிழும் அயல், தூரப் பகைவரை,
எம்மழி வினில்தான் தம்வாழ் வுண்டென்னும்
சண்டாளச் சிந்தைகொள் மண்டனற் பகைவரை
முப்புரமாய்க் கொண்டே மூர்க்க உருத்திரன்
ஆகிநீ நின்றிங் கறம்வெல எரித்தருள்!
சோகங்கள் தீர்த்தெமைச் சுடரடிக் கெடுத்தருள்! 32.

அருளார் குடமுழுக்குன் ஆனந்த வேளை
கருடன்கள் கூட்டம் கலசம் - மெருகேறச்
சுற்றிப் பறந்தண்ணன் சொல்வாழ்த்தைப் பாடுவது
முற்றியவுன் மூர்த்திகர மோ! 33.

கரங்கள் கருக்கால் கறுத்த வடலி வரிசையுள்ளே
சரிந்திடக் காய்கள் சதிரிடும் தென்னை இளவனங்கள்!
அருந்திடத் தண்புனல் அக்கரை அண்டுங் கான்விலங்கு!
இருந்துன் தளிமுன் இவைகாண்பர் நாகநல் தம்பிரானே! 34.

பிரான்மகிழும் பெருமாட்டீ! விளைச்சல் வேண்டி
பிள்ளைவரம், பிணிநீக்கம், பகைவர் நாசம்,
தராதரஞ்சேர் கல்வி, பசுப்பட்டி பல்கல்,
தான்விரும்புங் கையால்தன் தாலி ஏறல்
பிரார்த்தித்திவ் வரங்களினை வேண்டிப் பெற்றோர்
பீடுற்றா யிரம்பானைப் பொங்கல் நேர்த்தி,
வரால்பாயும் இரணைமடுக் கும்ப தீர்த்தம்
வார்ப்பு, சுமங் கலிபூசை செய்யி றைவீ! 35.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையடி சேரும் பிறவியின் நோக்கை
நிறைவுசெய் கின்ற நீர்மைய வான
தூயநல் ரசனைகள், தூயநல் நாட்டங்கள்
தூயவர் உறவுகள், சூழல்கள் நல்கியே
இம்மையே அன்றி அம்மையும் இனிக்க
அருள்புரி தாயே மருள்கெடுத் தம்மா! 36.

அம்மசித்தி ரைமாதப் பௌர்ணமி யாம்திதிக்
கைம்மாக் கணபதி, வேலவனாம் - செம்மைப்
பரிவார மூர்த்திகள் பாற்கடல் மாலோன்
ஒருங்கவுனைத் தீர்த்தமாட்டும் ஊர்!

ஊருலாப் பத்துநாள் ஊர்பல வாகத் திரிந்துலவி
பேரருள் மாரி பிறங்கிட வன்னியே பெய்துவந்து
ஆரணம் வாத்தியம் ஆர்த்திட வெல்கொடி ஏற்றங்கண்டு
பூரண மங்கலம் பொங்குந் திருவிழாச் சால்பவளே! 37.

சால்வண்ணச் சிற்பத்தேர் மூன்று, சிங்கம்,
தாவுமயில் வாகனங்கள் பலவாய்க் கொண்டாய்,
நால்வீதி வெளிகளிலே கடைகள் துன்ன
நாடோறும் பிரசங்கம், அன்னத் தானம்
கால்கடுக்கக் காவடிகள் ஆடும் அன்பர்,
கட்டைவண்டி, உழுகலங்கள் பேருந்துக்கள்
தோல்கருக்கும் வெய்யிலிலும் சுமக்கும் பக்தர்,
துய்யமகோற் சவநாட்கள் சொர்க்கம் காண்போம்! 38.

காண்பவர் உன்னைக் கனவிலும், நனவிலும்
பாண்குடி யாகப் பாடுவர் ஆடுவர்!
தவக்குடில் களிலே சிவையுன் நினைவில்
கவிபல பாடி உவகையில் மிதப்பர்!
குருகுலப் புலவர் வட்டம் குவிக்கும்
மருமலர்ப் பாக்கள் மழையில் நனைவோய்!

வாழ்வில் முக்கால் வாசியைப் பழிகளில்
பாழ்பட வைத்த மலம், வினை ஒழித்தே
எஞ்சுசில் வாழ்நாள் இருந்தவம் கூட்டி
அஞ்செஞ் சீறடிக் கணைத்தருள் கனகமே! 40.

முதற்பதிப்பு : அன்னை அருளமுதம் - 1997.
வெளியீடு : ப. உமாவஞ்சி, ப. செங்கோடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கிளிநொச்சி வட்டக்கச்சி
# ஸ்ரீரங்கநாதர்
# திருவிரட்டை மணிமாலை

## நூலாசிரியர் முகவுரை

1999 ஆம் ஆண்டு கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் ஓர் ஓலைக் குடிசையில் தன்னந்தனியனாக நான் வசித்து வந்த காலம்! ஓர் இரவு என் ஆழ்ந்த உறக்கத்தில் ஒரு குரல் பலமாகக் கேட்டது.

"வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதர்" என்ற சொற்கள் 3 தடவையும், திருவிரட்டை மணிமாலை என்னும் சொற்றொடர் 3 தடவையும் ஒலித்து ஓய்ந்தன. திடுக்குற்று விழித்தெழுந்து அதிசயித்தேன். வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதர் தம்மீது திருவிரட்டை மணிமாலை பாடும்படி பணித்துள்ளார் என்றுணர்ந்து உள்ளம் பூரித்தேன்.

அப்படி ஒரு கோவில் உள்ளமை அதுவரை எனக்குத் தெரியாது. மனத்தவிப்போடு வட்டக்கச்சியிலுள்ள ஓர் உறவினரின் வீடு சென்று, அங்கிருந்து அந்த ஆலயத்திற்குச் சென்று, அரங்க நாதப் பெருமானின் அற்புதச் சிறப்புகளைக் கண்ணார, நெஞ்சார அனுபவித்து, உள்வீதியை உடம்பால் உருண்டு வழிபட்டு, மேலும் ஆலயம் பற்றிய தகவல்களை உசாவி அறிந்து மீண்டேன்.

கண்ணபிரான் கருணையில் கதித்தெழுந்தன பாடல்கள்! அவை நூல்வடிவில் அச்சிடப்பட்டன. அக்கோவில் அறங்காவற் சபையின் ஏற்பாட்டில் அச்சந்நிதான மண்டபத்தில், அடியவர் சபையில் கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம், உதவிக் கல்விப் பணிப்பாளர் வட்டக்கச்சி திரு. க. முருகவேள் உள்ளூராட்சிப் பணியாளர் செல்வி. கு. மணிமேகலை B.A., திரு. மு. தியாகராசா முதலியோர் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கி இந்நூலை வெளியிட்டு வைத்தமை வரலாறு.

– ச. வே. பஞ்சாட்சரம்.
கனடா
06. 07. 2022.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதர் திருவிரட்டை மணிமாலை

## காப்பு

இணுவைச் செகராச இன்பா! பிறவிப்
பிணிதீர்க்கும் பேறீ இறைகள் - இணைத்தாள்
பணி! போய்ப் பலகோவில் பாடென்றாய்! பா,தா!
மணிவண்ண னைப்பாட வந்து!

## நூல்

### வெண்பா

வன்னிவட்டக் கச்சிவாழ் சீரங்க நாதனே!
உன்னைத் திருவிரட்டை ஒண்மாலை - தன்னாலே
சோடிக்கச் சொல்லும் சுடராணை இட்டகன்றாய்
பாடத்தா உன்னருளின் பாங்கு! 01.

### கட்டளைக் கலித்துறை

பாங்கினில் ருக்மணி சத்திய பாமா படிபவனே!
பாங்கறி யாதவர் பங்காள ரானதால் பட்டதுயர்
நீங்கிடு மாறில்லை! நீறின வாழ்வுகள் ஊர்களுமே!
மூங்கிலின் மேன்மையை மூவுல குங்காண வைப்பவனே! 02.

வைப்பாய்நம் பிக்கை வலுவெம் மனங்களிலே!
எப்பாவம் எம்மை அலைப்பனவோ? - பைப்பாம்பில்
பாற்கடல்மேல் பள்ளிகொள்ளும் மாலேவட் டக்கச்சி
மேற்பரிந்து தீர்ப்போய் வினை! 03.

வினைதீர்க என்றே விழைந்துன்நல் நாமம் விளம்பிநிற்போர்,
கனிநாவல் நீலங்கொள் கண்ணனுன் மேனி கருதிநிற்போர்
இனுந்தமி ழர்க்குள் இலைப்பலர் என்னுஞ் சினத்தினிலோ
வனவட்டக் கச்சி வைகுந்தா அருள மறப்பதுவே? 04.

மறந்தோம்நீ யேஎங்கள் வாழ்வின்வேர் என்னல்!
மறந்தோம் வைகுந்தம் மருவல்! - மறந்தோம்
அறநெறிகள் அத்தனையும் காசுழைக்கும் பித்தால்!
துறந்தோம் தொழுதல்அந் தோ! 05.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தோள் அரியே அடியர் மனங்களில் தேன்சொரிதேன்
பொந்தே! பொலிவட்டக் கச்சிப்புல் லாங்குழல் பூத்த கையா!
நந்தா விளக்கே! நமருன் நினைவின் மயமாக
உந்தாய்! உனகழற் கீர்த்திடர் தீர்த்தெமைக் காப்பாயே! 06.

காப்போம்என் றெம்மண்ணுள் கால்வை கயவர்களால்
பூப்புதிய சந்ததிகள் பொன்றியதால் - ஆப்பிழுத்த
பேய்க்குரங்காய்ப் பிள்ளைத் துயரால் கலங்குகின்றோம்!
ஆய்க்குலமாய்க் காப்பாய், ஐ யா! 07.

ஐயா! அனைத்தும் இகழ்ந்துன்கால் அண்டிடும் பல்லடியர்
மெய்யாய்த் துயர்கள் விலகிடப் பக்தி மிகுகின்றார்!
உய்வா றினமே உணர்த்தியிவ் வுண்மை இழுத்தருளி,
செய்வாய் வைகுந்தம், துவாரகை போலஎம் தேசத்தையே! 08.

தேசத்தை விற்றேனும் சீதனங்கள் சேர்க்கநிற்கும்
நாசத்தை நம்மோர் மறக்கவைத்து - கேசவனே!
நெஞ்சொன்றி நின்கால் சரணமென் றோடிவந்து
கெஞ்சவைக்க ஊதுன்சங் கே! 09.

சங்குடன் சக்கரம், சால்கரு டன், கதை கொண்டதெல்லாம்
எங்கெங்கு நீதிகள் தீயெரி ஏறுமோ அங்கங்கே
பொங்கிருள் மேகமாய்ப் பொன்மழை பெய்தறம்
காக்கவன்றோ?
இங்காண் டிருபதாய் ஏற்றிடர் ஏங்கறம் காப்பதென்றே? 10.

என்றடிமை தீரும்? இடர்பிறர்க்குச் சூழ்வதுடன்
கொன்றுயிர்கள் தின்னுங் கொடூரங்கள் - நின்றிங்கு
கன்றுமகிழ் கண்ணாஉன் கால்புகினே! நம்மனங்கள்
இன்றேயீர்த் தீகபல மே! 11.

பலராமன் தம்பீ ஒருராம னாய்வந்தாய்! வன்னியிலே
நிலைகொண்டாய் மம்மிக் குளத்தரு
கே! தென்னை நீள்கமுகு
பலவு, மா இன்னிழல் பால்நிலா வின்முற்றம் குந்தியே சூழ்
உலகும்உன் வட்டக்கச் சித்திகழ் நிம்மதி யோடுண்கவே!
12.

உண்ணல் ஓர் வீட்டில்! உறங்கலோர் வீதியிலே!
அண்ணன் அயலூரில் தங்கையிங்கு - கண்ணாலே
கண்டுபெற் றாரைக் கடந்தன ஐந்தாண்டு!
அண்டுதுயர் கண்ணா அகற்று! 13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றெம் பழவூழ், அரியுனை எண்ணா அசுரகுணம்!
பகைப்படைப் பாவி பயந்தே படலைகள் தாண்டி யோடப்
புகுத்துன் சுதர்சனப் பொன்சக்க ரம்! வேகும் பூமிக்கலி
யுகத்தின் கொடுமை ஒழிப்பாய்! உறங்கிலெம் உய்திளங்கே? 14.

எங்கேநான் என்றெனையே நான்தேடும் நாள்வருமுன்
இங்கெம் மினமே இதுபோல - பங்கமுறா
முன்னம் முகுந்தா முறியடித்துப் பாவங்கள்
அன்னைமண் ஆற்றி அருள்! 15.

அருள்கொண் டடங்கொன் றறங்காத் தடியர் தமைக்காக்கத்
திருப்பாற் கடற்பள்ளி தேம்பிட ஒன்பான் தரம்துறந்தோய்!
குருத்தாய், அரும்பாய்க் கொலையுண் குலத்தையுங் காக்கவென்றே
ஒருக்கால் வருவாய் உனைக்கல்கி என்றுல கேத்திடவே! 16.

ஏத்தியும், பாடியும், எத்தனையோ மண்டபமும்
பூத்தொழிற் பூசையுடன் பொங்கலும் - சீர்த்திப்
பரிவாரங் கள்பலவும் பண்ணிவட்டக் கச்சி
புரிதொண்டால் பூரித் திரங்கு! 17.

இரக்க மனத்தை இழந்தவ ராகியெண் ணில்தேவை
பெருக்கிப் பெருஞ்சவ டால்பண்ணிப் பேய்பிடித் தாடுகின்ற
இருட்டில் பலநூறாய் இன்னற் பழிகள் புகுந்திழிந்தோம்!
தெருட்டி, எளிமை திகழ்த்தி எமையுன்கால் சேர்க்கஇன்றே! 18.

இன்றே வருக! இறப்பின் விளிம்புக்கே
சென்றுநிற்கும் எங்களினம் சீவனுற - வென்றே
விடுதலையை, எந்தமிழர் வீடுன்கால் என்றே
குடியமர வைக்கமனம் கொள்! 19.

கொள்ளுக கோவில்நீ கோடிபல் கோடி தமிழிதயம்!
அள்ளுக அன்னவர் ஆழ்மனம் முற்றுமே ஆளுகவே!
பிள்ளைகள் தின்வெறிப் பேய்களின் கொட்டம் ஒழித்தருள்வாய்!
வள்ளிய வட்டக்கச் சிச்சிறீ ரங்கநல் வன்னியனே! 20.

முதற்பதிப்பு :
ப. வெண்ணிலா, ப. மகிழினி
- 1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னை ஐயனார் அம்புலித் தூது

## முகவுரை

### ஐயன் செய் அற்புதங்கள் – ஆம்! இன்றும் சிற்சிலவோ?

என் கனவிலே, சுன்னை ஐயன் தன்கோவில் வெளி மண்டபத்தில் மாணாக்கர் மத்தியில் என்னைக் குருவாக அமர்த்தி, தன் மூத்தான் முருகனுடன் வந்து, "என்னைப் பாடு" என்று இட்ட கட்டளை அற்புதம், பள்ளுவாகவா, பரணி யாகவா எப்படிப் பாடுவேன் என்றேங்கினேனுக்குத் "தூது பாடு" என்றுணர்த்திய செயல்மூல அற்புதம், சபரிமலை யாத்திரி கர்களின் நோன்பனைத்தும் நான் தாங்கிய நிலையிலே, எனக்குத் தூதுப்பா தந்த உபவாச அற்புதம், சபரிமலையில் 18 படி கடந்து தன்னை வழிபடும் தனித்துவம் தோன்ற 18 பாடல்கள் கொண்ட நான்கு வளங்களாகக் கவிதை தந்தமை, தன் ஆலய வாசலில் அமைந்த ஓர் இல்லத்தில் வைத்து 2700 ரூபா (18x50) பணத்தை என்னிடம் தந்து இத்தூதைப் பிரசுரிக்கும்படி தன் திருத்தொண்டர் **திரு. சின்னத்துரை குமாரவேல்** அவர்கள் கோருவதாக என் கனவில் காட்டியமை, அவ்வண்ணமே, **திரு. குமாரவேல்** அவர்கள் வெளியீட்டு நிதி வழங்க அருளியமை, சிறியேனின் முயற்சியில் அச்சிடப்படும் 18 ஆவது நூலாக இத்தூதினை வெளிப்படுத்துகின்றமை, ஆகிய முத்திரை அற்புதங்கள், இத்தூது பாடி முடிகையில் இணுவில் கந்தன் ஆலயத்தில் நான் வழிபடும் ஆனைக் கல்லின் நெற்றியில் தன் பொளி வடிவைக் காட்டித் தந்து என் தூதுப்பாவுக்கு அளித்த அங்கீகார அற்புதம் அதை அடுத்து தட்டார்தெருவில் தன் ஆலயத்திற்கு என்னைக் கனவிலே அழைத்து அருள்புரிந்த ஆசீர்வாத அற்புதம். எனப் புதுமைகள் மயமாக விளங்கும் ஐயனாரின் புகழ் பாடும் இந்நூலை வெளியிடும் சுன்னாகம் "கருணை கல்வி" நிலைய உரிமையாளர்கள் திரு. திருமதி. **கருணைநாயகம் பாஸ்மதி** தம்பதிகள், அணிந்துரை வழங்கிய **சிவஸ்ரீ. சி. சிவசரவணபவன்** MA அவர்கள், இத் தூது உருவாக ஊக்கமளித்த ஐயனார் தொண்டர் **திரு. நாகமுத்து செல்லத்துரை** BA அவர்கள், வெளியீட்டு

நூல் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியளித்த திருத்தொண்டர் **திரு. சி. குமாரவேல்** அவர்கள், வாழ்த்துரை வழங்கிய சுன்னை கதிரை மலைச் சிவன் கோவிற் பிரதமகுரு **சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள்** அவர்கள், இந்நூலை அழகுற அச்சிட்டுதவிய யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சகத்தார், "இந்துசாதனம்" ஊழியர்கள் யாவருக்கும் ஐயன் அருள் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

வணக்கம்.

சிவபுரம், இணுவில், மேற்கு. - **ச. வே. பஞ்சாட்சரம்**
சித்திரை 18. 05. 1994.

◆◆◆◆◆◆

**'கலைச் செல்வி", 'விளக்கு' மாத சஞ்சிகைகளின் ஆசிரியரும், ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளருமான திரு. சி. சிவசரவணபவன் M. A (சிற்பி), அதிபர் அவர்கள் வழங்கிய**

## அணிந்துரை

மிகப் பழைய தமிழ் இலக்கண நூல்களில், சாத்தன் வந்தான், சாத்தன் தங்கை - போன்றவை இலக்கண விதிகள் சிலவற்றிற்கு உதாரணமாகத் தரப்பட்டுள்ளன. கடவுளர்களின் பெயர்களை மக்களுக்குச் சூட்டும் தமிழ் மரபைச் சிந்திக்கும் போது, சாத்தனை வழிபடும் வழக்கம் தொன்றுதொட்டே தமிழ்நாட்டில் நிலவி வந்துள்ளமை தெளிவாகும்.

ஆனந்தக் கூத்தனுக்குத் தில்லைச் சிதம்பரமும், அங்கயற் கண்ணம்மைக்கு ஆலவாய் என்னும் மதுரையும், அனந்த நாராயணனுக்குத் திருவரங்கம், திருப்பதி போன்றவையும் சிறப்புத் திருத்தலங்களாகத் திகழ்வது போன்று, சாத்தன் எனும் ஐயப்பனுக்குச் சபரிமலைத் திருத்தலம் விளங்குகின்றது. அந்த அருள் மலையில் வீற்றிருந்து அருள்மழை பொழியும் அரிகர புத்திரனார் தமிழீழத்திலுள்ள தன் பக்தர்களைத் தேடி வந்து, பல்வேறு இடங்களில் கோயில் கொண்டு அருள் பாலித்து வருவதுடன், மிகப் பழைய காலந்தொடக்கம் தமிழ் மக்கள் இப்பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர் என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்தும் வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிலே ஏற்பட்ட புண்ணின் வேதனையால் திருக்கோவில் திருப்பணியை நிறைவேற்ற முடியாமல் வருத்தமுற்ற சிற்பியின் முன் தோன்றி, வெள்ளிப் பிரம்பொன்றால் புண்ணைத் தடவிக் குணமாக்கிக் கோவிற் திருப்பணியைச் செய்வித்து முடித்தவர் சுருவில் ஐயனார். கடலிலே மிதந்து வந்த பேழையில் இருந்து வெளிப்பட்டு, அனலை தீவில் கோவில் கொண்டு கடற்கோளிலிருந்து அத்தீவைக் காத்து வருபவர் அனலைதீவு ஐயனார். மறைந்திருக்கும் இடத்தைக் காட்டி அருளவேண்டுமென மன்றாடிய ஆண்டி என்பவரின் கனவிலே தோன்றி, தன் மறைவிடத்தைக் காட்டி, அந்த அடியவரைக் கொண்டே நிலத்தைத் தோண்டுவித்துத் தன்னை வெளிக் காட்டியவர் ஆண்டி கேணி (ஈழத்துச் சிதம்பரம்) ஐயனார்.

இந்தத் திருத்தலங்களிலும், சண்டிலிப்பாய் வேவிற் குளம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், தட்டார்தெரு, அக்கரைப்பற்று முதலாம் இடங்களிலும் ஐயனார் புரிந்து வரும் அற்புத லீலை களைப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடி வரும் கவிஞர் ச. வே.பஞ்சாட்சரம் - "வான் முட்டும் கோபுரங்கள் வடிவழகை ஏற்காமல், தான் மட்டும் பவனி வரத் தனி வீதி வேண்டாமல் பச்சை வயல், காய்கறிகள் பண்ணைக்குள் உவந்துலவி....."

"கதிர் குனிந்து நெல் வணங்க, கத்தரிகாயால் தாழ, துதி சொல்லக் குலை வாழை தோப்புகளில், பிரதட்டை மதர்த் துருளப் பூசினிகள், வயலன்னை இரவுபகல் மதித்தேத்த...."

அயலிருந்து அடிபணிவோருக்கு அல்லாமல் தொலைவில் இருந்து துதிப்போருக்கும் தன் இன்னருளைக் கன்னல் மழை யெனப் பொழியும் சுன்னாகம் ஐயனாரிடம் வெண்ணிலாவைத் தூதனுப்பி, தரணி உய்ய, தமிழீழம் உய்ய, தமருமுய்ய, தானுமுய்யும் நோக்குடன் வேண்டுதல்கள் செய்வதை அழகா கவும், நயமாகவும் கூறுவதே - "சுன்னை ஐயனார் அம்புலித் தூது" ஆகும்.

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது" - என்பதில் அசையா நம்பிக்கை உடையவர்கள் சைவப் பெருமக்கள். "அவனருளாலே அவன் தாள் வணங்கி......" என்பர் மணி வாசகப் பெருமான். தெய்வ அருட் குறிப்பே இத்தூதுக் கவிதை உருவாகத் தூண்டியது என்பதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நண்பனுமாய் வாதிட்டு, நாயகியாய் கண் கசிந்து,**
**வண்மகளாய் மன்றாடி, மகவாகப் புரண்டழுது,**
**தொண்டனுமாய் அடிமை செய்துன் தூய அருள் பெற்றஎனை**
**அண்ட விடாமற் செய்தாய்! அனுப்பிடு தூதுக்கவிதை**
**என்றாய் நீ எனவுணர்ந்தேன்! இத் தூதை**
**விடுக்கின்றேன்"**

எனத் தேனார் தமிழில் தெளிந்துரைக்கின்றார் கவிஞர். அதே வேளையில் நான் பாடித்தான் பெருமை நண்ணு நிலை அவற்கில்லை" எனத் தன்னடக்கத்தை வெளிப்படுத்தவும் அவர் தவறவில்லை.

அல்லல்களும் அவலங்களும் மலிந்த இவ்வுலகில், நிறைவுடனும், நிம்மதியுடனும் வாழவேண்டுமெனில் ஐயப்பன் திருவடிகளைச் சரணடைய வேண்டும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கையுடைய கவிஞர்,

"கலப்படமில் லின்பம் உன் கால்களிலே உண்டென்ற நிலைப்படுமெம் நெஞ்சத்தின் நெகிழ்வெல்லாம் உலகத்தார்" மனங்களிலும் தொற்றவைக்கும் வல்லமையைத் தனக்கீய வேண்டும் எனக் கேட்பது மாநிலம் பயனுற வாழ்வதற்கான வல்லமையைத் தருமாறு பராசக்தியிடம் பாரதியார் கேட்டதை நினைவூட்டுகின்றது.

ஐயனாரின் அற்புதங்களை நினைவூட்டிக் கவிஞர் கோரும் வரங்கள் சில, அவ்வற்புதங்களின் சாயலில் அமைந்துள்ளது குறிக்கத்தக்கது.

கவலையால் நைந்து ஆண்டிக் கேணி ஐயனாரின் அடிக்கமலங்களைச் சரணடைந்த புத்தபிக்கு ஒருவரின் கவலைகளைக் கரைத்து, நற்கதி அளித்ததைப் போன்று எமது கவலைகளையும் தீர்த்து எம்மை ஈடேற்றுமாறு வேண்டுவதற்கு ஐயனார் அற்புத வளம் 10ஐ உதாரணமாகக் காட்டலாம்.

**"விதிக்கையால் அடித்தெம்மை மெய்யருட்கையால் தடவும்**
**கதிக்கின்ற கருணை ஐயன்..."**

**"கந்தனும் நீ! கணபதி நீ! கண்ணன் நீ! சிவனும் நீ! அந்தரி**
**நீ! ஐயனும் நீ! ஆதித்தன், வைரவன் நீ!"**

**"சுடச்சுடரும் பொன்னாக்கித் துன்பத்துள் தொழுவிக்கத்**
**துடிப்பாய் நாம் வேண்டுகிறோம்,..."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறை நாமம் உச்சரித்தல், எண்ணிடுதல், உள்ளத்தாற் கும்பிடுதல் தியான நெறி இதுவன்றோ?".

"பார் உன்னை உள்நோக்கி ஒளி பெறுவாய்!"

"மல அழுக்கைச் சலவை செய்ய மண்ணுலகத் துறை வந்த மலிசீவ ராசிகளாம் மாராப்புக் கந்தைகள் நாம்...."

போன்ற அடிகள், ஆழமான சமயத் தத்துவங்களை எளிமையாக்கி இனிய தமிழில் தரும் கவிஞரின் திறமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன.

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனிடம் - வேண்டுவார் வேண்டுவதை ஈயவல்லானிடம் வீடுபேற்றையே விரும்பி யாசிக்கும் கவிஞர் இப் புவியில் இப்பிறப்பில் இறைவனுக் கேயன்றி வேறெவர்க்கும் அடிமையாகாத, சுதந்திர வாழ்க் கையை அருளுமாறு வேண்டுவது குறிக்கத் தக்கது.

ஆயிரமாயிரம் ஆண்டுளாக இந்த மண்ணில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களுக்கு ஆயிரமாயிரம் சோதனைகள் ஏற்பட, ஆயிரமாயிரம் இளைஞர்கள் அச்சோதனைகளையே சாதனைகளாக்கிச் சரித்திரம் படைக்க முயலும் இவ்வேளையில், இவ்விளைஞர்கட்கு வெற்றி கிடைக்குமா என்னும் வினாவிற்கு விடை தரும் வகையில்.

"எங்கெங்கும் இறுதி வெற்றி எனக்கே தான் வேண்டுமென்போர்,
சங்கடமே இல்லாமல் தகுந்த வெற்றி எய்துவழி
நீதியெந்தப் பக்கத்தில் நிற்கிறதோ அப்பக்கம்
சாதிமதம் இனம் மறந்து சார்ந்து நிற்றல் தானென்று
ஓதியெது நீதியென உன்னிப்பாய் ஆய்ந்தாய்ந்து
தீதகல வைத்த அருள் திறன் வியந்தோம்"

என உறுதியாகக் கூறுவது உற்சாகமூட்டுகின்றது.

"அடிமுடிகள் தேடிநின்ற அப்போட்டிப் பிரமனுக்காய்
கெடுமதியாற் பொய்சொல்லிக் கீழ்மையுற்ற தாழம்பூப்
பிழைபொறுத்துத் தாழையடி பெருமையுற வீற்றிருக்கும்"

ஐயனாரின் அற்புத வளத்தையும், அருள் வளத்தையும் ஞான வளத்தையும் விழுமிய தமிழில் ஓசை நயத்துடன் கூறுங் கவிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அடிக் கரும்பே தித்திப்பில் அதி உச்சம் என்பார்! உன் அடிக்கரும்பே தித்திப்பில் அதி உச்சம் உண்மைதான்"**

என ரசித்து ருசித்து, முத்தாய்ப்பு வைக்கின்றார். இத்தகைய அடிக்கரும்புகள் - கரும்பனைய கவிதை அடிகள் இக்காவியத்தில் நிறைந்திருந்து தெவிட்டா இன்பத்தில் எம்மைத் திளைக்க வைக்கின்றன.

சுருங்கச் சொன்னால் "சொல்விற்பனமும், அவதானமும் கவி சொல்ல வல்ல நல் வித்தையும் நிறைந்து விளங்குபவர் **கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம்** என்பதற்கு அவராக்கிய அம்புலித்தூது மேலும் ஒரு சான்றாக மிளிர்கின்றதெனலாம்.

கந்தரோடை, சுன்னாகம். ~ ***சி. சிவசரவணபவன்.***

---

# வாழ்த்துரை

இறைவன் துன்ப, துயரங்களாக மனிதனுக்கு ஏற்பட்ட அனுபவத்தின் மூலம், அவனைப் பண்படுத்தித் தன்பால் இழுத்தாண்டு கொள்கிறான். அதுபோல் தன்னருளின் சுவையையுணர்த்தி, ஆத்மானந்த அனுபவம் வழங்கியும் தன்னருள் எல்லைக்குள் அணைத்தாள்கிறான். இந்த வழிகளில் இழுத்தாளப்பட்ட அடியவர் பண்டிதர். ச. வே. பஞ்சாட்சரம், இறையருள் கட்டளைக்கிணங்க, ஈழத்தின் பல திருத்தலங்கள் மீது பிரபந்தங்கள் பாடிய பேற்றாளர். சுன்னை ஐயனார் இன்னருட்கட்டளை பெற்று, இவர் பாடியுள்ள இந் நூல் இன்று நம் தேசத்து இந்துக்களுக்கு மிக அவசியம் தேவைப்படும் இறை சரணாகதி உணர்வை, பக்திப் பரவசத்தை ஏற்படுத்துவதில் வெற்றிகாண வேண்டுமென கதிரைமலைச் சிவனாரைக் கருத்தோடு வேண்டி வாழ்த்துகிறேன்.

நன்றி.

பிரதம குரு, **நா. சர்வேஸ்வரக் குருக்கள்.**
கதிரைமலைச் சிவன் ஆலயம்,
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# சுன்னை ஐயனார் அம்புலித் தூது

## விநாயகர் காப்பு

ஏழையடி யோமின்
இணுவைச் செகராச
வேழமுகத் தையன்
மிகும்புதுமைச் சுன்னைநகர்த்
தாழையடி வேந்தன்
தடங்கருணைப் பெருவெள்ள
ஆழியவன் பாலோர்
அம்புலிப்பாத் தூதுவிடத்
தக்க பலம் நல்கி,
தடைகள், துயர் நீக்கிப்
பக்கபலம் நிற்கப்
பணிந்தேத்தி வேண்டுதுமே!

## நூல்

### (01) ஐயனார் அற்புதவளம்

முப்பதுக்கோர் நாளேனும்
முழுநிலவாய் வருகின்ற
அப்பெருமை கொள்நிலவே
அம்புலியே! நாமெனிலோ
எப்பொழுதுங் குறையுடையோம்!
எழிற்சுன்னைப் பெருமருதின்
கொப்புகள்சூழ் ஐயன்திருக்
கோவிலுக்குள் சென்றிடுவாய்!
வான்முட்டுங் கோபுரங்கள்
வடிவழகை ஏற்காமல்
தான்மட்டும் பவனிவரத்
தனிவீதி வேண்டாமல்
பச்சைவயல், காய்கறிகள்
பண்ணைகளுள் உவந்துலவி
மிச்சமெனுங் கருணை மழை
வெள்ளங்கள் பெருக்கியிடம்
சாத்தானின் மொழி கேட்டே
தாழ்ந்துவந்த நாமின்று
சாத்தா! நின் மொழிகேட்டுத்
தழைக்கின்றோம் என்பது சொல்! 01.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிசைஅமுதை ஒக்கலையிற்
    பிள்ளைகளுக் கெந்தாயர்
பசிஅகல ஊட்டுகையில்
    பார்க்கவைக்கும் வெண்ணிலவே!
அசமுகியின் இடரிருந்தே
    அடைக்கலமாம் இந்திரன் தன்
இசைமனைவி தனைக்காத்த
    எம்மையன் மகிழ்ந்துறையும்
பசுமந்தைப் பட்டிகள்மேய்
    பரந்தவெளி வயற்சுன்னை
கசியமனங் கருணைபொழி
    கரியனிடம் போஎமக்காய்!
பென்னம்பெரும் அசுரமலைப்
    பேய்களையும் நீயிந்தச்
சின்னஞ்சிறு குறுணிகளால்
    சிதறடித்து முலகோம்பும்
அற்புதத்தை மேன்மேலும்
    ஆற்றுதல்கண் டுளம்நெக்கி
நிற்கின்றோம் என்பதனை
    நினைந்துரைப்பாய் நல்நிலவே! 02.

கங்கைவெள்ள நீர்ப்பரப்பில்
    கண்சிமிட்டத் தங்கமுலாம்,
பொங்கிவரும் வெண்ணிலவுப்
    பொன்னழகே! வெள்ளியொளித்
துண்டங்களே போல்மீன்கள்
    துள்ளிவிழும் நீர்ச்சுனையும்,
மண்டிவளர் தாழைமர
    வனமுஞ்சூழ் சுன்னையற்கு,
கடவுள்நான் வாழ்விலிடுங்
    கட்டளைக்குக் கட்டுண்ணாக்
கொடியவரின் அக்கிரமம்
    கொட்டங்கள் அடக்காமை
அடியவரை, கோவில்களை
    அழித்திடுதல் கண்டவன் நான்!
விடுகுவெனோ? எனவேங்கை
    மேற்செண்டு கொண்டேறல்
கண்டேநாம் ஆனந்தக்
    களிவெள்ளம் ஆடியதை
விண்டே சொல் வெண்ணிலவே!
    வீழ்ந்தடிகள் தொழுதே சொல்! 03.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளர்,கொலை ஞர்பயங்கள்
கங்குலிலே தீர்த்தொளியின்
வெள்ளத்தில் மிதந்துவரும்
வெண்ணிலவே! எமக்கிரங்கு!
நள்ளிரவோர் அடியவனை
நயவஞ்ச கர்கொன்று,
பள்ளவயற் புதைத்துவிடப்
பாவிகளை வெளிப்படுத்தி,
வெள்ளிப்பிரம் பேந்துகிழ
வேடத்தில் சாட்சிசொன்ன
தெள்ளருட்சுன் னைத்தேவன்
திருச்சபைக்குச் செல்லொருகால்!
கன்மவினைப் பயன்நுகர்ச்சிக்
கதிகலங்கும் வேளையிலே
உன்நினைப்பு மறந்திடலாம்!
ஓ! இறைவா! அங்கெல்லாம்
நீவந்து வெளிப்பட்டெம்
நெஞ்சிலுரம் நல்குவரம்
தாவெனவும் கேட்டமெனச்
சாற்றியகல் வெண்ணிலவே! 04.

திருப்பணிக்குத் தடையான
சிற்பியின் காற்பெரும்புண்ணை
இருட்கங்குலிடைத் தோன்றி
எழில்வெள்ளிப் பிரம்பாலே
பரிசித்து மாற்றித்தன்
பணிமுடித்த சுருவிலையன்
விரும்பியுறை சுன்னைநகர்
விரைநிலவே! அவனிடத்தில்,
அரைத்தூக்கத் தாய்தொட்டில்
ஆட்டிச்சேய் துயில்விக்கக்
கருதிப்போய் முழுத்துயிலால்
கட்டுண்டு தானுறங்கும்
வேடிக்கை போல்,பக்தி
விளங்கார்க்கு விளக்கப்போய்
பீடுற்றோம் அரைப்பக்தர்
பிறங்குமுழுப் பக்தியராய்!
வைதாரை வாழவைப்போன்
மாண்குணங்கள் பிரசாரஞ்
செய்தாரைக் கனிந்தாண்ட
செயலென்றுந் தேர்ந்தது சொல்! 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகளது தலைகளிலே
    ஆடிவந்த பேழையொன்றில்
சிலைவடிவில் வந்தனலை
    தீவிலன்பர் தருகோவில்
குலவிநின்று கடல்கோளால்
    குன்றாமல் ஊர்காத்த
மலர்க்கமல வள்ளலவன்
    வாழ்சுன்னைப் பதிசென்று
நண்பனுமாய் வாதிட்டு,
    நாயகியாய்க் கண்கசிந்து,
வண்மகளாய் மன்றாடி,
    மகவாகப் புரண்டழுது,
தொண்டனுமாய் அடிமை செய்துன்
    தூயஅருள் பெற்ற என்னை
அண்டவிடா மல்செய்தாய்!
    அனுப்பிடுதூ துக்கவிதை
என்றாய் நீ எனவுணர்ந்தேன்!
    இத்தூதை விடுக்கின்றேன்!
நன்றோதீ தோஅறியேன்!
    நயந்தருள்க என்பதுஞ்சொல்! 06.

பூதங்கள் காட்டிடையில்
    புரிவேட்டைப் பிஞ்ஞுகற்கே
ஏதம்வந்திடக் காத்தான்!
    இனியமகள் பூரணையை
காதலுடன் தரஏற்றான்
    காஞ்சியிலே! இச்சுன்னைச்
சீதவயல் சேர்மருதத்
    திருக்கோயில் வாழியிடம்,
முட்டாமல் மோதாமல்
    முழுதாக வாழ்வுமுடி
பட்டாலே போதுமெனப்
    பரவவில்லை! துன்பங்கள்
பட்டாலுங் கெட்டாலும்
    பாழ்பிறவி இன்னொருகால்
கிட்டாமல் தடுத்தெம்மை
    கிளர்வானம் உய்த்திடுக,
எட்டாதோ எட்டுவதோ
    எல்லாம்உன் பாரமென
விட்டோம்ஐ யாஎன்றோம்!
    விளம்பிந்தத் தூதுரையும்! 07.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபாவக் கொலைதடுக்க
வருசாத்தன் எழில்மயங்கி
நேபாளக் கோ பல்ஞன்
நேசமகள் புட்கலையை
ஏற்றருளக் கோரிடவே
இனிதேற்ற அருட்சாத்தன்
போற்றியமர் சுன்னைநகர்ப்
பூம்பதியான் திருவடிக்கு
மீதமின்றி எமைமுழுதுன்
விளங்கடியில் வைத்தபின்னும்,
பாதகம்எம் மானுடனும்
பண்ணுவனேல் அதுதடுக்க
நீதிதர முறையீடு
நிகழ்துவமோ மனிதரிடம்?
ஆதலினால் ஆண்டவனே!
ஆள்கிறவா! ஆள்பவனே!
சோதனைகள் செய்வாயேல்
தொந்தரவுன் துணையடிக்கே!
ஈதெமது பக்திநிலை!
இயம்பிடுவாய் வெண்ணிலவே! 08.

நான்கரைநூற் றாண்டின்முன்
நண்ணுகுளக் கோட்டன்செய்
மேன்மைதிகழ் வியாவிலையன்
மிளிர்தளிபோர்த் துக்கீசன்
தான்தகர்க்க வந்திரத்த
வாந்திகொண்டு சாவுற்ற
பான்மையெனச் சுன்னைஐயற்
பழித்தஇராக் காவலனும்
சந்நிதிப்பின் குளக்கட்டில்
சவமாகிக் கிடந்தானாம்!
பொன்னிலவே ! ஐயனாற்றல்
புரிந்துபணிந் தணுகிடுவாய்!
கலப்படமில் லின்பம்உன்
கால்களிலே உண்டென்ற
நிலைப்படும்எம் நெஞ்சந்தம்
நெகிழ்வெல்லாம் உலகத்தார்
மனங்களிலும் தொற்றவைக்கும்
வல்லமையை எமக்கீய
நினைத்தருள வேண்டும்என
நெடுநிலவே! கேட்டதுஞ்சொல்! 09.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தபிக்கு ஒருவனுளம்
    பொசுக்கிவந்த கலக்கத்தை,
உத்தரவாய் அசரீரி
    உரைத்தவண்ணம் நாடிவந்து,
ஆண்டிகே ணிச்சாத்தன்
    அடிதொழுது போக்கிட்டான்!
ஈண்டும்நம் சுன்னைஅமர்
    இன்சாத்தன் அருளாலே
கொல்லுமனக் கவலைகளின்
    குலங்கழுவ ஏங்குகிறோம்!
தொல்லையெனச் சலிக்காமல்
    தூநிலவே! அவனிடம்போய்
விதிவசமாம் கவலைகளால்
    வெந்துமனம் வீழ்கையிலும்
மதுவகைக்குள், போதைதரும்
    மயக்கிகளுள் ஒளியாமல்
கதியுன் கால் என நல்கிக்
    கதறுவித்தெம் மிடர்தீர்க்கும்
அதிகருணைக் குருகுகிறோம்!
    அறைஇதனை வெண்ணிலவே! 10.

சூழுங்கடற் சுருவிலிலே
    தோணியொன்றில் வந்திறங்கி,
ஆளொருகொத் தன்காண
    ஆலயத்துள் பெண்ணிருவர்
தோழமையில் புகுந்துமறை
    சுடர்வித்தை புரிசாத்தன்
வாழுசுன்னை மனையடைந்து
    வணங்கவனை! அவனிடத்தில்,
"நானறியாஎன் விபரம்
    நன்றாக நீயறிவாய்!
ஈனன்எனக் குள்நின்று,
    என் பிழைகள் எனக்குணர்த்தி,
திருந்துநடை பயிற்றும் நின்
    திருவருளை என்னென்பேன்?
விரைந்தெங்கள் பிழையனைத்தும்
    விரட்டியிந்த அருள்வழியில்
முழுப் புனித ராக்கியெமை
    முக்திநிலைக் கனுப்பியருள்!
விழுத்துணையே!" எனவும்யாம்
    வேண்டிடுதல் சொல் நிலவே! 11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளக்கோட்டன் வைத்த தளி
    கொடியஒல்லாந் தர்அழிக்க,
குளத்துள்ளே மறைப்புற்றுக்
    கூர்கனவில் மறையவற்கு
வெளிப்பட்டு, வேவிற்குளம்
    விட்டெழுந்தே சண்டிலிப்பாய்
வளர்சாத்தன் சுன்னைமனை
    மண்டஒளி செல்லொருகால்!
முக்குணத்தர் மானிடவர்
    முன்வந்தே அணைத்துப்பின்
துக்கமுற முனியாகித்
    துரத்திஇடர் சூழ்ந்திடுவார்!
திக்கிளது செய்வதென்று
    தெரியாமல் திணறுவிப்பார்!
"எக்கணமும் ஒரு குணத்தன்
    இன்பஅருள் புரிகுணத்தன்
உன் நிழலே நிரந்தரமாய்
    உவகைதரும் எனப்புகுந்தோம்!"
என்னுகிறோம் என்றிறைபால்
    இயம்பிடுவாய் எழில்நிலவே! 12.

குதிரைக்காற் குளம்பொலிகள்
    கொஞ்சுந்தாட் சிலம்பொலிகள்
அதிர்சங்கம் கங்குலெழும்
    அக்கொழும்புத் துறைத்தளியில்
அமர்ந்தஇரு பெண்கேள்வன்,
    ஐங்கரஅண் ணன்அயலில்
கமழ்ந்திருளும் பூந்தாழைக்
    கவின்சுன்னை உறைவோன்பால்
"அகவுறுப்பு நான்கினுள்ளே
    அடங்காத வெறிமனமும்,
அகங்காரக் கடைப்பிடியும்
    அரும்புத்தி சித்தத்தை
ஆசை, இச்சை நிறைவேற்றும்
    ஆயுதங்க ளாக்கும்நிலை
வீசுபட, புத்தி, சித்தம்
    வென்றாட்சி ஏற்கவைத்தே
எமையுயர்த்தி வைக்குமுன்றன்
    இன்னருளுக் கேதுநகர்?"
இமை கசியக் கண்பனித்தோம்
    என்றதுஞ்சொல் வெண்ணிலவே! 13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரன்வரத்தை ஐயுற்ற
　　பசுமாசு ரன்அதனைச்
சரிபார்க்க முற்பட்டுத்
　　தானழிந்த கதைஅறிந்து,
அரன்மைந்தன் திருவுள்ளம்
　　அப்படியே ஏற்றின்பம்
பெருவாழ்வு நுகர்ஊரின்
　　பெருமானின் திருவடிக்கே,
“எண்ணமின்றிப் பேச்சில்லை!
　　எண்ணமின்றிச் செயலில்லை,
எண்ணச்சுத் தம்பேணில்
　　எவனுஞ்சுத் தன்முழுதாய்!
அண்ணல்நீ நொடிதோறும்
　　அகத்திருந்து காப்பாற்றில்
திண்ணியநல் நெறியாளர்
　　சீலர்நாம் எனக்கண்டோம்!
விண்ணரசே! எம் வினைகள்,
　　வெறிமலங்கள் துடைத்தாள
விண்ணப்பம்!” இதைச் சொல்லி
　　மேற்செல்வாய் வெண்ணிலவே! 14.

மேல்வீசும் பலியுண்டி
　　மீளாமல் வான்மறையும்
சால்கீர்த்தி, பதிகமொடு
　　சாத்தன்பேர்க் காவியங்கள்
நிலவிடும்அக் கரைப்பற்றில்
　　நீடையன் சுன்னையிலும்
பலபனுவல் தன்னருளைப்
　　பாடவைத்த ஐயன்பால்
“மிடுக்கான இளமையிலே
　　வேண்டுமட்டும் சுமைபெருக்கி,
நடக்கவொண்ணா முதுமையிலே
　　நலிவோடு சுமப்பதென்றால்
இடுக்கணிங்கு பிறப்பதென்ற
　　எண்ணமன்றி ஏதுவரும்?
துடைத்துமலம் பிறப்பறுக்கத்
　　துணியவைக்க மானிடர்க்குக்
கொடுத்ததிக பலம் இளமை,
　　குறைத்ததிக பலம்முதுமை,
நடத்துமுன்றன் நாடகத்தை
　　நயந்தோம்” என்றறை நிலவே! 15.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியமு துனைக்காட்டு
    வியாவிலைய னாரேஎன்ற
ஆண்டிகனா வில்சொல்லி,
    அரசடியில் அகழ்ந்தெடுக்க,
மீண்டெழுந்து கோவில்வளம்
    மேவியங்கு நிலைத்துறையும்
தூண்டுமன்புச் சாத்தனுறை
    சுன்னைநகர் போ நிலவே!
சரிதெளிந்தே ஒழுகலறம்!
    தலைப்படுதல் பாதியறம்!
சரிதேடா மைபாவம்!
    சரிஅசட்டை பெரும்பாவம்!
சரிதெளிந்துங் கொள்ளாமை
    தாங்கவொணாக் கொடும்பாவம்!
புரியவைத்தெம் புந்தியிலே
    புனிதசரி கள்காட்டிச்
சரிவழியில் நின்றொழுகத்
    தக்கபலம் எமக்கூட்டி,
மருவுசுத்தி வழங்கருளை
    மறவோம்என் றுரைநிலவே! 16.

படகில்கொண்டு வந்தஇரு
    பகடுகளில் ஒன்றுதுள்ளிக்
கடலில்விழுந் தலைமறையக்
    கரைசேர்ந்த அடியர்வந்து
இடர்சொல்லி நேர்த்திவைக்க
    இழந்தகாளை கரைசேர்ந்த
திடரனலை தீவினிலே
    திகழ்ஐயன் சுன்னைசென்று,
"உனைநம்பும் வாய்ப்பொன்றோ
    உனையண்மும் வாய்ப்பொன்றோ
உனையேத்தும் வாய்ப்பொன்றோ,
    உனில் மகிழும் வாய்ப்பொன்றோ,
உனையலசும் வாய்ப்பொன்றோ
    உயிர்கொடுத்தும் போற்றுகின்ற
மனமெவனுக் குண்டவனே
    வானுலகை நெருங்குகிறான்!
எனக்காட்டி எமையாளும்
    எம்மிறைவா! வாழி!" என
மனமுருகும் நம் வார்த்தை
    வானிலவே தூது சொல்லு! 17.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியில்லா இரவுக்கே
ஒளிசெய்வேன் எனப்பகலில்
வெளுறிக்காண் வெண்ணிலவே!
மின்னலெனுங் கொடிக்கனியே!
களவுண்ட சங்கிலிக்காய்க்
காலடியிற் பழிகிடந்த
கிழவிக்குச் சங்கிலியைக்
கிடைப்பித்து, கள்வனையும்
விழுந்தோடி வந்தேத்த
விதித்தஅருட் சுன்னைநகர்
வளந்தாங்கி ஐயன்தன்
மனையிடத்துச் சென்று அவற்கு
பொன்,கல்விக் கொடையன்று
புதல்வர்க்குத் தந்தைகொடை!
உன் முதன்மை நம்புவித்தல்
உயர்கொடைக்குள் உச்சமெனச்
சொன்னவன் நீ! சொன்னபடி
தொழுவிக்கும் ஆன்மபலம்
மின்னுவிப்பாய் எம்மில்!" என
வேண்டல்நாம் சொல்நிலவே! 18.

## (02) ஐயனார் அருள் வளம்

ஊரையெல்லாஞ் சுற்றிடினும்
உயரநின்றே சுற்றுகின்ற
ஈரப்பொன் னொளிநிலவே!
இன்பமனச் சீதளமே!
அடிமுடிகள் தேடிநின்ற
அப்போட்டிப் பிரமனுக்காய்
கெடுமதியாற் பொய்சொல்லிக்
கீழ்மையுற்ற தாழம்பூப்
பிழைபொறுத்துத் தாழையடி
பெருமையுற வீற்றிருந்தே
அழுபவர்தம் துயரகற்றும்
அருட்கடலாஞ் சாத்தனிடம்,
"நம்பியுண்ட பேதைக்கு
நஞ்சாலுந் தீங்கில்லை!
நம்பிக்கை என்னுமொரு
நற்பெயரும் உடையேன்நான்!"
என்றுசொல்லும் விதத்தினிலே
எமைக்காக்கும் எம்பெருமான்
நன்றிநினைந் துள்ளுருகி
நாமமுதல் சொல் நிலவே! 19.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியசந் திரர் தீமுச்
    சுடருள்ஓர் முழுநிலவே!
காரிகைகன் னிப்பெரியார்
    கழனிதனை உழுவிக்கப்
பூரணைபுட் கலைசகிதம்
    பொலிகருணைத் திருவுருவாய்
ஏரிடற எழுந்தவனாம்,
    இன்னருளால் சுன்னை,வள
ஊருலகை ஈர்ப்பவனாம்
    உவந்தழைத்துப் பணிநல்கி,
ஓரடியா னாக்கியெனை
    உயர்த்தியிடம் போ ஒருகால்!
அடிக்கரும்பே தித்திப்பில்
    அதியுச்சம்என்பர்! உன்
"அடிக்கரும்பே தித்திப்பில்
    அதியுச்சம், உண்மைதான்,
ஒடுக்கெங்கள் மலம்,பழிகள்
    உன்மயமாக் கெமையென்று
துடிக்கின்றோம்!" எம்மேக்கம்
    சொல்லவற்குத் தூநிலவே! 20.

கதிரவனாம் தரணியுயிர்க்
    கதியவனின் மேலாக்கி,
அதிமுதன்மை கலைகளெலாம்
    அளிக்கமகிழ் கலைநிலவே!
கதிர்குனிந்து நெல்வணங்க,
    கத்தரிகா யால்தாழ,
துதிசொல்லக் குலைவாழை
    தோப்புகளில், பிரதட்டை
மதர்த்துருளப் பூசினிகள்,
    வயலன்னை இரவுபகல்
மதித்தேத்தும் அரி,அரன்கள்
    மகன்சுன்னைத் தளிசெல்வாய்!
அதுவேண்டும் இதுவேண்டும்
    அழுகையினை விட்டுன்காற்
கதிவேண்டும் என்றழுதால்
    களிப்புமட்டும் எமக்கீய
எதுஎதுதே வையென்றே
    எண்ணியெண்ணி ஈயும்உன்
அதிசயப்பே ரருள் கண்டும்
    அழுகின்றோம்" என்பதுஞ் சொல்! 21.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி, முல்லை, மல்லிகைகள்
மின்னல்வெண் படைகொண்டு
கள்ளஇருட் படைதன்னைக்
களங்காணும் வெண்ணிலவே!
பிள்ளைவரம், தன்யந்திரம்
பிணித்தேத்து வோர்க்கீயும்
வள்ளல்ஐய னார்சுன்னை
மாளிகைக்குச் செல்லொருகால்!
“சுற்றத்தார் ,அயல், சூழல்,
தோழர், சோதரர், மனையாள்
குற்றங்கள்தமைப் பார்க்கக்
கோசாத்தன் உளனென்றே,
என்மட்டில் சுத்தத்தை
எண்ணியெண்ணிப் பேணுவதால்
என்பொழுது மிகமிஞ்சி
இனிதுன்னை ஏத்துகிறேன்!
ஏத்துகின்ற உருக்கத்தில்
என்னுள்ளே உன்னுருவம்
பூத்தெழும்பும் கருணையினால்
புளகித்தேன்” என்பதுஞ்சொல்! 22.

விண்ணாடன் புத்திரியர்
வேதனைக்குத் தண்டனையாய்ப்
புண்ணாகித் தேய்ந்துவளர்
பொன்நிலவே! ஐயப்பன்
கண்ணீவான் காதீவான்
காலீவான் என்பர்! ஏன்?
மண்ணீவான் பெண்ணீவான்
மகவீவான் பொன்னீவான்
விண்ணீவான் எனஅடியர்
விளங்கியணு குஞ்சுன்னை
நண்ணீசன் காலடிபோய்
நான்சொல்லுந் தூதுரைப்பாய்!
“இன்றுவரை நீயெமக்கும்
இன்னருளால் ஈகொடைகள்
ஒன்றுவிடா மல்எண்ணி
உவந்துருகும் பேறாக,
வகைதொகையே இல்லாமல்
வழங்கும்உன் வரங்களினால்
அகங்கனிந்தோம்!” என்றையன்
அருஞ்சபையில் சொல்நிலவே! 23.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயல்என்ன அவ்வைஎன
முகிழ்த்தமறு கொள் நிலவே!
கயிலைக்கண் பிறந்ததிருக்
கைலாய ஞானவுலா
பயிலற்கிம் மண்ணுலகில்
பக்குவமாய்த் தந்தவனாம்
புயல்வண்ணங் கனிமைந்தன்,
புள்ளொலிக்கும் குளக்கரையான்,
ஒயிலாக மும்முறைகள்
ஊஞ்சலிலே ஆண்டுதொறும்
பயின்றாடுஞ் சுன்னைஅரி
பாலகன்பால் போஒருகால்!
"தலைவிதியின் வளம்நின்று
தண்டித்தாய் எமையன்று!
விலகியின்றெம் துணையாகி,
வேதனைகள் தணிக்கின்றாய்!
ஊழல்நெறி தனைநீங்கி
உய்யுநெறி சேர்ந்தாரை
வாழவைக்கும் வள்ளலுனை
வாழ்த்துகிறோம்" எனச்சொல்லு! 24.

மலைமலையாய்க் காய்கறிகள்
மணம்கமழுஞ் சந்தையிலும்,
அலையலையாய் ஆண்பெண்கள்
அரவமெழும் வீதியிலும்
குலவும் "ஐய னாரே" எனும்
கும்பிடுகை ஒலிகேட்கும்
நிலவுகளி சுடர்சுன்னை
நிமிர்கோவில் செல்நிலவே!
"என்னுள்ளே குற்றங்கள்
எத்தனையோ! எண்ணாமல்
அந்நியரின் குற்றங்கள்
அருவருக்கும் இழிந்தவனாம்
என்னைநீ வெறுக்காமல்
ஏற்றருளும் பெரும்பொறைக்கும்
என்னவொரு கைம்மாறுஇங்
கிருக்குமென ஏங்குகிறேன்!
அன்னையருக் கன்னையனே
அருட்கடலே" என்றழுதல்
பொன்னிலவே தாள்பணிந்து
புகன்றுவிடு மறவாமல்! 25.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பதிலே தேவர்களைக்
    கறுத்தானாம் சிவன்கண்டம்!
காப்பதில்தா னோநம்மைச்
    சாத்தன்முழுக் கறுப்பானான்?
பூப்பொலியுந் தாழையிடைப்
    பூத்தசுன்னைச் சாத்தனிடம்
போய்ப்பணிந்து சொல்லிந்தப்
    பூவுலகோர் நன்றியினை!
போகிக்க நீநல்கும்
    பொருள்களிலே போதையுறும்
மோகத்தி லும்உன்றன்
    முதன்மையையே காண்கின்ற
பக்குவத்தை நீநல்கிப்
    பாகாய்வெண் ணெய்யாக்கி,
நெக்குருக வைக்கின்றாய்
    நீராற்றில் கண்மிதக்க!
என்றுரைத்தான் உன்னிணுவை
    ஏழையடி யான்! என்று
நின்றுரைப்பாய் நெஞ்சுருக
    நெடுவானப் பெருவிளக்கே! 26.

பரிவேடம் போட்டுமழைப்
    பரிசுவருஞ் சேதியினைத்
தருகின்ற வெண்ணிலவே!
    சாத்தன் தாள்களில் தாயர்
இருகையும் நீட்டிவரம்
    இரந்தழுது பெறுகின்ற
அரியபல காட்சிமலி
    அச்சுன்னைப் பதியினிலே,
நம்பமுடி யாதசில
    நடத்திடுவேன் நம்பென்றாய்!
வம்பாய்என் நம்பிக்கை
    வலு, ஆழம் பார்க்கின்றாய்!
நம்புகிறேன் பூரணமாய்
    நம்புகிறேன்! நீநினைத்தால்
வெம்புமணல் வெளியுந்தேன்
    விரிபொழிலாய் மாறுவதால்
அப்படியேஉன் வாக்கை
    ஐயமற நம்புகிறேன்!
இப்படியென் ஐயனுக்கு
    எழில்நிலவே செப்பிடுவாய்! 27.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்கடலில் தடுமாறும்
    இம்மண்ணை ஆனந்த
அருட்கடலில் ஆட்டுவதில்
    ஆளுக்காள் நீ - சாத்தன்
பொருத்தமுறும் பணிகொண்டீர்!
    பொன்னிலவே சுன்னைவயல்
இருக்கும்அரி அரன்மைந்தன்
    இன்னடிகாண் நீயொருகால்!
யாரோடும் பகிரவொண்ணா
    அழுங்குதுயர்ப் பெருவெள்ள
நீரோடே அள்ளுவித்து,
    நின்னோடே பேசவைத்து,
காப்பாற்றென் றுனை வேண்டிக்
    கதறுவித்துன் காலில்கை
கோப்பித்த தெனையடிமை
    கொள்கின்ற லீலையென -
எல்லாம் நீ யேயெனக்கென்
    றியம்புகின்ற வித்தையென
நல்லாய்நான் உணர்ந்திட்டேன்!
    நவிலிதனை என்கதிக்கு! 28.

சாபமிட்ட விநாயகரின்
    தளியருகில் இருப்பதெண்ணிக்
கோபமுற வேண்டாம்! உன்
    கோலஎழில் வடிவிற்குத்
தூபதீபப் புகையங்கு
    சுகந்தமிடும்! எனதுபரி
தாபத்துக் கிரங்கு! சுன்னைத்
    தளிஒருகாற் போய்வருவாய்!
கிலுகிலுப்பை வண்டியொன்றாய்க்
    கீழ்நோக்கி உருண்டோடிக்
கலகலத்துத் திரிந்தேற்குக்
    கவலைகளாம் கடிவாளம்
பலபலவாய் மாறியிட்டுப்
    பயமூட்டி, மோனத்தின்
நிலைபுகுத்தி வைத்துன்னை
    நினையென்று போதித்த
குருநாதன் குகையொன்றில்
    கோயிலெழில் குடைவிக்கும்
அருளெண்ணி அழுகின்றேன்!
    அதையுஞ்சொல் வெண்ணிலவே! 29.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதிச் "சுவாமியே சரணம்!
ஐயப்பா!" ஒத்திசையாய்,
பாதங்கள் பதினெட்டுப்
படிதாண்ட நெய்த்தீபம்
சேர்த்தடிய வர்கள்தொழும்
திருவுருவாய் அவதரித்தான்,
பூத்தசுன்னைப் பதியுடையான்
பொன்னடிசால் சந்நிதிபோய்,
"சும்மாநீ இரு சொல்லுஞ்
சொல்லொழிய!" என்றபடி
சும்மாநான் இருக்கவிடாத்
துடிப்பாலே மந்திரமாம்
உன்நாமம் தனைவாய்க்கும்
ஓய்வெல்லாம் பாடுவதால்
என்வேலைப் பறப்பெல்லாம்
எவ்வளவோ குறைவதுடன்
உன்வடிவம் நெஞ்சிலொளி
உருக்கொள்ளக் காண்கின்றேன்!
என்பதுஞ் சொல் வெண்ணிலவே
எனக்கெல்லாம் ஆனவற்கு! 30.

அல்லிமலர்க் குளங்களெலாம்
அம்புலியுன் புகழ்பாடும்
மெல்லிசைகள் கேட்டும்வான்
விட்டிறங்கா வெண்ணிலவே!
நெல்லின்மணங் கமழ்வயலின்
நெடுவெளியில் துன்பங்கள்
சொல்லியழும் அடியார்சூழ்
சுன்னையப்பன் தளிசெல்வாய்!
"சேர்ந்திடுந்தண் டனைகொண்டு
செய்தபழி தேர்ந்திடலாம்!
கூர்ந்துகூர்ந்து பார்க்கையிலும்
கொடும்பழிபல் லாயிரமே!
சார்ந்ததனால் உன்னடிகள்,
தண்டனையைத் தாங்குபலம்
ஆர்ந்தோம்நாம்! அத்தோடும்
அடுத்தடுத்தெம் வாழ்வினிலே
தலைகொய்ய வருஞ்சரங்கள்
தலைப்பாகை யொடுசெல்ல
அலையெழும்பும் விழியில் நீர்!
அறைநிலவே இந்நன்றி! 31.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரைமிசை ஏறியந்தக்
    கோழிக்கொடி யாளனெம்
எதிரிகளை வீழ்த்தியெமை
    இரட்சிப்பான்! இதனாலே
அதிபழைய காலம்முதல்
    அடிவணங்கப் படுகின்றான்!
மதியுடையார் தொழுஞ்சுன்னை
    மாசாத்தன் ஐயனிடம்
"குறைகுடந்தான் மனிதன்! அவன்
    கொள்கைகண்டு பிடிப்புகளும்
நிறைவல்ல! அத்தகைய
    நிறைவில்லார் கண்டறிந்த
இறைவன்நீ என்றாலோ
    இணையில்லாப் பெருநிறைவு!
குறைகொந்தல் நாமுன்னைக்
    கும்பிட்டால் ஆனந்தம்,
நிரம்புன்றன் நிறைவுநிலை
    நீதருவாய் எனவுணர்த்தும்
அருங்கருணை தனையெண்ணி
    அடிதொழுதோம்!" சொல்லிதையும்! 32.

வான்சிறக்க நீ வேண்டும்!
    வானறியும், மண்ணறியும்!
தேன்பிறக்கப் பூவேண்டும்!
    தெவிட்டாத பேரின்பம்
தான்பிறக்கச் சாத்தன்தன்
    தண்ணளிவெள் ளம்வேண்டும்!
கூன்திருத்தி நம்நெஞ்சைக்
    குழைசுன்னை ஐயனிடம்,
"பொருளெமக்குப் பெரிதில்லை!
    புண்ணியன்நீ பெரிதென்றே
வரும்படிகள் செலவிட்டும்
    வணங்கிட்டோம்!" ஏ மூடா!
பொருளெனக்கும் பெரிதில்லை!
    பூமனம்தான் தாஎன்றாய்!
தருசோறு நீர், போகம்
    தம்மால்நீ குடியூட்ட
ஒருமனமாய் உனதானோம்!
    ஒண்மலராய் எம்மனங்கள்
மருவிடவை வாசனைகள்
    மணிகண்டா!" என்பதுஞ் சொல்! 33.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசே கரப்பிள்ளை
சார்ந்துறையும் தளியருகே,
வெந்துமனந் தள்ளாடி
வேண்டிவரும் அடியரெலாம்
உந்துமனக் களிப்புடனே
உவந்துதுள்ளி வீடேகத்
தந்துவரம் சுன்னைவளர்
சரணமலர்த் தாள்தொழுது,
கோடானுகோடிமுகம்
கோடானு கோடிவிதம்!
கோடானு கோடிமனம்
கோடானு கோடிவிதம்
ஒருவனைப்போல் ஒருவனிலை!
ஒத்துவரா வேற்றுமைகள்!
ஒருமைப்பா டொன்றினிலும்
ஒருபோதும் மலராது!
மருவாது நிறைவிங்கு!
மதியுடைமை நிறைவுன்றன்
திருவடியில் தேடல்எனத்
தெளிந்தோம்" சொல் வெண்ணிலவே! 34.

சுந்தரர்க்காய்ப் பரவையிடம்
தூதுசென்றான் சடையுறையும்
சந்திரனே! சக்கரமாய்த்
தலை,கால்,கை அடங்கியவா!
பந்தளத்தை யப்பனெனப்
படைப்புலிகள் தாங்கிவந்தோன்,
இந்தமண்ணில் அப்படையை
இயக்கிறைவன் சுன்னைநகர்
வந்துறைவோன், ஆலயத்தில்,
வரமெல்லாம் ஈந்தமர்வோன்
சுந்தரத்தா ளடியிணைக்கெம்
தூதாகப் போஒருகால்!
விதிக்கையால் அடித்தெம்மை
மெய்யருட்கை யால்தடவும்
கதிக்கின்ற கருணையன்நின்
கரும்படியை எண்ணியெண்ணி
நதிக்கின்ற கண்ணுடையோம்
நன்றிசொல்லி மலங்களையும்
மதிக்கின்றோம், வணங்கஉனை
வைத்ததற்காய் என்று சொல்லு! 35.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவுக இன்பங்களும்
முற்றுதற்கு யானைமிசைத்
தேவனையும், எடுத்தசெயல்
சேரவெற்றி இருவருரெனும்
தேவியர்கள் நடுவமர்ந்த
தேவனையும் தொழுவரென்பர்!
காவல்புரி கடவுளெனும்
கவின்சுன்னை முதல்வனிடம்,
"கந்தனும் நீ! கணபதி நீ!
கண்ணன் நீ! சிவனும்நீ!
அந்தரி நீ! ஐயனும் நீ!
ஆதித்தன்! வயிரவன் நீ!
எந்தெந்த உருக்கொண்டும்
எமக்கருளும் தெய்வம் நீ!
எந்தஉரு எண்ணத்தில்
எப்பொழுது தென்படினும்
அந்தஒளி உருஏத்தி
ஆனந்தத் தேனாடும்
சிந்தைதரும் உனைத்தொழுதோம்"
செப்பிடுவாய் வெண்ணிலவே! 36.

## (03) ஐயனார் ஞானவளம்

தேய்ந்தாலும், மாய்ந்தாலும்
திரும்பவுமே உதித்துவரும்
தாய்நெஞ்சத் தண்நிலவே!
தாங்கிஒளி பெய்நிலவே!
சுன்னைவயல் வெளிநடுவே
சுடரொன்றாய் வீற்றிருந்து,
என்னையிழுத் தாண்டுகொண்ட
எழிற்சாத்தன் அரிகரன்சேய்ச்
செல்வனடிச் சந்நிதிக்குச்
செல்லொருகால் என்தூதாய்!
சொல்வதனை நாமிங்கு
சொல்லவற்குப் பணிவாக!
ஈமத்தீப் புகைக்குள்ளே
எழுஞ்சூட மணமெனலாய்ப்
பூமிக்குள் மானிடருள்
புனிதத்தைத் தேடுகின்ற
அறியாமைப் பிணிநீக்கி
ஆட்கொண்ட அவன்கருணை
மறவாத வரந்தன்னை
வந்தருளச் சொல்நிலவே! 37.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரத்தில் யந்திரத்தில்
மகிழ்ந்துறையுஞ் சுன்னைக்கோன்
தந்திரத்தில் தரிக்கும்கோன்
சமூகச்சம் பிரதாய
எந்திரமாம் எம்மிடத்தும்
இசைந்துறையும் இன்பஒளி!
அந்தரத்து வான்நிலவே!
அவன்சுன்னைப் பதிசெல்வாய்!
தொண்ணூற்றொன் பதும்தந்த
தூயஅருள் சுகிக்காமல்,
உண்ணாமல், எஞ்சியுள்ள
ஒன்றுக்காய் நொந்தலைந்து
மண்ணாகும் மண்ணவரின்
மடமையினை எமில்நீக்கி,
உண்ணுபஞ்சா மிர்தமென
உன்கொடைகள் நுகர்கையிலும்,
விண்நாடே விழையான்ம
விழிப்பீந்த மிகுங்கருணை
எண்ணியெண்ணிக் களிக்கின்றோம்!"
எழில்நிலவே தூதுசொல்லு! 38.

கிழிந்தாலும் பட்டெனவே,
கீற்றுநிலா வடிவினிலும்
ஒளிர்ந்தூரும் வெண்ணிலவே!
ஓவியப்பூந் தண்நிலவே!
பச்சைவயற் பாற்கடலில்
மின்னுதளிப் பாம்பணையில்
இச்சையுறுந் தாய்த்திருமால்
எழில்மடியில் இருந்தபடி,
நாதமெழுங் கைவளையார்
நாளுங்களை பிடுங்கியிசை
கீதமெலாம் மெய்ம்மறந்து
கேட்டுமகிழ் செல்வனிடம்,
"அழுபவர்கள் தமைக்கண்டால்
ஆண்டவனை மன்றாடித்
தொழுஎன்று சொல்லாமல்,
சூழ்ந்தழுது நின்றடுதல்
பழிசுமத்திக் கடவுள்மேல்
பாவமுறும் மடமைஎன்று
தெளிந்தேநாம் திருந்தவைத்த
திருவருட்கும் நன்றி!" என்பாய்! 39.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைநிலச் செழிப்பெல்லாம்
முகிழ்த்திடும்புன் செய்ஒருபால்!
நெல்லுவளம் புல்லியொளிர்
நிறைமருதம் ஈங்கொருபால்!
செழுவாழை தென்னை,பலா
தேமாவின் சோலையிருள்
தழுவுசுன்னை நிழல்நகரின்
தழைகருணைச் சாத்தனிடம்,
"படிக்காதான் அரைக்குருடன்!
பணந்தொழுகில் முழுக்குருடன்!
படிக்காத பணப்பித்தன்
பக்கம்நீ போவாயேல்
பாவிவழி காட்டலிலே
பாழ்ங்கிணற்றில் வீழ்வையெனத்
தேவனவன் அன்றெமக்குச்
செப்பிவைத்த இன்னருளை
இன்றுந்தான் என்றுந்தான்
ஏத்துகின்றோம்! அதனாலே
வென்றுந்தான் வருகின்றோம்
வினைச்சேர்க்கை எனவுஞ்சொல்! 40.

கிட்டவுள்ள கோளுன்னைக்
கேளாமல் எங்கெங்கோ
எட்டவுள்ள கோள்களையா
இரந்திடுவேன் நல்நிலவே?
நெட்டைநெடு மரக்காட்டு
நீழலிலே இனிதமர்ந்து,
கட்டியெமை ஆள்சுன்னைக்
கடவுளிடம் போதூது!
"முழுமுதற்கே உண்மையனாய்
முழுமனதாய் வாழ்பவனே
முழுமனித குலத்திற்கும்
முழுதான உண்மையனாம்
என்றடியோம் அகச்செவியில்
இரகசியம் பேசியவா!
உன்றனுக்கே உண்மையனாய்
ஒழுகுபலம் நல்கிறைவா!
சுடச்சுடரும் பொன்னாக்கித்
துன்பத்துள் தொழுவிக்கத்
துடிப்பாய்நாம் வேண்டுகிறோம்!
சொல்லிதனை எம்மிறைக்கு! 41.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புண்ணப் பாதியினை,
பதறாமல் மறுபாதி
ஓம்பும்நல் லொளிதந்தும்
ஊருலகை! இக்கீர்த்தி
சூம்புண்ணாக் குளிர்நிலவே!
குஞ்சரவா கனச்சாத்தன்
பூம்புனல்சூழ் சுன்னாகப்
போதிலமர் ஐயனிடம்,
நடக்கையிலும், இருக்கையிலும்,
நண்பருடன் கதைக்கையிலும்,
படுக்கையிலுங் குளிக்கையிலும்
படிக்கையிலும் துதிக்கையிலும்
எச்செயலைச் செய்கையிலும்
எளிதன்றோ இறைநாமம்
உச்சரித்தல், எண்ணிடுதல்,
உள்ளத்தாற் கும்பிடுதல்?
தியானநிலை இதுவன்றோ
சிறந்தவழி பாடென்ற
தயாளகுணம் மறவோம்! எம்
தாயே!" என் றழுவதுசொல்! 42.

வயிரவரை, விநாயகனை,
மங்கலஞ்சேர் பார்வதியை,
கைலைமலை நாதரினைக்
காதலுடன் சூழ்ந்திருத்தி
ஆரையம்ப திக்கணருள்
அப்புட்க லைபூரணை
சேரவமர் வோன்சுன்னைத்
திருக்கோயில் செல்லொருகால்!
அதிசுத்தன், அதிமேதை,
அதிவீரன், அதிஞானி,
அதிசெல்வன், அதிபுகழோன்
ஆனவற்றுள் ஒன்றேனும்
கொண்டதொரு திமிராளன்
கோடிபிறப் பெடுத்தாலும்
அண்டவுனை விடமாட்டாய்!
அறிந்தேநாம் பணிந்தோம்! ஆட்
கொண்டருளப் பெற்றோம்! எனக்
கூத்தாடிநாம் மகிழல்
கண்டனையென் றெங்கோவின்
காலடிக்குச் சொல்நிலவே! 43.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரிக்கு நான்கின்மேல்
தலயாத்தி ரைசெய்த
தபமுள்ள குருஆசி
தனைப்பெற்றும், கார்த்திகையில்
துளசிமணி கழுத்தணிந்தும்,
தூயவிர தம்ஏற்றும்,
ஒளிர் "சாமி யேசரணம்
ஐயப்பா" உச்சரித்தும்
தொழுவோர்தம் மிறையாகச்
சுகமீயும் சாத்தன்தன்
எழிற்சுன்னைக் கோவில்செல்
இன்னிலவே! என்மொழிசொல்!
வஞ்சநரி, கொல்சிங்கம்,
வதைகரடி, தேள்,பன்றி,
நஞ்சரவுப் பிறவிகளின்
நலியெச்ச மிச்சங்கள்
இப்பிறப்பில் எமைமாய்த்தல்
இனிதுணர்த்தி வைத்துயர்த்தும்
அப்பெரிய அருளெண்ணி
அழுகின்றோம்! சொல்நிலவே! 44.

புலிப்பாலைப் பூசியேநோய்
போகுமென்றார் நாடகம்போல்,
புலிக்குருதி குடித்தால்தான்
புத்தமிங்கு வளருமென்போர்
கிலிகொள்ள ஐயப்பக்
கிளர்கோலங் கொண்டெழவே
புலங்கொண்ட சுன்னாகப்
புண்ணியனாஞ் சாத்தனிடம்,
எங்கெங்கும் இறுதிவெற்றி
எனக்கேதான் வேண்டுமென்போர்
சங்கடமே இல்லாமல்
தகுந்தவெற்றி எய்தவழி
நீதிஎந்தப் பக்கத்தில்
நிற்கிறதோ அப்பக்கம்
சாதிமதம் இனம்மறந்து
சார்ந்துநிற்றல் தானென்று
ஓதியெது நீதியென
உன்னிப்பாய் ஆய்ந்தாய்ந்து
தீதகல வைத்தஅருள்
திறன்வியந்தோம்என்பதுஞ்சொல்! 45.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் அப்பன்! அரிஅம்மை!
    சிவையுந்தாய்! குகன் அண்ணன்!
செவிபெரியன் பெரியண்ணன்!
    திருமகளை எவ்வுறவாய்
உவந்தேற்பேன் எனஆயும்
    உருநீலச் சாத்தன்தன்
கவின்சுன்னை வயற்கோவில்
    கலைநிலவே போஒருகால்!
விழியகலப் பார்த்தருந்தி
    மேதினிதன் ஊழகுகளின்
வழியனைத்தும் அலைந்துலைந்து
    வாழ்நாள்வீண் நாளாக்கிப்
பழிச்சுமைகள் சுமக்கும் எமைப்
    "பார்உன்னை உள்நோக்கி!
ஒளிபெறுவாய்" எனச்சொல்லி
    உய்வித்த நன்றியினை
வழிபடும்நாம், புறஉலகின்
    வலைவீச்சைக் குறைத்தருளும்
அளிமழையி னைவேண்டி
    அமர்கின்றோம் என்றுஞ்சொல்! 46.

நீகைவிட் டாலும்எனை,
    நின்கால்நான் விடமாட்டேன்!
ஆகட்டும்!" எனஇறுக
    அடிபிடித்தே அழுவார்க்குச்
சோகங்கள், தீவினைகள்
    துடைத்துச்சுன் னையமரும்
மோகமுறும் திருவுருவான்,
    முத்திவிதைச் சாத்தனிடம்,
வந்தித்துக் கொண்டிருந்தால்
    வந்திடுமோ பொருள்பண்டம்?
சொந்தத்தில் உழைத்தோடித்
    தொழில்புரிய வேண்டுமென்பர்!
சொந்தத்தில் வெல்வழியில்,
    சுருங்குசக்தி, பொருட்செலவில்,
தந்தொழிலைப் புரியூக்கம்
    நல்குவது வழிபாடே!
இந்தப்பே ருண்மையினை
    எமக்குணர்த்தி, உய்வித்த
அந்தப்பே ரருளெண்ணி
    அடிபோற்றல் சொல்நிலவே! 47.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பிணிகள், உடற்பிணிகள்,
மலம்மூடான் மப்பிணிகள்
தனைக்கணமும் நினைப்பதெனும்
தளராத பக்தியெனும்
மருந்தாலே மாற்றுவித்து,
வானமரர் தொகைபெருக்கும்
அருங்கருணைச் சுன்னைநகர்
அரிகரன்நல் மைந்தனிடம்
நொந்துவெந்து யாருக்காய்
நூறிடுக்கண் ஏற்றோமோ
அந்தஜென்மம் நாம்தனக்கும்
ஆபத்துச் செய்வமென்று
சந்தேகப் படுமானால்
சாவெமக்கு மீண்டுமுண்டோ?
அந்தரித்த நெஞ்சிலெழும்
அக்கினியின் காடாற்றி
இப்படித்தான் மானிடவர்
என்னடிக்கு வாவென்றுளம்
மொய்ப்பகற்றி எம்முன்னே
மூண்டதற்கெம் நன்றிசொல்லு! 48.

சனிவாரம் தனதாகச்
சனிகளிலே தனைத்தொழுவோர்
வினைதூரம் போயகல,
விடிவீயுஞ் சுன்னைநகர்
மனைவாழும் மாலோனின்
மகன்,மருகன் ஆனவன்நல்
பனங்கூடல், பழத்தோப்பு,
பழனவெளி குளந்தாண்டு!
தந்தைநான் பிள்ளைகளைத்
தயவோடு வளர்க்கையில்,என்
தந்தைதாய், எனைவளர்த்த
தண்ணளியை மறவாமல்
தள்ளாடும் அவர்ப்பேணத்
தவறுவனேல், அதுஎன்றன்
பிள்ளைகளை முனியாக்கிப்
பேயாட்டும் எனையென்று
நிற்பவனின் இன்னருளை
நெக்குருகி ஏத்துகிறேன்!
அற்புதனின் அடியிணையில்
அருள்நிலவே கூறிதனை! 49.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்படைக்காத் தன்மையினால்
    கட்டாயம் நீ போகாய்
கால்போன போக்கினிலே!
    கருணைகொண்டு திசைமாற்றி,
பால்நெய்தேன் தயிரிளநீர்ப்
    பரிந்தாட்டும் அபிடேகச்
சால்பூறும் செஞ்சடையான்
    தழைசுன்னைப் பெரும்பதிபோ!
நெடுகலுமே பிறந்திறந்து
    நெருபாற்றில் நீந்துபிணி
மடிவிக்கும் கைப்பான
    மருந்தாகச் சிறுதுயர்கள்
அடைவிக்கும் மருத்துவன், எம்
    ஐயன்உன் பேரருளை
வடிவாக விளங்கிட்டோம்!
    மாறாகப் பூரணன் நீ
விடுவைபிழை எனல்பாவம்!
    வீண்பிறரில் பகைகொள்ளல்!
அடியவர்நாம் இதையெண்ணி
    ஆறிட்டோம் என்பதுஞ்சொல்! 50.

துச்சமென உன்துயர்கள்
    துறந்தபணி வெண்ணிலவே!
உச்சிமிசைக் கைவைக்க
    உருப்பொசுங்க வேண்டுமெனும்
நச்சுவரம் நண்ணசுரன்
    நடந்திடுதல் சோதிக்க
நச்சரவன் தனைவிரட்ட,
    நாசமுற அவன்வந்த
இச்சைதரு மோகினியாம்
    எழில்மாயன் தாயாக,
அச்சிவனைத் தந்தையென
    அடைசுன்னை அரசிடம்போ!
சரண்புக்கோர் தம்முள்ளும்
    தளர்நெஞ்ச அடியவரை
மரணத்தின் விளிம்புவரை
    வல்வினைப்பே றடைவித்து,
தருணத்தில் உயிர்காத்துத்
    தகுஞானம் உதிப்பிக்குங்
கருணைக்கோர் முடிவில்லை!
    களித்தோம்!" சொல் இத்தூதும்! 51.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன்முக்கண் தேங்காயாய்,
திருமார்பன் சேர்நெய்யாய்த்
தவஅடியார் கொண்டுதொழுஞ்
சபரிமலைத் தெய்வமுமாய்
அவதாரஞ் செய்சாத்தன்
அணைந்துறையுஞ் சுன்னைக்குத்
தவறாமற் செல்நிலவே
சந்தனத்தின் பந்துருவாய்!
நான்பாடித் தான்பெருமை
நண்ணுநிலை அவற்கில்லை!
ஏன்பாடச் சொல்லிட்டான்
எனையென்றால் என்மூலம்
தான்தக்க அடியார்க்குத்
தவவாழ்வைக் காட்டிடவே!
ஆன்மிகம் தனைமாந்தர்
அடியோடு மறந்ததனால்
தானின்றைத் துன்பமெனச்
சாற்றிடவே! தூதிதனை
நான் சொல்லா தேயறிவான்
நன்னிலவே! எனினுஞ்சொல்! 52.

செத்தொழியா துனைப்பேணித்
திருச்சடையில் சூடியினை
அத்தனெனக் கொண்டஐயன்,
ஆயுதமாய்ச் செண்டேந்தி,
அத்திமுகத் தண்ணனைத்தன்
ஆலயத்தின் அயல்கொண்டோன்
சுத்தமிலார் அஞ்சுசுன்னைச்
சுடர்மனைக்குச் செல்லொருகால்!
எல்லாம் நீ வல்லவன் தான்!
என்றாலும் எம்பாவம்
எல்லாம்நீ தரஎமக்கும்
இடையூறாய் இருக்கிறதே!
பொல்லா எம் பாவங்கள்
பொசுங்கவைக்கக் கனவிலுமே
நல்லநெறி முனைந்துன்றன்
நாமமதே ஏத்துகின்றோம்!
நல்லாராய் நடப்பதற்கும்
நல்குபலம்" எனுமேக்கம்
சொல்லாயோ வெண்ணிலவே
தூயவனின் மனமிரங்க? 53.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூரையெனும் வானத்துக்
    குமிழ்விளக்கு வெண்ணிலவே!
தாருகநல் வனந்தனிலே
    தவரிஷிகள், பத்தினிகள்
கூரகந்தை தனையகற்றிக்
    குலவமுத்தி அருள் செய்யப்
பேரழகன் பேரழகி
    பிறைசூடி - மாயவன்செய்
ஓரினிய நாடகத்தால்
    உருவான புத்திரனாம்
காரழகன் சுன்னையுறை
    கடவுளுக்கென் தூதுபுகல்!
பிடுங்கிவைக்க விழிகேட்க
    பிள்ளைதசைக் கறிகேட்க
உடன்கொடுக்க முந்திட்ட
    உத்தமர்மீட் டவையடைந்த
திடமிகுந்த பக்திநிலை
    செழிக்க எமக்கீந்தருள
உடம்புருண்டு கோவிலெல்லாம்
    உனைக்கேட்டோம் சொல்நிலவே! 54.

## (04) ஐயனார் விண்ணப்ப வளம்

திணைச்சோற்றுத் திரளையெனத்
    திகழ்ந்தொளியில் தித்திக்கும்
பனித்தண்மை வெண்ணிலவே!
    பசித்தோர்கள் உயிர்தாங்கச்
சனித்தோறும் சோற்றவியல்,
    தானங்கள் நல்கித்தாய்
தனை, அரியைப் போலுலகைத்
    தாங்குகரும் பிள்ளையன், மாங்
கனிக்காகப் போட்டியிட்ட
    கஜகுகர்க்குப் பின்னவன்பால்
முனைப்பாய்என் கனவுகளில்
    மொய்ம்பருளால் வெளித்தோன்றி
உனக்கேஇப் பரிசென்றே
    உரைத்தென்றோ அனுப்பிட்ட
இனிப்பான செல்வங்கள்
    எட்டாத தொலைகளிலே
இன்றுந்தான் இருக்கிறவே
    என்பாவச் சுவர்க்கப்பால்!
“என்பாவம் உடன்தீர்க்க
    இரங்கிடுவாய்” வேண்டுதல்சொல்! 55.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுத்தறிவு மேம்பட்டால்
பணிவன்புப் பண்பாட்டால்
தொகுத்தமைந்த ஒற்றுமையால்
தொல்லையபல் வேற்றுமைகள்
மறந்தொன்றாய் வாழ்கின்றோர்
வளநகராஞ் சுன்னையிலே
உறைந்தின்பம் நெஞ்சுகளில்
ஊறுவிக்கும் தேவனிடம்,
“மெய்ச்சாமி மார்” பரப்பும்
விளங்கிறைமேல் நம்பிக்கை
பொய்ச்சாமி மார்செயலால்
பொசுங்கிடநா டழிவதனால்,
எப்பாவஞ் செய்திடினும்,
இறைவாஉன் பெயர்சொல்லித்
தப்பேதுஞ் செய்யாமல்
தடுத்தருள வேண்டுமெமை!”
என்றேநாம் இரந்துஅவனின்
இருதாள்கள் ஏத்தியதாய்ச்
சென்றேசொல் வெண்ணிலவே!
தெளிவாய்ச்சொல் வெண்ணிலவே! 56.

சுந்தரவான் சுடர்விளக்கே!
சுவைக்கலைகள் சுகவூற்றே!
இந்திரன்மேல் அசமுகியாள்
இச்சைகொண்டு பெற்றெடுத்த
அந்தமகள் கிருத்திகையின்
அக்கிரமம் தனையொழிக்கத்
தந்தைசிவன் ஆணைவழிச்
சன்னதங்கொண் டன்னவளைச்
சிந்துவுக்குள் எறிந்தழித்த
தேவன்திருக் கோவிலுக்குள்
சுந்தரமாய் இறங்கிப்போய்ச்
சொல்லியருள் இத்தூதை!
என்னிறுதிக் கணத்தினிலே
இகவாழ்வின் நிறைவோடு,
பின்னுமடை யுலகுந்தான்
பெருமுத்தி யெனும்நிறைவும்
யாசித்தேன்! உன்னடியின்
அருள்வெள்ளத் தேனாடிப்
பூசித்தேன்!” எனுமுண்மை
பொலிவாகச் சொல்நிலவே! 57.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கேனும் எங்கேனும்
எள்ளளவும் வளைந்துகொடாக்
கதிர்க்கீற்றுத் தண்மதியே!
கடை,தொழிற்கு வந்தேறு
குடிக்கெல்லாம் அன்புதவி
குவிக்குஞ்சுன் னைப்பண்பின்
முடித்தண்மை முதிர்சாத்தன்
முனைந்துறைஇல் போஒருகால்!
எடுக்கவுள்ள பிறவிகளும்
எத்தனையோ நாமறியோம்!
அடுத்துவரும் பிறவிகளில்
ஐயனுனை மறந்துவிடில்
மீட்சிக்கு மார்க்கமில்லை!
மிகுபக்தி இப்பிறப்பில்
ஆட்கொள்வாய்! வரும்பிறவி
அத்தனைக்காம் தண்டனையும்
இப்பிறவிக் குள்ளேயே
எமக்கீந்து திருத்திடுவாய்!
அப்பா! ஓ! என்றழும்எம்
அருந்துயரஞ் சொல்லிடுவாய்! 58.

ஒளிப்பட்டின் ஈரத்தால்
உலகஇருள் துடைக்கும்பலாச்
சுளைப்பந்து வெண்ணிலவே!
சுன்னைவள வயல்வெளியில்
வெளிப்பட்ட நாள்முதலாய்
வேள்வி,பொங்கல், மடைதந்து
களித்தேத்தும் அடியர்மலி
கடவுளிடம் போஒருகால்!
ஆபத்துள் ஆபத்து
ஆண்டவனை நம்பாத
பாபத்தார் பட்டியிலே
பழகுகின்ற ஆபத்து!
எம்மக்கள், அடியவர்க்கு
இதயங்கள் நஞ்சேற்றும்
அம்மந்தர் நாத்திகரில்
அன்புறவு தடுத்திடுவாய்!
என்றலறிப் பதறியுன்றன்
இன்னடிகள் பிடித்தழுதோம்
என்பதையும் ஈரநலா
இயம்பிடுவாய் ஐயனிடம்! 59.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிகண்ட னாய்வந்து
    மலையாளம், மண்ணெங்கும்
பணிபக்தர்ப் பெருக்கிட்டோன்,
    பரவுந்தே வர்க்காக்கும்
பணிகொண்டு மகிஷிவதம்
    பண்ணியவன், சுன்னைக்கே
அணியன்றி அரசென்றே
    அமர்ந்தருளுஞ் சாத்தனிடம்,
"நீயிட்ட கட்டளைகள்
    நிறைவேற்றி நடக்கையிலே,
தீயிட்டெம் நெஞ்சுகளில்
    தெளிவற்றோர் செய்கொடுமை
உன்றனுக்குச் செய்யிழுக்கே!
    உணர்ந்துமிதை, வெகுளாமல்
இன்றுவரை நீபொறுத்தாய்!
    இப்பொழுதே புயலாகி
வென்றியினை இறைநெறிக்கே
    வியப்புறவே ஈந்தருள்வாய்!"
என்றடியோம் ஏங்குவதை
    இயம்பிடுவாய் இன்னிலவே! 60.

பங்குனிஉத் தரநாளில்
    பக்தர்குழாஞ் சூழ்ந்தேத்தப்
பொங்குபுனல் தீர்த்தமெனும்
    புனிதமகிழ் வாடியருள்
எங்களையன், சுன்னைமக்கள்
    இருக்கவெனத் தானிருப்போன்
பொங்கும்ஒளிக் கோவிலிலே
    போய்ப்பணிந்தெம் முதல்வனிடம்,
உள்ளிருக்குங் கள்மலங்கள்
    ஊட்டுவெறி வசப்பட்டு,
முள்வினைகள் வயல்விதைத்து,
    முட்காட்டில் வீழ்ந்தலறும்
பரிதாப மானிடவன்
    பழிதீர்ந்தால், பிறவாத
பெருமோட்ச உலகுக்குப்
    பேறீவா னூர்தியினை,
மரணம்வந் தெமைக்கடத்தி
    மறுபிறவித் துயர்தருமுன்,
கருணையுடன் அனுப்பென்றே
    கதறுவதாய்ச் சொல்நிலவே! 61.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிவரும் வெள்ளங்கள்
அருகிலுள்ள குளமேற்க,
வாடிவரும் அகதிகளை
வரவேற்றுத் தான்காத்து,
தேடிவந்து தன்னடியார்
செய்யுதவி காண்சுன்னை
நாடனிடம், பலவூரில்
நண்ணியருள் சாத்தனிடம்,
"மூத்தவர் - தீப் பழிமயமாய்
மூத்தவர்தம் பழிக்கணக்கை
தீய்த்தற்கே குண்டுவகை
திரண்டிங்கே பொழிகையிலே,
காத்திடுவோம் மண்ணையென்று
காளையராம் வஞ்சமற்றுப்
பூத்தபுதுப் பூக்களெல்லாம்
போர்க்களத்தில் சாய்கையிலே,
ஊத்தையர்நம் மூத்தவர்கள்
உணர்ச்சிபெறா நிலைநீளல்
பார்த்திருக்கேன்" என்றதனைப்
பால்நிலவே நினைவூட்டாய்! 62.

வெட்கமென்ன வந்ததென்று
வெண்ணிலவே முகிலாடை
உட்புதைத்தாய் முகம்?செல்க
ஒளிச்சுன்னைச் சுனைக்கோயில்!
புட்கலை,பூ ரணைகேள்வன்
புராணாக மம்பன்னூல்
பெட்புரைக்கும் பேரருளான்,
பிள்ளைவரம் தருவோன்பால்
"புத்திரர்க்காய்த் தானதர்மம்,
புத்திரர்க்காய்ப் பழிதவிர்ப்பு,
புத்திரர்க்காய்த் தியாகங்கள்,
புத்திரர்க்காய்த் தவஜெபங்கள்!
புத்திரரே ஆம்! எம்மைப்
பொருத்துவதால் உன்னடியில்,
புத்திரர்தாம் நரகிற்குப்
போகாமல் எமைக்காப்போர்!
இத்தகைய எங்குருமார்
எனும்சேய்கள் காத்தருள்க!
பத்தியிலே நெகிழ்ந்தடியோம்
பரவுமிதைச் சொல்நிலவே! 63.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊடுருவி அடியர்மனம்!
    உலகங்கள் தமையாள்வோன்!"
பீடுமிந்தப் பொருள்கள்தரும்
    பெயர் "சாஸ்தா" கொண்டவனாம்!
பாடடியார் பண்ணிசையும்,
    பாய்கெண்டைக் குளநீரும்,
கூடி,வயற் பயிர்வளர்க்கும்
    குளிர்சுன்னைப் பதியனிடம்,
"தானின்றி உலகமிலாத்
    தண்ணீரும் பனிப்பாறை
ஆனதெனில் அறுகேனும்
    அங்குமுளை கொள்ளாது!
உன்னருளாம் உயிர்க்குயிரை
    உறையவிட்டுப் புல்தேடித்
தென்னைகளில் திரண்டேறும்
    சிற்றறிவுத் தமிழுலகம்
தன்னையிழுத் தாட்கொள்ளும்
    தண்கருணை புரிமாறுன்
இன்னருளை வேண்டுகின்றோம்!
    இரங்கு!" என்றுஞ் சொல்நிலவே! 64.

உண்டாடும் வானவர்கை
    ஒருகலசந் தவறியதோ?
கொண்டமுதை வருகிறதோ?
    எனுமாறு குனிநிலவே!
குண்டுபொழிந் தூரழிக்கும்
    கொடியவரை வெற்றிகொளச்
செண்டேந்துங் கைச்சாத்தன்
    திகழ்சுன்னை செல்நிலவே!
மாடுகளில் உட்கார்ந்து
    வண்டியினை அடித்தோட்டப்
பாடுபடும் சாரதிபோல்,
    பாமுலகா யதமென்னும்
கேடுமயச் சிந்தையராய்க்
    கிளரான்மி கம்வளர்க்க
ஓடியுல கோருழைக்கும்
    ஒருமடமை யாலின்று
நாடுதொறும் அழுகுரல்கள்!
    நம்பி "எலாம் நீ" என்று
கூடுசர ணாகதியைக்
    கொளஉலகம் அருளச்சொல்! 65.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கெங்கோ இருந்தெல்லாம்
    ஏறிவண்டி, இறங்கிவந்து,
பொங்கலன்ன தானமடும்
    புண்ணியரை, தொண்டர்களைச்
சங்கமங்க ளாய்க்கொண்ட
    தனிக்கருணை அணிமணியன்,
செங்கமலக் கண்ணழகன்
    திருச்சுன்னைப் பதிநண்ணி,
இன்பங்கள் திகட்டிட்ட
    இயலாமை முதுமையிலே
அன்புற்றுன் னடி,தவங்கள்
    ஆற்றுமுது முனிவரிலும்,
தன்பல்கும் பருவத்துத்
    தாகங்கள் நூறு உதறி,
துன்பங்கள், பசி,தாகம்,
    துயிலின்மை யேற்றுயிரும்
தன்பங்காய் விடுதலைக்குத்
    தருகாளைப் பெருமுனிவன்
வென்றிக்கே விரைந்தருள்க!"
    வேண்டல்சொல் வெண்ணிலவே! 68.

மூர்த்தி,தலம், தீர்த்தமிவை
    முறையாகத் தழுவிமிளிர்
கீர்த்திமலி சுன்னைநகர்க்
    கிளர்கோயில் ஆண்டுதோறும்
தீர்த்தத்தை அடுத்துவரும்
    சனிவாரத் திருப்பொங்கல்
நேர்த்தியிலே நிறைவுறுமந்
    நிமலனடி சென்றடைவாய்!
"குடிசைக்குங் கூழுக்குங்
    கூடவழி யில்லைஎனும்
மிடிமைக்குக் காரணமவ்
    வீட்டவளின் விதியென்பர்!
விடிவின்மை தமிழீழ
    வீட்டிற்குள் வாழ்கின்ற
குடிமக்கள் தலைவிதியின்
    கொடுமையினால்! இதையுணர்ந்து
உடன்புனித நெறிபற்றி
    உன்னடியில் சரண்எய்தக்
கொடுஞானம் குடிகளுக்கு!"
    கோரிக்கை இதுவுஞ்சொல்! 67.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமுடுப்பில் கடுநோன்பு
காத்துநாற்பத் தொருநாட்கள்,
குரு,குழுக்க ளுடன்சபரிக்
குன்றேறி வணங்கடியார்
பரவுமையப் பன்வடிவில்
பந்தளத்தில் வருசாத்தன்
கருவண்டல் சுன்னைவயல்
களித்துறையுந் தளிசெல்வாய்!
"என்னைநம்பிப் "பலம்"என்றே
இருக்கின்ற பேதைகளை
உன்னைத்தான் சகலமுமாய்
உணர்ந்துநம்ப வை! நம்பும்
இன்னருளைக் காட்டியிழு!
என்றழுது வேண்டுகிறேன்!
முன்னுரிமை கொடுத்திந்த
முதல்வேண்டல் முடிப்பதனால்
என்னான்ம சுதந்திரத்தைத்
தந்தருள வேண்டுகின்றேன்!"
நன்னிலவே ஐயனடி
நயந்தேத்திச் சொல்லிதனை! 68.

கருணையெனில் கருணைதான்!
காவலெனில் காவல்தான்!
அரியனெனில் அரியன்தான்!
ஐயனெனில் ஐயன்தான்!
உருகிமனம் இவ்வண்ணம்
உவந்தேத்துஞ் சுன்னைநகர்
அரிகரபுத் திரனடியின்
அருள்பாடி நயந்தேத்தி,
நானாறும் நன்னிழலாய்
நானிலத்து மானிடரை,
தேனாறாய்த் தெரிகலைகள்,
சிந்தைகவர் நூல்வகையை,
நாநாடும் உண்டிவகை,
நற்கீர்த்தி, பணிகளினைத்
தானேஎன் பழிகாட்டித்
தந்துவைத்த தின்றுவரை?
பூநாணும் உன்னடியே
புகுந்தாறற் குரிய நிழல்!
நீநாடித் தாஎனக்கு!"
நெடுநிலவே சொல்லிதனை! 69.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் நம்மீழத்
தாயகத்தில் ஊர்களிலே
அமுதமென எழுந்து ,அழுவோர்
அல்லல்கள் தினந்தீர்த்தே
இமையாமல் இருவிழிகள்
எத்தனையோ நூற்றாண்டாய்
எமைக்காக்குங் காவலனின்
இருஞ்சுன்னைத் தளியிறங்கி,
மலஅழுக்கைச் சலவைசெய்ய
மண்ணுலகத் துறைவந்த
மலிசீவ ராசிகளாம்
மாராப்புக் கந்தைகள் நாம்
உலையவிப்பு, உரோஞ்சலடி,
உத்தரிப்பு, வெயிற்சூட்டில்
உலர்வுலைச்சல் அல்லாமல்
உப்பரிகைச் சுகம்வருமா?
நிலையுணர்ந்து சகிக்கின்ற
நெஞ்சுரத்தைப் பெற்றடங்க
உலகுயிர்கள் நாம்தொழுதல்
உத்தமற்குச் சொல்நிலவே! 70.

முந்தையர்நம் மிணுவிலிலும்
முயன்றார்சாத் தன்உனக்கும்
கந்தனருட் சூழலிலே
கட்டிடஓர் கோவில்! உன்
யந்திரத்தை நெற்றியிலே
அகழ்ந்தமைத்த கற்களிற்றால்
உந்தென்தூ துப்பரிசாய்
உணர்த்தினையிவ் வரலாற்றை!
உதித்துதித்தென் னுள்மறையும்
உன்நினைவு நிரந்தரிக்க,
உதித்துதித்தென் னுள்மறையும்
உறுநம்பிக் கைநிலைக்க,
உதித்துதித்தென் னுள்மறையும்
உள்ளுறுதி நிரந்தரிக்க,
உதித்துதித்தென் னுள்மறையும்
உன்னினிமை நிரந்தரிக்க
விதித்தருளி மனச்சாந்தி
விதைத்தருள நிரந்தரமாய்,
துதித்தழுதேன் ஏழை! எனும்
தூதுஞ்சொல் வெண்ணிலவே! 71.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்திவைத்து மூன்றுபட்டை
    நீர்வார்ப்போர் நிதம்பெருகிக்
கீர்த்திதிகழ் கல்யாணைக்
    கிளப்பித்தன் வழிபாடு,
பூர்த்திதர இணுவையிலும்
    புல்லனெனைக் கையாளும்
கூர்த்தஅருட் சுன்னைஐயன்
    குளிரடிக்குத் தொழுதுசொல்லு!
"தாமாகப் பாம்பென்றே
    சங்கரனார் பாம்பணிந்தார்!
பூமாலை என்றன்றோ
    பூண்டோம்நாம் பாம்புகளை?
ஆமாம்! இன் றவைபாம்பென்
    றறிந்தலறி விம்முகின்றோம்!
போமாறு செயப்போனால்
    பொல்லாங்கு தீண்டிவிடும்!
சாமீ! வந் தெமைமீட்பாய்!
    தவிக்கின்றோம்! இடர்நீங்கி
நாமாற அருள்! என்னல்
    நன்னிலவே சொல்லிப்போ! 72.

- தூது முற்றிற்று -

முதற்பதிப்பு :
கருணைநாயகம் - பானுமதி இணையர்
சுன்னாகம் கருணை கல்வி நிலையம் - 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி ~ ஸ்கந்தபுரம்
## கரும்புத் தோட்டம் சித்தி விநாயகர் திருவூஞ்சல்

### காப்பு

தம்பிபெயர்க் கந்தபுரக் கரும்புத் தோட்டச்
சந்தி, வயற் சூழலுக்கே தாய்போ லாகி,
நம்பிவரும் அடியவர்க்கு நாளும் இன்பம்
நல்குசித்தி விநாயகர்மேல் ஊஞ்சல் பாட,
எம்பெருமான் இணுவைச்செக ராச வள்ளல்,
எலிமிசையான் என்னுள்ளே நின்று ஞானச்
செம்பொருள்கள் ஊற்றெழும்ப அருளல் வேண்டி,
சிரந்தாழ்த்தி, கரங்கூப்பி, பணிகின் றேனே! 01.

### நூல்

இழுத்தாளும் பெருங்கருணை வடமொன் றாக,
இழிமலங்கள் அழிகருணை வடமொன் றாக,
பழிச்சேர்க்கை பாற்றுசித்தம் வடமொன் றாக,
பழவமதி மீள்கருணை வடமொன்றாக
உளுப்பறியா நம்பக்தி பீட மாக
உந்தியுந்தி விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்!
கொழுத்தபசுங் கரும்பொலிக்கும் கரும்புத் தோட்டம்
கோவில்கொளுங் குஞ்சரமே! ஆடீர் ஊஞ்சல்! 02.

தும்புருவும், விஞ்சையரும் துதிகள் பாட,
சுருதியுடன் நாரதரும் வீணை மீட்ட,
அம்பிகைகண் ணகிபுரம் தாய் அடைந்து வாழ்த்த,
அரம்பையர்கள் சூழநின்று வடந்தொட்டாட்ட,
நம்பியாண்டான், நக்கீரன், வியாசன், ஔவை
நலந்திகழக் குழைந்தருளீ! ஆடீர் ஊஞ்சல்!
நம்பனருள் நற்களிறே! கரும்புத் தோட்டம்
நண்ணியருள் நாயகனே! ஆடீர் ஊஞ்சல்! 03.

நூலகம் 16

வரம்பெல்லாம் மயிலாடும்,பழனப் பச்சை
வயலெல்லாம் நெல்லடிக்குள் மீன்கள் நீந்தும்
கரும்புவனக் கந்தபுரக் களிற்று வேந்தே!
காட்டில்நரி ஊளையிட, பயிர்கள் காப்போர்
பரணிருந்துன் பதம்புகழும் பாடல் கேட்கும்!
பக்கமெல்லாம் நீரோடை பாயும் சூழல்!
வருந்தடியார் மனத்துயர்கள் மறையும் வண்ணம்
மங்கலமே! வாழ்த்திடவூர் ஆடீர் ஊஞ்சல்! 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடியதேக்கு மரவரிசை நிழல்செய் சாலை
நீள்குடிசை வரிசைபல நீங்கி வந்து,
அடிபரவும் வழமையர்கள், அர்ச்சனைகள்
அபிடேகம், அவிப்பொங்கல், அறுகு, பூக்கள்
தொடை துதித்து நல்கடியார், பிரசங் கிப்போர்
தொழுதுருள்வோர், தொண்டடியார்,பண்ணிசைப்போர்
கொடியசிறைப் பட்டுள்ளம் குலைந்த ழைப்போர்
குறைதீர்க்குங் குஞ்சரமே! ஆடீர் ஊஞ்சல்! 05.

தொந்தி, தும்பிக் கைகுலுங்க ஆடீர் ஊஞ்சல்!
தோள் தடவும் செவிகுழைய ஆடீர் ஊஞ்சல்!
தந்தம், ஒளி மின்னலிட ஆடீர் ஊஞ்சல்!
தந்தவரே பாரதப்பா! ஆடீர் ஊஞ்சல்!
அந்தி, பகல், கங்குலிலும் அணுகி ஏத்தும்
அடியர்துயர் களைந்தருளீ! ஆடீர் ஊஞ்சல்!
சந்திரர், சூ ரியர்தீமுச் சுடரும் தோற்கத்
தகதகக்கும் மேனியரே ஆடீர் ஊஞ்சல்! 06.

அக்காரக் கரும்புவனத் தரசே! வள்ளல்
அகந்தை நீற்றி அறுகுண்டு பசியா றிட்டோய்!
தக்காராய்த் தகவிலரும் திருந்தச் செய்யும்
தரிசனமே! தாய்மனமே! சூழும் மந்தை
முக்கார முழங்கொலியில் குளிர்வோய்! நாளும்
மூவுலகும் நான்மறையும் ஏத்தும் தேவே!
கொக்கோடு கிளி,நாரை,வாத்து மொய்க்கும்
குளிரோடை சூழ்பவரே! ஆடீர் ஊஞ்சல்! 07.

புரமெரித்தான் முதல்மைந்தா! பாம்பாம் சாபம்
போக்கியவா மாலிற்கு! முருகன், வள்ளி
விரும்புமணம் புணர்த்தியவா! எலியாய் மாற்றி,
மேவியவா கஜமுகனாம் அசுரன் மீது!
அரும்பு,மலர் மழைகளிலே உன்னை ஆட்டி
அடியவர்கள் மகிழ்ந்தாட்ட ஆடீர் ஊஞ்சல்!
சுரும்பிசைக்கும் மதுக்கமல மலர்கள் மண்டும்
சுனைமலிந்த வன்னியரே! ஆடீர் ஊஞ்சல்! 08.

சிறைப்பட்டோம்! பிரபஞ்சச்சிறைநாம் நீங்கத்
திகழ்சித்தி விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்!
சிறைப்பட்டோம் முன்பிறவிப் பாவம் தம்முள்!
சிறைநீங்கக் கற்பகமே! ஆடீர் ஊஞ்சல்!
சிறைப்பட்டோம் இச்சைகளாம் வலைக்குள்! அந்தச்
சிறைமீட்டுக் காக்கஎமை ஆடீர் ஊஞ்சல்!
முறைப்பட்டோம் முழுமுதலே! முருகன் பேரூர்
முன்னவனே! முறைசெய்தே ஆடீர் ஊஞ்சல்! 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிவெல்லம், சீனியெனக் கரும்பை ஆக்கும்
கந்தபுரங் களித்தமருங் கணநா தையா!
சட்டியுடன் சதுர்த்தி,வெள்ளி வாரந்தோறும்
சாந்தகில்சந் தனவாசம் கமழும் பூசை,
விட்டகலா விரதிகளின் கீதம், நாதம்,
விளக்கொளிகள், வீதியுலாப் பொலிவு காண்போய்!
பட்டதுயர் போதும்!எங்கள் பாவம் தீரப்
பண்ணவனே! விண்ணவனே! ஆடீ ரூஞ்சல்! 10.

ஏனின்னும் பயமென்றெம் சேய்கள் ஏற்றே
இடர் நீக்கிக் காத்தருள்வீர் ஆடி ரூஞ்சல்!
"நான்" என்போர் ஈங்கில்லை! ஆடீ ரூஞ்சல்!
நாவாம் நம் நெஞ்சில்நீ இனிக்கும் இன்பத்
தேனென்பார் வடம்பற்றி ஆட்டு கின்றார்!
செங்கரும்புள் செங்கரும்பே! ஆடீ ரூஞ்சல்!
வானொன்றே வேண்டுபவர் வான்கண் டோங்க
வாதாபிக் கணபதியே! ஆடீர் ஊஞ்சல்! 11.

வாழி

உன்காலே சாந்திதரும் புகல்என் ஞானம்
உட்புகுந்து நெஞ்சில்எக் கணமும் வாழி!
துன்பீனும் உலகின்பம் துறப்போர் வாழி!
சுயகுற்றம் தேடியழி தூயோர் வாழி!
இன்பீனும் இறைநம்பும் எம்மார்க்க கத்தான்
என்றாலும் வாழி!நெஞ்சில் ஈரம், திண்மை
அன்புடையார் மயமாகி அகிலம் வாழி!
ஆண்டவன்தாள் பாடுந்தமிழ், சைவம் வாழி! 12.

எச்சரிக்கை

காவிரியைத் தந்தருளக் காக்கையுருக் கொண்டவா!
ஆவினப்பால், நெய்தயிரில் ஆடியே எச்சரிக்கை!
மேவடியார் அந்தரங்க வெந்துயர்கள் தீர்ப்பவா!
பாவியிலக் கணசுந்தரி பரவினோய் எச்சரிக்கை! 13.

மஞ்சளிலும், சாணியிலும் வந்தருளைப் பொழிபவா!
நெஞ்சுள்நினை தோறும்சாந்தி நீட்டுவாய் எச்சரிக்கை!
பஞ்சமுகப் பரம்பொருளே! பண்ணவனே வல்லபை
வஞ்சியணை வாதாபியில் குஞ்சரா எச்சரிக்கை! 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பராக்கு

உச்சிமலைத் திருச்சியமர் ஒண்ணுதால் பாரக்கு!
கச்சுதர பந்தனம்அ ராகொண்டாய் பராக்கு!
இச்சைமனம் இடித்தடக்கும் இனியனே பாரக்கு!
விச்சையர்கள் வேண்டும்முதல் ஈசனே! பராக்கு! 15.

### லாலி

ஈச லாலி! அன்பர் நேச லாலி! - எங்கள்
ஏக்கமெல்லாம் தீர்க்கும் கணநாத லாலி!
ராச லாலி! கையிற் பாச லாலி! - தொண்டர்
இன்னல் எல்லாம் தீர்க்கும் ஏழை பங்கலாலி! 16.

பங்க லாலி! ஒற்றைத் தந்தலாலி - இந்தப்
பார்,அண்டங்கள் தொந்திபொதி அங்கலாலி!
அங்க லாலி கட்டித் தங்க லாலி - வையம்
எங்கும் இங்கும் இன்பஅருள் பெய்கலாலி! 17.

### ஜெயமங்களம்

பாரமேற்கும் பண்ணவற்கு ஜெயமங்களம்!
பரிந்து காக்கும் பழையருக்கு ஜெயமங்களம்!
வீரவிடு தலைமுதற்கு ஜெயமங்களம்!
விக்கின விநாயகற்கு ஜெயமங்களம்!
காரியங்கை கூட்டுநற்கு ஜெயமங்களம்!
கடுவினைவே றறுப்பவற்கு ஜெயமங்களம்!
ஆரமணி மார்பனுக்கு ஜெயமங்களம்!
அங்குசபா சன்அடிக்கு ஜெயமங்களம்! 18.

- மங்களம் -

- முதற்பதிப்பு :
ப. செங்கோடன், ப. வெண்ணிலா, இணுவில் - 1999





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி ஸ்கந்தபுரம்
# கண்ணகிபுரம் நாகதம்பிரான் சுவாமி திருவூஞ்சல்

## காப்பு

கண்ணகி புரத்தமர்ந்து கந்த வேள்வாழ்
கந்தபுரத் தார்க்குஞ் செழுங் கருணை செய்யும்
வெண்ணிலவுப் பிறைமுடியன், கொன்றை, கங்கை
வேணிநாக தம்பிரான்மேல் ஊஞ்சல் பாட,
உண்ணெகிழும் மெய்யன்பை, ஒளிர்ஞா னத்தை
உருண்டேத்தென் ஓங்கிணுவைச் சேகரா சையப்
பண்ணவனே! சிறைமீட்போய்! பரிந்தே நல்கிப்
பக்திவெள்ளம் பரப்ப, அடிபரவி நின்றேன்! 01.

## நூல்

குடியேற்றம் கந்தபுரம், அக்க ராயன்
குளமெழுந்த ஆதியிலே, குடிவந் தோரில்
அடியவர்தை யல்முத்துச் சாமி யம்மா,
அரும்பக்தர் கந்தையா நெஞ்சில் பூத்துக்
கொடும் நாகம் மிகுந்துலவும் குறைகள் தீர்த்துக்
குளிர்ந்தருள, நாகமுறை வெள்ளெ ருக்கின்
அடியமர்ந்த அருள்நாக தம்பி ரானே!
அற்புதமே! சிற்சபையீர்! ஆடீர் ஊஞ்சல்! 02.

நெடுஞ்சடையில் மன்னுபிறை நிலவுக் கீற்றும்,
நெற்றிவிழி நீட்டுகதிர்க் கிரணந் தாமும்
வடங்களென, இரட்சியருள் விட்ட மாக,
வார்த்தபிர பஞ்சநெறி பீடமாக,
கடுமுழைப்பால் காடழித்து நாடு நல்கும்
கவின்வன்னித் தோள்களிலே பலமாய்ப் பூத்த
படஅரவம் அணிநாக தம்பி ரானே!
பார்வதித்தா யோடினிதே ஆடீர் ஊஞ்சல்! 03.

சோழரது தொல்லாட்சி வன்னி எங்கும்
சுடர்விட்ட பழம்பெருமைச் சின்னம் யாவும்
சூழவுள்ள பிரதேசம் சுடர்ந்து மீள,
துன்னுசந்தை, நீரோடை, கடைகள், சந்தி
வேளையெல்லாம் வந்து செல்வோர் வரங்கள் கேட்கும்
விண்ணவனே! வெண்ணீற்றுள் பவளச் செம்மை
மூளுந்திரு மேனியரே! ஆடீர் ஊஞ்சல்!
முதிர்கண்ண கைபுரத்தீர்! ஆடீர் ஊஞ்சல்! 04.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்க்காய் நஞ்சுண்டீர்! புண்சு மந்தீர்,
திருமேனி தனில்பிட்டு வாணிச் சிக்காய்!
மூவருமாய், முதல்வனுமாய், முக்கண் ணோனாய்,
முப்புரங்கள் எரித்தவனாய், வேதஞ் சொன்ன
பாவலனாய், பன்றிச்சேய் தாயும் ஆனீர்!
பரிகரிக்கும் மகப்பேற்றில் அன்னை யானீர்!
சேவடிக்கே அடைக்கலம் நாம்! ஆடீர் ஊஞ்சல்!
திகழ்நாக தம்பிரானே! ஆடீர் ஊஞ்சல்! 05.

வெள்ளெருக்கின் அடிக்கல்லாய் வீற்றிருந்து,
வில்வளைவுத் தகரத்தில் கூரை பெற்று,
மெள்ளவொரு கீற்றுமனை மேவி, பின்னர்
மிளிருங்கற் தளித்தன்னில், சிவலிங் கத்தின்
ஒள்ளுருவம் பெற்றினிய குடமு முக்கும்
உவந்தானி உத்தரத்தில், உலகம் வாழ்த்தும்
வள்ளலுமாய் வளர்நாக தம்பிரானே!
மனங்குளிர நாம்காண ஆடீர் ஊஞ்சல்! 06.

கயிலையுறை முத்தர்தம் கணங்கள் வந்தார்!
கண்ணிமைக்காத் தேவர்களும் களித்தே வந்தார்!
புயல்வண்ணன், பூமேலோன், விஞ்சை யர்கள்,
பூத்தூவ ரம்பையர்கள், வீணை மீட்ட
நயமாய்நா ரதன், பாடத் தும்பு ருப்பேர்
ஞானியனும் வந்தார்கள்! அருள்வெள் ளத்தின்
மயமாக நாமும் சிறீ நாக தேவா!
மண்ணுலகோர் இடர் நீங்க ஆடீ ரூஞ்சல்! 07.

தினப்பூசை, தைப்பூசம், சித்தி ரைக்கண்
சித்திரகுப் தன்கதைசொல் பௌர்ண மீஇநாள்
தனிற்பூசை,திருவெம்பா வை,வி ழாக்கள்
சாலடியார் நிகழ்த்திடவே பரிவா ரந்தான்
வினைதீர்க்கும் விநாயகனாய் வீதித் தாங்கி,
மேய்ந்துவரும் மந்தையொலி, சந்தை ஓசை,
கனலுங்கர்ப் பூரவொளிக் களிக்குங் கீர்த்திக்
கண்ணகிபு ரத்தீசா! ஆடீர் ஊஞ்சல்! 08.

பவத்துயரம் பாற்றிடென்று பரவும் மூத்தோர்,
பாக்கியந்தா செல்வமென வேண்டும் பெற்றோர்,
நவக்கிரகக் குறைகளினை நலிக்கக் கேட்போர்,
நல்குமகப் பேறென்று நண்ணு வோர்கள்,
தவிர்த்திடு நோய் தாள்களிலே சரணம் என்போர்
சாலும் பூசை அர்ச்சனைகள் தம்மை ஏற்கும்
சிவதெட்ச ணாமூர்த்தீ ஆடீ ரூஞ்சல்!
செந்தமிழர் துயர்தீர்த்தே ஆடீர் ஊஞ்சல்! 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமதக னஞ்செய்தீர் ஆடீ ரூஞ்சல்!
காலாற்கா லனையுதைத்தீர் ஆடீர் ஊஞ்சல்!
சாமகா னம்விரும்பீ ஆடீர் ஊஞ்சல்!
சங்கரனே! சுந்தரனே! ஆடீர் ஊஞ்சல்!
மாமனென வள்ளிதெய்வ யானை ஏத்தும்
மாதவனே! மங்கையொரு பங்கா! உன்றன்
நாமம்நம சிவாயவென நாங்கள் ஏத்தும்
நாகதம்பி ரான்சிவனே! ஆடீர் ஊஞ்சல்! 10.

நாகங்கள் குறைந்தகல இங்கே வந்தீர்!
நாற்புறமும் கோவிலெழ இங்கே வந்தீர்!
சோகங்கள் தமைத் தடுக்க இங்கே வந்தீர்!
தூயசிவ நெறிதழைக்க இங்கே வந்தீர்!
மேகங்கள் மாரிபெய இங்கே வந்தீர்!
விண்ணவரின் கால்கள்பட இங்கே வந்தீர்!
யாகங்கள் புகைகமழ இங்கே வந்தீர்!
அருள்நாக தம்பிரானே! ஆடீர் ஊஞ்சல்! 11.

வாழி

உயிர்க்கெல்லாம் உயிர்நீயென் ஞானம் வாழி!
உன்தாளே சரண்புகுவோர் ஓங்கி வாழி!
அயனுற்ற சிறைநீங்கு வித்தாய் வாழி!
ஐந்தொழிலால் அவனிநடப் பிப்பாய் வாழி!
அயல்தொல்லை அகன்றுதமிழ் ஈழம் வாழி!
அம்பிகையுந் தொழுதடைந்த அரனே வாழி!
இயற்கையிந்த வன்னிக்குச் செழுமை கூட்ட
இறைநாக தம்பிரானீர் வாழி! வாழி! 12.

எச்சரிக்கை

அவமதித்த தக்கன் யாகம் அழிவித்தாய் எச்சரீக்கை!
அயனோர் தலை கிள்ளுவித் தடக்கினாய் எச்சரீக்கை!
அவுணர்குலம் அழிக்க மைந்தன் அளித்தவா எச்சரீக்கை!
ஐயனார்ச்சேய், மாலைப்புல்லி அளித்தவா எச்சரீக்கை!
சவமயானச் சாம்பல்பூசி ஆடினாய் எச்சரீக்கை!
தாங்கிமண்டை ஓடுபிச்சை தண்டினாய் எச்சரீக்கை!
சிவனிராவில் இங்கெம்பூசைச் சிலிர்ப்பவா எச்சரீக்கை!
தினமடியார் பொங்கல் பூசைத் திளைப்பவா எச்சரீக்கை!
13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பராக்கு

நெற்றிவிழி நின்மலனே! நித்தியா பராக்கு!
சிற்றம்பலம் திகழ்நடனம் ஆடியே பராக்கு!
நற்றவர்க்குள் ஞானமாக நண்ணுவாய் பராக்கு!
பற்றிக்கால்கள், அழுபவர்க்குப் பரிபவா பராக்கு!

### லாலி

யோகி லாலி,சிவ லோகி லாலி - இந்த
    உலகுமுதற் கண்டவிடை பாக லாலி!
மாக லாலி, மங்கைபாக லாலி - மூன்று
    மாற்புரம் எரித்த நல்வி யூக லாலி 15.

யூக லாலி,சிவ போக லாலி - ரிசி
    உத்தமர்தம் கண்ணின் நெஞ்சின் மோக லாலி!
மோக லாலி! செக்கர்த்தேக லாலி - வன்னி
    முந்துபுகழ் மீட்கும்முடி நாக லாலி! 16.

### ஜெயமங்களம்

பைந்தமிழிற் பாடினாற்கு ஜெயமங்களம்!
    பாடுதமிழ் என்றவர்க்கு ஜெயமங்களம்!
தந்தவற்குப் பாசுபதம் ஜெயமங்களம்!
    சாம்பவி மணாளனுக்கு ஜெயமங்களம்!
கந்தன் சீடன் ஆனவற்கு ஜெயமங்களம்!
    கண்ணகிபு ரத்தவற்கு ஜெயமங்களம்!
தந்த முகன் தந்தையற்கு ஜெயமங்களம்!
    சாமிநாக தம்பிராற்கு ஜெயமங்களம்!

முதற்பதிப்பு :
ப. வேழத்தெழிலன், ப. செங்கோடன்
இணுவில் - 1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

விதிவசமான இன்னல்கள் சூழும்போது, ஆண்டவன் அடிகளை இறுகப்பிடித்துக் கதறி, அழுதேத்தி, நேர்த்திகள் வைத்து, வரங்கேட்டுப் பெற்று, மகிழ்ந்து நேர்த்திகளை நிறைவேற்றுவர் அடியவர்கள்.

இடர்வர இருக்கும் வேளையில் அடியவர் சிலரை இறைவன் தன்பணியொன்றில் தாமறியாமலே ஈடுபடவைத்து, அவ்வூழியத்தைக் கூலியாக ஏற்று, அவ்விடரைத் தவிர்த்துக் காப்பதுமுண்டு. அவ்வற்புதக் கருணைகண்டு அடியவர் நெஞ்சம், மெய்சிலிர்க்க வைப்பதுமுண்டு. வந்தபின் நீக்கு வதிலும் மேலாய், அவ்வாறு வருமுன் தடுத்துக் காக்கும் கண்ணன் கருணைச் செயலின் அற்புதத்தில் மலர்ந்து வெளி-வருவது இந்தத் திருவூஞ்சற்பா நூல்.

இந்நூலை விற்றுவரும் பணத்தைக் கந்தபுரக் கண்ண பிரானின் எழுந்தருளி ஆக்கத் திருப்பணி நிதிக்கு அந்தப் பெருமான் திருவருள் வழங்குவிக்கிறது. என்பிள்ளைகளை, உயிர்காத்து, உய்வித்து என் உள்ளம் உணர்வெல்லாம் உருக்கிய கண்ணபிரான் திருவருள் அவன் அடியவர் அனை வருக்கும் கிடைக்கவைக்க இந்தச் சிறுநூல் வழிவகுக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்!

கோவிந்தா சரணம்! கோபாலா சரணம்!

ஸ்கந்தபுரம், கிளிநொச்சி. இங்ஙனம்,

01. 12. 1998 **ச. வே. பஞ்சாட்சரம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# கிளிநொச்சி
# ஸ்கந்தபுரம் கண்ணபிரான் திருவூஞ்சல்

## காப்பு

வன்னிவயற் கந்தபுரம் வீற்றிருந்து,
மணியன் குளம் பின்னரங்கில் அலைகள் வீச,
துன்னுகுடி சூழ்ந்திருந்து தொழுதொண்டாற்ற,
துவாரகையாய் அருளாட்சி தொடருங் கண்ணன்
உன்னியுன்னி ஆடுஞ்சல் ஒயில்கள் பாட
ஓங்கிணுவைச் செகராச வேழன்நின்று
என்னுள்ளே இன்பவேணு கானம் போல
இசைக்கப்பா! இரண்டுசப்பைக் காலுங் காக்க! 01.

## நூல்

அவனியறம் காக்கும்அருள் விட்ட மாக,
அருமறைகள் நான்கும் ஒளி வடங்களாக,
தவழுந்திரைப் பாலாழிப் பாம்புப் பள்ளி
தங்கமணிப் பீடமென, செல்வ மங்கைச்
சிவப்பியுடன், நீலவண்ணன் மஞ்சட் பட்டு,
திகழ் பச்சைத் துளசிமின்ன ஆடீர் ஊஞ்சல்!
நவநீதக் கந்தபுரா! ஆடீர் ஊஞ்சல்!
நாரணனே! பூரணனே! ஆடீர் ஊஞ்சல்! 02.

வசுதேவர், தேவகிதம் பெற்ற மைந்தா!
மந்தைமலி கோகுலத்து நந்த கோபர்
இசைமனைவி யசோதரைதன் தத்துமைந்தா!
இடைச்சிறுவர் தொழுந்தோழா! குடிசை தோறும்
பசுவெண்ணெய் உறிதிருடீ! கோபியர்கள்
பரவசப்பட் டணைகண்ணா! ஆடீர் ஊஞ்சல்!
திசைகள் தொழுங் கந்தபுரக் கண்ணா! செந்தாள்
செங்கை,செங் கண்கஊானே! ஆடீர் ஊஞ்சல்! 03.

ஐங்கரன்,சந் தானகோ பாலன் தம்மை
அம்பிகையை, வைரவர்,நல் லாஞ்ச நேயர்
தங்களினைப் பரிவார மூர்த்தம் தாமாய்த்
தங்கவைக்கும் சாரங்கா! ஆடீர் ஊஞ்சல்!
எங்கிருந்தே ஏத்திடினும் அங்கே நண்ணி
இடர்தீர்த்துக் காப்பவரே! ஆடீர் ஊஞ்சல்!
சங்கினொடு சக்கரமும், கருடாழ் வாரும்
சார்மணியன் குளத்தரசே! ஆடீர் ஊஞ்சல்! 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகுண்டம், திருப்பதி, துவாரகை, தொல்
வல்லிபுரம், வண்ணை, பொன்னாலை தம்மில்
வைகரங்கா! ஆய்ச்சியர்தம் குரவை நாதா!
மறிகளஞ்ச மீன்துள்ளும் வாய்க்கால் பல்கும்
பொய்கை மலி கந்தபுர மயில்க ளூரில்
பூத்தநீலப் பொன்மலரே! முழந்தாள் நின்று,
செய்யடியார் ஆயிரம்பூப் பூசையேற்றுத்
தினம்வரம்நல் கருட்கடலே! ஆடீர் ஊஞ்சல்! 05.

அமரர் வலு அமிழ்துண்ண ஆமை யானீர்!
ஆழியடிப் பூமிமீட்கப் பன்றி யானீர்!
சுமைதீர்க்கப் பூமிக்கு, கண்ண னானீர்!
துணைவந்த பலராமன் தானு மானீர்!
உமைக்காட்ட வாமனனாய் உலக ளந்தீர்!
ஒழித்தரக்கர் நரர்க்காக்க ராம னானீர்!
எமைஉய்ய வைக்கவென்றிவ் வூரமர்ந்தீர்!
எழிற்கந்த புரத்தரசே! ஆடீர் ஊஞ்சல்! 06.

திமிரரசர் குலந்திருத்தும் பரசு ராமர்,
தெய்வநிந்தை இரணியன்கொல் நரசிங் கர்போல்,
அமரர்,அந் தணர்,முனிவர், அறங்கள் வாழ
அவதாரம் முன்னெடுத்தீர்! ஆடீர் ஊஞ்சல்!
நமைநாமே புடஞ்செய்ய உன்றன் நாமம்
"நாராய ணா"என்று நாளுஞ் செப்ப,
இமயம்நேர் மலம், வினைகள் எறும்பாய்த் தேயும்
என்றேனும் அடிசேர்ந்தோம்! ஆடீர் ஊஞ்சல்! 07.

மடுவிருந்து, வழிச்செல்லும் ஆயர்த் தீண்டி,
மடிவித்த காளிங்கன் பாம்பின் உச்சிப்
படம்நின்று நடமாடிப் பணியச் செய்து
பாதையிடர் தீர்த்தகண்ணா! ஆடீர் ஊஞ்சல்!
திடலமைந்த கந்தபுரக் கோவில்தன்னை
திருவரங்கம், மதுராவாய்க் கொண்ட மர்ந்தும்
அடியவருக்கு அருள் வழங்கும் ஆயர் கோவே!
அராப்பள்ளி அறிதுயிலீர் ஆடீர் ஊஞ்சல்! 08.

படைகேட்ட கௌரவர்க்குப் படையைத் தந்து,
பரந்தாமன் உனைக்கேட்ட பாண்ட வர்க்குத்
தடையின்றி உனைத்தந்து, பார தப்போர்
தனில் பாண்ட வர்வெல்ல வைத்த கண்ணா!
கடவுள்தான் வேண்டுமெனத் தமிழர் நாமும்
கண்பெற்றே, கெடுபிடிகள், கொலைகள் எல்லாம்
கடந்துநிமிர் வெற்றிபெறக் காப்பாய் ஐயா!
கார்வண்ணா! கண்ணபுரா! ஆடீர் ஊஞ்சல்! 09.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதஇசை வேய்ங்குழலால் நெஞ்சில் எல்லாம்
அலையெழும்ப, கந்தபுரம் அமருங் கண்ணா!
ஜமுனைநதி, ராதை, இளங் கோபி யர்கள்
சரசங்கள் மறந்திங்கே வாழ்வோய் நாளும்!
எமதிடர்கள் பஞ்சம்,பசி அச்சம் நீங்கி
எல்லாமே இன்பமென ஆடீர் ஊஞ்சல்!
குமுறுபுனல் மணியன்குள மருங்க மர்ந்தோய்!
குளிர்தென்றல் தொடமேனி ஆடீ ரூஞ்சல்! 10.

உன்மணியங் குளகட்டின் கீழூர் தன்னில்
உறைகின்றான் சிவன் - உன்தம் மைந்தன் சாத்தன்!
தென்புறத்தில் காட்டமன்! வடக்குத் திக்கில்
திகழ்கின்றாள் துர்க்கைத்தாய்! தொலைவில் உன்றன்
முன்னமர்ந்தார் நடனமுத்து மாரி, வேழன்,
முருகன், நாக தம்பிரானும்! இன்னும் இன்னும்
உன்சுற்றம் பலர்தளிகள் சூழுங் கண்ணா!
ஊரொன்று கூடியேத்த ஆடீர் ஊஞ்சல்! 11.

## வாழி

ஊட்டுகுளம் நிறைமழைகள் மாரி வாழி!
உண்டிவளம், ஓகைவளம், அறங்கள் வாழி!
மேட்டு நில உளுந்து,சாமைப் பயிர்கள் வாழி!
மேவிவயல் நெல்லுன்பச்சை வண்ணம் வாழி!
மாட்டுமந்தை, ஆட்டுமந்தை வளங்கள் வாழி!
வாழை,பலா, மாவின்,தென்னம் பொழில்கள் வாழி!
ஈட்டுதற்காம் செல்வம்உன்றன் அருளே என்னும்
இறுக்கசிந்தைத் தெளிவுமாந்தர் எவர்க்கும் வாழி! 12.

## எச்சரிக்கை

பாஞ்சசைனி யம்முழங்கீ! பார்த்தனுக்குச் சாரதீ!
பாதகப்பூ தனையைக் கொன்ற பாலாகா! எச் சரீக்கை!
ஆஞ்சநேய ருக்குத்தெய்வம், ஐயனாருக்கு அன்னையாய்,
அழகுவேலன் மாமனாக அருளினாய்!எச் சரீக்கை! 13.

ஓலைக் கொட்டில் தன்னில் உதித்தும், அற்புதங்கள் செய்ததால்
ஓங்கிப்பெரிய கோவிலின்று ஆள்பவா!எச் சரீக்கை!
காலக் கொடுமை விரட்டக்கந்த புரத்தில்வந்து ஒதுங்கியோர்
காவடிகள், பூசைகளால் களித்தவா!எச் சரீக்கை! 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பராக்கு

மரமுதிரைத் தலவிருட்சம் கொண்டவா! பராக்கு!
மஞ்சள்மலர் ஆவரைகள் சூழ்பவா! பராக்கு!
அருகில்,மலர் மடுக்களுந்தான் அமைந்தவா! பராக்கு!
அழகு வண்ண நெடியமணிக் கோபுரா! பராக்கு! 15.

கண்ணன்தூது, கவம்,ஊஞ்சல் நூல்களாய்! பராக்கு!
கவியரங்கம், பட்டிமன்றம் களிப்பவா! பராக்கு!
பண்ணினிக்கும் பசனைநாளும் பருகுவாய்! பராக்கு!
பழவடியார் பாலன்தொண்டு சூடுவாய்! பராக்கு! 16.

### லாலி

நீல! லாலி! திரு மால! லாலி - மலை
நீலி அண்ணா! வாலையர்சூழ் கோல!லாலி!
சீலலாலி! கோஒ பால!லாலி! - பாம்பின்
மேல லாலி! பண்ணி லீலைலாலி! 17.

கண்ண லாலி! மணிவண்ண லாலி - நெஞ்சில்
எண்ண எண்ண இன்பநடம் எய்தி லாலி!
விண்ண லாலி! வெண்ணெய் உண்ணிலாலி! - கடைக்
கண்ணிலாலி! விரும் புண்ணி லாலி! 18.

### ஜெயமங்களம்

கந்தபுரம் ஊரினாற்கு ஜெயமங்களம்!
கண்ணபுரம் கோவிலாற்கு ஜெயமங்களம்!
தந்துபுகல் காப்பவற்கு ஜெயமங்களம்!
சால்கருட வாகனற்கு ஜெயமங்களம்!
சந்ததிகள் மீப்பவற்கு ஜெயமங்களம்!
சக்கரம்,கை யேந்தினாற்கு ஜெயமங்களம்!
அந்தரம்த ணிப்பவற்கு ஜெயமங்களம்!
ஆயர்பாடி இன்னுயிர்க்கு ஜெயமங்களம்! 19.

- முதற்பதிப்பு :
இணுவில் பொன்னெழுத்துப் பதிப்பகம் - 1998.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# கிளி ~ ஸ்கந்தபுரம் (காட்டம்மன்) முத்துமாரி அம்மன் திருவூஞ்சல்

காப்பு

அந்தரியாய், அகிலாண்ட அன்னை யாக,
    ஆதிமுழு முதலாக அவனி ஆள்வாள்!
கந்தபுரம் திட்டமிரண் டினிலே தங்கிக்
    கருணைமழை பொழிமுத்து மாரியம்மன்
சுந்தரமாய்ச் சுகித்தாடும் ஊஞ்சல் பாடத்
    தொல்லிணுவைப் பதிமேற்கிற் தும்பிக் கையன்
தொந்தி,சப்பைக் காலழகன் நெஞ்சில் நிற்கத்
    தொழுதேத்தி நிற்கின்றேன்! கழல்கள் காக்க! 01.

நூல்

நால்வேதம் நாலூஞ்சல் வடங்க ளாக,
    நல்லருளே பீடமதாய், நானி லத்தோம்
பால் பொங்கும் பெருங்கருணை விட்டமாகப்
    பாரடியார், வானமரர் மகிழ்ந்து வாழ்த்த,
சால்சுவைமந் தரகீதம் வீணை தன்னில்
    தந்துநிற்க நாரதர்,தும் புருவும்,வன்னி
கால் பணியுங் கந்தபுர முத்து மாரீ!
    கருணையொளி எழில் பொங்க ஆடீரூஞ்சல்! 02.

வரங்கேட்டுப் பெற்றவரும் மகிழ்ந்து வாழ்த்த,
    வரங்கேட்க வந்தவரும் வணங்கி ஏத்த,
இரங்கு நெஞ்சம் இருவிழியில் சுனைகள் காட்ட,
    இடைதவழும் மேகலையும் மின்னல் காட்ட,
மரங்கள்தொறும் வண்கிளிகள், குயில்கள் ஏத்த
    மண்டபங்கள், வீதியெலாம் பக்தர் ஆர்க்க
இருந்து,கந்த புரங்காக்கும் முத்து மாரீ!
    எம்மன்னை எழில்பொங்க ஆடீர் ஊஞ்சல்! 03.

நீர்வளமும், நிலவளமும் நித்தம் ஓங்கி,
    நெல்வளமும், நிமிர்தெங்கு வளமும் ஓங்கி,
மோர்,தயிர்,நெய் முதற்பால்பெய் பசுக்கள் பட்டி,
    முண்டியிடித் தியங்கிடுஞ் செம்மறிகள் பட்டி,
ஊர்நிறைந்துன் னருள்நிறைவை உயர்த்திக் காட்ட,
    உத்தமியே! கந்தபுரம் திட்டம் ரண்டின்
கார்முகிலே கற்பகமே! ஆடீர் ஊஞ்சல்!
    கண்ணகியே! கனங்குழையே! ஆடீர் ஊஞ்சல்! 04.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைகள் ஊற்றானீர்! பிரபஞ் சத்தில்
பரிணமிப்பீர் பரிமளிப்பீர் ஆடீர் ஊஞ்சல்!
வெல்படைகள் தொழுந்துர்க்கா தேவி ஆனீர்!
விரும்புசுக போகங்கள் தருந்தா யானீர்!
வல்வினைகள் வேரறுக்கும் வல்லியானீர்!
மறக்கருணை, அறக்கருணை இரண்டுமானீர்!
தொல் புகழார் நகர்க்கந்த புரத்தில் வாழும்
சுடர்முத்தே! மாரியம்மா! ஆடீ ரூஞ்சல்! 05.

மாலினிய தங்கையளே! ஆடீர் ஊஞ்சல்!
மழவிடையன் மகிழ்துணையே ஆடீர் ஊஞ்சல்!
வேலனுக்கு வேல்தந்தீர் ஆடீர் ஊஞ்சல்!
வேழமுகன் வேண்டுமன்னை ஆடீர் ஊஞ்சல்!
பாலைநிழல் சூழ்ந்தகந்த புரத்தில் தங்கிப்
பல்வளமும் அருள்பவரே ஆடீர் ஊஞ்சல்!
கோலமலர் மாரியிடை நாளும் ஆடும்
கோமளமே முத்துமாரீ! ஆடீர் ஊஞ்சல்! 06.

தாலிதந்து, தக்கமணிப் புதல்வர் தந்து,
சாந்திதந்து, தாள்நினைப்பில் இனிமை தந்து,
நூலெடுக்கா தே,நூறு ஞானம் தந்து,
நோய்,பிணிகள் மிடியணுகாவலிமை தந்து,
தூலமுமாய், சூக்குமமு மாய்,முன் வந்து,
சொக்கவைக்கும் முத்துமாரி! ஆடீர் ஊஞ்சல்!
நாலுதொலை ஊரவரும் நண்ணி ஏத்தும்
நம்முத்து மாரியம்மா! ஆடீர் ஊஞ்சல்! 07.

மலைமகளும், அலைமகளும் நீரே யானீர்!
வாணி - கலை மகளும்தான் நீரேயானீர்!
அலையலையாய் அடியவர்கள் அணுகியேத்த
அரும்பொங்கல், வடைமாலை, படையல் நல்க,
சிலையாகாச் சிலையான தேவி யாகத்
திகழ்கந்த புரந்தனிலி ரண்டாந் திட்டம்
குலவன்னாய்! கூர்த்தஅருள் முத்து மாரீ!
குங்குமமே! மங்கலமே! ஆடீர் ஊஞ்சல்! 08.

நாரணியே! நாயகியே அடியர் நெஞ்சம்
நண்ணிநின்று காப்பவளே! மகிடன் நாச
காரணியே! காசி,காஞ்சி, மதுரை தம்மில்
கைம்மலர்கள் சென்னிகள்மேல் காடாய்க் காண்பீர்!
தாரணியே! சங்கரியே நவரா இற்கண்
சந்தனகுங் குமம், தூப தீபம் ஏற்பீர்!
ஊரடியார், உயர்தேவ மாதர் சூழும்
ஒண்கந்த புரத்தரசீ! ஆடீர் ஊஞ்சல்! 09.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதணியை நிலவாக்கிப் பட்டர்க் காத்தீர்!
    கடல் கடந்து கம்பரெழில் மகனைக் காத்தீர்!
நாதளைந்து குமரகுரு பரர் பாப் பாட
    நல்கருளீர்! நம்படியார் சிறைமீள் விப்பீர்!
நாதனுண்ட நஞ்சுகண்டம் நண்ணக் காத்தீர்!
    நம்பனுடற் பங்கினரே ஆடீ ரூஞ்சல்!
பூதமெல்லாம் பொலிபவரே எங்கள் கந்த
    புரமுத்து மாரியம்மா! ஆடீர் ஊஞ்சல்! 10.

மால்சாபப் பாம்புருவங் கொள்ள வைத்தீர்!
    மழைதருவீர்! நீலவண்ணம், பச்சை வண்ணம்
சால்சிவந்த வடிவங்கள் தாங்கும் அன்னாய்!
    தக்கனுக்கு மகளாகப் பிறந்தோய்! மண்ணின்
மேல்வந்த மேலவளே! நாச்சி! ஆச்சி!
    விஞ்சுமணக் கூந்தலினீர்! ஆடீ ரூஞ்சல்!
சேல்துள்ளும் நீர்க்குளங்கள் சூழுங் கந்தன்
    திருநகரில் முத்துமாரீ! ஆடீ ரூஞ்சல்! 11.

### வாழி

கந்தபுரம் களிக்கும் முத்து மாரி வாழி!
    கைதொழும்நம் குடிகளெல்லாம் நிலைத்து வாழி!
செந்தமிழுஞ் சிவநெறியுந் திகழ்ந்து வாழி!
    தெய்விகத்தை ஊட்டுமின்பக் கலைகள் வாழி!
அந்தணர்கள், அருள்நெஞ்சர் வாழி! வாழி!
    ஆவினங்கள், அறநெறிகள் வாழி! வாழி!
சிந்தையெல்லாம் நிறைந்தெம்முள் முத்து மாரி
    தேன்நிலவாய்த் தித்தித்து வாழி! வாழி! 12.

### ஜெயமங்களம்

முத்து மாரி அம்மனுக்கு ஜெயமங்களம்!
    மூவுலகும் ஆள்பவட்கு ஜெயமங்களம்!
நித்தம் எம்மைக் காப்பவட்கு ஜெயமங்களம்!
    நீலினி,வெஞ் சூலினிக்கு ஜெயமங்களம்!
அந்தரிக்கு, சுந்தரிக்கு ஜெயமங்களம்!
    ஆதிபரா சக்தி யாட்கு ஜெயமங்களம்!
வெந்துயர் துடைப்ப வட்கு ஜெயமங்களம்!
    வெய்யசிங்கம் மேலவட்கு ஜெயமங்களம்! 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எச்சரீக்கை

வன்னிவளக் கந்தபுரம் வாழும்முத்து மாரியே!
வாழ்த்த,வாழ்த்த வல்வினைநோய் மாற்றுவீர் எச்சரீக்கை!
அன்னைமார்கொள் கௌரி நோன்பில் ஆனந்திக்கும்
அன்னையே!
அடியர் குற்றங் குறைகள் தாங்கி அருளுவீர்
எச்சரீக்கை!
14.

### பராக்கு

திருவிளக்குப் பூசைகொள்ளும் தேவியே பராக்கு!
தினம் அடியார் இடர்தவிர்க்கும் தெய்வமே பராக்கு!
மரவனத்துள் மருவுமுத்து மாரியே பராக்கு!
வரவரநும் மருட்பெருக்கு வளர்க்குவீர் பராக்கு! 15.

### லாலி

மாரி லாலி! முத்து மாரி லாலி - அருள்
ஈர நெஞ்சத் தாய்மைமிகும் சாலி லாலி!
வீரி லாலி! அருள் வாரி லாலி! - எங்கள்
விழிவினையுன் காலருளும் நீலி லாலி! 16.

நீலி லாலி! அருள் பாலி லாலி! - உன்னை
நித்தம் தொழு வார்துயர்கள் தீரும் லாலி!
சூலி லாலி! முத்துமாரி லாலி! - இன்பம்
சூழ்க எங்கும் என்றே ஊஞ்சல் ஆர்க லாலி! 17.

- முற்றும் -

முதற்பதிப்பு :
சிவஸ்ரீ. இ. நாவேந்தசர்மா,
ஆலயப் பிரதமகுரு - 1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பூநகரி
# முழங்காவில் - விநாயகபுரம்
# ஸ்ரீமுருகன் திருவூஞ்சல்

## பதிப்புரை

**பேரன்புடைய முழங்காவில் ஸ்ரீமுருகன் மெய்யடியார்களே!,**

இவ்வூர் ஏற்றப் பகுதியில் அமர்ந்து அடியவர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கலியுக வரதன் மீது அன்பு கொண்டு குகன் அன்பர் பண்டிதர் **ச. வே. பஞ்சாட்சரம்** ஆசிரியர் அவர்கள் திருவூஞ்சற்பா பாடித்தந்தார்.

இவ்வாலயத்துக்குத் திருவூஞ்சற்பா தேவையென ஆலய பரிபாலன சபை யோசித்துக்கொண்டிருந்த சமயம் முருகன் அருளால் காட்சிதந்து, மிகக்குறுகிய காலத்தில் இப்பாடலைப் பாடி, சகல வகையிலும் ஒத்துழைத்து, எமது குறையைத் தீர்த்த பண்டிதர் ஐயா அவர்களுக்கு எமது பரிபாலன சபையின் சார்பில் இதயம்கலந்த நன்றியைத் தெரிவித்து இந்நூலை அச்சேற்றி வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

அடியவர்கள் அனைவரும் இந்நூலை வாங்கி, அருளூஞ் சலைப் பாடிப் பணிந்து முருகன் அருளைப் பெற்றுய்ய வேண்டுகின்றோம்.

வணக்கம்

| **சி. சச்சிதானந்தம்** | **து. ஏரம்பமூர்த்தி** | **க. ருத்திரகுமார்** |
|---|---|---|
| தலைவர். | பொருளாளர். | செயலாளர். |

(முழங்காவில் ஸ்ரீ முருகன் தேவஸ்தானசபை சார்பில்)

முழங்காவில் - விநாயகபுரம், பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# பூநகரி
# முழங்காவில் – விநாயகபுரம்
# ஸ்ரீ முருகன் திருவூஞ்சல்

## காப்பு

கடல் தழுவும் பூநகரி முழங்கா விற்கண்
கருநாவல் மரநீழற் கோவில் கொண்ட
வடிவேலர், கதிர்காமம் நின்று வந்து,
மகிழ்ந்துவிநா யகபுரம்வாழ் வள்ளல் மீது
அடியவர்கள் அகம்மகிழ்ந்து பாடி ஆட்டும்
அருளூஞ்சல், அழகூஞ்சற் பாக்கள் செய்யக்
கடிமலர்த்தாள் மேலிணுவைச் செகரா சையன்
கணபதிதன் தடங்கருணை காப்பதாக! 01.

## நூல்

பிறப்பறுக்கும் ஈற்றிலக்கே விட்ட மாக,
பிழைபொறுக்கும் பெருங்கருணை,கலியு கத்தின்
வெறிப்பொடுக்கும் பெருங்கருணை, சரண டைந்தோர்
விதிப்படிசேர் இடர்தவிர்க்கும் அருட்பெ ருக்கு,
நெறிப்படுத்தி அவர்செயல்,சொல், சிந்தை, பாவம்
நீக்கிவழி நடத்துசித்தம் வடங்களாக,
அறக்கருணை பீடமதாய் ஆடீர் ஊஞ்சல்!
அருட்கதிரை வேலவரே! ஆடீர் ஊஞ்சல்! 02.

தும்புருவும், நாரதரும் துதிகள் பாட,
சுரமகளிர் சுகந்தமலர் தூவி நிற்க,
நம்பியுன்னை நன்மையுற்ற தேவர்கூட்டம்
நனைந்துவிழி நன்றியுடன் ஏத்தி நிற்க,
தம்பழிகள் தண்டனைகள் தீரல் வேண்டிச்
சால்முழங்கா வில்மக்கள் பணிந்தி றைஞ்ச
அம்பிகையின் வேல்பெற்றீர்! ஆடீர் ஊஞ்சல்!
அருட்கதிரை வேலவரே! ஆடீ ரூஞ்சல்! 03.

கதிர்காமம் சென்றுவந்த அடியர் கையில்
கதிர்வேலாய் அமர்ந்துவந்தீர்! ஏற்றம் தேடி,
முதிர்காட்டு முழங்காவில் மன்னார் வீதி
முனைந்தேறும் ஏற்றத்தை இடமாய்க் கண்டு
உதிர்நாவற் கனிப்பூசை உவந்து, நாவல்
ஒன்றின்கீழ் உட்காந்தீர் ஆடீர் ஊஞ்சல்!
கதிரைவே லாயுத,சு வாமித் தேவே
களித்திடநம் முழங்காவில் ஆடீர் ஊஞ்சல்! 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரநிழலில் மண்டபங்கள் ஆக்கிக் கொண்டு,
மன்னுசிவா கமவிதிக்கே அமைந்த கோவில்
அரும்வேத மந்திரஞ்சேர் தினப்பூ சைகள்
அடியார்செய் பொங்கல்கள், மடைகள் ஏற்றும்,
பெரும்கீர்த்தி உற்சவங்கள் பலவும் கண்டும்,
பிரசங்கம் கலகலக்கும் விழாக்கள் மேவும்
கரும்பன்ன முழங்காவிற் சேயே! தாயர்
கரந்தொட்டு மகிழ்ந்தாட்ட ஆடீர் ஊஞ்சல்! 05.

குறிசொல்லுங் குறத்தியர்தம் குறிஞ்சி வாசா!
குரவைவெறி யாட்டயர்வே லவர்தம் கோவே!
பொறிப்புள்ளி மயிலாக, சேவலாக
பொல்லாத சூரனையும் பொலிவித் தீரே!
செறிவாழைத் தோப்பு,மனை, பயிர்கள் பொங்கும்
செல்வமலி முழங்காவில் கோவில் கொண்டீர்!
நறுந்தூப,தீபம்,மலர், சாந்தின் வாசம்
நனைகதிரை வேற்சாமீ! ஆடீர் ஊஞ்சல்! 06.

தேன்சுவைகொள் நீர்பொங்கும் சுனைகள் ஊராம்,
தென்னைவனம், குலைசரிக்கும் புன்செய், மஞ்ஞை
மான்,பன்றி,மரைபாயும் வனங்கொள் ஊராம்,
வான்முட்டும் துடிப்புள்ளோர் வாழும் ஊராம்
கூன்மந்திக் குலந்தாவும் முழங்கா விற்கண்
கோவில்கொண் டருள்புரியும் குகனே! சேந்தா!
கோன்சூழுங் கொடுமையுளுங் குடிகள் காக்கும்
கோ,கதிரை வேலவரே! ஆடீர் ஊஞ்சல்! 07.

ஐங்கரனார் கோவில், முனி யப்பர் கோவில்,
அம்மன் அருள் வயிரவரின், தளிகள், கண்ணன்
தங்கமணி வேலவனுன் தளிகள் கொண்டு
தழைக்கும் நகர் முழங்காவில் தவத்தின் பேறாய்
இங்குபல பள்ளி கலை யரங்கம், தெய்வ
இசை,நடனம், உளிகூத்துக் கலைகள் போற்றும்,
இங்கிதத்தில் மகிழ்பவரே! ஆடீர் ஊஞ்சல்!
எழிற்கதிரை வேலவரே! ஆடீர் ஊஞ்சல்! 08.

கோழிபாடும் வாயாலே குஞ்சைப் பாடேன்!
கொக்கரிப்புச் சிவகவியை "முட்டை" என்றே
பூழியனற் பாலையிலே பாட வைத்துப்
புத்திபுகட் டருள்வேலா! ஆடீர் ஊஞ்சல்!
கோழியைஉன் கொடியிருந்து கூவச் செய்து,
கொல்லவந்த பகைவேடர் குலத்தைச் சாய்த்தோய்!
வாழி!வள்ளி, குஞ்சரியர் மருங்கிற் கொண்டு
மன்னுமூல மூர்த்திகுகா! ஆடீர் ஊஞ்சல்! 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டவரங் கிடைக்குமிந்தப் பதியி லென்று
  கிளர்ந்தடியார் ஏத்துமொழி கேட்டே வன்னி
நாட்டின்பல ஊரிருந்தும் அன்பர் சூழும்
  நற்கருணை ஆறுமுகா! அன்றவ் வைக்கும்
மாட்டிடைய னாய் நாவல் மரத்தில் நின்று
  வழங்கியவா "சுட்டபழம்"! ஆடீர் ஊஞ்சல்!
பூட்டியவா புன்சிறையில் அயன்தி ருந்த!
  பொன்முழங்கா வில்முருகா! ஆடீர் ஊஞ்சல்! 10.

மூன்றிரண்டாய் மலைபிளந்தீர்! ஆடீர் ஊஞ்சல்!
  முழங்காவில் வாழவந்தீர்! ஆடீர் ஊஞ்சல்!
ஈன்றாளென் றன்னையிலீர்! ஆடீர் ஊஞ்சல்!
  என்றென்றும் இளம்எழிலா! ஆடீர் ஊஞ்சல்!
மான்மகளை மணந்தவரே! ஆடீர் ஊஞ்சல்!
  மகிழ்ந்திருப்பீர் காவடியோ டாடீர் ஊஞ்சல்!
சான்றாண்மை எமக்கருள்வீர்! ஆடீர் ஊஞ்சல்!
  சால் கதிரை வேலவரே! ஆடீர் ஊஞ்சல்! 11.

## வாழி

அழகுவிழி பன்னிரண்டும் வாழி! வாழி!
  ஆறிரண்டு தடந்தோளும் வாழி! வாழி!
செழுங்கருணைத் திருவுருவம் வாழி! வாழி!
  செந்தமிழும், சிவநெறியும் வாழி! வாழி!
வழி துலக்கும் திருமுறைகள், மறைகள் வாழி!
  மழைசுரக்கும் முகில்,பால்பெய் பசுக்கள் வாழி!
முழங்காவி லொடு,வையம் முழுதும் வாழி!
  முத்தணிவே லாயுதர்தாள் வாழி! வாழி! 12.

## ஜெயமங்களம்

சித்திரவே லாயுதற்கு ஜெயமங்களம்!
  தேவர்சிறை மீட்டவற்கு ஜெயமங்களம்!
பத்தோடிரு கையனுக்கு ஜெயமங்களம்!
  பக்தர்குறை தீர்ப்ப வற்கு ஜெயமங்களம்!
முத்தமிழ் முதல்வனுக்கு ஜெயமங்களம்!
  முழங்காவில் முருகனுக்கு ஜெயமங்களம்!
நித்தம் எம்மைக் காப்பவற்கு ஜெயமங்களம்!
  நீலமயில் மேலவற்கு ஜெயமங்களம்! 13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எச்சரிக்கை

ஆறுபடை வீடுகொண்ட ஆறுமுக வேலவா!
அருணகிரி பாக்கள் சந்தம் ஆனவாஎச் சரிக்கை!
மீறுங்கலி வேதனைகள் வீழ்த்தவந்த வேலவா!
விநாயகபு ரத்துறையும் விண்ணவா எச்சரிக்கை! 14.

ஆண்டி, வேடன், இடையன், ஆசான், சேனை, சங்கத்
தலைவனாய்,
அருளுருக்கள் தாங்கிவந்த ஆண்டவா எச்சரிக்கை!
மாண்டிடாமல் சைவம்,தமிழும் வாழஇங்கு காப்பவா!
வள்ளி குஞ்ச ரிமணாள! வள்ளலே! எச்சரிக்கை! 15.

### பராக்கு

பூநகரிப் பெரும்பகுதிப் பூத்தவா! பராக்கு!
புனிதவிநா யகபுரத்தில் புண்ணியா! பராக்கு
வானவர்க்கும் மண்ணவர்க்கும் காவலா பராக்கு!
வந்துமுழங் காவில் இன்பம் வளர்ப்பவா! பராக்கு! 16.

### லாலி

வேல லாலி! சிவ பால லாலி - மண்ணில்
விஞ்சுகலித் துன்புகொல்லும் கால லாலி!
கால லாலி எழிற் கோல லாலி - வாயு,
கங்கை அன லாய்ச்சுமந்த சேய லாலி!

சேய லாலி! அருள்தாய லாலி - பண்டு
தீயசுரர் குலமழித்த தூயலாலி!
தூயலாலி! மலை நாத லாலி - நித்தம்
சூழுமிடர் தீர்க்கும்மலர்ப் பாத லாலி!

முதற்பதிப்பு :
முழங்காவில் முருகன் தேவஸ்தானம் - 1997.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கிளிநொச்சி – ஸ்கந்தபுரம்
# இத்தியடி நடன முத்துமாரி அம்மன் திருவூஞ்சல்

### காப்பு

"புத்து" நர கந்தவிர்க்கும் புத்தி ரர்கள்
பொலிநிறைவோ டின்பெய்த வைக்கும் கீர்த்தி
மத்தகமா முகஇணுவைச் செகரா சையா!
வயற்கந்த புரநகரின் ஆதித் தாயாம்
இத்தியடி நடனமுத்து மாரி ஊஞ்சல்
இனிதாலும் பாப்புனைய என்னுள் நின்று
வித்தகம் தந் தருள்புரிக என்றே ஏத்தி
வேண்டுகிறேன்! விநாயகர்தாள் காப்ப தாமே! 01.

### நூல்

பிரபஞ்ச தத்துவமாம் விட்டம்! ஞானப்
பிழிவாம்நான் மறைவடங்கள்! கருணை பீடம்!
மருவுமணிப் பொன்னூஞ்சல் நிலவாய் மன்னி,
மையிருள்கொள் நிழல் இத்தி யடிக்கோ விற்கண்
முருகநகர்க் கந்தபுரம் மொய்த்தே ஏத்தும்
முத்தமிழே! முதிர்கனியே! ஆடீர் ஊஞ்சல்!
அருள்நடனமுத்துமாரி!, ஆடீ ரூஞ்சல்!
அன்னையருள் அன்னையளே! ஆடீர் ஊஞ்சல்! 02.

வெள்ளி,திங்கள் பூசைகளை ஏற்று வந்து,
மேலும்தைப் பொங்கல்,தைப்பூசம்,மாசி
விள்ளுசிவ ராத்திரி, பங் குனிச்சீர்த் திங்கள்,
விழைவருடப் பிறப்பு,ஆனி உத்த ரத்தில்,
வெள்ளிநிலா வைகாசி விசாகந் தன்னில்,
விளக்கீட்டில், நவரா, ஆ டிப்பி றப்பில்,
ஒள்ளிய தீ பாவளி, ஆ திரையிற் பூசை
உறுநடன முத்துமாரி! ஆடீர் ஊஞ்சல்! 03.

காடு வெட்டிக் குடியேற்றம் அமைந்த காலம்
கவின்சாலை அமைப்பதற்குத் தடையாய் நின்ற
கோடுமலி இத்திமரம் தன்னை வெட்டும்
கோடரிகள் முறிந்தன!இ யந்தி ரங்கள்
கூடவெட்ட இயங்கவில்லை! ஓரன் பர்தாம்
கொள்கனவில் இந்தியடி என்வீ டென்றீர்!
வீடுகொண்டீர்! நடனமுத்து மாரியம்மா!
மெய்யருளே! விடிவருளீ! ஆடீர் ஊஞ்சல்! 04.

நூலம் 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரள்வலயப் பிரதேசம் குளிர்ச்சி கொஞ்ச
　　வந்தமர்ந்த மழைத்தெய்வ முத்து மாரீ!
திரள்விழுது சிலிர்த்தாடும் இத்தி நீழல்
　　திகழ்கோவில் ஒளிவிளக்கே! நோய்கள் தீர்ந்த
வரம்பெற்ற அடியவர்கள், தொலைந்த சொத்து
　　வரமீண்டும் கண்டுநேர்த்திக் கடன்கள் செய்வோர்,
பெரும்பொங்கல் மடைபரவி நாளும் ஏத்தும்
　　பேரருளே! முத்துமாரீ! ஆடீர் ஊஞ்சல்! 06.

தூரஞ்சார் தொட்டியடிப் பிள்ளை யாரைத்
　　தொழுதுநிமிர் கண்களுக்குன் கோவில் தோன்றும்!
நீரோடை, வாய்க்கால்கள், பெருக்கிக் கண்ணில்
　　நீரோடா தூர்காக்கும் அருளின் ஊற்றே!
ஏரோட முன்னாலே பஞ்சம் ஓட
　　இத்தியடி நகும்நடன முத்து மாரீ!
யார்யாரோ கனவெல்லாம் தோன்றி இத்தி
　　அடிப்பெருமை இசைப்பவளே! ஆடீர் ஊஞ்சல்! 07.

சாமுண்டி, சண்டிகையே! ஆடீர் ஊஞ்சல்!
　　சங்கரி,மந் தாகினியே! ஆடீர் ஊஞ்சல்!
ஓமம்பாள்! ஓம் காளி! ஓம்சிவ காமி!
　　ஓம்கௌரி! கண்ணகியே! ஆடீர் ஊஞ்சல்!
நாமெய்தும் ஓர்நிழலே! ஆடீர் ஊஞ்சல்!
　　நாதமணி, சங்கொலிக்க ஆடீர் ஊஞ்சல்!
பூமண்டும் பொலிகுழலாய் ஆடீர் ஊஞ்சல்!
　　பூலோக நாயகியே! ஆடீர் ஊஞ்சல்! 08.

உடலடங்கப் பசித்திருந்தே ஏத்து வோர்கள்,
　　உளவிழிப்புக் காத்து நித்தம் ஏத்தும் பக்தர்,
ஒடுங்கிடநா, தனித்திருந்தே ஏத்தும் அன்பர்
　　உள்மனதுள் ஒளிவடிவாய்க் காட்சி நல்கும்
நடனமுத்து மாரீ!பள்ளி, கடைஇல் லங்கள்
　　நாற்புறமும் சூழ்ந்திருக்க வடுகத் தெய்வம்,
கடம்பொழியும் வேழக்கோன் அருகில்மேவ
　　கந்தபுரம் காத்தமர்ந்தீர்! ஆடீர் ஊஞ்சல்! 09.

ஓருருவாய், பலவடிவாய் உதிக்கும் மூல
　　ஒண்சுடரே! ஸ்கந்தபுர நடன முத்து
மாரியென்று பூத்தவளே! முத்தர் தேவர்
　　வந்துநின்று மண்ணவரோ டேத்தித் துய்க்க,
நாரதனின் வீணைதும்பு ரூஉவின் பாடல்
　　நயந்தவண்ணம் நறியமலர் மாரி தோய்ந்து,
தாரணியே! நாரணியே! ஆடீர் ஊஞ்சல்!
　　சாம்பவியே! தாய்நெஞ்சே! ஆடீர் ஊஞ்சல்! 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறாடி, நிலவேந்தி இடப்பா கத்தாய்!
நெடுஞ்சாலை இத்திநிழல் இருந்து, நித்தம்
நூறாக வருமிடர்கள் நொடியிற் போக்கும்
நுண்ணருளால் அடியார்நெஞ் சினிப்பாய்! குன்று
தோறாடி சுடர்த்தாயே! கந்தன் பேரூர்ச்
சுற்றிநாரை, கிளி, வௌவால் துதிக்கும் பீடாய்!
வேறாம்பல் லூர்நின்றீர்த் தெம்மை இங்கே
வினைதீர்க்கும் முத்துமாரீ! ஆடீர் ஊஞ்சல்! 11.

கருங்கூந்தல் கலைந்தாட ஆடீர் ஊஞ்சல்!
கனங்குழைகள் மின்னலிட ஆடீர் ஊஞ்சல்!
இருங்கொங்கை இணைகுலுங்க ஆடீர் ஊஞ்சல்!
இடைமின்னல் இறல்அஞ்ச ஆடீர் ஊஞ்சல்!
இரைந்தலம்ப மேகலையும் ஆடீர் ஊஞ்சல்!
இலைப்பச்சைக் கூறைமின்ன ஆடீர் ஊஞ்சல்!
கரும்புமொழிக் கன்னியர்கள் கரந்தொட் டாட்டக்
கற்பகம்,ஆ யிரங்கண்ணாய், ஆடீர் ஊஞ்சல்! 12.

## வாழி

வந்தவந்த இடரெல்லாம் தீர்த்தாய், காத்தாய்
வண்மைகளைக் கணமும்எம் நினைவில் வாழி!
"சொந்தபந்தம் என்பொறுப்பு! துறப்பாய்!" என்று
சொல்கருணை எவர் மாட்டும் வாழி! வாழி!
தந்திரத்தை நம்பாது தர்மம் நம்பும்
சகமாக மாறி,இந்த உலகம் வாழி!
சந்ததிகள் ஆயிரம்தேர் விழுமி யங்கள்
தம்பெருமை பேண்சாந்தி உலகில் வாழி! 13.

## எச்சரிக்கை

காசியிலே விசாலாட்சி கருணைவடிவு தாங்கினாய்!
காஞ்சியிலே காமாட்சி ஆகினாய்எச் சரிக்கை!
பேசுமதுரை மீனாட்சிப் பெயரும்தாங்கி அருள்கிறாய்!
பேரருளே! நடனமுத்து மாரியே,எச் சரிக்கை! 14.

தக்கனுக்குப் புதல்வியாகித் தாக்சாயினி ஆகினாய்!
தவம்மிகுந்த பாண்டியன்தன் தனையையே!எச் சரிக்கை!
சக்கரத்தான் தங்காய்! மகிடற்சாய்த்தகாளி அம்மனே!
சரணடைந்தோம் தாயேஉன்தாள்! தாங்குவாய்எச்
சரிக்கை!
15.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பராக்கு

ஏறாத தாலிஏற்றும் அன்னையே பராக்கு!
ஆறாத துன்பம் ஆற்றும் அன்னையே பராக்கு!
பாறாத வல்வினைகள் பாற்றுதாய் பராக்கு!
நீறாக நீசஇச்சை, நிமிர்த்தெமைப் பராக்கு! 16.

### லாலி

சீரி லாலி! முத்து மாரி லாலி! - மழை
வாரிதரு நாரி! அலங் காரி லாலி!
காரி லாலி! சூல தாரி லாலி - செம்மை
கூரி, பச்சை, நீலம், வெண்மை, சேரிலாலி! 17.

தீரி லாலி! துர்க்கை வீரிலாலி - அன்னம்
சிங்கம், மாடு, வாகனங்கள் ஊரி லாலி!
ஏரிலாலி தாய்மைக் காரி லாலி - அம்மை,
இம்மை எமக்கின்பம்அருள் வேரி லாலி! 18.

### ஜெயமங்களம்

சாந்திமுத்து மாரி தாட்கு ஜெயமங்களம்!
சந்தானங்கள் காப்பவட்கு ஜெயமங்களம்!
ஈந்து முத்தி ஏற்பவட்கு ஜெயமங்களம்!
இன்பநுகர் வீபவட்கு ஜெயமங்களம்!
ஏந்து சூலம் வாளவட்கு ஜெயமங்களம்!
இத்தியடி நர்த்த கிக்கு ஜெயமங்களம்!
நாந்திருந்த வந்தவட்கு ஜெயமங்களம்!
நடனமுத்து மாரி யாட்கு ஜெயமங்களம்! 19.

முதற்பதிப்பு :
இணுவில்.
கலைவாணி - மகாலிங்கசிவம்
ப. செங்கோடன் - 1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

கிளிநொச்சி - வன்னேரிக்குளம்

# ஐயனார் திருவூஞ்சல்

## காப்பு

வேரோடு பிடுங்குண்டோம்! வீசப் பட்டோம்!
வீடின்றி நாடெல்லாம் அலைய நாங்கள்
ஊரோடு தங்குகின்றீர்! எனினும் நும்தம்
உண்மையருள் நம்முன்னே உலவிக் காக்கும்!
சீராரும் இணுவைச்செக ராசக்கோனே!
செழும்வன்னி வன்னேரிக் குளத்தில் வாழும்
காராளன் சாத்தன்மேல் ஊஞ்சல் பாடக்
காப்பருள்வீர்! கவிதருவீர்! கால்கள் போற்றி! 01.

## நூல்

பிரபஞ்சப் படைப்பாம்நல் விட்டம் தாங்க
பெருங்காத்தல், அழிப்பு,மறைப் பருளல் நான்கும்
பெருவடமாய், உய்திதரல் பீட மாகச்
சிறந்தமைந்த செம்பொன்னார் ஊஞ்சல் மீது
கருநீலத் திருமேனி களிக்கத் தூபம்,
கமழ்பூக்கள் தழுவிடவே ஆடீர் ஊஞ்சல்!
மருவியுறை வன்னேரி வளஞ்சி லிர்க்க
மால் சிவன்தம் மகன்சாத்தா! ஆடீர் ஊஞ்சல்! 02.

போகூழின் வசமாகப் பொல்லாங் குற்றப்
புலைச்சூரற் கஞ்சியலை இந்தி ராணி
சீகாழி ஒளிந்திருக்கத் தேடிச் சேர்ந்த
தீச்சூரன் தங்கைஅச முகியைச் சாட
மாகாளர்ப் பணித்தருளீ! ஆடீர் ஊஞ்சல்!
வன்னேரிக் குளத்தழகா! ஆடீர் ஊஞ்சல்!
ஓகையுறும் பூரணை,புட் கலைதம் மோடே
ஒய்யார மாயமர்ந்தே ஆடீர் ஊஞ்சல்! 03.

அடியர்மனம் ஊடுருவி,அகிலங் காப்போன்
ஆனபொருட் "சாத்தன்"என்னும் அந்நா மத்தோய்!
மடுவணையும் நெடுஞ்சாலைப் பாங்கர், செல்வ
வன்னேரி வளநகரில் வளருங் கோவில்
இடங்கொண்டெம் மிடர்நீக்கி இன்பம் நல்கும்
இன்னருளே செண்டேந்தீ! ஆடீர் ஊஞ்சல்!
இடி,மின்னல் மழைதந்து கோடை வெப்பம்
இங்கில்லை எனச்செய்வீர்! ஆடீர் ஊஞ்சல்! 04.

நூலகம் 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்புருவும், விஞ்சையரும் கீதம் பாட,
சுவைகுழைய நாரதனும்வீணைமீட்ட
சம்புவுடன் தாய்வடிவில் திருமால் வாழ்த்த,
சப்தரிசி மார்துதிக்க, தேவ லோக
ரம்பைமுதல் அழகியர்கள் வடந்தொட் டாட்ட
ரட்சிக்கும் பேரருளே! ஆடீர் ஊஞ்சல்!
நம்படியர் நனவிலன்றிக் கனவில் கூட
நண்ணும் அருள் நாயகரே! ஆடீர் ஊஞ்சல்! 05.

பரிவார மூர்த்திகளாய் வடுகன், அம்பாள்
பரமசிவன், திருமாலை, கஜன்,வே லோனை
மருவியமர் மாகாளர் தம்மைக் கொண்டே
வன்னேரிப் பெருங்கோவில் மகிழ்ந்து வாழும்
அரிகரபுத் திரஐய னாரே! பின்னாள்
ஐயப்ப னாய்வந்தும் அவத ரித்தீர்!
கரியதிரு மேனிஒளி மின்னல் வீசக்
கற்பகமே! கண்களிக்க ஆடீர் ஊஞ்சல்! 06.

கோழிக்கொடி ஏந்தியவா! ஆடீர் ஊஞ்சல்!
குதிரைமிசை ஏறிவந்தே அடியார்க் கின்னல்
சூழெதிரி களையழிப்பீர்! ஆடீர் ஊஞ்சல்!
சுடர்த்தாயாய் மால்கொள்வீர்! உமையே அன்னை
யாள்இளையள் - சித்தி!புரிந் தாடீ ரூஞ்சல்!
அசுரன்தார கன்யானை ஊர்தி பெற்றீர்!
ஏழுலகும் ஏத்திநிற்க ஆடீர் ஊஞ்சல்!
இவ்வன்னே ரிக்கமிழ்தே! ஆடீர் ஊஞ்சல்! 07.

அக்கிரமக் கிருத்திகையாம் அசுரப் பெண்ணை
அரன்தந்தை ஆணையிடக் கடலில் வீசி
நிக்கிரகஞ் செய்தவரே! கிராமம் தோறும்
நீண்டநெடுங் காலமிருந் தூர்கள் காக்கும்
சொக்கழகா! பச்சைவயல், பனைதென் னைகள்
சுளைப்பலவு, மாவின்பொழில் மயில்,மான், யானை
மிக்கவள வன்னேரிக் குடிகள் காக்கும்
வெண்களிற்று வாகனரே! ஆடீர் ஊஞ்சல்! 08.

மணிகண்ட னாய்உதித்து, வளர்ப்புத் தாயின்
வஞ்சனையை வென்றுபுலி மீதில் வந்தோய்!
பணிகின்றோர் நோய்,குருடு, செவிடு, மூங்கை
பார்வியக்க நீக்கி,மலைச் சபரி மீது
அணிகோவில் அமர்ந்தவரே! ஆடீர் ஊஞ்சல்!
ஐயப்பன் ஆனவரே! ஆடீர் ஊஞ்சல்!
பிணி,பஞ்சம்,பயம்நீக்கி வன்னே ரிக்கண்
பெருங்கோவில் கொண்டவரே! ஆடீர் ஊஞ்சல்! 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கைலை முத்தியிலே சுந்த ரர்சொல்
"திருக்கைலை ஞானஉலா"த் தீம்பா டல்கள்
கருத்துடனே தமிழ்மண்ணுக் கெடுத்துவந்து
களிப்பீந்த கருணையரே ஆடீர் ஊஞ்சல்!
நெருக்கிமர வனஞ்சூழும் வன்னே ரிக்கண்
நெளிந்துலவும் நீரோடை, வயல்கள் துன்னித்
திருப்பொலியும் ஊர்படைத்தீர்! ஆடீர் ஊஞ்சல்!
செந்தமிழ்,சை வம்விளங்க ஆடீர் ஊஞ்சல்! 10.

சனிவாரம் தொறும்உம்மைத் தொழுவோர்க் கெல்லாம்
சனிபகவான் நற்பலன்கள் சாரச் செய்வீர்!
வினைதீர்ப்பீர்! வேதனைகள் தடுத்துக் காப்பீர்!
வெகுண்டையப் பன்தானாய் மகிஷி வீய்த்தீர்!
புனிதஐய னார்புரத்துப் பொந்துத் தேனே!
பூமழையில், பாமழையில் குளித்தவண்ணம்,
பனிமலர்க்கா, மேய்ச்சல்நிலம், பள்ளி, பட்டி
பாங்கருறப் பரிமளிப்பீர்! ஆடீர் ஊஞ்சல்! 11.

### வாழி

மழை வாழி! குளம்வாழி! வண்மை வாழி!
வன்னிவளம் என்னும்பட்டி மறி,ஆன் வாழி!
விளைநெல்போல் பலபயிரும் வாழி! சூழும்
மிகுந்தசவால் எதிர்கொள்ளும் வீரம் வாழி!
முழுமைநம்முள் பூக்கவைக்கும் தெளிவும் வாழி!
முக்குணத்துள் சாத்துவிகம்ஓங்க வாழி!
ஒளிபுகுந்தெவ் வுலகினையும் உயர்த்த வாழி!
உயர்வன்னே ரிச்சாத்தன் கருணைவாழி! 12.

### எச்சரீக்கை

சபரிமலையில் ஐயப்பன்தானுமாகி வந்தவா!
சபரிபக்தர் சாரி,சாரி சார்பவாஎச் சரீக்கை!
கபடம்மிக்க பசுமாசுரன் கதைமுடிந்த சாட்சியாய்,
கண்டவர்கள் மயங்குங்கோலங் கொண்டவா!எச் சரீக்கை!
13.

குருவினாசி யோடு நோன்பு கொண்டோர் நாற்பதுதினம்
கூட்டமாகக் கருமுடுப்பில் குழுமுவோய்எச் சரீக்கை!
ஒருபதினெண் படிகள்தாண்டி ஊட்டும்நெய்வி ளக்கிலே
உருகியின்ப வரங்கள்நல்கும் உத்தமாஎச் சரீக்கை! 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பராக்கு

பழவினைகள் பயன்இரங்கிப் பாற்றுவாய் பராக்கு!
பழிபுதிதாய்ப் பண்ணிடாத பலமருள் பராக்கு!
துளசிமணி கழுத்தணிந்தோர் தொழுபவா பராக்கு!
கிளரும் பம்பை நதியினோரம் கிடந்தவா பராக்கு! 15.

### லாலி

தீர லாலி! சாத்தன் பேர லாலி - மாலன்
செய்தவித்தை தந்தஅலங் காரலாலி!
ஈர லாலி! பசுங் கார லாலி - மாலை
இனியஅன்னை ஆக்கும்உப காரலாலி! 16.

காக்க லாலி எம்மைச் சீர்க்க லாலி! - சூழ்ந்து
தாக்கவருஞ் சஞ்சலங்கள் நீக்கு லாலி!
தூக்கு லாலி! இன்பம் மீக்கு லாலி! - உன்றன்
பூக்கழலில் வாழ்வெமக்கும் ஆக்கு லாலி! 17.

### ஜெயமங்களம்

வன்னேரியில் ஐயனார்க்கு ஜெயமங்களம்!
மைந்தர் ஈந்து காப்பவர்க்கு ஜெயமங்களம்!
இன்னலிடர் தீர்ப்பவர்க்கு ஜெயமங்களம்!
எளிமைஎழில் பூத்தவர்க்கு ஜெயமங்களம்!
அன்னை, தந்தை ஆனவர்க்கு ஜெய மங்களம்!
அற்றலர்ந்தோர்க் காப்பவர்க்கு ஜெயமங்களம்!
வன்னிகாக்கும் வள்ளலுக்கு ஜெயமங்களம்!
வாழப்புவி ஆள்பவர்க்கு ஜெயமங்களம்! 18.

முதற்பதிப்பு :
ஐயனார் தேவஸ்தானம், வன்னேரிக்குளம் - 1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இரண்டாம் பாடசாலை

# மகிழ் துர்க்கை அம்மன் திருவூஞ்சல்

காப்பு

வரலாற்றுச் சிறப்புடைய வன்னி மன்னும்
வளநகரம் கந்தபுரம் தன்னில் மேற்கில்,
மருவிரண்டாம் பள்ளியது வளவு மேவி,
மண்ணெங்கும் அருள்பாய்ச்சும் மாதா துர்க்கை
திருவூஞ்சல் தனிலாடுஞ் சீர்த்தி பாட,
திகழ்ஞானம், ஆன்மபலம் சேய்எ னக்குத்
தரவேண்டி மேற்கிணுவைச் செகரா சன்தாள்
சேவித்தேன்! திகழ்சப்பைக் கால்கள் காப்பாம்! 01.

நூல்

முத்திதர முந்தருளே விட்ட மாக,
மும்மலங்கள் தீய்த்தல், நெஞ்சமரல், தன்னை
உய்த்துணர்த்தல், உருகுவித்தல் நோக்கம் தாமே
உறுவடங்க ளாய்,தாய்மை பீட மாக
எத்திசையும் ஏத்தவென இந்தக் கந்த
எழிற்புரத்தில் அமர்ந்தவளே! ஆடீர் ஊஞ்சல்!
உத்தமியே! ஒளிநிலவே! ஆடீர் ஊஞ்சல்!
உலகனைத்தின் ஊற்றுக்கண் ஆடீரூஞ்சல்! 02.

மஞ்சளுணா வயிறேந்தி வளர்க்கும் நாவல்
மருவுதல விருட்சமென வதியும் தாயே!
வெஞ்சினத்துச் சிங்கமிசை மேவி, இந்த
மேதினியில் வெய்யவரை வீழ்த்தும் தாயே!
துஞ்சலிலா துலகோம்பும் சுடர்மீ னாட்சி,
தொன்மைக்குள் தொன்மையளே ஆடீர் ஊஞ்சல்!
அஞ்சவரும் இடரெல்லாம் தகர்த்துன் அன்பர்
அகங்கரைக்கும் அருட்புனலே ஆடீரூஞ்சல்! 03.

விண்ணார்ந்த பாலைமரம் வாசற்கொண்டாய்!
வீரையுடன் வேம்பு, தென்னை,நாவல், பூங்கா
விண்ணாங்கு வீதிநிறை கோவில் வாழும்
வீரிதிரி சூலி,துர்க்கா! ஆடீர் ஊஞ்சல்!
பண்ணார்ந்த பசனை,வெள்ளி,செவ்வாய், தோறும்
பருகியமர்ந் தருள்புரிவீர்! ஆடீர் ஊஞ்சல்!
கண்ணார்ந்து, நெஞ்சார்ந்தெம் கனவும் ஆர்ந்து,
காப்பவளே! கற்பகமே! ஆடீர் ஊஞ்சல்! 04.

நூலம் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியங்குள வாடைதொட மெய்சி லிர்த்து,
மருவுபள்ளிச் சிறார்குரலில் தாய்மை வாய்த்து,
பணிபவரின் பணிவிடையால் குளிர்ந்த வண்ணம்,
பறவைகளின் பல்குரலில் பருகிப் பண்கள்,
இணையடியில் பூமழைகள் ஏந்தி, ஏந்தி,
என்றுமெம்மைக் காப்பவரே! ஆடீர் ஊஞ்சல்!
மணமலர்கள் மாரியிலே ஆடீர் ஊஞ்சல்!
மகிழ்ந்தாட்ட அடியர்நாம், ஆடீ ரூஞ்சல்! 05.

முந்தைவனப் பாங்கினது சான்றே யாக,
முனைந்துலவு நச்சுயிர்கள் மூர்க்கம் தீர்த்துக்
கந்தபுரம் மேவுகுடி மக்கட் காக்கும்
காசியளே! காஞ்சியளே! மதுரை மாதா!
கந்தமலி குங்குலியம், அகிலின் தூமக்
கமகமப்பில் களித்துந்தி ஆடீர் ஊஞ்சல்!
மந்தியணி வந்துலவு மரங்கள் சூழும்
மகிழினியே! கொற்றவையே! ஆடீர் ஊஞ்சல்! 06.

மகிடவதக் கொற்றவையும் நீயே! நம்பன்
மகிழாடல் உவந்தபத்ர காளி நீயே!
அகதிகளாய், வெள்ளத்தால், அடுயுத் தத்தால்
அண்டுபவர்க் கடைக்கலம் நல் கன்னை நீயே!
தகுமேழு கன்னியர்க்குள் பிடாரி யான
சங்கரிநீ! சாமுண்டி, சண்டி காநீ!
பகையொழிந்தெம் மினம்நிமிர ஆடீ ரூஞ்சல்!
பல்லியங்கள் பம்பொலியில் ஆடீ ரூஞ்சல்! 07.

அடிவாங்கித் திருந்தாமல், அலைந்து லைந்தே
அறிவுவந்து திருந்தாமல், உன்றன் கோவிற்
படியமர்ந்துன் னாழ்நினைப்பில், துதியில் மூழ்கிப்
பண்படநாம் வழிகாட்டும் அன்னாய்! ஆசைப்
படுதோல்வி யாற்குலைந்து பாத கங்கள்
பக்கம்போய்ச் சிதையாமல் துறவு மார்க்கம்
கொடுத்துதவும் கொற்றவையே! ஆடீர் ஊஞ்சல்!
"குவலயம் இக் கோவில்!" என்றே ஆடீ ரூஞ்சல்! 08.

காப்பதுவும், காத்தெண்ணி யுருக வைத்துன்
கால்களுக்கு நன்றிசொல்ல வைத்துன் பக்கம்
ஈர்ப்பதுவும்,எண்ண,எண்ண இனிக்கும் பண்பால்
ஈடேற்றித் தவநெறி, பின் முத்தி யின்பால்
சேர்ப்பதுவும் உன்படைப்பு நோக்கம்! கண்டோம்!
திரிசூலீ! வாளேந்தி! சேய்க்கீந் தாய்வேல்!
வேப்பிலையின் நாயகியே! ஆடீர் ஊஞ்சல்!
வெற்றிகளின் விளைவயலே! ஆடீர் ஊஞ்சல்! 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிபுரங்கள் எரித்தவன்செம் பாதி யானாய்!
செவ்வேளின், ஐங்கரனின் அன்னை யானாய்!
அரிமகிழ்தங் கையானாய்! தந்தை தக்கன்
அடமழிக்க உருவெடுத்த காளி யானாய்!
கருமாரீ! அமுதினியே! நீலி! சூலி!
கண்ணகியே! வெண்ணிலவே! ஆடீ ரூஞ்சல்!
வரமீயப் பொன்னூஞ்சல் வள்ளம்ஏறி
மல்கடியர் கடலாடீ! ஆடீ ரூஞ்சல்! 10.

வன்கொடுமை மடிப்பவளே! ஆடீர் ஊஞ்சல்!
மறக்கருணை அறக்கடலே! ஆடீர் ஊஞ்சல்!
உன்பள்ளி வாணியும்நீ! ஆடீர் ஊஞ்சல்!
ஓதுவிப்பாய் புராணங்கள் ஆடீர் ஊஞ்சல்!
வன்னிதந்த இன்னிழலே! ஆடீர் ஊஞ்சல்!
வஞ்சி,உமா மங்கலமே! ஆடீர் ஊஞ்சல்!
"இன்புமிக, துன்பகல என்றும் நாடீர்
என்கால்கள்!" எனப்பாடி ஆடீர் ஊஞ்சல்! 11.

## வாழி

முக்கண்ணீ! முக்காலங் காட்டீ! வாழி!
மூவுலகும்,பாவுலகும் ஆள்வோய்! வாழி!
முக்குணத்தை முறைப்படுத்தித் தருவோய்! வாழி!
முத்துவிழிச் சுடரால்மண் விளக்கீ! வாழி!
செக்காடும் சூழலிலே வாழ்ந்தெம் வன்னித்
திக்கெல்லாம் பவனிவரும் தேவி! வாழி!
சொக்கழகுச் சுந்தரியே! வாழி! வாழி!
சுடர்க்கந்த புரத்துர்க்கா! வாழி! வாழி! 12.

## எச்சரிக்கை

சிங்கமேறிச் சூலமேந்தித் திரிபுரங்கள் செற்றவள்,
தீரமேற்றுச் சிட்டர் தம்மைக் காப்பவள்எச் சரீக்கை!
இங்குசோழர் ஆட்சி ஓர்கால்நாட்டியே சிவத்தமிழ்
இறைநிலை பதிக்கவைத்த சங்கரீஎச் சரீக்கை! 13.

கொங்கு பொங்கு தெங்கின்நாப்பண் திகழ்ந்துகந்த புரத்திலே
குளிரிளநீர், பால் தயிரில் ஆடியே!எச் சரீக்கை!
கங்கை தாங்கு வேணிஈசன் தண்ணளி,கண் விழித்துமே
காலமெல்லாம் ஊருலகம் காப்பவள்எச் சரீக்கை! 14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### லாலி

சூலி லாலி! மலைநீலி லாலி - சண்டித்
தூல ரூபி துட்டரைச்சங் காரி லாலி!
வாலை லாலி! அலை மேலி லாலி! - தங்கை
மாலனுக்கு! வேலனுக்குத் தாயே லாலி! 15.

சண்டி லாலி! சாஅ முண்டி லாலி! - அடல்
மிண்டுமலம் தொண்டருக்குள் சாடி லாலி!
பண்டள் லாலி! பரன் பங்கள் லாலி! - இந்த
அண்டவெளி மண்டொளியைப் பாய்ச்சி லாலி! 16.

### பராக்கு

முந்திவந்த முதுகுடிகள் அன்னையே பராக்கு!
பிந்திவந்து குந்து வோர்க்கும் பேணுந்தாய் பராக்கு!
அந்தரி, லலந்திகா, மாதங்கியே! பராக்கு!
நந்தினி சுகந்தினி! முகுந்தினி பராக்கு! 17.

குண்டலங்கொண் டொண்ணிலா புரிந்தனை பராக்கு
தொண்டருக்குக் கண்முன்தோன்றும் சோதியே! பராக்கு!
அண்டும் வெப்பு நோய்கள் தீர்க்கும் யாதவீ! பராக்கு!
மண்டு வெம்மைப் பாலைத் தெய்வம் கொற்றவை பராக்கு!
18.

### சுபமங்களம்

வாளேந்தும் வல்ல பிக்குச் சுபமங்களம்!
வையத்தோரைக் காப்பவட்குச் சுபமங்களம்!
தாளேத்தத் தருபவட்குச் சுபமங்களம்!
சங்கரி! புரந்தரிக்குச் சுபமங்களம்
சூழீந்து காப்பவட்குச் சுபமங்களம்!
குங்கு மத்தின் நாயகிக்குச் சுபமங்களம்!
ஆளாமல் ஆள்பவட்குச் சுபமங்களம்!
அன்னை கந்த புரத்த வட்குச் சுபமங்களம்! 19.

முதற்பதிப்பு :
இணுவில் ப. மகிழினி, ம. கலைவாணி - 1999.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பலாலி
# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி – மனோன்மணி அம்பாள் திருவூஞ்சல்

## காப்பு

ஈழமணித் திருநாட்டின் வடபால் ஓங்கும்
 எழில்மலியும் யாழ்ப்பாணப் பலாலி யூரில்,
வாழுமருட் சைவர்கள் பண்டு தொட்டே
 வழிபட்டு, தொண்டாற்றி, நோற்றுப் பக்தி
ஆழுமருட் கண்ணகி,ம னோன்ம ணித்தாய்
 அனைத்தரசி ராஜரா ஜேஸ்வ ரிப்பேர்
சூழுமன்னை மங்கலமார் ஊஞ்சல் பாடத்
 தொல்லிணுவைச் செகராசன் காப்பா னாக! 01.

## நூல்

நால்வேதம் வடமாக, நால்வே தத்தை
 நல்கருளே விட்டமென, ஆக மங்கள்
சால்பீடம் எனக்கொண்ட ஊஞ்சல் மீது,
 சௌந்தரி,ம னோன்மணி ராஜ ராஜேஸ்
பால்மணல்சேர் நெய்தல் நிலப் பாங்கு சூழும்
 பதி,கன்னார் வயல் தன்னில் பக்தர் சூழ்ந்து
கால்தொட்டே ஆட்டிடவே ஆடீர் ஊஞ்சல்!
 காசினியோர் கண்களிப்ப ஆடீர் ஊஞ்சல்! 02.

மடல்விரிந்த தாழைமரத் தோப்பின் கூட்டம்,
 மலிகாற்றில் கலகலக்கும் கீற்றுத் தென்னை,
இடமகன்ற தோப்புக்கள், நீர்நி லை,தம்
 எழில்நகராம் இனியபலா லிக்கண் ஆர்ந்தே,
அடிதொழுவோர் அடியடியாய்ப் பெருக, தாய்மை
 அன்றாடம் பொலிந்தூறி அருளால் மூத்த
கொடியிடையே! குமுதவிதழ்க் கமலக் கண்ணீ!
 கூரொளியே! கோமளமே! ஆடீர் ஊஞ்சல்! 03.

நூலகம் 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திகள்யா வற்றினுக்கும் தாயே தேவீ!
சால்சிவனின் இயங்குநிலைத் தெய்வம் ஆனாய்!
முத்திதரும் முழுக்கருணை ஊற்றும் ஆனாய்!
முச்செல்வம் கல்வி,பொருள், வீரம் நல்கும்
அத்தேவி மூர்த்தங்கள் ஆனாய்! கற்பின்
அருமை புகல் கண்ணகியும் ஆனாய்! ஊரின்
எத்திசையும் தொழும்ராஜா ராஜேஸ் தாயே!
எழிலாரும் மனோன்மணியே! ஆடீர் ஊஞ்சல்! 04.

ஆலமரம் தலவிருட்ச மாகுங் கோவில்,
அருள்மிகுகன் னார்வயலில் அமர்ந்த தாயே!
சாலிவயற் பசுமையிலும்,புன்செய் தோறும்,
தழைத்தகனிச் சரிவினிலும், அலைநீர் ஏரி
மேலொளிரும் பூக்களிலும், குலைசாய் தென்னை
மிடைவினிலும், நீர்ப்புட்கள் தமிலும் மின்னும்
ஞாலவுயிர் யாவினுக்கும் தாயே! ஏத்தி
நயந்தடியார் ஆட்டிடவே ஆடீர் ஊஞ்சல்! 05.

தொல்லைமிகுந் தக்கனது வேள்வி சாய்க்கச்
சூழ்வலிமைக் காளியினைத் தந்தாய்! அந்த
வல்லபைக்கு வழங்குமத களிற்றை "ஓம்" என்
மந்திரத்தின் வடிவினிலே தந்தாய்! வாழ்வில்
இல்லையொரு குறையுமென ஏத்தும் பேர்கள்
ஏற்றமுறும் எவ்வளமும் ஈந்து காப்பாய்!
நெல்லி,பன்னீர், வேம்புமலி பலாலிக் காவில்
நெஞ்சுருகி நாமாட்ட ஆடீர் ஊஞ்சல்! 06.

கட்டுமரம் கடல்அலைமேல் காப்போய்! உன்றன்
கால்பணிவோர் தலைவரையுங் காப்போய்! ஆவின்
பட்டிதினம் சூழ்ந்து,தொழுந் தாயே! அன்று
பட்டருயிர் காத்திடவுன் தோடு வீசி,
வட்டநிலாச் செய்தவளே! வயல்கள் ஓடை
மலர்களிலும் மணப்பவளே! பலாலி யூரில்
அட்டலட்சு மித்தாயே! ஆடீர் ஊஞ்சல்!
அடியவர்கள் ஆர்த்திசைக்க ஆடீர் ஊஞ்சல்! 07.

குடங்குடமாய்ப் பாலில் முழுக் காடும் தாயே!
குடங்குடமாய் இளநீரில் குளிக்கும் தாயே!
கடம்பன்ஒரு கடவுள்என அணைத்த தாயே!
காசி,காஞ்சி, மதுரைபுகழ் கண்ட தாயே!
நடம்சுடலை ஆடியவன் நயக்கும் தாயே!
நல்லருளே! பலாலிமனோன் மணியே! ஈசன்
விடந்தடுத்த ராஜரா ஜேஸ்வ ரித்தாய்
மிளிர்கன்னார் வயல்தளியீர்! ஆடீர் ஊஞ்சல்! 08.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையில்லார்க் கிரங்கியதால் பிள்ளை யாகப்
பிறந்துசிவன் மணமடையத் தவத்த மர்ந்த
வள்ளியரே! வல்லியரே! சிங்கம் ஏறி
மகிடனெனும் சூரனையும் வதைத்தாய்! எங்கள்
உள்ளமுறும் உட்பகைகள் ஆறும் பாற
உன்னருளைப் பொழிதாயே! ஆடீர் ஊஞ்சல்!
கள்ளமில்லா நெஞ்சர்தம் கோரிக் கைக்கே
காதீந்து நிற்பவளே! ஆடீர் ஊஞ்சல்! 09.

வெண்மணலார் வீதிக்கன் னார்வ யற்கண்
மிளிர்கோவில் வீற்றிருந்து, தேவர், சித்தர்
கண்டுதொழக் கங்குல்பகல் அண்டும் அன்னாய்!
கண்பனிப்பக் கண்டடியார் ஏத்தும் அன்னாய்!
பண்மிழற்றிப் பல்படையல் பொங்கல் தந்து,
படருமொளித் திருவிளக்குப் பூசை தந்து.
மண்டடியர் பலாலியுறை கௌரி தேவி!
மகிழ்ந்தரம்பைக் குலமாட்ட ஆடீர் ஊஞ்சல்! 10.

அந்தரியே! கண்ணகியே! ஆடீர் ஊஞ்சல்!
அருள்மாரி! மகமாயீ! ஆடீர் ஊஞ்சல்!
சுந்தரியே! புரந்தரியே! ஆடீர் ஊஞ்சல்!
சுடரபிரா மவல்லி! ஆடீர் ஊஞ்சல்!
சிந்தைநிறை சிவகாமீ! ஆடீர் ஊஞ்சல்!
சிவலோக நாயகியே! ஆடீர் ஊஞ்சல்!
புந்திபொலி சான்றோர்வாழ் பலாலி ஏத்தும்
புவனங்கள் நாயகியே! ஆடீர் ஊஞ்சல்! 11.

வாழி

தூவானம் சுடர்ந்துபொழி பலாலி வாழி!
தூய்மையுடன் புவிமனங்கள் சுடர்ந்து வாழி!
தேவாரச் சிவநெறிமூ வுலகும் வாழி!
சிந்தையெல்லாம் செம்மைதரும் ஞானம் வாழி!
ஆவாழி! அந்தணர்கள், வேள்வி வாழி!
அருந்தமிழும், அருள்மறைகள் நான்கும் வாழி!
வா,வாஎன் றழைத்திடவான் மனிதர் வாழி!
மனோன்மணி,ரா ஜராஜேஸ் வரித்தாய் வாழி! 12.

திருச்சிற்றம்பலம்

முதற்பதிப்பு :
பலாலி மனோன்மணி இராஜராஜேஸ்வரி
அம்மன் கோவில் - 1993.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# கண்ணன் கவசம்

## (4ஆம் பதிப்பு)

### விநாயகர் காப்பு

கண்ணன் மணிவண்ணன்
காக்கும் சிறைமீட்கும்
வண்ணங்கள் வாழ்த்தவும்
மேற்கிணுவைப் - பண்ணவன்
தண்டா மரைத்தாள்கள்
சாந்திதந்து நெஞ்செல்லாம்
உண்டாக்க ஞான ஒளி! 01.

### நூல்

ஆயிரங்கண் அன்னை அண்ணா
கண்ணாமணி வண்ணா!
தாயெனநீ காத்தருள்வாய்
கண்ணாமணி வண்ணா! 02.

நீலவெண்ணெய்ச் சிலையழகா
கண்ணாமணி வண்ணா!
காலும்கையும் பவளம்பூத்தாய்
கண்ணாமணி வண்ணா! 03.

ஆயர்பாடி ஆனந்தமே
கண்ணாமணி வண்ணா!
தாயர்பாடும் தால் இன்பமே
கண்ணாமணி வண்ணா! 04.

கோலாகலக் கோகுலத்தாய்
கண்ணாமணி வண்ணா!
நாலாயிர பிரபந்தம்பூண்
கண்ணாமணி வண்ணா! 05.

மாடு, கன்று மேய்த்துக்காக்கும்
கண்ணாமணி வண்ணா!
மாடுதின்னுங் கொடியம்அல்லோம்
கண்ணாமணி வண்ணா! 06.

ஆய்ச்சியர்கள் குரவையாடக்
கண்ணாமணி வண்ணா!
தீய்க்கும்இடர் தீர்த்தருளும்
கண்ணாமணி வண்ணா! 07.

நூலம் 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபிமாதர் குழைகுறும்பா
கண்ணாமணி வண்ணா!
பாபியர்நாம் புகும்புகலே
கண்ணாமணி வண்ணா! 08.

பூட்டுடைத்துச் சிறைகடந்தாய்
கண்ணாமணி வண்ணா!
மீட்டுச்சிறை காளமையும்
கண்ணாமணி வண்ணா! 09.

மத்தொலிக்கும் மனைகளெங்கும்
கண்ணாமணி வண்ணா!
ஒத்தொலிக்கும் உன்சலங்கை
கண்ணாமணி வண்ணா! 10.

கண்படாத விண்மீன்கள்
கண்ணாமணி வண்ணா!
கண்சிமிட்டுங் கரியமேனிக்
கண்ணாமணி வண்ணா! 11.

துவாரகையின் சுடர் விளக்கே
கண்ணாமணி வண்ணா!
அவாஅடங்கி அமரவைப்பாய்
கண்ணாமணி வண்ணா! 12.

இடையனும்நீ முதல்வனும்நீ
கண்ணாமணி வண்ணா!
கடையனையும் காத்தருள்வாய்
கண்ணாமணி வண்ணா! 13.

திருவரங்கம் பள்ளிகொண்டாய்
கண்ணாமணி வண்ணா!
குருவாயூர் குடியிருந்தாய்
கண்ணாமணி வண்ணா! 14.

வல்லிபுரம் வண்ணையனே
கண்ணாமணி வண்ணா!
புல்லியபொன் னாலையனே
கண்ணாமணி வண்ணா! 15.

கந்தபுரம், மாமூலைக்
கண்ணா மணிவண்ணா!
முந்துபுகழ் வட்டக்கச்சிக்
கண்ணா மணிவண்ணா! 16.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனொடுக்கி மனம்புதுக்கிக்
    கண்ணாமணி வண்ணா!
புலங்கனியப் பாடவந்தோம்
    கண்ணாமணி வண்ணா! 17.

மெய்ம்மறந்தோம் விழிநிறைந்தாய்
    கண்ணாமணி வண்ணா!
வைகுந்தமோ இச்சபையும்
    கண்ணாமணி வண்ணா! 18.

பழிஅழிக்க மலம் அழிக்கக்
    கண்ணாமணி வண்ணா!
வழியெனில்உன் அடைக்கலம்தான்
    கண்ணாமணி வண்ணா! 19.

உன்னடிக்குச் சரண்புகாமல்
    கண்ணாமணி வண்ணா!
பின்னிழுக்கும் பழிமுதற்கொல்
    கண்ணாமணி வண்ணா! 20.

ஆசையெல்லாம் துன்பம்செய்யும்
    கண்ணாமணி வண்ணா!
ஆசை உன்மேல் இன்பம்செய்யும்
    கண்ணாமணி வண்ணா! 21.

ஊறுங்கருணை விழிகளினால்
    கண்ணாமணி வண்ணா!
ஏறெடுத்துப் பார்த்தருள்வாய்
    கண்ணாமணி வண்ணா! 22.

என்னென்ன தொண்டியலும்
    கண்ணாமணி வண்ணா!
முன்னிமுன்னிப் புரிந்துநிற்போம்
    கண்ணாமணி வண்ணா! 23.

என்னென்ன எமக்குயிர்ப்போ
    கண்ணாமணி வண்ணா!
உன்னியுன்னி நீதருவாய்
    கண்ணாமணி வண்ணா! 24.

ஒன்றுன்னருள் பெற்றுவிட்டால்
    கண்ணாமணி வண்ணா!
என்றும்எல்லாம் நீதருவாய்
    கண்ணாமணி வண்ணா! 25.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைகள்தீய்த் தருளுவதால்
கண்ணாமணி வண்ணா!
நாசமுறல் தடுத்தருளுங்
கண்ணாமணி வண்ணா! 26.

முழுமையாகச் சரண்புகுந்தோம்
கண்ணாமணி வண்ணா!
அழிவுநீக்கிக் காத்தருள்வாய்
கண்ணாமணி வண்ணா! 27.

இருகையேந்திச் சரணடையக்
கண்ணாமணி வண்ணா!
துரொபதையின் மானங்காத்தாய்
கண்ணாமணி வண்ணா! 28.

மீட்க! காக்க! என்றழைக்கக்
கண்ணாமணி வண்ணா!
மீட்டுக்காத்தாய் ருக்குமிணியைக்
கண்ணாமணி வண்ணா! 29.

சிவனின்ஆண்மைத் சத்தியனே
கண்ணாமணி வண்ணா!
சிவனைக் காத்த மோகினியே
கண்ணாமணி வண்ணா! 30.

உன்னுள் உலகம் அடக்கம் என்பார்
கண்ணாமணி வண்ணா!
உன்னுள் நாமும் அடக்கமன்றோ
கண்ணாமணி வண்ணா? 31.

கொலைவிழைந்த கம்சனுக்குக்
கண்ணாமணி வண்ணா!
கொலைவிளைந்த காரணனே
கண்ணாமணி வண்ணா! 32.

அக்கிரமம் மிகுந்ததையா
கண்ணாமணி வண்ணா!
சக்கரத்தை இங்கனுப்பாய்
கண்ணாமணி வண்ணா! 33.

வெவ்வினைகள் வேரறுக்கும்
கண்ணாமணி வண்ணா!
வெவ்விடர்கள் வேரறுக்கும்
கண்ணாமணி வண்ணா! 34.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்மலங்கள் வேரறுக்கும்
கண்ணாமணி வண்ணா!
வெம்மிடிகள் வேரறுக்கும்
கண்ணாமணி வண்ணா! 35.

வெம்பகைகள் வேரறுக்கும்
கண்ணாமணி வண்ணா!
வெம்பிறவி வேரறுக்கும்
கண்ணாமணி வண்ணா! 36.

குருடுநீங்க அடியர்நெஞ்சம்
கண்ணாமணி வண்ணா!
கருடன்மீது காட்சி நல்கும்
கண்ணாமணி வண்ணா! 37.

அழுது வேண்டும் வரம்கொடுத்தே
கண்ணாமணி வண்ணா!
தொழுதுசெய்யும் நேர்த்தி ஏற்போய்
கண்ணாமணி வண்ணா! 38.

சஞ்சலங்கள் துடைப்பவனே
கண்ணாமணி வண்ணா!
நெஞ்சடங்கும் சாந்திநிலாக்
கண்ணாமணி வண்ணா! 39.

பாஞ்சசைனியம் முழங்கிக்
கண்ணாமணி வண்ணா!
சாய்ந்தமனம் நிமிரவைப்பாய்
கண்ணாமணி வண்ணா! 40.

வேய்ங்குழலின் குளிரிசையால்
கண்ணாமணி வண்ணா!
காய்ந்தமனம் கசியவைப்பாய்
கண்ணாமணி வண்ணா! 41.

அல்லின்மேனி ஐயனார்க்குத்
தாய்நீ மணிவண்ணா!
வல்லிமார்க்குத் தந்தையும்நீ
கண்ணாமணி வண்ணா! 42.

சேலை திருடு வோனும்நீயே
கண்ணாமணி வண்ணா!
சேலை வளர்க்குவோனும்நீயே
கண்ணாமணி வண்ணா! 43.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரின்,சோற்றின் தேவைவைத்தாய்
கண்ணாமணி வண்ணா!
கோரும்பக்திக் குணம்தரவே
கண்ணாமணி வண்ணா! 44.

துளசிதரா! முரளிதரா!
கண்ணாமணி வண்ணா!
ஒளிபெற நாம் விழிதிறவாய்
கண்ணாமணி வண்ணா! 45.

கடமைகடமை கடமையென்றாய்
கண்ணாமணி வண்ணா!
கடமை உன்றன் கழல்புகலே
கண்ணாமணி வண்ணா! 46.

உன்னருளை எண்ணல், பேசல்
கண்ணாமணி வண்ணா!
என்னஇன்பம் என்னஇன்பம்
கண்ணாமணி வண்ணா! 47.

அருந்திஉன்னைப் பெறும்செல்வங்கள்
கண்ணாமணி வண்ணா!
கரும்புதின்னுங் கைக்கூலியே
கண்ணாமணி வண்ணா! 48.

உலைக்கும்எங்கள் மனமொடுங்கும்
கண்ணாமணி வண்ணா!
வலுக்கப்புத்தி உன்நினைவால்
கண்ணாமணி வண்ணா! 49.

சுட்டிநீலச் சிறுவனாகக்
கண்ணாமணி வண்ணா!
பட்டிகளுள் பரிந்துஉலாவும்
கண்ணாமணி வண்ணா! 50.

தோழர்சூழக் கபீர்தாசர்
கண்ணாமணி வண்ணா!
யாழைமீட்டிப் பாடியாடுங்
கண்ணாமணி வண்ணா! 51.

ஹரேராம ஹரேகிருஷ்ணா
போன்றபக்தர் கூட்டம்
பராவிப்புகழ் பாடிஆடுங்
கண்ணாமணி வண்ணா! 52.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெள்ளமுதம் ஊற்றெடுத்துத்
தேவலோகங் காட்டும்
புள்ளாங்குழல் மன்னவனே
கண்ணாமணி வண்ணா! 53.

காயாம்பூ நீலமேனிக்
கண்ணாமணி வண்ணா!
வாயாரவே வெண்ணெய்உண்ணும்
கண்ணாமணி வண்ணா! 54.

தூற்றும்பனியும், கடலும்,வானும்
கண்ணாமணி வண்ணா!
ஏற்றுன்தியானம் நீலமான
கண்ணாமணி வண்ணா! 55.

காது,கண்,நா,நாசி,கை,கால்
காப்பாய் மணிவண்ணா!
வாதம், பித்தம், பிணிகள் நின்றுங்
காப்பாய்மணி வண்ணா! 56.

புற்றமுத்தம் முட்டில் நின்றுங்
காப்பாய்மணி வண்ணா!
பற்பலவாம் பிணிதடுத்துங்
காப்பாய்மணி வண்ணா! 57.

இச்சை,சீற்றம், வெறிதடுத்துக்
காப்பாய்மணி வண்ணா!
அச்சம்சோர்வு பதற்றமின்றிக்
காப்பாய்மணி வண்ணா! 58.

உடலில் நெஞ்சில் உறுதிபேணிக்
காப்பாய் மணிவண்ணா!
அடிகள்புக்கோம் சரணம்ஐயா
காப்பாய் மணிவண்ணா! 59.

நாலுகரணம் நறுமையாக்கிக்
கண்ணாமணி வண்ணா!
காலில் முத்திக் கதிதருவாய்!
காப்பாய் மணிவண்ணா! 60.

அருள்கஇம்மை, மறுமைஇன்பம்
கண்ணாமணி வண்ணா!
அருள்கசாந்தி, அருள்கசாந்தி
ஐயாமணி வண்ணா! 61.

"ஓம்நமோ நாராயணாய"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# கிளி – ஆனந்தபுரம்
# ஜெயதுர்க்கை அம்மன் அருட்சிந்து

***இந்த மண்ணில் வாழ்வுகூட இன்ப சொர்க்கமே - துர்க்கை உந்தருளின் பார்வை ஊன்றின் எங்கள் பக்கமே!***

ஆனந்தபு ரத்தரசி துர்க்கை அம்மனே! - எம்மை
 ஆண்டருளும் பேரருளின் அம்மை அம்மையே!
தேனுந்தும் மலர்த்தொடைகள் தினமணிந்தனை - எங்கள்
 தேசஞ் சீர்க்க ஊதுபத்தி யாய்மணந்தனை! 01.

பற்றை யொன்றில் பத்திவாசம் கமக மத்ததே - அந்தப்
 பக்கம் வந்த வர்மனங்கள் அதிசயித்தவே!
பற்றை வெட்டிப் பக்குவஞ்செய் கோவி லென்றனை - வெட்டப்
 பரவும் வண்ணம் அங்குகல்லாய்ப் பரிந்து நின்றனை! 02.

உதயநகர்த் தண்டவாளம் ஓரம் உதித்தாய் - மற்றை
 ஓரம் ஆனந் தபுரத்தில் கோவில் விதித்தாய்!
அதிசயிக்கும் அற்புதங்கள் கோடி புரிந்தாய்! - ஈர்த்து
 அண்டை, தூர ஊரிருந்தும், அடியர் மகிழ்ந்தாய்! 03.

ஆனந்தபு ரத்து வீரை அடியி லமர்ந்தாய் - நீழல்
 ஆர்ந்த பாலை, முதிரை, வேம்பின்அடவி யுவந்தாய்!
ஊனும் தமதுயிரும் நெக்கி உருகும் தொண்டர்கள் - துர்க்கை
 உன்றன் கோவிற் பணியில் உய்ந்தே ஓங்கும் அண்டர்கள்! 04.

உன்னை வைத்த ஒருத்திபூசை ஒளியில் மெய்த்தனை - பின்னை
 ஒரு சிறுவன், ஓரடியர், பூசை துய்த்தனை!
பொன்னையள்ளி ஊர்வழங்கிப் பூத்தகட்டடம் - தன்னில்
 புக்கருளைப் புரிந்தூர்காக்கும் அமிர்த நற்கடம்! 05.

துர்க்கை, காளி, கொற்றவை யாம் தூய நாமங்கள் - சொல்லத்
 துர்க்குணங்கள் நீங்கி வாழ்வில் துன்னுஞ் சேமங்கள்!
சொர்க்க வாசல் திறந்திருத்தல் தொலைவில் தெரியும் - நெஞ்சில்
 சுவர்நிலை கடந்து தெய்வ ஞானம் விரியும்! 06.

நூலகம் 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடியமரக் காநிழலோ நெருப்பை நீர்செய்யும் - பக்தர்
நிதம்பொழியும் பூமணமோ நெஞ்சினில் விம்மும்!
அடியவர் பெய் இசைமழையோ உணர்வைஅள்ளிடும்
- துர்க்கை
அன்னையுன்றன் அடிநினைப்போ துயரை எள்ளிடும்! 07.

நின்னடியர் கனவு தம்மில் நித்தம் பேசுவாய் - ஊரில்
நிகழவுள்ளநன்மை தீமை முந்திக் கூறுவாய்!
இன்னல் ராகு காலத் தாக்கம் நீக்க வுன்னியே - செவ்வாய்
ஏத்தும் அந்திப் பூசை ஏற்றும் அருளும் அன்னையே!08.

ஏறிடாத தாலி ஏற்றி நிறைவுசெய்கிறாய் - துர்க்கா!
எட்டிடாத சாந்தி நல்கி இன்பம் பெய்கிறாய்!
மாறிடாத நோயும் மாற்றித் திண்மை சூழ்கிறாய் - சூது
வாதிலாத உன்தொழும்பர் வாழ்வில் வாழ்கிறாய்! 09.

நேர்த்தித் தாலி, கூறைநீசென் றுலவு மாமலை - நோய்தீர்
நேர்த்திக் குங்கு மார்ச்சனைநீ ஆடும் பூமலை!
மூர்த்தி சின்னன்! கீர்த்தியோமா பெரியதுர்க்கையே -
வாட்டும்
முன்வினைகள் தீர்த்த ணைக்கும் முண்டகக் கையே! 10.

பூவணிக்குள் புதைந்த பூசை, புனித நெஞ்சினார் - ஏத்தும்
பாவணிக்குள் புதைந்த கீர்த்திக் கருணை கொஞ்சினாய்!
ஆவணிக்குள், பூவணிக்குள் பாவணிக்குளே - விஞ்சி
அவ்வலங்கா ரவிழாக்கள் தாமினிக்குமே! 11.

நான்கு பக்கத் தெருக்க ளூடு நண்ணுங் காவடி - பம்பும்
நாதகீதம்,மந்திரங்கள் மண்டுஞ் சேவடி!
வான்சு கத்தில் ஊர்களிக்கும் நாட்கள்பத்துமே - முத்தி
வாழ்வுகாண வேண்டுமென்றெம் முயிர்கள் நத்துமே! 12.

பங்குனிக்கண் திங்கள் தம்மில் பாறை நெஞ்சுமே - துர்க்கா
பாகுபோலக் கசிந்துன்பாதம் பணிந்திறைஞ்சுமே!
சங்கரீ!சா முண்டி துர்க்கா,சாம்பவீ,உமா! - தடைகள்
சன்னதித்துச் சங்கரிப்பாய், நாம்தொழச்சதா! 13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் துதிக்கக் கல்வி,கலை,அக்க லைக்கல்வி - உன்றன்
நல்லடி துதிக்கும்நவ ராத்திரிச் செல்வீ!
ஓம்பு கௌரி நோன்பி லுன்னோ டொன்றிநின்றிட - என்றும்
உன்றன் உள்ளம் விரைந்தருள்க தடைகள் வென்றிட!
14.

மூன்று நேரப் பூசைதினம் ஏற்றனைமுன்னே - அந்த
மூன்று நேரப் பூவுந்தந்த பத்தினிப் பிள்ளை
வான்புகுந்த பேறுயார்க்கும் கிட்டும் வண்ணமே - தாயே!
வந்துன்அடிப் பணிமகிழ ஈர்ப்பீர் எம்மையே! 15.

சண்டி,காளி,கொற்றவை,பவானி,நாரணீ - துர்க்கா
தாய்மை முத்து மாரி, சிவகாமசுந்தரீ!
கண்டுனை வணங்கும் வாய்ப்பும் என்றும் வாழ்கவே -
உன்றன்
கடைவிழியின் பார்வை நல்குஞ்சாந்தி நீள்கவே! 16.

காசி, காஞ்சி,மதுரை என்று கருணைஉந்தவே - நீயும்
ககனமீ துலாவிநிற்கில் கதியெ மக்கு யார்?
பேச, எங்கள் துன்பு சொல்லிப் பீடைநீங்கிட - எங்கள்
பெற்ற தாயிற் பெரிய தாயே வந்து தாங்கிடு! 17.

பாருலவும் அருள்குறித்துப் பக்கவூர்,நகர் - ஊர்திப்
பவனிவந்துன் னருள்கொழிக்கும் பரிவுக் கென்நிகர்?
காருலாவிக் கழனி காய்க்கும் கவின்கிளி நொச்சி - மீது
கருணை நெஞ்சில் பூக்க அம்மா! சூடிவா பிச்சி! 18.

துன்பச்சிறை நீங்க நாமும் துர்க்கா வந்தருள் - நீண்ட
தூரத்தெம்மை வைத்தவினை தூர்க்க வந்தருள்!
இன்ப சொர்க்க எழில்கலந்தும் என்றுசீர்ப்பமோ - உன்றன்
இன்னருளை நினைந்துருகி ஏத்தி ஆர்ப்பமோ? 19.

1ஆம் பதிப்பு - பஞ்சாட்சரம் - மகிழினி,
மகாலிங்கசிவம் - கலைவாணி 1997.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நூலாசிரியரின் முகவுரை

போர்க்காலத்தில் நான் பாடி அச்சிட்டு வெளியிட்டுக் காணாமற் போன ஒருநூல், 1977இல் மலைநாட்டிலிருந்து விரட்டப்பட்டு, அகதிகளாக வன்னிநோக்கி ஓடிவந்து, அக்கராயன் எட்டாங் கட்டையில் குடியேற்றப்பட்டிருந்த மலையகத்தமிழரின் பிள்ளையார் கோவில் மீது பாடப்பட்ட "அக்கராயன் ஆரோக்கியபுரம் சித்திவிநாயகர் திருவடிபுகற்பா" வாகும். அதைத்தேடி எடுத்துவிடக் கனடாவிலிருந்து நான் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. என் கிளிநொச்சி மத்தியகல்லூரி மாணவர்கள், கிளிநொச்சி காசினி ஆர்ட்சென்றர் ஜேசு, மலேசியச் சீலன்வேலு, என் சுன்னாகம் மாணவர் இராசலிங்கம் - கஜமுகன் முதலியோர் என்ன முயன்றும் அந்நூல் கிடைக்கவில்லை.

ஒரு புத்தகந்தானே என்று விட்டுக்கடந்து போகவும் என்னால் முடியவில்லை. காரணம் என் ஒட்டுமொத்தக் குடும்பத்தின் அழிவுக்குக் காரணமாகக்கூடிய ஒரு பேரிடரிலிருந்து என் வேண்டுதலுக்கிணங்கி எங்களை மீட்டுக்காத்தவர் அந்த விநாயகப் பெருமான். அதனால் எனக்கு எல்லாமாகி, எனது ஏராளம் தொண்டுகளை ஏற்று, மனநிறைவைத் தந்த அந்தக் காவற்கடவுளின் நூல் இடம்பெறாமல் இம் 30 கோவில் நுல்கள் (யாழ், வன்னி) திரட்டானது முழுமை பெற முடியாது என்பது எனது திடமான முடிவாயிருந்தது.

அன்றியும், முள்ளிவாய்க்கால் நோக்கிய மரண யாத்திரையில், முல்லை ஆனந்தபுரத்துக்கு அப்பால் பசி, தாக வயிறுகளையும், களைப்பையும் வழிநெடுக உறவுகளைப் பலி கொடுத்த துயரங்களையும், பயப்பீதியையும் தவிர வேறு எதையும் சுமந்து செல்ல முடியாத அவலநிலையில் சென்ற அபலைத் தமிழர்கள் இந்த நூலை எப்படிக் கொண்டு சென்று பேணியிருக்க முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனால் விட்டுவிடமுடியாது" என்ற எனது வைராக்கியம் ஒருவழியை வெளிச்சமிட்டுக் காட்டித் தந்தது. அதன்படி அந்த நூற் கருத்துக்களை 24 வருடங்கள் கடந்தும், திரும்ப ஞாபகப்படுத்திக்கொண்டு, கிளி. ஸ்கந்தபுர ஆசிரிய நண்பர் திரு. தயாசுந்தர் அவர்களிடம் தொலைபேசி மூலம் கேட்டறிந்த தற்போதைய அக்கோவில் பற்றிய தகவல்களையும் சேர்த்து, மீண்டும் அந்நூலைப் புதிதாகப் படைத்து முடித்து இத்தொகுதியில் சேர்க்க அப்பெருமான் அருள் கூர்ந்துள்ளார். அத்திருவருளுக்கும் உதவமுயன்ற கிளிநொச்சி, காஷ்னி ஆர்ட்ஸ் ஜேசு, மலேசியா சீலன்வேலு, ஸ்கந்தபுரம் ஆசிரியர் தயா சுந்தர், சுன்னாகம் கஜமுகன் ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

கனடா
10. 01. 2023

ஆசிரியர்,
ச. வே பஞ்சாட்சரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

## கிளிநொச்சி அக்கராயன்
## ஆரோக்கியபுரம் (எட்டாம் கட்டை)
## சித்திவிநாயகர் திருவடி புகழ்பா

அக்கராயன் மேற்கினிலே
  அமைந்த எட்டாங்கட்டையூரில்
விக்கினங்கள் தீர்த்தமரும்
  வேழப்பிள்ளையார் - பலர்செய்
விக்கினங்கள் கடந்தும் அங்கு
  வாழும் பிள்ளையார்! 01.

இலங்கைமலைத் தமிழரந்நாள்
  இனவெறியின் கொலைவிரட்டப்
புலம்பெயர்ந்து வகுத்தஊரில்
  வைத்த பிள்ளையார் - மன்னார்
போகும் வீதி ஓரம்பூத்த
  எளிமைப் பிள்ளையார்! 02.

மண்சுவர்கள், ஓட்டுக்கூரை,
  மாட்டுச்சாணம் மெழுகுதரை,
பண்சுமந்த தமிழ்மறையாற்
  பண்ணும் பூசைகள் - ஏற்று,
பரிந்தருளித் தொழில்வழிகள்,
  காக்கும் பிள்ளையார்! 03.

நாலயலூர் வயல்களிலே
  நாட்கூலியாய், தொழிலகங்கள்
கூலிகளாய் வாழ்வாதாரம்
  கொடுத்த பிள்ளையார் - அதனால்
கோரிடாமல் பெருவிழாக்கள்
  குந்தும் பிள்ளையார்! 04.

கூலிகளாம் எட்டாங்கட்டைக்
  குடிசனங்கள் இன்றெனிலோ
கோலவயல் வழங்கப் பெற்றுக்
  கூன் நிமிர்ந்தனர்! - பாலன்
குளத்தின் முன்னாற் காடழித்துக்
  கொடுத்தார் பிள்ளையார்! 05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்யாழ் மக்களோடு
    இடம்பெயர்ந்த கிளிநகரார்
அடைய எட்டாங்
    கட்டையூரும் கலகலத்தது - கடைகள்
அணிகள்,பள்ளி, அடியார்பூசை
    பொலிந்த பிள்ளையார்! 06.

தமிழிற்பூசை தனில்மயங்கும்
    சந்தர்ப் பத்தைத் தந்தெனக்குத்
தமக்கடிமை யாக்கித்தினம்
    வணங்க வைத்ததாம் - அந்தத்
தண்ணளியை என்ன என்பேன்?
    தாய்மைப் பிள்ளையார்! 07.

சிறையிலொரு சேய்கொழும்பில்!
    சிறகிழந்து நானிக் காட்டில்!
குறையிரந்து மீட்டருளக்
    கோரி ஓர் நேர்த்தி - வைக்கக்
குழந்தை தன்னை மீட்டுத் தந்தென்
    குடியைக் காத்த கோன்! 08.

நேர்த்தி மணியை நிறுவி, அன்ன
    தானம், அபி டேகம் செய்யும்
கீர்த்திநல்கிக் கிளர்த்திமனம்
    நயந்த பிள்ளையார் - என்றும்
கிளம்பேன் விட்டிவ் வுத்தியென்ற
    வாக்குப் பிள்ளையார்! 09.

இறுதிப் போரில் மண்கொள்ளையர்
    ஏறிக்கழற்றிச் சென்ற தாலோ,
வெறிப்ப கைகள் விரகினாலோ
    மணிதொலைந்துமே - உத்தி
விட்டெழுந்து போய்விடாமல்
    விளங்கும் பிள்ளையார்! 10.

அம்மட்டிலும் நின்றிடாமல்
    அண்மையொரு கோவில் வைத்து
அம்பலப்பெ ருமாள் சந்தி
    அங்கும் அமர்ந்தார் - "கட்டு"
அருளுரை ஓர் அம்மனையும்
    பின்னாலே கொண்டார்! 11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கிய புரம்பிள்ளையார்
திருவடிபு கற் பாநூலைச்
சீராய்ப்பாடிப் பதித்துச் சித்தித்
தேவன் முன்றிலில் - முழக்கிச்
சிறுவர் சபையில் ஓரிரவு
வெளியிட்டும் வைத்தோம்! 12.

இடம்பெயர்ந்திங் குறைசிலர்நாம்
எம்பெருமான் கோவில்தன்னை
திடமிகுகற் கோவிலாக்கத்
தெண்டித்தும் தோற்றோம்! - தேவன்
சித்தம் என்றும் இந்தமனையில்
எளிமை காப்பதோ? 13.

வன்னேரி, ஆ னைவிழுந்தான்,
ஜெயபுரம்,முழங் காவில், மன்னார்
இன்னுங் கிழக்கில் முறிகண்டியும்
தாண்டுஞ் சாலையின் - ஓரம்
இன்னல் நீக்கிக் குடிகொண்டாளும்
எங்கள் பிள்ளையார்! 14.

1ஆம் பதிப்பு வெளியீடு:
பஞ்சாட்சரம் - செங்கோடன்,
சண்முகானந்தம் - வெண்ணிலா - 1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# கிளிநொச்சி ஸ்கந்தபுரம்
# கொன்றையடி ஞானவைரவர் பதிகம்

இந்துக்கள் ஏத்தருள்கூர் இறைமூர்த் தங்கள்
    எத்தனையோ அத்தனையும் எங்கள் வன்னிக்
கந்தபுரம் தனில்தளிகள் வகுத்து வைகும்
    கவின் நெறியில் மணியங்குள மருங்கில் கண்ணன்
நந்தகுமா ரன்தளிமுன் நண்ணி வாழும்
    ஞானவைர வக்கடவுள் நாமம் போற்றி!
சந்திரனோ டெம்சிவனார் தலையிற் சூடும்
    தண்கொன்றை யடியமர்ந்த சாமீ போற்றி! 01.

கொன்றையடி அமர்ந்தவனாய்க் கொன்றை தன்னில்
    கொப்பொன்றை வெட்டவுமே கனவில் வந்து
கன்றுசினம் காட்டித்தன் தலவி ருட்சம்
    கவின்கொன்றை யெனவுணர்த்தி, கொன்றை நீழல்
இன்றோங்கி ஓர்தளியில் உலகே ஏத்த
    எழிற்கும்ப முழுக்கேற்ற கோவே வாழி!
என்றென்றுங் கந்தபுரம் காக்க என்றே
    இங்கமர்ந்த வைரவரே! போற்றி! போற்றி! 02.

அன்னியர்கள் திணித்தமதம் தமையெ திர்த்தாய்!
    அருட்சைவ வழிபாட்டை அடக்க அன்னார்,
உன்னருளே உன்சூல வடிவந் தானே
    ஒரு நேரம் சகவடிவாய், உலுத்தர் காணா
அந்நேரஞ் சூலமுமாய் மாறிச் சைவ
    அருஞ்சமயம் அன்றெல்லாம் காத்தாய் போற்றி!
மன்னிவேம்பு, விளாத்தி, புளி அரசா லின்கீழ்
    மகிழ்ந்தருளும் வைரவநல் வள்ளால் வாழி! 03.

நூல் 28

இணுவிலிலே விளாத்தியடி இன்றும் வாழும்
    இன்னிறைவா!ஏத்தியங்குன் அருளைப் பெற்ற
மணியம்தம் மைந்தன்சிவ ஞானம் உன்னை
    வைத்தேத்த வளர்ந்தவனே! வணங்கும் பக்தர்
பிணி,ஏழ்மை,சத்துருக்கள் தொல்லை தீர்த்தே
    பேரருள்செய் வயிரவரே! போற்றி ஐயா!
அணியணியாய் ஆப்பட்டி ஆர்த்துச் செல்லும்
    அழகருந்தி அமர்வடுகா! தாள்கள் போற்றி! 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரராச சேகரநற் பிள்ளை யாரை,
பகலவன்சூ ரியன்,முத்து மாரி தம்மை,
பரிவார மாய்க்கொண்டு பக்தர் பொங்கல்
பரவுமடை, பூசை,விழா பலவும் ஏற்று,
பிரசங்கம் கூட்டுவழி பாடு வண்ணப்
பெருங்கலைகள் நிகழ்ச்சிகண்டு கருணை செய்யும்
பரணிதரா ! கருமழகா! பரனே! போற்றி!
பரமசிவன் திருமகனே! பணிந்தோம் போற்றி! 05.

வன்னியன்னை வளஊற்றுக் குளங்கள் தம்முள்
மணிநீர்த்தண் மணியங்குள மருங்கில் மண்டும்
தென்னை, பனைச் சூழலிலே மா, ப லாக்கள்
தீங்கனிகள் உதிர்க்கின்ற வளவில் பாங்காய்
மன்னியருள் வைரவரே! முழங்குங் கண்டா
மணியோசை தனில்மன்னி ஊரில் மக்கள்
இன்னல்களைக் களைந்தினிக்கும் இன்ப ஊற்றே!
எழிற்கொன்றை யடிஇறைவா! வாழி! வாழி! 06.

போர்க்கொடுமையால் வீடும், ஊரும் விட்டுப்
போக்கற்று வந்தோர்க்குப் புகல ளித்து,
கூர்த்தஅரு ளாற்சாந்தி வழங்கிக் காக்கும்
கொன்றையடி வைரவரின் கருணை வாழ்க!
தீர்த்தின்னல் கவலைகளை நெஞ்சந் தோறும்
சேர்த்தின்பம் எமைக்காக்கும் தேவே போற்றி!
மூத்தகந்தை ,சிவன்முதன்மை மதிக்கா ஐந்து
முகப்பிரமன் ஓர்தலையைக் கிள்ளீ! போற்றி! 07.

தேசங்கள் பலவிருப்போர் உன்னை ஏத்திச்
சேவிக்கக் கேட்டவரம் ஈயும் ஈசா!
வாசங்கொள் மலர்மழையில் மாலை,காலை
மகிழ்ந்தாடி வரமருளும் வள்ளல் வாழி!
பாசங்கள், பாவங்கள் தமைய கற்றிப்
பக்தர்மனம் தமைச்சுத்தப் படுத்தி, முத்தித்
தேசுநிலை சித்திக்கப் பரிவு கொள்ளும்
சிவஞான வைரவர்தாள் வாழி! வாழி! 08.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழ்வினையால் உத்தரிக்கும் வண்ணம் மூளும்
உடல்நோய்கள், உளநோய்கள் மாறல் வேண்டி
தாள்விழுந்து சரணடைவோர் துன்பம் நீக்கிச்
சாந்திதரும் வயிரவரே! சரணம் ஐயா!
சூழ்வயல்கள், சோலை, புன்செய் பண்ணை எங்கும்
துதித்துன்னைப் பாடுழவர் பயிர்கள் யாவும்
ஏழ்மடங்காய் விளையவைக்கும் கருணைத் தேவா
ஏறுகுக்கல் வாகனனே! போற்றி! வாழி! 09.

வெம்மலம் செய் வெவ்வினைகள் வேர றுத்து,
விஞ்சிடர்,அச் சம்துடைத்துக் காப்பாய் ஐயா!
எம்பிணிகள் தீர்த்தெம்மைக் காப்பாய் ஐயா!
இச்சை, வெறி நலித்தெம்மைக் காப்பாய் ஐயா!
எம்மவர்கள், பிறர், ஏழை பணக்கா ரர்கள்
எனும்பேதம் பாராட்டா தெல்லார் மாட்டும்
செம்மையுற அன்பூற அருள்வாய் ஐயா!
திகழ்கொன்றை யடிஞானத் தேவே போற்றி! 10.

முதலாம் பதிப்பு :
திருமதி ம. கலைவாணி,
செல்வி. ப. மகிழினி.
1999

# இந்த நூலைப்பற்றி....

கை நழுவிப்போன எனது இன்னொரு நூல் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கொன்றையடி ஞானவைரவர் பதிகம். அந்த நூல் அக்கோவில் உரிமையாளரின் நினைவுமலரில் இணுவிலில் மீள்பிரசுரஞ் செய்யப்பட்டிருந்தது நினைவுக்குவந்தது. இணுவில் இந்துக் கல்லூரியில் என்னிடம் கற்று இன்று ஆசிரியராகப் பணியாற்றும் என் மாணவன் திரு. சண்முகநாதன் முகுந்தன் அவர்களைத் தொடர்பு கொண்டு, உதவி கோரினேன். அவரும் அந்த நூலை அந்த வீட்டாரிடம் வாங்கிப் பாடல்களைப் படமெடுத்து எனக்கு அனுப்பியிருந்தார். அவரின் உதவியால் அந்நூலும் இந்த 30 நூல் திரட்டில் இடம்பெறுகிறது. அவருக்கும் எனது நன்றிகள்.

அன்பன்,
ச. வே. பஞ்சாட்சரம்
கனடா
05. 08. 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நூலாசிரியரின் முகவுரை

1995 அக்டோபர் 30ஆம் திகதி குடும்பத்துடன் இடம்பெயர்ந்து, நெல்லியடியில் தங்கியிருந்த காலத்தில் ஏராளமான வடமராட்சி, தென்மராட்சிக் கோவில்களின் வெளிவீதிகளில் நான் உடம்பால் உருண்டு வழிபட்டேன். அக்கோவில்களில் ஒன்று தான் கைதடி நுணாவில் சிவபூதராயர் திருக்கோவில். யாழிந்துவில் என் சக ஆசிரியரும், இக்கோவிலின் பூசகர்களில் ஒருவருமான திரு. குமாரசிங்கம் சுவாமியார் ஆசியோடு அகதி நிலையில் சிறியேன் பாடி நூலாக வெளியிட்ட முதலாவது நூல் "கைதடி நுணாவில் சிவபூதராயர் போற்றிப் பதிகம்" 1995 மார்கழியில் இந்நூற் பிரதிகளைக் கோவிலில் ஒப்படைத்து வன்னிக்கு வள்ளம் ஏறினோம் ஒரு நூற் பிரதியை என்னுடன் எடுத்துச்சென்றிருந்தேன்.

1995 - 2002 காலப் பகுதியில் யாழ், வன்னிக் கோவில்களை உருண்டு, உருண்டு ஏத்திப்பாடி வெளியிட்ட ஆன்மிகக் கவிதை நூல்கள் 25 வரையிலானவை போரினால் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதாகவும் அறிந்தேன். இழக்கப்பட்ட பௌதிக வளங்கள் மீளுருவாக்கப்படுவது போன்று, அழிக்கப்பட்ட எமது ஆன்மிக, பண்பாட்டு, கலை, இலக்கியப் படைப்புகளும் மீட்டு உருவாக்கி ஆவணப்படுத்திப் பேணப்படுவதும் கட்டாய இனப் பணியாகும். அந்த அடிப்படையில் எனது அழிந்துபோன 30 வரையிலான நூல்களைத் தொகுத்து மீள் பிரசுரம் செய்யும் பணியில் கனடாவில் இருந்து கொண்டே இறங்கினேன். இந்நூல்களில் சில தவிர ஏனையவற்றின் ஒவ்வொரு பிரதிகள் என்வசம் இருந்தன. இழக்கப்பட்ட நூல்களுள் சிவபூதராயர் போற்றிப் பதிகமும் ஒன்றாக இருந்தது. அதனைத் தென்மராட்சியில் தேடிப் பெறும் முயற்சியில் எனது முகநூல் நண்பரான சாவகச்சேரி, பெரியமாவடி ஆசிரியர் திரு. நந்தகுமார் சொக்கலிங்கம் அவர்களை அணுகினேன். அவர் மிக்க ஆர்வத்தோடு பணியில் இறங்கினார்.

ஆசிரியர் திரு. நந்தகுமார் இந்தச் சிவபூதராயர் கோவிலின் அறங்காவலர் திரு. கதிரவேலு தில்லைக்காத்தலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை அணுகினார். திரு. தில்லைக் காத்தலிங்கம் அவரை இப்பதிகப்பாடல் நூலில் குறிப்பிடப்படும் குணமக்கா எனப்படும் அமரர் காமாட்சிப் பிள்ளை சதாசிவம் அவர்களின் இளைய புதல்வியான திருமதி ஸ்ரீமலர் - ஜெயச்சந்திரன் அவர்களிடம் ஆற்றுப்படுத்தினார்.


27 வருடங்களாக இந்நூலைப் பாதுகாத்து வைத்திருக்கும் ஸ்ரீமலர் அம்மையாரிடம் அதனைப் பெற்றுப் பாடல்களை நிழற்படம் எடுத்துத் திரு. நந்தகுமார் அவர்கள் மின்னஞ்சல் மூலம் எனக்கு அனுப்பிவைத்தார்.

ஏனைய கோவில்களிலிருந்து முற்றும் வேறுபட்ட நடை முறைகளோடு, அற்புதங்கள், புதுமைகள் மயமாக விளங்கும் இந்தச் சிவபூதராயர் திருக்கோவில் பற்றிய நூலைப் பேணிப் பாதுகாத்து, அது மீள்பிறப்பு எடுக்க உதவிய சாமியம்மா குணமக்கா, அவர்தம் மகள் ஸ்ரீமலர் அம்மையார், அறங் காவலர் திரு. தில்லைக்காத்தலிங்கம், ஆசிரியர் திரு. சொ. நந்தகுமார் ஆகியோருக்குச் சைவ உலகின் சார்பிலும் எனது நன்றியை வெளிப்படுத்துகிறேன்.

அன்பன்,<br>
ச. வே. பஞ்சாட்சரம்<br>
கனடா<br>
05. 08. 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# கைதடி நுணாவில்
# சிவபூதராயர் போற்றிப் பதிகம்

காப்பு

உள்ளங்கள் கெட்டங்கு கள்ளங்கள் மிஞ்ச, எமை
    ஊர்விட்டு வேரோடு பெயர்த்தெறிந்தோய்!
குள்ளம், கொடூரங்கள் குறையவில்லை இன்னுமெனில்
    குறைதேய்வித் தெப்படியும் திருத்தவெண்ணி
வள்ளங்க ளேற்றியெமை வன்னிக் கனுப்பமுனம்
    வள்ளல்சிவ பூதரா சர்இரங்க
அள்ளூறுந் துதிபாட அருள் இணுவைச் செகராச
    ஐங்கரா! இடர்போக்கிக் காத்தருள்வாய்! 01.

நூல்

அறியாத காலம்முதல் அழகார் நுணாவிற்புறம்
    அடையாத பனங்காட்டு நாவலின்கீழ்
இறைவா! நீ எழுந்தருளி எங்கெங்கோ வாழ்கின்ற
    இனிய குண அடியவரின் கனவில்நண்ணி
உறவாடி,அவர்தேடி உனதாளில் வந்தாறி,
    ஒளிநண்ணி, விழிநண்ணி உயரவைத்தோய்!
சிறியேனை இழுத்தாண்டு, செய்யென்மேல் பாட்டென்ற
    சிவபூத ராயரே! போற்றி! போற்றி! 02.

பற்பலகி ராமங்கள் பக்குவமெய் தன்பரினைப்
    பரவசப் படுத்தியீர்த் தின்பெய்து வோய்!
அற்பமண், பெண்,பொன்னில் ஆசைகொண்டலைவோர்கள்
    அறிந்திடவும் எட்டாமல் ஒளிந்தமர்ந்தோய்!
கற்பதினால் தான்அதிகம் கயவராய் இன்றுலகர்
    கண்ணிழந் தலைதல் கண் டொதுங்கி வாழ்வோய்!
நெற்கழனி, தென்னைவனம் நிறையூர் நுணாவிலயல்
    நின்மலா! சிவபூத ராய! போற்றி! 03.

வந்துவந் தடியவர்நீ வழிகாட்டத் திருப்பணிகள்
    வளங்கூட்டும் சுதந்திரம் வழங்கிநிற்போய்!
மந்திரம், தந்திரம், மார்தட்டும் மணியங்கள்
    மயமாகிக் குலையாமல் முதிரை,வாகை,
சுந்தரக் கொன்றை,மா,சுனை,நாவல், ஆல்,தேமா,
    சூழ்தெங்கு, பசு,மறிகள் பறவைமொய்க்க
மைந்தர்கண பதி, வேலன், வைரவன்,கண்ணகி
    மருங்கமர் சிவபூத ராய! போற்றி! 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேராத முன்பிறவித் தீவினைகள் பயனாகத்
தேகத்தில் புகுந்துச்ச மருந்தினுக்கும்
தீராத நோய் தன்னில் தினம் வெந்து முன்கர்மத்
தீங்கிதென் றுளம்நெக்கிப் புனிதரானோர்
யாரா யினும், அவர் கனவில்வந் திடர்தீர்க்கும்
அறந்தூண்டிப் பிணிநீக்கும் மருந்துமானோய்!
ஆராத அமுதே!நு ணாவிற் பனங்காட்டில்
அமர்ந்தருளும் சிவபூத ராய! போற்றி! 05.

குருவாகக் குருந்தமர நீழலில் கண்குளிரக்
குந்தியுள்ள கோலங்கண் டின்புற்றுநாம்,
கருவறையிற் சிவலிங்கக் காட்சிகண் டொளியுற்றுக்
கனிநாவ லடியாடல் அழகுமாந்தி,
திருவீதி வெளிநோக்கித் திகழைங்க ரன்ஏத்தித்
தேசார்ந்து கண்ணகிமுன் காத்தலிங்கம்
மருவுமெழிற் காமாட்சி, மகமாயி பால்நண்ண
வரமருளும் சிவபூத ராய! போற்றி! 06.

தவமுனிவர் உறைமடங்கள் சாந்தியிடை, ஏகாந்தம்
சால்பூசை கள்வெள்ளி, திங்களேற்போய்!
அவஞ்செய்தப் பழிகளினை அயலானின் மேற்போடும்
அரும்புத்தி ஜீவிகள்,தம் புகழ்செல்வமே
சிவமென்று முந்தையரின் தேட்டுமொழி, கலை,நெறிகள்,
சிந்தனைகள் விழுமியங்கள் சிதைக்கின்றனர்!
சிவபூத ராயனே! தவயோக நாதனே!
சினங்கொண்டுன் கழுமரம் ஏற்று! போற்றி! 07.

எல்லோரும் பெரும்பாலும் இழுக்கோர்என் பதனாலே
எட்டத்தி ருந்துசிலர்க் கேயருள்வாய்!
பல்லாயி ரம்பிள்ளைப் பலிசேர்க்கும் மீள்நிலையை
பாவிசிலர், பிள்ளைசில சதிதீய்ப்பதோ?
பொல்லாஇப் பாவிகளைப் பொசுக்கி, அற விலையான
புனிதர்தொழு சாந்திநிலை புலர்த்திவைப்பாய்
கல்லால நீழலமர் தவராச நாத! நுதற்
கனல்நாட்டச் சிவபூத ராய! போற்றி! 08.

பேச்சிலே மிகஅதிகம்! பேணலில் மிகக் குறைவு!
பேருலகில் இன்றுள்ளும், புறமும் வேறே!
மூச்சிலும் பழிபடா முன்னவர் தமைப்போல
முனிவராய்ப் பிறரைக்கண் டுலகுய்ந்தது!
தீச்சுவா லைமனத் தின்றைய மனிதரோ
தீயராய்ப் பிறரைக்கண் டுலகுநாசம்!
சீச்சீ! என் றெட்டவே செறிபனை வனமமர்
சிவபூத ராயரே! சரணம்! போற்றி! 09.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம்பற்றி மறம்பற்றி அணுவேனும் எண்ணாத
அசுரர்கள் கூத்தாடிக் களிக்கும் வண்ணம்
அறம்நன்கு தெளிந்தந்த அறம் வெல்ல அனல்வீழும்
அமரர்கள் அறந்தோற்கப் பிணமாவதோ?
மறந்தாயோ தூயர்க்கு மகிழ்முத்தி யேநல்கி
மற்றோரை நரகுய்க்கும் உன்னாடலை?
திறம்பாத நின்நீதி திறம்பிற்றோ? நுணாவிலிற்
சிவபூத ராய! கண் திறவும் ஐயா! 10.

ஆனியில் உத்தரம் மார்கழியில் ஆதிரை
அலங்கார மார்விழவு மகிழும் ஈசா!
ஈனர்கள் கால்படா இருள்நிழற் குளிர்வீதி
இருடி, சிவ கணம்,அமரர் உலவும் வீதி
நானும்வந் துருண்டேத்த நல்கியருள் ஈர்த்தவா!
நம்மீழச் சேய்களையும் இழுத்தாண்டருள்!
ஞானகுரு மார்மரபை நயந்தோம்பி வளர்க்கின்ற
நடராச! சிவபூத ராய! போற்றி! 11.

## காணிக்கை கதிரைவேற் சாமிக்கு

அடிநாளில் நாவலடி அமர்பூத ராயர் வனம்
அலைபட்டி தொலைஆடு, மாடுமீள
அடிதேங்காய், அமுதேற்று, வந்தடியர் தொகை பல்கி,
அமையோலைக் குடில்பெற்று, மடைகள், பொங்கல்,
வடைமாலை யொடுவல்லி புரம்மைந்தர் கதிர்காமு
வைக்கின்றவிளக்கொளிமங் கலமுமேந்தி
அடிமுத்தி அவர்கூட்டி, ஆணையிட வந்தவரே
அருட்தில்லை யம்பலம் கதிரை வேலு! 12.

"இதை, இப்ப டிப்புரி" எனஅடியர் கனவுகள்
இறையிடும் ஆணைகள் வழியிலிந்தக்
கதிரைவேல் காலத்தில் இயன்றன கட்டடம்
எண்ணின்றி மடம்பல, மூர்த்தி தீர்த்தம்!
இதமெனக் கடியவர் இதயமார் தொழுகையே
இப்படி இப்படி! எனும்முறைகள்
விதிபட, புதுமையால் மிளிர்தளி தன்னிலே
விளக்கேற்றிப் பூசைகள் விளங்குநாளில், 13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பூதரா யர்அப்பு", "நுணாவிலிற் சாமியார்"
புனிதர்என அடியவர் போற்ற நின்றே,
நாதனீசன்உந்த நாகராயர்த் தழுவி,
"நல்குபூ சை, விளக்கு!" எனப்பணித்தே,
ஓதுகுறி,வாக்குசொல் தேவகட் டாடியாய்
உறுமடியர் துயர்பிணிகள் தீர்த்துவந்து
காதல்புரி சிவபூதராயர்கா லடியமர்ந்து,
கதிரை வேற் சாமிமுத்திப் பேறடைந்தார்! 14.

அன்னவர் அடியொற்றி, ஆண்டவன் அடிபற்றி
அருட்பூசை ஆணைகொள் நாகராயர்,
இன்னருட் குணம்அக்கா,ஏரம்பன் வாலாயம்
ஏல்குமா ரச்சிங்கம் சாமிமார்கள்
முன்னின்று புரிபூசை, மொய்யடியர் பண்ணோசை,
முழங்குமணி யோசைமகிழ் பூதராயர்
பொன்னடிகள் போற்றிவான் புகுகதிரை வேற்சாமி
புனிதநினை விற்கிந்நூல் காணிக்கையே! 15.

1ஆம் பதிப்பு வெளியீடு:
ப. மகிழினி, ப. உமாவஞ்சி - 1995.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மன்னார் பாலம்பிட்டி முத்துமாரி அம்மன் மும்மணிக்கோவை

## பதிப்புரை

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

மன்னார் மாவட்டத்தில் பாலம்பிட்டி ஒரு சிறிய கிராமம். அங்கு தொழில் நிமித்தமாக வந்து பழக நேர்ந்த காலை ஏறக்குறைய 50 தமிழ்க் குடிகள் மட்டும் வாழும் இப்பழைய கிராமத்தின் நடுநாயகமாக விளங்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் நகரத்துக் கோவில்கள் போன்று பிர மாண்டமாகவும், கிராமத்தின் அமைதியும், அருட்கீர்த்தியும் கொண்டதாகவும் வளர்ந்துவரும் அற்புதம் என் மனதை ஈர்த்து, இவ்வம்மாள் அடியவனாக்கியது. அணித்தாக இங்கு சிறப்புற நடந்துவரும் அறநெறிப் பாடசாலை இவ்வூர்ப் பெருமக்கள் முற்போக்கு மனப்பான்மையையும், சமூக உணர்ச்சியையும், தன்னலங் கருதாச் சேவை உணர்வையும் உணர்த்துகின்றது

இவ்வுன்னத முன்னுதாரணமான தேவஸ்தானத்தின் பெருமையைச் சைவ உலகம் அறிந்து நன்மையடைய வேண்டுமென்று என்னுள் தலைதூக்கிய ஆர்வத்தின் காரண மாக இந்த "முத்துமாரி அம்மன் மும்மணிக்கோவை"யைப் பதித்து வெளியிடும் பொறுப்பை ஏற்றுள்ளேன். வன்னியிலுள்ள அருள்மிகு கோவில்களையும் வணங்கிப் பல பிரபந்தங்களைப் பாடியுள்ள பண்டிதர் பஞ்சாட்சரம் அவர்கள் இக்கோவிலைத் தரிசித்து அன்னை அருளால் இந்நூலைப் பாடி அடியேனிடம் தந்து, இதனை வெளியிடும் உரிமையையும் வழங்கியதற்காக நன்றி கூறுகின்றேன். இந்நூலைக் குறுகிய காலத்தில் கணினி முறையில் அழகுற அச்சிட்டுத் தந்த வவுனியா கலைமகள் அச்சகத்தாருக்கு என் நன்றிகள்.

பாலம்பிட்டி,
மன்னார்.
12. 02. 1999

இங்ஙனம்,
அம்பிகையடியான்
**சந்திர பாலன்**
(ஸ்ரீ அம்பாள் பார ஊர்தி உரிமையாளர்)

நூலம் 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத் திருநெறிக்கழகச் செயலாளர்
திருமதி செல்வராணி சோமசேகரம்பிள்ளை ஆசிரியை
அவர்கள் இந்நூலுக்கு வழங்கிய

# அணிந்துரை

மானுட அமைப்பிலே உடலிலும் உயர்ந்தது உள்ளம். உள்ளம் சாந்தியடைய ஆலய வழிபாடு இன்றியமையாதது. மன்னார் வாழ் சைவ மக்களுக்குச் சாந்தியையும் மன ஒடுக்கத்தையும் ஏற்படுத்தி. தெளிந்த நீரில் திங்களின் பிம்பம் காட்சியளிப்பது போல அடியார்களுடைய உள்ளத்திலே முத்துமாரி அம்பிகை வீற்றிருந்து அருட்கடாட்சம் புரிகின்றாள்.

சிறப்பு மிகுந்த முத்துமாரி அம்பிகை மீது பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் கவிஞர் அவர்கள் கவித்துவ மழை பொழிந்துள்ளார். பொருட் செறிவும், சொல் நயமும், இரச னையும் பாடல்களின் அடிகள் தோறும் விரவியிருக்கின்றன. இவர் 1996 ஏப்பிரல் இடப்பெயர்வின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆலயங்களுக்கான பிரபந்தங்கள் திருவூஞ்சற் பாடல்கள் 25இற்கு மேல் பாடியளித்துள்ள பேரருளுடைய பெருந்தகையாவார்.

எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பதற்கமைய நல்லாசிரியராயிருந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் தமிழ்ப்புலமையை மிளிர வைத்துக்கொண்டு வருகிறார் இந் நூலாசிரியர். அம்பிகை மீது பாடப்பட்ட இப்பாடல்களிலிருந்து முத்துமாரி அம்பிகையின் தவப் பெருமையையும் அவளின் அருள் பெற்றுய்யும் அடியவர்கள் வாழும் பதிகளையும் திருப் பணி செய்யும் தன்னலமற்ற அன்பர்களின் விபரங்களையும் அறியக் கூடியதாயுள்ளது.

எதுகை மோனையோடு இயன்று, தவப்பெருமை நவின்று நிற்குமிப்பாடல்களில் வரும் "அன்னதான அருள் மண்டபத்தை, இன்னும் அறநெறி இளஞ்சிறார் பயில் பள்ளியை" என்று குறிப்பிட்டுள்ள அடிகளின் மூலம் இவ்வாலயத்தின் சமூக, சமயத் தொண்டுகளைப் புலப்படுத்தியுள்ளார் கவிஞர் ஐயா.

யுத்தக் கொடுமையால் செத்து மிஞ்சிட்டோர் கிளிநொச்சி, முல்லை, கிட்டிய வவுனியா, யாழ்ப்பாணத்தாரிவர் வாழ்த்திட அருள்வோய் என, முத்துமாரித் தாயிடம் தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றாங்கு, இறைஞ்சி வேண்டியுள்ளமை எல்லோரையும் பர நன்மை வேண்டித் தொழ வைத்து நிற்கின்றது. இம்மை மறுமைப் பயன் துய்க்க வழிவகுக்கும் இவ்வாசான் பாலம்பிட்டி முத்துமாரி அம்பிகையின் அருள் பெற்று மேன்மேலும் உறுபணியாற்ற அவள் பாதம் வழுத்துகிறேன்.

கிளிநொச்சி **திருமதி. சோ . செல்வராணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரின் முகவுரை

கவிதை ஒருகாலம் எனது உணர்ச்சிகளின் வடிகாலாக விளங்கியது. ஒருகாலம் கவலைகளின் மறதி மருந்தாக விளங்கியது. இக்காலம் இடையூறுகளை இறை சரணாகதி மூலம் தடுத்துக் காக்கும் கவசங்களாக விளங்குகிறது.

முன்னூழ்ப் பயனாகத் துன்பங்கள் மோசமாகச் சூழ்ந்து வரும் இக்கால வாழ்வில், இறையடிகளை ஏத்திப்பாடி, இறையருளால் இடிகளின் தாக்குதலிலிருந்து உயிரையும் உயிருக்குயிரானவர்களையும், எண்ணிய எல்லாவற்றையும் கவிதையானது காப்பாற்றிக் கொள்ளும்படி செய்து, பாடும் முயற்சியின்போது இறை சிந்தனையில் ஒன்றிப்பதன் மூலம் என்னை உய்விக்கும் அருட்கருவியாகவும் விளங்குகிறது.

அண்மை வருடங்களில் 25 இற்கு அதிகமான இறை துதி இலக்கியங்களைப் பாடிப்பாடிக் குடும்பமாகத் தப்பிப் பிழைத்து வரும் என்னைக் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்திலிருந்து மன்னார் பாலம்பிட்டி முத்துமாரி அம்மனிடம் அழைத்துச் சென்று, அடி தொழவைத்து, அந்த அம்மன் அருட்பெருக்கில் புனல் குடைய வைத்து, புகழ்த் துதியாக அந்தப் பாலம்பிட்டி முத்துமாரி மீது மும்மணிக்கோவை பாட வைத்த புண்ணியமானது எனது ஸ்கந்தபுர வீட்டு அயலவர், வட பிராந்திய பாரஊர்தி உரி மையாளர் சங்கத் திரு. சி. த. இராசரத்தினம் அவர்களையும் சக ஊழியர்களையும் சேரும்.

இந்நூலை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை முன்வந்து ஏற்ற மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. சண். சந்திரபாலன் அவர்களுக்கும், அருள்மயமான பக்திப் பாரம்பரியம் கொண்ட பாலம்பிட்டி மக்களுக்கும், இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய கிளிநொச்சி ஆசிரிய ஆலோசகரும் சமூக சைவத்தொண்டரும், திருநெறிக்கழகப் பிரமுகருமாகிய திருமதி சோ. செல்வராணி அம்மையாருக்கும் பாலம்பிட்டி முத்துமாரி அம்மனின் திருவருட்செல்வம் நிறைவதாக!

ஸ்கந்தபுரம். அன்பன்,
கிளிநொச்சி ச. வே. பஞ்சாட்சரம்.
01. 02. 1999.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# மன்னார், பாலம்பிட்டி முத்துமாரி அம்மன் மும்மணிக்கோவை

காப்பு

ஓடென்றாய் வன்னி! உவந்தேத்தி எம்தளிகள்
பாடென்றாய் பன்னி, இணுவைச் செகராசா!
பாடஅருள் நற்பாலம் பிட்டியம்மன் பல்கருணை!
ஏடெடுத்தேன் நின்தாள்காப் பே! 01.

வெண்பா

பச்சை வனங்குடைந்து பண்டமைந்த ஒருலகம்,
இச்சைக் கினிய இயற்கையெழில் - அச்சமிலா
நற்பாலம் பிட்டியிலே நண்ணுமுத்து மாரியம்மா!
அற்புதமே! வந்தருளு வாய்! 02.

கட்டளைக் கலித்துறை

வாயுன்னை யேமுத்து மாரியம்மாவென வாழ்த்திநிற்க,
தாயுன் வடிவம் மனதினில் சாந்தி தழைக்கவைக்க,
நோயில் மிடியில் நுடங்கா வலிமை தருபவளே!
மாயவன் தங்கையே பாலம்பிட் டிக்குள மங்களமே! 03.

ஆசிரியப்பா

மங்கள முத்து மாரி யம்மா!
சிங்கம் மயில்,எலித் திகழ்வா கனங்கள்
நின்பதிக் கொண்டாய்! நேர்பரி வாரங்கள்
அன்புறு மைந்தர் ஐங்கரன்,முருகன்
நாக தம்பிரான் நண்ணினோய்! மேலும்
வாகன சாலை மடைப்பள்ளி களஞ்சியம்,
சண்டே சுரரை நவக்கிர கங்களை,
பண்டயன் தலை கொய் பரணீ தரனை
அன்ன தான அருள்மண் டபத்தை
இன்னும் அறநெறி இளஞ்சிறார் பயில்பள்ளி
இவையுங் கொண்டு, இருள்வனந் தாண்டிப்
பெரிய பண்டி விரிச்சான், பீடார்
இரணை இலுப்பைக் குளம்,நட் டான்கண்டல்
விடத்தல் தீவாம் விளங்கயல் ஊர்களும்
அடுத்துவந் தடிதொழும் அருட்கடல் போற்றி!
அம்பிகை உன்னருள் நம்புகை பெற்றோர்
அரிதோ உன்பார்வை மருவல் முயன்றால்? 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முயன்று முயன்றுசுத்தம் மூண்டே நுனிதாய்,
நயந்தேத்து, நல்லனசெய் நாளும் - பயனாக
உன் தேவை யாவும் உவக்கநிறைப் பேன்!" என்றாய்!
நன்னெறியோர் துன்பம்மன் னார்! 05.

மன்னாராம் மாவட்டம் தன்னில் மடுக்கோவி லென்பகுதி
துன்னும் வனம்நடு சொர்க்கம் படைத்தனை சுந்தரியே!
வன்னி நெடுஞ்சாலை மங்கலக் கோவில் வதிப்பவளே!
உன்னைத் தொழுபவர் இன்னொரு மார்க்கமும் தேடாரே! 06.

தேடிவந் தடைந்தார் திசைபல விருந்து,
ஓடியோடி ஊர்பல அலைந்தே
யுத்தக் கொடுமையில் செத்து மிஞ்சிட்டார்,
கிளிநொச்சி முல்லை, கிட்டிய வவுனியா,
யாழ்ப்பாணத் தாரிவர் வாழ்த்திட அருள்வோய்!
பாலம்பிட்டியில் பசும்வயல், தோட்டம்
காலங் காலமாய்க் கதியென வாழ்வோர்
உண்மைத் தாயாய், உண்மைத் தந்தையாய்
உண்மைச் சேயாய், உறவாய், அரசியாய்
கண்ணில் ஆனந்தக் கண்ணீர் மட்டுமே
நண்ணிட ஊர்க்கு நாளெலாங் காப்போய்!
ஊரிதன் பாலுன் பேரருள் என்னே! 07.

என்னறா ஆனந்தம், என்னறாச் செல்வங்கள்
உன்னவை ஆகி உறமுத்தி - உன்னை
முழுமையாய் வையென்தாள் முண்டகத் தென்றாய்!
தெளிந்தாருக் குன்கால் சொத் தே! 08.

சொத்துகள் தேடிடும் நோக்கம் துணை,சுகம் பெற்றிடலே!
சொத்தென்று நாம்கொண்டு சொக்கவை போரால்
பொடிப் பொடியே!
சொத்தென உன்னருள் தன்னொடும், நீதரு வேலைவழி
நித்தம்நாம் நேர்மையாய்ச் சேர்ப்பவு மாமென்று
கொள்ளுவமே!
09.

கொள்ளுவம் உன்னருள்! துள்ளுவம் மகிழ்வில்!
சொத்தால், உன்றன் தொண்டினால் எய்தும்
சித்த நிறைவைத் தினம்நினை தொண்டர்
வயிரவ நாதர் - உயர்சர வணமுத்து
குமார வேலுதம் குமாரர் கணபதிப்
பிள்ளைஉன் னருளைப் பெருக்கும் பணிகண்டு
உள்ளங் களித்துயர் மோட்சம் ஈந்த
சீலம் போற்றி! தேவி போற்றி!
பாலம் பிட்டிப் பரம்பரை உன்தொண்டர்
இவர்வழி தொடர்வர் சிவதொண்டில் கட்டாயம்! 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாய மில்லாக் கயமைநுழை ஆசைகள் வாய்ப்
பட்டழியா நற்பாலம் பிட்டியுளோர் - இட்டதெய்வம்
என்றாலும் எட்ட இருந்தேத் தெமக்குமருள்
என்றென்றும் பெய்கின்றா யே! 11.

பெய்கின்ற மாரிப் பெருகிடும் ஓடைகள்,ஆறுகள் சூழ்,
கைநின்ற ஐங்கணை கன்னல், பா சாங்குசம்
கொண்டமர்ந்த
தெய்வமே! சின்னஓர் ஊரினில் பென்னம் பெரியகோவில்
துய்து நடத்துகின் றாய்சுடர் ராச்சியம் தாள்துதியே! 12.

துதித்துத் தமிழிற் சுடர்பூசை புரிந்துனை
மதித்துன் மலரடி வணங்கியே ஊருக்கு
வழிகாட்டிக் கர்ப்பூர ஒளிகாட்டி வந்த
பூசகர் சரவண முத்து புகமுக்தி,
தேசுடை அவர்மகன் சந்திர சேகரம்
பூமாலை இட்டுன்னைப் பூசித்த தோடு
பாமாலை பாடியும் பரவிவந் ததனால்,
தீயவர் கூடத் தூயவர் ஆகிடும்
நல்வரங் கேட்டே நாளும் ஏத்தி,
"அம்மன் கும்மி", "அம்மன் கோவிலிது"
முதலிய பனுவல்கள் முனைந்து புனைந்துன்
பதியினில் பாடிப் பரவிய தாலே
அன்னவர்க் காயிரம் அருள்புரிந் தவளே!
அன்னையே போற்றி! அருட்கடல் போற்றி!
பிள்ளை வரமும், பெருமண வரமும்,
தள்ளா வறுமை, பிணி சாய் வரமும்,
கிளைத்தெழு மிடர்கள் வழித்தெறி வரமும்
கடைவிழி நோக்கால் கனிந்தருள் தேவீ!
இடரிம யமும்உன் எழில்முன் குறுணி! 13.

குறுணி குறுணியாய்க் கோடி பிழைகள்
அறிவழிந்து செய்தே அவைகள் - இறுதித்
திரண்டு தலையமுத்தத் திண்டாடுங் கீழ்மை
நெருங்கவிடாத் தெய்வமம்மா நீ! 14.

நீயருள் செல்வமோர் நீர்த்துளி போற்சிறி தானாலும்
தீயவை செய்து ,தீன் நித்திரை விட்டோடி நாம் தேடி
ஆய நிதியிலும் ஆனந்தம் ஈவதைத் தாமறிந்து
தூய அடிபுகும் தொண்டரிவ் வூர்மக்கள் புண்ணியரே! 15.

புண்ணியர் தினம்உன் பொன்னடி தொழுவோர்,
நண்ணியுன் கர்ப்பூர நல்லொளி காண்போர்,
உன்திருப் பணியில் பொன்பொருள் புதைப்போர்,
அன்ன தானங்கள் அடியவர்க் கீவோர்,
நன்மலர் பால்,தயிர்,இளநீர் நல்கியும்
தொண்டுகள் உன்தளித்தொடர்ந்துஞ் செய்பவர்
மண்டுவர் நிச்சயம் வல்லிவான் வளவே! 16.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவில் பனை,தென்னை மாநிழலார் முற்றம்
அளவாய் அமைந்த அருள்இல் - உளவாக
வாழையடி வாழையாய் மக்களிவ்வூர் வாழ்வதெல்லாம்
ஆளும்முத்து மாரியுன் னால்! 17.

உன்னால் பணித்திடப் பட்டபல் தூரத்தூர் மெய்யன்பர்கள்
துன்னுங் களிப்புடன் துள்ளிவந்தேயுன கட்டளைகள்
மின்னிப் பொலிந்திட மேற்கொளல் காணுமிம் மேதினியே!
இன்னுமிங் கேசைவம், இன்தமிழ் வாழ்வதும் உன்னாலேயே!
18.

உன்னால் உன்னருள் நகரா யமைந்த
இந்நகர் தேடி இன்மகன் கணபதி,
உன்கண வன்மகன் - உன்னண் ணன்மகன்
ஐயனார் சிறுதொலை இடங்களில் அமர்ந்தனர்!
துய்யதோர் பவனியில் தும்பிக்கைப் பெருமகன்
பாலம் பிட்டிப் பதியமர் குடிகளின்
வேலிகொள் படலைகள் வீடுகள் தோறும்
பூரண கும்பங்கள், பூந்தொங்கல், மாவிலை
தோரண மத்தியில் சுந்தர உலாவர
அகம்மகிழ்ந் திருக்கும் ஆனந்த வல்லியே!
சுகமேது முண்டோ, துய்யவுன் நிழல்போல்?
தன்மலம் தூண்ட, தன்பழி தூண்டத்
துன்பினுக் கேதுவாய்த் தொட்டுப்பல் பழிகள்
வினைவிதைப் பதனால் வினையறுத் துலகில்
மனிதர்கள் ஐயோ! படுவதெப் பாடு! 19.

எப்பாடு பட்டும் இறைநம்பிக் கைமகார்க்குத்
தப்பாமல் ஆக்கிடுவீர் தந்தையரே - அப்படி நீர்
செய்துவிட்டால் ஆள்கல்வி, செல்வமின்பம், முத்தியுமே
எய்துமென்றாய்! ஏற்றதிவ்வூ ரே! 20.

ஊரே விழாக்களை உற்றிட ஆ, மறிப் பட்டிகளும்
ஆரா மகிழ்வுடன் அண்டிட உன்தளி, அண்முதொண்ணூற்
றோராமாண் டிற்குட நீர் முழுக் காடிய அம்பிகையே
தேரே! ஓ! ஓடிடும், சீர்விழா இந்நாளில் மேயினையே! 21.

மேயினை மகோற்சவம் மிளிர்தொண் ணூற்றேழில்!
ஆயினும் தைப்பொங்கல், ஆண்டுத் தைப்பூசம்,
மாசி மகம், வரு மகாசிவ ராத்திரி,
பங்குனித் திங்கள், பங்குனி உத்தரம்,
சித்திரை முதல்நாள் சேர்புத் தாண்டு,
வைகாசி விசாகம், ஆனி மகோற்சவம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிப் பூரம், ஆடிஅ மாவாசை,
நவராத் திரி, கௌரி நோன்பு, மார்கழிச்
சிவன்திரு வாதிரை சிறப்புற உன்பதி
மங்கள இசையில், மங்கல ஒளியில்
ஆர்ந்திடு மன்றோ சேர்ந்தபல் லாண்டாய்?
பாலம் பிட்டிப் பதியுனைப் பெற்றது
சீலங்கொண் டீந்து மழைத்தாய்ப் பட்டம்! 22.

பட்டம் பதவி பணம் பேர்புகழ் கொண்டவரின்
செட்டடிகள் பின்பற்றிச் சீரிழக்கா - கெட்டிமன
உன்பக்தர் வாழ்நெறியை உன்னிப்பாய்ப் பின்தொடர்வோர்
என்பெற்றார் இல்லைஇங் கே? 23.

இங்கானி உத்தரம் ஏறிட உன்கொடி ஊர்திரண்டே
கொங்கார் மலர்பொழி கோலங்கள், காவடி, பண்ணிசைகள்
சங்கீத சற்பிர சங்கங்கள் ஆர்வர்! பிறைவளர்ந்தே
பொங்கொளிப் பூரணைத் தீர்த்தம்நீ ஆடுதல் பொன்னுலகே!
24.

பொன்னுல கோஎனப் பூரித்தே இந்திரன்,
மின்னெழில் ரம்பையர் ,விஞ்சையர், நாரதர்
மாலயன்,வருணனைப் போலும்பல் தேவர்கள்
பாலம் பிட் டியில்வந்து பரவுவர் நின்னடி!
நாலுபக் கம்மிடை நறுங்கனி வனங்களில்
பொங்கிடும் புள்ளொலி மங்கள இசைபெயும்!
உன்பணிக் கென்றன்பர் உவந்துமுன் பளித்த
நன்செய் நிலங்களாம் வயிரவப் புளியங்
குளத்தில், வில்லையா குளத்தில் வயல்களில்
செந்நெல்லும் ,கன்னலும் உன்னருள் பாடிடும்!
பயனிலாப் பேச்சு, பயனிலாச் செயல்விட்டு
மயிலவன் தாயே ,வாய் மனம் நிறைய
மாந்தர்நாம் எனிலோ ஏத்திடோம் உன் கால்! 25.

உன்கால் பிடிப்பதால் யார்காலும் யார்வாலும்
பின்போய்ப் பிடிக்கா, மதம்மாறா - அன்பாளும்
வாழ்வுற்றார் நம்பாலம் பிட்டியுளார்! ஈழத்தார்
தாழ்வகல இப்புத்தி தா! 26.

தாவிடும் மந்தி, சதிரிடும் மஞ்ஞைகள் தாதருந்திக்
கூவிடும் மென்குயில் கும்பிட உன்னை வனமிருந்தே,
பாவிப் பலபேர் பரவியுன் கால்கள் பரமபதம்
மேவிட எண்ணார்! விடிவிவர்க் கீய விழிதிறவே! 27.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிதிறந் திடுவென விளம்பிடும் வைகறை
எழுமுன்றன் கண்டா மணியின் இன்னொலி
புக்கிடச் செவியில் மிக்கெழும் பக்தி!
மிக்கெழப் பக்தி மிக்கெழுஞ் சக்தி!
மிக்கெழுஞ் சக்தியில் ஒக்கலி ஊரார்
அனைத்து வாழ்வுக்கும் ஆதாரம் நீயென
நினைத்து, நினைத்து நிகழ்த்துன் திருப்பணி
வரிசையில் சிற்பத் தேருடன்,மாருதி,
கரிமுகன், முருகன், கண்ணன் தமக்கு
கல்லில் கோவில்கள் புல்லுவ! காண்போம்!
எத்தின மும்எந்தக் கணமும்உடன் திருப்பணிச்
சித்தமா யுள்ள இரத்தினசிங்கம்
போலும் அடியரைப் புவனேஸ் வரியே!
காலங் காலமாய்ப் பணிகொண்டு காக்க! 28.

காக்கும் வயிரவற்குக் காய்,கறி, பூத் தேன்மடைகள்,
தீக்குளிப்பு தேவியுன் சந்நிதியில் - பூக்கும்
அருள்மழையால் ஆர்ந்திடும் இவ்வூரில் பக்தி,
இருள்மனமும் ஏறவிளக் கே! 29.

விளக்கே! முகம்மது காசிம் விழைந்துன்மேல் பாவியற்றி
இளக்கிட உன்மனம் இன்னருள் செய்திடர் தீர்த்தவளே!
கிழக்கில்தொல் பண்டார வன்னியன் கீர்த்திசொல் கோட்டை
கொண்டாய்
பழுத்தநற் பக்தர்கொள் பாலம்பிட் டிக்கன்னை மாரியம்மா!
30.

அம்மா! அண்டங்கள் அத்தனை யும் அமர்
சிம்ம வாகனத் திரிசூல பைரவீ!
வாங்கும் இடத்திலே மனைவியும், மக்களும்!
தீங்குறின் கணவன் செத்தநாய் உண்ணியாய்
இறங்கியின் னோர்நாய் எங்கெனத் தேடுவர்,
மறந்துனை வாழ நினைப்பவர் வாழ்விது!
செம்மை,கருமை,நீலம்,திகழ்வன
அம்மையுன் வடிவம் அடியர் கனவினில்!
எந்நிறமாயினும் உன்னரு ளோபச்சை!
உன்னருளோ வாழ்வில் உயிர்க்குயிர்ப் பச்சையே! 31.

முதலாம் பதிப்பு வெளியீடு : சண். சந்திரபாலன், மன்னார்.
மாசி - 1999.

- முற்றும் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சுவிஸ் பேர்ண்
# ஞானலிங்கேச்சரர் திருப்பள்ளியெழுச்சி



திருச்சிற்றம்பலம்

வெண்பனிக் கைலை விளங்கருட் சிவனே!
வெண்பனித் தண்சுவிஸ் பேர்ண்நகர் வந்தீர்!
விண்தொழ மண்தொழ வீற்றிருந் தருள்வீர்!
விடிந்தது! விறைத்திடும் மார்கழிக் குளிரில்
பண்பயில் திருமுறைப் பாடல்கள் பாடிப்
பக்தர்கள் உன்பதி பணிவுடன் வந்தோம்!
கண்துயில் கனவில்நாம் கண்டஉன் எழில், கண்
காணவும் நீர்பள்ளி எழுந்தருள் வீரே! 01.

பாதையில் உறுமுவ பனிவழிப் பான்கள்!
பகற்பணி யாளர்செல் உந்தொலி பம்பும்!
காது, மெய், மூடிய கம்பளி ஆடைக்
கன்னியர் "எம்பாவை" பாடினர் தெருவில்!
ஈதுநற் புலர்வென்றே இல்லங்கள் யன்னல்
எட்டியே பார்ப்பன வைகறை விளக்கும்!
பூ, தமை ஏந்தியே பூவையர் வந்தார்!
புரங்கள்செற் றீர்பள்ளி எழுந்தருள் வீரே! 02.

தூக்கம் விட்டெழுந்தனர் தும்பியன், வேலோன்!
துணைவி ஞானாம்பிகை தொழுதுன்னை எழுந்தாள்!
பாக்குடன் வெற்றிலை, பால், பழம் ஏந்திப்
பாவையர் நின்றனர் படைத்துன்னை ஏத்த!
ஏக்கங்கள் ஆயிரம் சுமந்துன்னை வேண்ட
எங்கெங்கோ இருந்துமே அடியவர் சேர்ந்தோம்!
காக்குமெம் காவலன் ஞானலிங் கேசா!
கருணைகொண் டேபள்ளி எழுந்தருள் வீரே! 03.

சிறப்பு நூல் இணைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனம், குங்குமம், சாந்து, அகில், பன்னீர்
தந்திடும் வாசமோ நம்மனக் கண்ணில்
அந்தரத் தேவர் உன் அடியிணை ஏத்த
ஆயிர மாயிங்கு நிற்பது காட்டும்!
மந்திரச் செந்தமிழ் மறையொலி கேட்டு,
மன்ன, இங்கேதமிழ் சைவமும் வாழ
வந்தமர் ஞானலிங்கேச்சர, அமிழ்தே,
வண்சிவனே! பள்ளி எழுந்தருள் வீரே! 04.

உன்தமிழ்க் களரியில் ஓங்கெழில் நூல்கள்,
உன்னத ஆடல்கள், உருக்கிசை தருவோர்,
இன்னிசை வீணையர், யாழினர், குழலோர்,
இச்சக இச்சைகள் தீர்த்து நீ ஈர்த்தோர்,
பொன்னள்ளி வீசியுன் புகழ்த்தளி செய்தோர்,
பூசைகள், திருவிழா, புரிபவர் சேர்ந்தோம்!
நின்னடி, நின்முகம் நெக்கிநாம் தேடல்
நினைத்து லிங்கா பள்ளி எழுந்தருள் வீரே! 05.

நினைப்பவை யாவுமே நல்லவை யாக
நின்முக தரிசனம் நாம்பெறல் வேண்டும்!
வினைப்பயன் யாவுமே மேன்மைய வாக
விடையன்நின் விழிப்பார்வை நாம்பெறல் வேண்டும்!
அனைத்து நிகழ்வுமே ஆனந்த மாக
ஐயன்நின் னருட்கோலம் நாம்காணல் வேண்டும்!
சுனைப்புனல் யாவுமே உறைபனி யாம் நாள்
சுவிஸ் அர சேபள்ளி எழுந்தருள் வீரே! 06.

இனிப்பவை சைவஊண் மட்டுமே யாக்கி
எமக்கெல்லாம் அருள் செய்தே உய்விக்கக் கோரி,
தனித்தனி யாகவே ஐம்பது நாட்டில்
தளர்தமிழ்க் குடிகளின் துயர்நீக்கக் கோரி
உனைச்சரண் புகலொன்றே ஓகைவாழ் வீயும்
உண்மையைத் தமிழருக்கு உறைப்பாய் உணர்த்த,
சினப்புலித் தோலாடை ஞானலிங் கேசா!
சிவநிதியே பள்ளி எழுந்தருள் வீரே! 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிகுண்டுப் போர்க்குள்ளே விட்டூர லைந்தே,
"மீட்டருள்! காத்தருள் எங்களை!" என்றும்,
குடியுரிமை சுவிஸ்க் கொடுத்தரு ளென்றும்,
குணமுடைக் குழந்தைகள் தந்தரு ளென்றும்
கடன், பகை, பிணி, பயம் கவலைகள் தீர்த்துக்
காத்தருள் என்றும்நின் கால்களை ஏத்தி,
அடைந்தந்த வரங்களை, அகமுருகு எமக்காய்
அருட்சிவனே பள்ளி எழுந்தருள் வீரே! 08.

தென்தமிழ் நிலமே நம் சிவனுன்றன் வீடு!
தேசங்கள் அனைத்துமே உன்திரு நாடு!
தன்நலம், சூழ்ச்சிகள் சகம்மிக்க தால்தான்
சால்வெப்பம் மிஞ்சியே அழியுமாம் தரணி!
உன்னருள் மழையொன்றே, உள்ளங்கள் தம்மை
உய்த்திடும் தூய்மையில்! உலகினைக் காக்கும்!
அன்னதைச் செய்திந்த அழிவினை நீக்க
அருள்லிங்க ரேபள்ளி எழுந்தருள் வீரே! 09.

சங்குகள் அதிர்ந்திட, தண்ணுமை முழங்க,
சன்னதப் பத்தர்கள் தாளமிட் டாட,
மங்கள இசை தவில், நாயனம் வழங்க,
மணிவிளக் கின்நிரை வளரொளி ததும்ப,
சங்கரன், முக்கண்ணா, சம்பு, நம்பன் போல்
சாலும் உன் நாமங்கள் சாற்ற ஞானியர்கள்,
எங்கும்இவ் வுலகமே, எழில், இன்பம் பூண
எம்லிங்கரே பள்ளி எழுந்தருள் வீரே! 10.

(திருச்சிற்றம்பலம்)

முதற்பதிப்பு :
ப. செங்கோடன்,
ப. வேழத்தெழிலன்.
ஆடி - 2019.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியரைப் பற்றி....

பாவலர் *ச. வே. பஞ்சாட்சரம்* அவர்கள் அந்த ஆதி சிவனுக்கு அடியனாகவும், எம் தலைவணங்காத் தமிழனுக்கும், தமிழன்னைக்கும் அருகிலும் இருப்பவர். கலையுலகிலும், இலக்கிய வெளியிலும் பன்முக ஆளுமையோடு வலம்வரும் இவர், தமிழ் மாணவர்கள், புதிய படைப்பாளிகள், பாவலர் எனப் பலரும் போற்றிப் புகழும் ஒருவராகத் திகழ்வதற்கு இறை, அற அச்சமும், இறைவன் தாள் பணிந்து நல்லவை அனைத்தையும் வேண்டிப்பெறலாம் என்ற இவரது வாழ்க்கை நெறியுமே காரணம். என்றால் மிகையாகாது. பண்பானவர், பணிவானவர், மிகவும் அன்பானவர்.

இவரது புலமை ஈழத்தமிழர்களால் மட்டுமல்லாது உலகத் தமிழினத்தாலும் போற்றிப் புகழப்படுகிறது. அந்தவகையில், ஈழத்தின் தலைசிறந்த பாவலர் சிலருள் குறிப்பிடத்தக்க ஒருவர் இவர் என இந்திய வானொலி ஒன்று கூறி இருப்பதும், 43 இலக்கிய வடிவங்களில் 115 நூல்களை இயற்றிய சாதனையாளர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் என இந்திய நாளேடான "தினமணி" 25. 07. 2021 இதழில் மெச்சியுள்ளமையும் ஒட்டுமொத்த ஈழத்தமிழினத்தையும் பெருமையடையச் செய்கின்றன. அன்று 115 ஆக இருந்த நூல்கள் இன்று 118ஆக உயர்ந்துள்ளன. இவற்றுள் 63 அறத்தையும், இறையையும் முன்னிறுத்தும் நூல்களாகும். எஞ்சிய 55 நூல்களுள் தமிழ் இலக்கணம், நவீன சிறுகதை, சின்னஞ்சிறுகதை, குட்டிக்கதை, உருவகக் கதை, நாவல், குறுங்காவியம், பாநாடகம், சிறுவர் இலக்கியம், மண்பற்றுப் பாக்கள் என, அறவுணர்வையும், இறை நம்பிக்கையையும் முதுகெலும்பாகக் கொண்டு படைக்கப்பட்ட நூல்கள் உள்ளடங்குகின்றன.

பண்டிதர் அவர்களால் எழுதப்பட்டவற்றுள் போர்தின்றழிந்த 30 இறை நூல்களைத் தேடியெடுத்து, அச்சேற்றி வெளியிடப்படுவதே **"30 கோவில் நூல்கள் (யாழ், வன்னி)"** என்னும் இந்நூலாகும்.

எம் ஊர் அன்னை நயினை நாகபூசணி அம்மன் (எலச்சி அம்மன்) நான்மணி மாலையும் இவரது 63 ஆன்மிக நூல்களுள் அடங்கி உயர்வு பெறுகின்றது.

பண்டிதர் பஞ்சாட்சரம் அவர்களைத் தமது தமிழாசானாகப் பெறும் பேறுகிடைக்காதவர்களுள் நானும் ஒருவர். என்றாலும், நிகழ்காலத்தில் அவரது தமிழைக் கேட்டும், வாசித்தும், பாடியும் மகிழும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை பெரும் பேறாகும். அவர் இன்னும் பல நூல்களை ஆக்கித் தமிழுக்கு வழங்க வேண்டும் என வேண்டி, வாழ்த்தி வணங்குகின்றேன்.

நயினை, இங்ஙனம்,

கனடா. 'தமிழரசி' ***கார்த்திகா ஞானச்சந்திரன்***

**14. 11. 2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org